# சைவநீதி



கற்பனை கடந்த சோதி கருணையே உருவ மாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி

- சேக்கிழார்


கனடா இந்து மாமன்றம்
Canada Hindu Maamantram

தை 1996
January

# Dr. Shan Shanmugavadivel

**Family Dentist. B.D.S. (Ceylon)**

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

20 வருடங்களுக்குமேல் அனுபவம் கொண்டவர்

- பல் கட்டுதல்
- கிளிப் போடுதல்
- பல் வேர் அடைத்தல்
- சத்திர சிகிச்சை

இவற்றுடன் சகல பல்வைத்திய சேவைகளும் நவீன முறையில் வழங்கப்படும்

மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் சேவை

### RAINBOW VILLAGE DENTAL OFFICE

2466 Eglinton Ave. E., Unit 7
(Kennedy & Eglinton)
Scarborough, Ontario
**(416) 266-5161**

கென்னடி சப்வேக்கு அருகாமையில்
✱ செவ்வாய், புதன் காலை,
வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு
வாகன தரிப்பிட வசதிகள் உண்டு




### MAIN SQUIRE DENTAL OFFICE

2575 Danforth Avenue
Toronto, Ontario
**(416) 690-0176**

மெயின் சப்வேக்கு அருகாமையில்
✱ திங்கள், புதன் மாலை




கென்னடி சப்வேயிலிருந்து நடந்து வருபவர் Mid Scarborough Community Center Exit ஐ எடுக்கவும்

உ
சிவமயம்

ஆடிக்கொண்டார் அந்த வேடிக்கை காணக்கண் ஆயிரம் வேண்டாமோ!
அவர் தான்? தில்லைநடராசன் முகப்பைப் பாருங்கள்.

# இதோ! நுழைவாயில்

## "சைவநீதி" சஞ்சிகையின் பொருளடக்கம்.

தெய்வம் : 1 குரல் :1


| பகுதி | இல. | பொருள் | ஆக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| I | 1 | வழிபாடு(பஞ்சபுராணம்) | மன்றத் தொகுப்பு | 1 |
| | 2 | OUR MISSION | Secretary | 3 |
| | 3 | நிதியும் நீதியும் | நிதியாளர் | 4 |
| | 4 | ஆசிரியர் குரல் என்ன சொல்கிறது | மலராசிரியர் குழு | 5 |
| | 5 | நால்வர் காட்டிய வழியும் — தேவர் காட்டிய நெறியும் | சிவஸ்ரீ ப. கிருஷ்ணராசக் குருக்கள் | 6 |
| சைவநீதி வாழ்த்துரைகள் | | | | |
| II | 1 | வாழ்த்துரை | தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தமிழ்நாடு | 8 |
| | 2 | வாழ்த்துரை | சுவாமி ஆத்மகனாநந்தா இராம.கி.மி. கொழும்பு | 9 |
| | 3 | "சைவநீதி" என்றும் வாழ்க | கு.சிதம்பரப்பிள்ளை தலைவர் சை.மு.ச. பிரித்தானியா | 10 |
| | 4 | பாராட்டுச் செய்தி | கந்தையா நீலகண்டன் அ.இ.இ.மா. கொழும்பு | 11 |
| | 5 | "சைவநீதி" என்றும் நின்று — நிலைபெறுக | சி.சரவணமுத்து சுவாமிகள் திருக்கேதீஸ்வரம் | 12 |
| | 6 | "சைவநீதி" உலகெல்லாம் — விளங்கட்டும் | தி.மாணிக்கவாசகர் இளைப்பாறிய கல்வி அதிபதி | 13 |
| | 7 | சைவத்துக்கொரு "சைவநீதி" | மு.நற்குணதயாளன் "கலசம்" ஆசிரியர் | 14 |
| வாழ்த்துப்பாக்கள் | | | | |
| III | 1 | "சைவநீதி" நூல் வாழ்த்துப்பா | தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள் தமிழ்நாடு | 15 |
| | 2 | தெய்வ நெஞ்சிதழ் வருக! வாழ்க!! | கவிஞர் வி. கந்தவனம் | 16 |
| | 3 | சிவநெறிச் செஞ்ஞாயிற்றுச் செல்கை — வாழ்க!! | பண்டிதர்.ச. குமரேசையா | 17 |

| பகுதி | இல. | பொருள் | ஆக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| III | 4 | வாழிய சைவநீதி! | அனலை ஆறு. இராசேந்திரம் | 19 |
| IV | 1 | மாணவர் பகுதி | கனடா இந்து மாமன்ற மாணவர்கள் | 20 |

கட்டுரைகள் பகுதி I

| பகுதி | இல. | பொருள் | ஆக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| V | 1 | தமிழ்ச்சமய நெறி | கபிலைமாமுனிவர் — வித்துவான் சாந்தலிங்க இராமசாமியடிகள் | 23 |
| | 2 | நல்லவண்ணம் வாழலாம் | சுவாமி ஆத்மகனாநந்தா இராம.கி.மிஷன்.கொழும்பு | 26 |
| | 3 | சைவம் | டாக்டர் ஆ.ஞானம் FNA, FN, ASC துணைவேந்தர் –புதுவை பல்கலைக்கழகம். | 28 |
| | 4 | திரிகரணங்களைத் திரிய விடாதே | சிவஸ்ரீ பூரண. தியாகராஜக் குருக்கள் வியாகரண சிரோமணி.சிவாச்சாரிய கலாநிதி மொன்றியேல் | 32 |
| | 5 | WHAT IS HINDUISM ? | By.Rajagopalan Samy Kurukal-B.A | 34 |
| | 6 | இந்து மத சிந்தனைகள் | ஆத்மஜோதி நா.முத்தையா சுவாமிகள் யாழ்ப்பாணம் | 40 |
| | 7 | இந்து மத பொக்கிஷம் | கவிதாராஜன், மொன்றியேல் | 42 |
| | 8 | சிவமும் சக்தியும் | சி. கனகலிங்கம் B.A. | 47 |
| | 9 | சைவ விரதங்களும் விழாக்களும் | திருமதி. அன்னலட்சுமி சுப்பிரமணியம் மலேசியா | 49 |
| | 10 | மேன்மைகொள் சைவநீதி — விளங்குக உலகமெல்லாம் | சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் | 58 |
| | 11 | சமயம் வெறும் சம்பிரதாயமா? | தம்பையா சிறீபதி சட்ட ஆலோசகர் | 59 |
| | 12 | யாவர்க்கும் அறிவரியோன் | வித்துவான் இ.சி.சோதிநாதன் | 62 |
| | 13 | வேதநெறியும் சைவத்துறையும் | க.சின்னையா B.A | 65 |
| | 14 | “தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை — தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை” | சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள் | 69 |
| | 15 | சைவமரபும் விநாயகர் வணக்கமும் | சி. இலகுப்பிள்ளை கொழும்பு | 72 |
| | 16 | இந்து தர்மத்தின் மன வெளிப்பாட்டிற்கு — ஓர் அறிமுகம் | அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை M.A. | 73 |
| | 17 | தரணியெங்கிலும் சைவம் | சாமி அப்பாத்துரை | 75 |
| | 18 | மணிவாசகப் பெருமானின் பக்தி — வைராக்கியம் | கவிஞர் வி.கந்தவனம் | 77 |
| | 19 | ஒருமையில் பன்மையும் பன்மையில் — ஒருமையும் உணர்த்திய — சிவயோக சுவாமிகள் | வித்துவான் க.ந.வேலன் கொழும்பு | 80 |

செய்யுள் தொகுப்பு

| பகுதி | இல. | பொருள் | ஆக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| VI | 1 | சிவநெறிச் செந்தமிழ் ஏடு | பண்டிதர் வீ.வ.நம்பி | 83 |
| | 2 | குவலயத்தில் ஏதும் தாழ்ந்ததில்லை | நா.அமிர்தரட்ணராஜா | 86 |

கட்டுரைகள் பகுதி II


| | | | | |
|---|---|---|---|---|
| VII | 1 | சிவபெருமான் தொண்டர் தொண்டன் | புலவர் — ஈழத்துச்சிவானந்தன் | 87 |
| | 2 | SIVA WORSHIP IS HINDUISM | Geethanjali Prabaharan | 88 |
| | 3 | ஓம் என்பதும் வணக்கம் சொல்வதும் | அடியார் | 92 |
| | 4 | பக்தி இலக்கியத்தில் அகத்துறை | திருமகள் தங்கவேலு | 94 |
| | 5 | மணிவாசகரும் திருவாசகமும் | திருமதி.ஔவை குணசீலன் இலண்டன் | 97 |
| | 6 | எந்த நிலை வந்தாலும் — சொந்தநிலை மாறாதீர்? | திருமதி.இராஜேஸ்வரி கந்தையா | 103 |
| | 7 | சைவமும் நாமும் | நயினையம்பதி ப.க.கனகசபாபதி | 105 |
| | 8 | திருவிளக்கு ஏற்றுவோம் வாருங்கள் | சாவயம்பதி இ.சுப்பிரமணியம் | 107 |
| | 9 | சமய உணர்வு | திருமதி. வசந்தா நடராஜன் | 110 |
| | 10 | இறைவனுடன் இணைக்கும் இசை | திருமதி. நவராஜகுலம் முத்துக்குமாரசாமி | 111 |
| | 11 | சைவ மதம் | சட்டம்பியார் | 112 |


நிறைவு


| | | | | |
|---|---|---|---|---|
| VIII | 1 | எங்கள் அனுதாபம் | கனடா இந்து மாமன்றம் | 113 |
| | 2 | உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் — உருகுமே | ⇩ ⇩ | 115 |
| | 3 | நன்றிக் கலசம் | மலர்க் குழுவினர் | 116 |
| | 4 | இறை வணக்கம் | | 118 |


- பதியைப் போற்பசு பாசம் அநாதி — திருமந்திரம்
- முப்பொருள் உண்மை பற்றியும், அவற்றின் தொடர்பு, பந்தநிலை, முத்திநிலை என்பன பற்றியும், திருவருள் கைவந்த திருவருட் செல்வர்களான, சிவானுபூதிமான்கள் அநுபவ பூர்வமாகக் கண்டவைகளை, திருமுறைகளிலும் சைவசித்தாந்த நூல்களிலும் காணலாம்.
- திருமுறைகள் தோத்திரங்கள், சைவசித்தாந்தம் சாத்திரம்.
- தோத்திரம், இறைவன்பால் ஈடுபாடுமிக்குச் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு எழுவது. சாத்திரம் ஓரளவு தகுதியுள்ளவர்களுக்குச் சமய தத்துவங்களைப் போதிப்பது. சாத்திரங்கள் கூறும் உயிரான உயரிய கருத்துக்களுக்குத் தோத்திரம் அரணாயிருக்கும்.
- உயிரான உயரிய கருத்துக்களுக்கு மூலவித்து வேதாகமங்கள்.
- திருமுறைகளில் திருமந்திரம் புறநடையானது. அது தோத்திரமுமாம், சாத்திரமுமாம் அன்றி, சில பகுதி சித்த பரிபாஷையோடு கூடியதுமாம். திருமந்திரத்தையும் வேதாகம வரிசையில் வைத்துக் கொள்ளல் சாலும்.
- தோத்திர சாத்திரங்கள், மூலவித்துக்களின் இருவேறு வெளிப்பாடுகள்.

— அத்வைத சிந்தனை — அநுபந்தம்.
இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.

# கனடா இந்து மாமன்றம்
# CANADA HINDU MAAMANTRAM

## சைவ நீதி — SAIVA NEETHY
## கன்னி ஏடு

இது ஒரு காலாண்டுச் சஞ்சிகை — (ஆண்டொன்றிற்கு நான்கு மலர்)

சைவ சமயத்தின் மேம் பாட்டினை உலகிற்கு எடுத்துரைக்கும் நோக்கம் உடையது.

சைவ நீதி முதன் மலரை இவ்வுலகில் காலத்திற்குக் காலம் அவதார புருடர்களாகத் தோற்றி, சைவசமயத்தினையும் தமிழ் மொழியையும் போற்றிக் காத்து வளர்த்து இறைவன் திருவடிகளைச் சார்ந்த அத்தனை தெய்வச் சான்றோர்களையும் மனத்திருத்தி வணங்கி அவர்களுடைய திருப்பாதங்களில் மலர் அஞ்சலி செய்கின்றோம்.

திருவருள் தெய்வங்களே வணக்கம்

— கனடா இந்து மாமன்றத்தினர்

தை *1996*

# பஞ்ச புராணம்

திருச்சிற்றம்பலம்

*தேவாரம்*

காருடைக் கொன்றைமாலை கதிர்மதியர வினோடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதியாய
போருடை விடையொன்றேற வல்லவர் பொன்னித்தென்பால்
ஏருடைக் கமலமோங்குமிடை மருதிடங் கொண்டாரே.

*திருவாசகம்*

சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய் பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறைமி னிறைமலர்க் குருந்தமே வியசீ
ராதியே யடியே னாதரித் தழைத்தா லதெந்துவே யென்றரு ளாயே.

*திருவிசைப்பா*

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானு மணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே.

*திருப்பல்லாண்டு*

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
  தூமனத் தொண்ட ருள்ளீர்!
சில்லாண்டில் சிதையும் சில
  தேவர் சிறுநெறி சேராமே
வில்ஆண்ட கனகத் திரள்
  மேருவிடங்கன் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
  பல்லாண்டு கூறுதுமே!

*திருப்புராணம்*

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவு மாகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி.

*திருப்புகழ்*

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா!
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசக் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

*நால்வர் துதி*

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

*கலைமகள் துதி*

மாணிக்க வீணையேந்தும் மாதேவி கலைவாணி
தேந்தமிழ் சொல்லெடுத்துப் பாடவந்தோம்
அம்மா பாடவந்தோம் அம்மா பாடவந்தோம்

வருவாய் நீ; இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ லயம் தரும்வேணி அம்மா(மா)
நாமணக்கப் பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்கப் பூசை செய்தால் பூவை நீ மகிழ்வாய் (மா)
வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் — எங்கள்
உள்ளக் கோவிலிலே உறைந்திருப்பாய்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே — என்றும்
அள்ளி அறிவைத்தரும் அன்னையும் நீயே
வாணி சரஸ்வதி மாதவி பாரதி சுவாதீஸ்வரி மாலினி
காணும் பொருளில் தோன்றும் கலைவாணி
வேண்டும் வரம் தரும் தேவி நீ!
நான்முகன் நாயகி மோகன ரூபிணி
நான்மறை போற்றிடும் தேவி நீ!
வானவர்க்கமுதே தேனருள் சிந்தும்
கான மனோகரி கல்யாணி!
வருவாய் நீ இசை தர வா நீ
இங்கு வருவாய் நீ லயம் தரும் வேணி அம்மா(மா)

*வெண்பா*

ஆய கலைகளறு பத்து நான் கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை — தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத் தினுள்ளே
இருப்பள் இங்குவாரா திடர்

# OUR MISSION..........

CANADA HINDU MAAMANTRAM has embarked on a mission, to address the concerns of the Hindu Tamil parents, who fear that their beloved children will one day loose their long cherished cultural values and their identity due to the negative influence of the environment in this adopted country.

Our prime goal is to teach the young Hindu Tamil generation the values and richness of Hinduism, Hindu culture and the Tamil Language. It is a formidable task, but we have the conviction to meet that challenge.

Our MAAMANTRAM was inaugurated in July 1994 with this sole purpose by some concerned members of the Tamil Hindu Community in Scarborough, Ontario.

We established our short term goals such as teaching Hinduism, Tamil Language, music, instruments and publishing a quarterly magazine to spread Hinduism and Hindu culture. In last October, on VIJAYA THASAMI day, we started our classes at Woburn Collegiate Institute, Scarborough and later on some parents request we transferred it to L'Amoreaux Collegiate Institute near Warden and Finch intersection. We started with fifteen students and currently we have over hundred in all. This illustrates how far we have achieved our objectives and the support the Hindu Tamil Community have given to us. We owe our thanks to the teachers who volunteer their valuable time without any compensation. Our teachers are highly experienced, educated and above all very dedicated. We hope to start more classes in various other locations in the near future.

Today we have fulfilled our second objective. You have in your hands our first quarterly issue of SAIVA NEETHI. It contains excellent articles from eminent scholars from around the world. Still we continue to receive more, which will be published in the following issues. This way we are trying to establish contacts with other Hindu Communities around the world who have the same aspirations and hopes. We must thank our president Pandit V.V.Nallathamby for devoting most of his time in preparing this book.

We have contacted Saiva Paripalana Sabai. Jaffna to conduct examinations for our students. In order to address the social needs of the seniors and newcomers we plan to start Basic English classes and a library.

Our long term goals are to start a daycare center for Hindu Tamil children, to establish a press so that we can publish our books and other matters of religious interest and finally, a permanent place for our organization.

We need both financial resources and the dedication of the experienced people to carry on these programs. Therefore we invite the Hindu Tamil Community to join our organization and participate in our programs.

**With your continues support CANADA HINDU MAAMANTRAM is committed to the success of our mission.**

N. Vijayabalam
Hon. Secretary
20-11-1995

# நிதியும் நீதியும்

**கனடா வாழ் சைவத் தமிழ் மக்களே!**

நம் தாய் நாட்டில் சைவத் தமிழ்க் கலாச்சாரத்தில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்த நாம் புலம் பெயர்ந்து பற்பல நாடுகளில் இன்று வாழ்கின்றோம். தாயகம் விட்டு வந்தோம், சூழ்நிலை காரணமாக. ஆனால், நமது தமிழ்க் கலாச்சாரத்தை, சமயப் பண்பாடு ஒழுக்கங்களை மறக்க முடியுமா? அவை தாமே நாமிருக்கும் வரை — இறக்கும்வரை ஏன் இறந்த பின்பும் நம்மை இறைபதம் சேர்த்து இம்மை மறுமைப் பயன்களைத் தந்து இன்புறச் செய்வன. நமக்காக வாழும் பழக்கம் நமது தமிழ்ச் சமுதாயத்தில் அங்கு இல்லை. அப்படியாயிருக்கும் போது இங்கும் அந்தத் தொன்மை நெறி, நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் நிலவ நம்மாலான முயற்சிகளைச் செய்ய வேண்டும். ஆலயங்கள், மதஸ்தாபனங்கள் பொதுப்பணித் துறைகளிலும் நமது பங்களிப்பை உடல், பொருள் உதவியாகச் செய்தும், செய்வித்தும் நம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். "நிதிமிகுந்தவர் பொற்குவைதாரீர்! நிதிகுறைந்தவர் காசுகள்தாரீர்! அதுவும் அற்றவர் வாய்ச் சொல் அருளீர்!" என்ற உண்மைப் புலவன் கூற்றினை அனுசரித்து நடந்தால் யாவும் சிறப்புறும். கனடிய அரசாங்கம் நாம் வாங்கும் ஒவ்வொரு பொருள்களுக்கும் நம்மிடமிருந்து பதினைந்து சதவீதம் வரி வசூலிக்கின்றது நாட்டிற்காகவே. அது போல் சைவமக்களாகிய நாம் மதஸ்தாபனங்கள் அரிய நற்பணியாற்ற எம்மாலான பங்களிப்பைச் செய்ய வேண்டும். கனடா இந்து மாமன்றம் தமிழ்ப்பணி, சைவப்பணியாற்றுவதற்காக உங்களால் தோற்றுவித்த ஸ்தாபனமாகும். அது தன் சிறந்த முயற்சியினால் இயன்ற பணிகளை ஆற்றுகின்றது. அது மாத்திரமல்ல, நீதியை நிலை நாட்ட "சைவநீதி"யையும் ஆரம்பித்துவிட்டது. நிதிநிலை காணாதிருக்கின்றது. சைவசமய மறுமலர்ச்சிக்காக ஆரம்பிக்கப் பெற்ற சைவநீதி மலரைத் தொடர்ந்து வெளியிடுவதானால் மற்றும் சமயப் பணிகளைத் தொடர்ந்து செய்வதானால் நிதி தேவைப்படுகிறது. எனவே மன்றத்திற்கு இயன்ற நிதியுதவி செய்து "நீதி"யை நிலைபெறச் செய்வீர்களாக. சங்கத்தில், சைவ மக்கள் அனைவரும் அங்கத்தவராகச் சேர்ந்து காலத்திற்குக் காலம் சங்க நிருவாகத்தில் பங்கேற்று, பொறுப்பான பதவிகளை ஏற்று, சங்க வளர்ச்சிக்குப் பணி செய்து சமயம் மேன்மேலும் சிறப்புற உழைப்போமாக. இதுவரை நீங்கள் செய்த உதவிகளுக்கு மன்றத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வாழ்க! தமிழ் — சைவம் என்றும்
வளர்க! தமிழர்தம் வாழ்வு சிறந்து."

கனடா இந்து மாமன்றம்
*05 — 11 — 1995*

இ.இராசரத்தினம்
நிதியாளர்

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மைகெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்

— பாரதியார்

# ஆசிரியர் குரல் என்ன சொல்கிறது.....

"சைவநீதி" சஞ்சிகை வெளியீட்டை எதிர்பார்த்திருக்கும் சைவத் தமிழ்ப் பேரபிமானிகளே! உங்களுக்கு எங்கள் வணக்கம். நீங்கள் எதிர்பார்த்திருந்த முதன்மலர் நிறை மலராக, சைவப் பேரறிவாளர்கள் பலரின் ஆசியுரைகளுடனும் வாழ்த்துப் பாக்களுடனும் சிறப்பு — சிந்தனை — ஆய்வுக் கட்டுரைகளுடனும் மன்றம் நடாத்தும் வகுப்பு மாணவர் தரவுகளுடனும் சான்றோர் சொல்லமுதுகளும் பொலிவு பெற இதோ! வெளிவந்து விட்டது. 140 பக்கங்கள் கொண்டது. சஞ்சிகையின் நோக்கம் முழுமையாகச் சைவ சமயத்தைப் பற்றிய சிறந்த கருத்துக்களை ஆய்வு செய்வதும் தத்துவ உண்மைகளை எடுத்து விளக்கி மக்களை நெறிப்படுத்துவதும் தமிழ் மொழியை வளர்ப்பதுமாகும்.

உலகிலுள்ள சைவப் பேரறிவாளர்கள் பலர் "சைவநீதி" சஞ்சிகை சிறந்த சமய முன்னோடிப் பத்திரிகையாக விளங்க வேண்டுமென்று ஆதரவு தெரிவித்துள்ளனர். அல்லாமலும் சைவ மக்கள் பரந்து வாழ்கின்ற தேசங்களிலுள்ள சைவ மதஸ்தாபனங்கள் தமது மகிழ்ச்சியையும் நல்லெண்ணத்தையுந் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு எமது நன்றி, சஞ்சிகை வெளியாவதற்கு முன்பே எங்கள் முயற்சி நன்முயற்சியாகும் என்பதைப் பலரும் சொல்லக் கேட்டு மகிழ்ந்து எல்லாம் வல்ல இறைவனின் திருவருளைப் பெரிதும் வேண்டுகின்றோம். அன்பர் பலர் கூறுவது போல மனமாற்றம், மத மாற்றம், மதிமாற்றம், சொல்மாற்றம், செயல்மாற்றம் இடம் பெறாது தடுப்பதற்குச் சைவ மதஸ்தாபனங்கள் முன் முயற்சி எடுக்க வேண்டியது அவசியமாகும். பேசுவது எழுதுவதோடு மாத்திரம் நில்லாது செயலில் இறங்கவும் வேண்டும்.

சைவ சமயிகளாக நாம் வாழ்ந்தால் போதாது. நமது இளம் சந்ததியினரும் சைவ உலகைக் காண வேண்டும்; உருவாக்க வேண்டும்; வளர்க்க வேண்டும்; உண்மையை உணர வேண்டும். அதற்காக நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். "சைவ சமயமே சமயம்" என்பதற்கு எத்தனை எத்தனையோ ஆதாரங்கள் நமக்குண்டு. நமது நாவலர் பெருமான் எழுதிய சைவ நூல்களைப் படிக்கப் படிக்க, சிவப்பெருமை தெற்றெனப் புலப்படும். இவற்றை நாம் அறிந்து நாடறியச் செய்தல் வேண்டும். கவிஞர் கண்ணதாசன் "இந்து மதத்தில் தொட்ட இடமெங்கும் நவமணிகள் தட்டுப்படுகின்றன" என்று கூறியிருக்கின்றார். இந்து தர்மத்தை நன்கு ஆய்ந்த பெரியாரவர். சமயங்களை ஆய்ந்தறிய முற்பட்ட மேலை நாட்டுப் பிறமதப் பெரியார்களும் இந்து மதத்தினை நன்கு ஆய்ந்தறிந்து சிறந்த சமயம் எனக் கூறியிருக்கின்றார்கள். நமக்கு முற்பட்ட சைவமத தெய்வச் சான்றோர்கள் இறைவனை நேரில் கண்டும் கதைத்தும் இருக்கிறார்கள். பெரிய புராண வரலாற்றை ஆராயுங்கள். சைவமத நெறிமுறைகளைக் கற்று உள்ளத்தில் உண்மையொளி பெற்று வாழ்ந்தால் வாழ்வில் நாமும் கடவுளைக் காணலாம். "அடியார்க்கெளியவன் அம்பலவன்." நல்ல ஞானிகள் இன்றும் இறைவனைக் காண்கிறார்கள். முதலில் நம்மை நாம் பக்குவமாக்கி அவனருளைப் பெற வேண்டும். அவனருளாலே அவன்றாள் வணங்க வேண்டும்.

"நீ முடிந்தால் நன்மை செய், தீமை செய்யாதே." இப்படியான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதே இந்து மதத்தின் நோக்கம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு "சைவநீதி" சஞ்சிகை சைவ சமய மறுமலர்ச்சி கண்டு நல்லதோர் சைவ உலகினைப் படைத்துப் போற்ற — தொண்டாற்ற முன்வந்துள்ளது. இன்று வரையிலே நிரூபிக்கப்பட்டுள்ள ஓர் உண்மை, "ஒரு நல்ல சைவன் நல்ல மனிதனாகத்தான் இருப்பான்" என்பதே. எனவே, நல்ல சைவன் "சைவநீதி"யை ஆதரித்துப் போற்றுவான் என்பதும் எமது நம்பிக்கை.

கனடா இந்து மாமன்றம் கனடா நாட்டில் சைவப் பணிக்கென அமைக்கப் பெற்ற சமய ஸ்தாபனமாகும். இம்மன்றம் தமிழ்மொழி, சைவசமயம், கவின்கலை வகுப்புக்களை முறைப்படி நடாத்தி வருவது யாவரும் அறிந்ததே. மேலும் சைவமத உண்மைகளை உலகிற் பரப்ப "சைவநீதி" என்ற நற்பெயரில் காலாண்டிற்கொரு மலராகச் சஞ்சிகை ஒன்றை வெளியிடத் தீர்மானித்ததன் பேரில் சிறந்த முன் முயற்சியின் பயனாக முதன் மலரை — முதன்மை மலரை திருவருள் கூட்ட இன்று காண்கின்றோம். தரமான நல்ல பத்திரிகையை உருவாக்க எத்துணை முயற்சி தேவை என்பதனைப் பத்திரிகை உலகம் அறியும். எனவே, கனடா இந்து மாமன்றத்தின் கன்னி வெளியீடாகிய கன்னிகையைக் கட்டிக் காப்பது சைவ உலகின் பெரும் பணியாகும். கன்னி மலரைச் செதுக்கிய அத்தனை சிற்பிகளுக்கும் கனடா இந்து மாமன்றத்தின் வாழ்த்தும் வணக்கமும் உரித்தாகுக.

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!!

23-12-1995

மலர்க் குழுவினர்
கனடா இந்து மாமன்றம்.

# நால்வர் காட்டிய வழியும்

திருத்தலம் — திருப்பிரமபுரம்(சீர்காழி)
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பண் — நட்டபாடை
திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடையமலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த
பீடுடையபிரமா புரமேவிய பெம்மானி வனன்றே.

முற்றலாமைஇள நாகமோடேன முளைக் கொம்பவை பூண்டு
வற்றலோடு கலனாப்பலி தேர்ந்தெனதுள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடையார் பெரியார் கழல்கையாற் றொழுதேத்தப்
பெற்றமூர்ந்த பிரமாபுரமேவிய பெம்மானி வனன்றே.

திருநாவுக்கரசு நாயனார்
திருத்தலம் — திருவதிகை வீரட்டானம் பண் — கொல்லி

கூற்றாயின வாறுவிலக் ககலீர் கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது வணங்குவனெப் பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதிகைக் கெடில வீரட்டானத் துறையம்மானே.

நெஞ்சமுமக்கே யிடமாகவைத்தே னினையாதொரு போது மிருந்தறியேன்
வஞ்சம் மிதுவொப்பது கண்டறியேன் வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீரதிகைக் கெடில வீரட்டானத் துறையம்மானே.

சுந்தரமூர்த்தி நாயனார்
திருத்தலம் — திருவெண்ணெய்நல்லூர் பண் — இந்தளம்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

நாயேன் பலநாளு நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந்தெய்த்தேன் பெறலாகாவருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லேனென லாமே.

மாணிக்கவாசகசுவாமிகள் — திருவாசகம்
தலம் — திருப்பெருந்துறை
திருச்சதகம் — மெய்யுணர்தல்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னும்
கைதா னெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே.

கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல் லானர கம்புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல் லாதெங்க ளுத்தமனே.

# Neelam Silk

# நீலம் சில்க்

**IMPORTERS, WHOLESALERS & RETAILERS**

"புடவைகளின் பிறப்பிடம்"

"திருமணக் கூறைப் புடவைகளுக்கு இராசியான இடம்"

**1453 Gerrard St. East, Toronto, Ontario, M4L 1Z9**ல் அமைந்துள்ள

எங்களிடம் நவீன டிசைன்களில்1996ம் ஆண்டுக்கான:

- கோலம் பட்டுச் சேலைகள் (புதிய டிசைன்களில்)
- திருமண கூறைப் புடவைகள் **(Gold + Silver)**
- காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்
- தர்மாவரம் பட்டுச் சேலைகள்
- பங்களூர் சாறிகள், மைசூர் சில்க் சேலைகள், **(Gowry & Gayathri) Stain Guard 100% pure silk**
- நூல் சேலைகள் மற்றும் சகல விதமான சாறிகள்
- ரெடிமேட் பிளவுஸ்கள், 2X2 ரெறின் பிளவுஸ் துணிகள்
- ஆண்களிற்கான **Exclusive Pants, Shirts**
- சிறுவர், சிறுமியருக்கான ரெடிமேட் ஆடைகள்
- பரதநாட்டிய **Costtume** ஆடை ஆபரணங்கள்
- தமிழ் **Audio CD** கள்
- சகல வயதினருக்கும் சர்வாணி (மாப்பிள்ளை) சூட் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.

மற்றும் சகல தேவைகளுக்கும் **நகரின் மத்தியில் நீங்கள் நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்**

**(416) 778-7455 Tel:**

# நீலம் சில்க்

**(416) 778-8484 Fax:**



கனடா இந்து மாமன்ற நிருவாகசபை உறுப்பினர்கள்

# தேவர் காட்டிய நெறியும்

சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராசக் குருக்கள்

*கடவுள் வாழ்த்து*

1. **அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.**

கருத்துரை: எழுத்துக்கள் யாவும் அகரத்தை அடிப்படையாய்க் கொள்வது போல உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

2. **கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.**

கருத்துரை: உண்மை அறிவு வடிவாக விளங்குகின்ற இறைவனுடைய நல்ல திருவடிகளைத் தொழாது இருப்பவரானால், அவர்கற்ற கல்வியினால் உண்டாகும் பயன் யாது?

3. **மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.**

கருத்துரை: அடியவர்களின் மனமாகிய மலரில் வீற்றிருக்கின்ற கடவுளின் சீரிய திருவடிகளை இடைவிடாது நினைப்போர் இவ்வுலகில் நிலைத்து வாழ்வர்.

4. **வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.**

கருத்துரை: விருப்பும் வெறுப்புமற்ற கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைப்பவர்களுக்கு எப்போதும் எங்கேயும் துன்பம் இல்லை.

5. **இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.**

கருத்துரை: இறைவனின் உண்மைப் புகழை விரும்பி அன்பு செலுத்துபவரிடம் அறியாமை காரணமாக வரும் இருவகை வினைகளும் வந்து சேரமாட்டா.

6. **பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.**

கருத்துரை: ஐம்பொறிகள் வாயிலாகப் பெறுகின்ற வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்தீர்ந்த ஒழுக்க நெறியில் நின்றவர்கள் நிலையான நல்வாழ்க்கை வாழ்வார்கள்.

7. **தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.**

கருத்துரை: தனக்கு ஒப்புவமை இல்லாத இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களுக்கு அல்லாது மற்றவர்களுக்கு மனக்கவலையை மாற்றுவது அரிதாகும்.

8. **அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.**

கருத்துரை: தருமக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்த நினைக்கின்றவருக்கு அல்லாது மற்றவருக்கு, பொருளும் இன்பமுமான கடல்களைக் கடக்க முடியாது.

9. **கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.**

கருத்துரை: கேட்காத காது பார்க்காத கண் முதலியன போன்று எண்குணங்களைக் கொண்ட கடவுளின் திருவடிகளை வணங்காதவரின் தலைகள் பயனற்றதாம்.

10. **பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.**

கருத்துரை: இறைவனது திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாதென்பதாம்.

— — — தொடரும் அடுத்த இதழில்.

PAS/4495/95

உ

சிவ சிவ
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

# வாழ்த்துரை


தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி 623 206
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்

தொலைபேசி: குன்றக்குடி. 64227




கனடா நாட்டில் வாழும் சைவப்பெருமக்கள் இந்துமாமன்றம் கண்டு, அம்மன்றத்தின் வழி பல்வேறு சமய நற்பணிகளைச் செய்து வருவதறிந்து மகிழ்ச்சி. சமய வகுப்புக்களுடன் மட்டுமல்லாமல் கவின்கலை வகுப்புக்களும் நடத்தி வருவது பாராட்டுதலுக்குரியது. கூட்டு வழிபாட்டுக்கும் ஏற்பாடு செய்யுங்கள். "கூடித் தொழுகின்றிலீர்" என்பது அருள்வாக்கு. கூட்டு வழிபாடுசெய்தால் மக்களிடம் நல்ல ஒற்றுமை வளரும். நம்பிக்கையும் நல்லெண்ணமும் பரவும்.

"சைவநீதி" இதழ் கொண்டுவரும் முயற்சி நல்ல முயற்சி. உலக சமயங்களிலேயே சிவநெறி மட்டும்தான் "சைவநீதி" என்று பெயர் பெற்றது. இறைவனையே "நீதி" என்று அழைத்த பெருமை சைவத்திற்கு உண்டு. "சைவநீதி" வெளியாகும் நாளை எதிர்பார்த்துக் காத்திருப்பது நமது கடமை. சைவநீதிக்கு நமது ஒத்துழைப்பு தங்களுடைய விருப்ப வைப்பாகும்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

அடிகளார்

* திருக்குறளே நமது பொதுமறை * திருமுறைகளே நமதுமறை *

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

# வாழ்த்துரை

சுவாமி ஆத்மகனாநந்தா

RAMAKRISHNA MISSION, 40, RAMAKRISHNA ROAD,கொழும்பு 6

சமய உணர்வு இல்லாத மனிதன் மிருகத்திற்குச் சமானம் என்று நமது சமய நூல்கள் கூறும். "சமய உணர்வு அற்ற சமுதாயம் ஓநாய்களின் கூட்டத்திற்குச் சமானம்" என்று சுவாமி விவேகானந்தர் கூறுவார். பாமரனைப் பண்புள்ளவனாக்கி, பண்புள்ளவனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்தும் நோக்கத்தையும், சக்தியையும் உடையதே சமயம். ஆனால் மக்கள் சமயத்தை சரியான முறையில் கடைப்பிடிக்காது அதன் முழுப்பயனையும் பெறாதவர்களாக உள்ளனர். இன்னும் பலர், மூட வெறியின் காரணத்தினால், சமயத்தில் உயர்வு, தாழ்வுகளைக் கற்பித்து, மக்களிடையே பகைமையையும், போட்டி மனப்பான்மைகளையும் வீணே வளர்க்கின்றனர். இது மிகவும் வேதனைக்குரிய விடயம். தங்கள் சமயத்தை வளர்க்கும் முயற்சியில், கடவுளையே மறந்து, புறச்சடங்குகள், தத்துவங்கள் மற்றும் ஏனைய விடயங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, அமைதியின்றி இருக்கும் அவர்களது நிலை மிகவும் துன்பகரமானதும், சிந்திக்க வேண்டியதொன்றும் ஆகும். இத்தகைய நிலையைக் கண்டுதான் சுவாமி விவேகானந்தர், "இன்றைய சமயங்கள் உயிரற்ற நடைப்பிணங்களாகி விட்டன. இன்று நமக்கு வேண்டியது ஒழுக்கமே" என்று கூறினார்.

எனவே, சமயத்தைப் பின்பற்றுபவர்கள் கவனம், உயர்பண்புகளை வளர்ப்பதில் அதிகம் இருக்க வேண்டும். நெல்லில் உள்ள அரிசி, உமி இரண்டுமே முக்கியமானவையே. ஆனால், அரிசியை வீசி உமியை மட்டும் பாதுகாத்தல் சரியல்ல. அங்ஙனமே, சமயத்தின் இரு தூண்களாக விளங்கும் பண்பு மற்றும் அறிவு (நூலறிவு), இவை இரண்டையும் வளர்த்தல் அவசியமெனினும், பண்பை வளர்ப்பதில் அதிக கவனம் தேவை.

கனடாவில் வதியும் சைவப் பெருமக்களின் சமய வளர்ச்சியில் அக்கறை கொண்டு, அவர்களுக்குத் தொண்டாற்ற முன்வந்திருக்கும் கனடா இந்து மாமன்றத்தாரை மனமார வாழ்த்துகிறேன். அவர்களது முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. அவர்களது பணி சிறந்து விளங்க இறையருளைப் பிரார்த்திக்கிறேன். கனடா வாழ் இந்துக்கள் இம்மன்றத்திற்குத் தங்கள் முழு ஆதரவையும் அளித்து, அம்மண்ணில் சைவசமயம் தழைத்தோங்க உதவுவார்கள் எனத் திடமாக நம்புகிறோம்.

"சைவநீதி" சஞ்சிகைக்கு எனது நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி யடைகிறேன்.

உ

சிவமயம்

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*
சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா), LONDON
05-07-1995

# "சைவநீதி" என்றும் வாழ்க!

பல்லாயிரம் மைல்களுக்கப்பால் நாம் இடம்பெயர்ந்தும் எமது கலை, கலாசார மத பாரம்பரியங்களை அனுசரித்துச் செல்லும் மனோபாவத்தோடு வாழுதல் பாராட்டுக்குரியதொன்றே.!

கனடாவில் இருந்து, **கனடா இந்து மாமன்றம் சைவநீதி** என்ற காலாண்டிதழை வெளியிட எண்ணியுள்ளமையை எண்ணி உள்ளம் பூரித்து நிற்கிறது சைவ முன்னேற்றச் சங்கம்.

எல்லாம் வல்ல எம்பெருமான் சிவனின் தெய்வீக ஒளிபரப்பும் மலராக **சைவநீதி** மலர வேண்டுமென்பது எமது அவா!

பதினெட்டு ஆண்டுகள் பிரித்தானியாவில் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகக் கொண்டு சேவை புரிந்துவரும் சைவ முன்னேற்றச் சங்கம் தன்னாலான சகல உதவிகளையும் அவ்வப்போது **சைவநீதி** சஞ்சிகைக்கு வழங்கும்.

சைவத்தின் பெருமைகளைப் பட்டி தொட்டியெல்லாம் பரவச் செய்து வெளிநாடுகளில் வதியும் எம்மவர்கள் மத்தியில் சமய விழிப்புணர்ச்சியை, **சைவநீதி** ஏற்படுத்த எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவருள் கிடைக்க, சைவ முன்னேற்றச் சங்கம் மனதார வாழ்த்தி நிற்கின்றது.

ஓம் நமச்சிவாய!

**கு.சிதம்பரப்பிள்ளை**
தலைவர்
சைவமுன்னேற்றச்சங்கம்(பிரித்தானியா)

# அம்மன்ஸ் நகைமாளிகை



நீண்ட காலமாக யாழ்ப்பாணம் அனுபவம் வாய்ந்தவர்களின் கைவண்ணத்தில் உருவாகும் படைப்புக்கள்!!!!!

எம்மிடம் அனைத்துரக 22 கரட் சிங்கப்பூர் நகைகளையும் உறுதியான, கண்கவர் வேலைப்பாடுகளுடன் கூடிய உங்கள் எண்ணம்போல் பலரக டிசைன்களில் - உத்தரவாதத்துடன் - குறித்த தவணையில் ஓடருக்குப் பெற்றுக் கொள்ளலாம்

## New Arrivals

✳ தாலிக்கொடி, ✳ அட்டியல், ✳ சங்கிலி வகைகள், ✳ பதக்கங்கள், ✳ கைச்சங்கிலிகள், ✳ தோடு வகைகள், ✳ வளையல்கள், ✳ சங்கீதா காப்புகள், ✳ தங்கக் கால்சங்கிலிகள்

✳ **Two-in-one** நெக்கலஸ் **(Necklas)**

யாவற்றையும் ஓடருக்கும் உடனடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

நகரின் மத்தியில் ஜெராட் இந்தியா பஜாரில்

**Amman's Jewellers**
**1604 Gerrard St. East, Toronto**
**(416) 461-6217**

# யாழ் ஓட்டோ ரெக்

முற்பணம் செலுத்தாமல் எந்த வாகனமும் தவணைமுறையில் வாங்கிக் கொடுக்கப்படும்.

வாங்கிக் கொடுக்கப்படும் வாகனத்திற்கு ஒரு வருடம் உத்தரவாதம் வழங்கப்படும்.

Painting Work மூன்று மணத்தியாலத்தில் செய்து கொடுக்கப்படும்




- எஞ்சின் பழுது பார்த்தல்
- எஞ்சின் மாற்றுதல்
- ரயர் திருத்த வேலைகள்
- கியர் பொக்ஸ் மாற்றுதல்
- பிரேக் வேலைகள்
- ஒயில் மாற்றுதல்
- **Body work**




இலவசம்! முடை மாற்றிக் கொடுக்கப்படும் (200 டொலர்களுக்கு மேல் திருத்த வேலை செய்பவர்களுக்கு மட்டும்

தொடர்புகளுக்கு: நடா
தொலைபேசி: (905) 660-9462
**Pager: 375-7335**



**YARL AUTO TECH**
**40 Doughton Road, Unit #5**
**6 Concord, Ontario, L4K 1R2**
Tel: (905) 660-9462

உ
சிவமயம்

# அகில இலங்கை இந்து மாமன்றம்

தலைமையகம் இல, 101/1, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு – 2, இலங்கை, தொலைபேசி 434990

## பாராட்டுச் செய்தி

கனடா இந்து மாமன்றம் 'சைவநீதி' சமய சஞ்சிகை வெளியிடுவதை அறிந்து அகமகிழ்கின்றோம்.

வெளிநாடுகளில் குடியேறினாலும் எமது சந்ததியினர் எமது சமய வழி நின்று, எமது பண்பாடு பேணி, வாழ்கின்ற சிறப்பு என்றும் போற்றற்பாலது.

சைவத்தமிழ் மக்கள் தம் வாழ்நாளில் தெரிந்து வைத்திருக்க வேண்டிய பல விடயங்கள் படிமுறை யாக 'சைவநீதி' இதழில் வெளிவரவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியின் விழைவாகப் புதிய நாகரிக மாயையில் எங்களின் பிள்ளைகள் விழாமல் காப்பாற்றுவதற்கு 'சைவநீதி' பெரும் பங்காற்ற ஆண்டவனருள் பாலிப்பாராக.

இலங்கை இந்து சங்கங்களின் ஒன்றியமான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பில் சைவநீதி சஞ்சிகைக்கு எங்கள் வாழ்த்துக்களை அனுப்பி வைக்கின்றோம்.

யுவ வருடம் ஆடி மீ 25ந் திகதி

கந்தையா நீலகண்டன்
பொதுச் செயலாளர்

# "சைவநீதி" என்றும் நின்று நிலைபெறுக!

சிவப்பேரன்பர் சி. சரவணமுத்து சுவாமிகள்,
திருவாசகமடம், திருக்கேதீச்சரம், இலங்கை

வெள்ளையர் நாடாகிய கனடாவில் இந்து மாமன்றம் என்ற ஒரு சபையை நிறுவி அதன் மூலம் சைவத்தையும் தமிழையும் வளர்க்க முன் வந்த பண்டிதர் புலவர் திரு. வீ.வ. நல்லதம்பி அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன்.

"சொற்கோவும் தோணிபுரத்தோன்றலும் எம் சுந்தரனும்
சிற்கோலவாதவூர் தேசிகனும் முற்கோலவந்திலரேல்
நீறு எங்கே மாமறை நூல் தான் எங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத்தும் எங்கே!"

"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழ் எங்கே சுருதி எங்கே; — எல்லவரும்
ஏத்து புராண இதிகாசமெங்கே
ஆத்தன்உரை எங்கே அறை"

"பங்கயத்தயனும் மாலும் அறியா நீதி" எங்கள் பெருமான் மேன்மை கொள் சைவநீதி.

சைவநீதியை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் சைவ வினா விடையில் தந்துள்ளார். அது எங்கள் பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகமாக இருந்தது. அதனால் அந்த நீதியை வணங்கி நாமும் சைவநெறி நிற்கக் கிடைத்தது — அவர்பின் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார், பண்டிதமணி திரு.சி. கணபதிப் பிள்ளை அவர்களும் சைவநீதியைப் பற்றி எழுதி உள்ளார்கள். இந்தியாவிலும் பல அறிஞர்கள் சைவ நீதியைப் பற்றி எழுதி இருந்தாலும் சைவநீதிக்கென்றே ஒரு தனி நூல் வரவில்லை என்றே நினைக்கிறேன். வந்திருப்பின் அது அடியேனின் பார்வைக்குக் கிட்டவில்லை. இப்போது சைவநீதிக்கென்று ஒரு தனி நூல் வருவது சைவர்கள் செய்த பாக்கியமேயாகும்.

"மானுடவடிவம் தானும் வகுத்தது. மனம், வாக்கு, காயம் ஆனிடத்தைதந்துமாடும் அரன்பணிக்காக வன்றோ." "வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை நீங்கித் தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும் ஊழ் பெறலரிது." கிடைக்க அரிதாகிய சைவசமயத்தை மேற்கொண்ட நாம், சைவநீதியாம் எம்பெருமானை மனத்தில் இருத்தி வழிபட்டு அவன் திருவடிக்கு ஆளாக வேண்டுமென்ற பெருங்கருத்தாலே இந்த, சைவநீதி என்ற சஞ்சிகையை ஆக்கித் தருகிறார் எனது அன்பிற்குரிய பண்டிதர் புலவர் வீ.வ.நல்லதம்பி அவர்கள். அவர்களைப் பள்ளி மாணவனாக இருக்கும் போதே நான் அறிவேன். அப்பவே நல்ஒழுக்கமும் தெய்வ பக்தியும் நிறைந்திருந்தன. பள்ளிக்கூடத்திலும் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். புராணபடனம் புராணத்துக்கு பயன் சொல்லும் திறமையும் பெற்றிருந்தார். சாதாரண தமிழ் ஆசிரியராக வந்தவர் பண்டிதர் புலவர் பட்டத்தையும் பெற்று சிரேட்ட மகாவித்தியாலயத்தின் தலைமைப் பதவியும் பெற்று சிறப்புடன் நிர்வகித்தது அவர் சைவநீதியைப் போற்றி வாழ்ந்ததேயாகும். தற்போது கனடா நாட்டில் குடியேறிய நம்மக்கள் சைவமாகிய உயிரையும் தமிழாகிய உடலையும் மறவாமல் போற்றி வாழவேண்டுமென்ற பெருநோக்கால் சைவ நீதியைப் பரப்ப முன் வந்துள்ளார். அடியேன் ஒன்றுக்கும் பற்றாத சிறியேன், அவர்களை ஆசீர் வதிப்பதற்குத் தகுதியற்றவன் ஆயினும், ஞான சம்பந்தப் பெருமானாரின் வாக்கால் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்குயாதுமோர் குறைவில்லை"யென வாழ்த்தி ஆசீர்வதித்து எல்லாம்வல்ல திருக்கேதீஸ்வரப் பெருமான் திருவருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்தித்து அமைகிறேன்.

*"சைவநீதி என்றும் நின்று நிலைபெறுக!"*

**ஓம் நமசிவாய**

உ

# "சைவநீதி" உலகெல்லாம் விளங்கட்டும்

தி. மாணிக்கவாசகர்
B.A P.G.T. Dip. In Ed.(Sydney)S.L.E.S
Retired Director of Education - JAFFNA

சைவ சித்தாந்தத்தில் சற்புத்திர மார்க்கம், தாசமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்று நான்கு வகையான பக்தி மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தர் சற்புத்திர மார்க்கத்தையும், அப்பர் தாசமார்க்கத்தையும், சுந்தரர் சகமார்க்கத்தையும் மேற்கொண்டு இறைவனை வழிபட்டு உய்ந்தனர். பரமேஸ்வரன் சம்பந்தருக்கு உமாதேவி அம்மையைக் கொண்டு பாலைக் கொடுத்தும் சுந்தரருக்கு ஓலையைக் காட்டியும், அப்பருக்குச் சூலைநோயைக் கொடுத்தும், மாணிக்கவாசகருக்குத் தன் திருவடியை முடியில் வைத்தும் தடுத்தாட் கொண்டார். வேதங்கள் இறைவனைத் தொடருகின்றன. இறைவனோ தன் திருநாமங்களைத் தொடருகின்றான். இறைவனின் நெறி கூறும் "சைவநீதி" என்னும் மலர் கனடாவில் இந்து மாமன்றத்தினரால் வெளியிடுவது பாராட்டத்தக்க செயலாகும். இதனால் மக்கள் சமுதாயம் நற்பலன் அடையுமென்பது திண்ணம். இந்து மாமன்றத்தினர் தமிழ், சமய, இசை, நடன வகுப்புக்களை நடத்துவதும் கூட்டுவழிபாடுகள் செய்வதும் வரவேற்கத்தக்க செயல்களாகும். அயராது உழைக்கும் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

"சைவநீதி" உலகெல்லாம் விளங்கட்டும். இது உந்து கோலாக அமையட்டும். இறையருள் கிட்டட்டும் என்று ஆசீர்வதிக்கின்றேன்.

**வாழ்க! வையகம்.**

உ
ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்
கலசம்
லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ்
KALASAM
First Religious Quarterly Magazine From London

05-07-1995

## சைவத்துக்கொரு "சைவநீதி"

மனிதன் பரம்பொருளை மறந்து மனம்போனபோக்கில் நடக்கும்போது
கால் இடறுப்பட்டு துன்பப்படுகின்றான்.
எங்கே போவதென்று புரியாமல் அல்லற்படுகிறான்!
அழுகிறான்!
இப்படியான மனிதர்களை ஆற்றுப்படுத்த ஆங்காங்கு காலத்துக்குக் காலம் பரம்பொருளின் பாதைகளைத் தெளிவுபடுத்தும்–வெளிச்சம்போட்டுக்காட்டும் ஆத்மீக சஞ்சிகைகள் ஆத்மீக ஆர்வலர்களால் ஆங்காங்கு ஆரம்பிக்கப்படுகின்றன.
இந்த வரிசையில் எமது ***கலசம்*** சஞ்சிகை பதினொரு இதழ்களைத் தொடர்ச்சியாகத் தந்து கம்பீரமாக நிற்கிறது.
அடுத்து வருகிறது ***சைவநீதி.***
அண்ணன் தம்பியை அரவணைப்பதுபோல் ***கலசம்*** சஞ்சிகை ***சைவநீதி*** சஞ்சிகையை அரவணைக்கக் காத்திருக்கிறது.
துன்பங்களும் துயரங்களும் நிறைந்த பாதையில் கைகோர்த்து நடக்கக் கரம் நீட்டி வரும் ***சைவநீதி***யை அள்ளி அணைத்து உச்சிமோர ஆவலோடு காத்திருக்கிறது ***கலசம்.***
நெறிதவறும் மனித குலத்தைத் தட்டியெழுப்பிச் சரியான பாதையில் நெறிப்படுத்த ***சைவநீதி*** தன்னாலான பங்களிப்பைச் செய்யும் என ***கலசம்*** மனதார நம்புகிறது.
இத்தகு சிறப்புமிகு செயலினை கனடா நாட்டில் செயற்படுத்தும்
**கனடா இந்து மாமன்றத்தினரைப்** பாராட்டத் தமிழில் சொற்களைத்
தேடிக்கொண்டிருக்கிறது ***கலசம்.***
எல்லாம் வல்ல பரம்பொருளின் தெய்வீக அருட்சக்தி ***சைவநீதி***க்குக் கிடைக்க வாழ்த்தி வணங்கி நிற்கிறது ***கலசம்.***
ஓம் நமச்சிவாய!!

மு. நற்குணதயாளன்
ஆசிரியர், கலசம் காலாண்டிதழ்

ஆசிரியர் : மு. நற்குணதயாளன் துணை ஆசிரியர் : க. ஜெகதீஸ்வரன் நிர்வாகத் தொடர்பு : வ.இ. இராமநாதன்
பொருளாதாரப் பொறுப்பு : சிவ. அசோகன் பொதுமக்கள் தொடர்பு : மாணிக்கம் சுரேஷ் விற்பனை விநியோகம் : இ. முருகதாசன்
மகளிர் பகுதி : திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம் விளம்பரப் பொறுப்பு: திரு ந. சிவராஜன்

'KALASAM' 2, SALISBURY ROAD, MANOR PARK, LONDON E12 6AB ENGLAND
TEL : 01268 766624 / 0181 924 8115 FAX: 01268 561805

உ

தொலைபேசி: 36495
கயிலைமாமுனிவர் வித்துவான்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
தலைவர், கோவை நீலகிரி மாவட்டத்
திருக்கோயில் வாரியம்
தமிழகக் கோயில் சீரமைப்பு
வல்லுநர் குழு
பேரூராதீனம், பேரூர்(அஞ்சல்)
கோயம்புத்தூர் — 641 010. தமிழ்நாடு

Telephone: 36495
Kailai-Ma-Munivar Vidwan
**Santhalinga Ramasamy Adigal**
President Board of Temples
Coimbatore and Nilgiris Districts
Tamilnadu Temple renovation
Experts Committee,
PERURAATHEENAM, PERUR(P.O.)
COIMBATORE-641 010. TAMIL NADU

சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

# "சைவநீதி" நூல் வாழ்த்துப்பா

ஞாலத்தில் கனடா என்னும் நாட்டினில் தமிழ் மக்கள் தம்
சீலத்தின் வழியே **சைவநீதி** யென்றிதழின் சேவை
காலத்தின் தேவை இந்து மாமன்றம் கருத்தில் கொண்டு
மேலவர் நல் வாழ்த்தோடு மிகுபணி செய்து வாழி!

பார் எங்கும் தேனீப் போல பரவிய தமிழர் தங்கள்
சீர்மிகு சைவம் போற்றிச் சிந்தனை வளத்தால் அன்பு
சேர் இன உணர்வால் வாழ்க! சிவநெறி உலகமெங்கும்
ஆர் வலராகும் தொண்டர் அரவணைப் பதனால் வாழி!

திருமுறை நூல்கள் கூறும் செந்தமிழ் நெறியில் நாளும்
உருகிய உளத்தராகி ஒன்றிய உணர்வினோடு
மருவுகிந்து மாமன்றத்தின் வளம் பெறுகலைச் செல்வங்கள்
பெருகிடத் தமிழர் கூடிப் பெருமை சேர்த்தினிது வாழி.

அன்புள்ள
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
(தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்)

உ

# தெய்வ நெஞ்சிதழ் வருக! வாழ்க!!

கவிஞர் வி . கந்தவனம்

நீதியை மனிதப் பண்பை நிகரிலா மனிதா பத்தை
ஏதமில் வகைமிற் பேணும் இன்மனக் கனடா நாட்டில்
மாதநன் மலராய் இந்து மாமன்றக் குரலாய்ச் 'சைவ
நீதி'யென் னாமத் தெய்வ நெஞ்சிதழ் வருக வாழ்க!

புலம்பெயர்ந் துள்ள நாட்டுப் புதுமையில் தமை மறந்து
புலன்வழி சென்று புன்மைப் பொழுதினைப் பெருக்கி வீணே
நிலைகெடும் தமிழருக்கு நிலைமையை விளக்கி எங்கள்
அலகில்நற் சமயப் பண்பா டனைத்தையும் புகட்டி வாழ்க!

அன்பினைப் பெருக்கி வாழ்க அறத்தினை வளர்த்து வாழ்க
துன்பினைத் துடைத்து வாழ்க சுதந்திரச் சைவம் போற்றும்
இன்பமும் தமிழும் மேன்மை நீதியும் ஒழுக்க வாழ்வும்
மன்பதை எங்கும் ஓங்க மலர்ந்துதொண் டாற்றி வாழ்க!

# சிவநெறிச் செஞ்ஞாயிற்றுச் செல்கை! வாழ்க!!

பண்டிதர் ச. குமரேசையா

பல்வேறு சமயங்கள் பலதி சைக்கண்
பரந்தாலும் சங்கமமாம் முடிபொன் றென்ன
நல்லறிஞர் ஆய்வாளர் கூறு வார்கள்
ஞாலமதில் காலாதி கால முன்பு
சொல்லாகா வேதாக மங்கள் ஈசன்
சொத்தாகச் சித்தாந்தம் முதல தாகத்
தொல்ஞானர் முனிகுரவர் சென்ற சைவத்
தூய்தான நீதிசொல வந்தாய் வாழ்க!

வடஇமயத் திருந்துதென்பால் குமரி மட்டும்
வழிநடந்தாங் கிருந்துபின்பும் வடபாற் சென்று
இடமிடமாய்த் திருத்தலங்கள் ஆதீ னங்கள்
ஈழம்முதல் இந்துசா கரஞ்சேர் நாடு
தொடர்ந்திலங்கிப் பசுபதிபா சத்தின் உண்மை
துலக்குசைவ நெறிப்பரிதி ஒளிக்கீற் றாகச்
சுடர்ந்தொளிர்க! கனடாவில் சிவசத் தங்கள்
சீலநெறி பொழிக! சைவ நீதி வாழ்க!

எப்பொருளும் உலகமதில் முனபி ருந்த
இயல்புகளிற் காலமதில் மாறும் உண்மை
தப்பாமல் நிகழ்வதுதான் மாயை என்று
சாற்றியதை விளங்கவைப்பாய் சைவ நீதி
எப்பொழுதோ கூறினாரிங் "கெல்லாம் மாயை"
என்பதையும் நூல்நூலாய் எடுத்துக் காட்டி
அப்பனவன் அம்மையவன் அனைத்து மான
அரனார்தம் தத்துவங்கள் அலர்க! வாழ்க!

காலதேச வர்த்தமானம் மூன்றும் மாயை
கணம்நொடியில் மாறுவதால் காலம் மாயை,
தூலங்கொள் தேசங்கள் அண்டம் எல்லாம்
தொடர்ந்தியல்பு மாறுதலால் தேசம் மாயை
ஞாலமதில் செயல்பண்பாம் வர்த்த மானம்
நாழிகையில் மாறுதலால் அதுவும் மாயை
ஏலவே இவைமாறிக் கொண்டி ருக்கும்
இயல்பதனால் பிரபஞ்சம் மாயை என்க.

இகம்ஆன பிரபஞ்சம் மாயை என்று
இயம்புதலில் சமயங்கள் பேதம் கொள்ளா
அகமான மாயைக்கு அப்பால் என்ன
அமைந்துளது என்பதில்தான் பேதம் உண்டு
சுகமாக அங்கொன்றும் இல்லை, வெற்றுச்
சூனியமே என்றுசில சமயம் கூறும்
புகலாக அங்குளதே "பரம் ஆம்" உண்மை
புகட்டிநீ வாழ்க! "சைவ நீதி" இங்கே.

கன்மமது மனம்வாக்குக் காயம் மூன்றால்
   கருக்கொண்டே நன்மைதீமைப் பயனைக் காட்ட
என்னவெலாம் செய்தீற்றில் எமைத் திருத்தி
   இறைஞானம் கொளச்செய்யும் இனிய பண்பும்
தன்னகத்தே கொண்டெம்மைத் தலைவ னோடு
   தலைக்கூட்டித் தானழியும் என்னு முண்மை
உன்னெழுத்தால் இங்கெல்லாம் எடுத்துக் காட்டி
   ஊழிவரை வாழ்க! நீ சைவ நீதி!

அப்பப்பா ஆணவத்தின் அகோரம் இஃதென்(று)
   அணுவணுவாய் அஃதழுங்காய்ப் பிடிக்கு மென்று
இப்பொழுது கனடாவில் உதயங் கொள்ளும்
   இளம்பரிதி யாய்ச்சைவ "நீதி" வாழ்க!
முப்பொழுதும் தொழும்பக்தி முதிர்ஞா னத்தால்
   முதல்வனுளே ஜீவாத்மா சேரும் போது
தப்பாமல் ஆணவமும் அகலும் உண்மைத்
   தகவெல்லாம் அலர்த்திநீ வாழ்க! வாழ்க!!

எல்லாமே அவன்செயலென் றிங்கு வந்தோம்
   எம்முடனே வந்ததோர் அறிஞ னான
நல்லதம்பிப் பண்டிதனார் நாளும் எண்ணி
   நயந்து "சைவ நீதி"யென நாம மிட்டு
எல்லோரும் இன்பமுற வாழ்தல் வேண்டி
   இறைபக்தி ததும்புஞ்செந் தமிழால் தந்தான்
பல்லாண்டு வாழ்க! அவன் பலரும் வாழ்த்தும்
   பரிசொளிர வாழ்க! சிவ "சைவ நீதி"

கனடாவின் இந்துமா மன்றம் வாழ்க!
   காலாகா லம்சிவனார் தொண்டால் வாழ்க!
தனமாத னம்மான பக்திச் செல்வம்
   தழைத்தொளிரச் சிவனடியார் தளைகள் நீங்கத்
தினமாதி னங்களிலே திருப்பு ராணத்
   திருமுறைசால் சிவவொலிகள் துளும்பச் செய்க!
மனமாதி யனவொடுங்கித் தியானம் சேர்க!
   மன்றம்இறை கடைக்கணிக்க வளர்க! வாழ்க!!

சிவசமய வளர்ச்சிசெந் தமிழால் தேம்பும்
   சேர்ந்திரண்டும் ஒன்றாய்அத் துவிதம் போல
அவனிதனில் அழகுதரல் அறிவோம் யாமே
   ஆகையினால் செந்தமிழும் சேர்ந்து வாழும்
சுவையறியச் செய்கடமைத் திறமும் வேண்டும்
   தித்தித்தே அவைவாழ்க! அறிஞ ரெல்லாம்
அவைகளிலே அரன்கழற்கீழ் அர்ச்சித் தேத்தும்
   அன்றலர்ந்த மலரிவைகள் ஆக! ஆக!

சுபம்.

# வாழிய சைவநீதி!

அனலை, ஆறு. இராசேந்திரம்

என்றிவள் பிறந்தாள் என்றுல கறியா
ஏழிற்றமி ழன்னைபோற் புவியில்
நின்ற தொன்னெறியாம் சிவநெறிப் பெருமை
நிலைத்திட உழைத்திடும் அன்பர்
ஒன்றென நின்று கண்டனர் "கனடா
இந்துமா மன்ற"மாம் கழகம்
நன்றவர் பணிகள் சிறந்திட வாழ்த்து
நவின்றனன் வாழிய நீதி!

பிறந்த நன்னாடு பேணிய வாழ்க்கை
பேரருட் சமயம் பண்பாடு
மறந்திடா வகையிற் றமிழினம் வாழ
மாபெரும் நோக்கினைக் கொண்டார்
சிறந்த நற்கல்வி அறிவியற் கலைகள்
தேர்ந்துமென்? நிலைஇழந் தோமேல்
அறந்தனை யாற்ற அவனியைக் காக்க
அருஞ்சிவ நெறிதலைக் கொள்வோம்!

செந்தமிழ் மக்கள் சேர்ந்துறை கனடா
நாட்டினிற் சிவநெறிச் சால்பு
தந்திட உதித்த தகவுடைச் சைவ
நீதியாம் இதழ் நிலைத் திடுக!
சிந்தை யிலொன்றி இனித்திடும் தமிழிற்
சிறப்புரை வழங்கிடும் அறிஞர்
தந்திடும் சாரம் உளத்திடைக் கொண்டு
தரணியிற் றமிழினம் வாழ்க!

# மாணவர் பகுதி இந்துமாமன்ற தமிழ் — சமயப்பாடசாலை

## தந்தை தாய் பேண்

உ. செந்தூரன்

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது பெரியோர் வாக்காகும். எம்மை எமது தாயார் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்தார். எம்மைப் பெற்ற தாய் பாலூட்டித் தாலாட்டி மிக அன்புடன் வளர்க்கிறார். சிறுகுழந்தைப் பருவத்தில் எமக்கு நோய் வந்து விட்டால் எமக்காகத் தான் மருந்து உண்கிறார். நாம் வளர வளர சத்துணவு தந்து எம்மை, கண்ணை இமை காப்பது போலக் காத்து வருகிறார். எமக்கு உணவு ஊட்டும் போது தாயார் அன்பையும் ஊட்டுகிறார். தாயாரின் வளர்ப்பில் நாம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகிறோம். எமது தந்தையார் அல்லும் பகலும் எமது நன்மைக்காகப் பாடுபட்டு உழைக்கிறார். நாம் கல்வி அறிவு பெற்று உலகத்தில் சிறந்து விளங்க வேண்டும் என அரும்பாடுபட்டு வருகிறார். நாம் குற்றம் செய்யும் போது தண்டிக்கிறார். எம் திறமையைக் கண்டு பாராட்டி உற்சாகம் அளிக் கிறார். எமது பெற்றோர் நாம் சிறுவராக இருக்கும் போது எம்மைத் தூக்கி விளையாடியும் மடிமீது வைத்து அளவில்லா அன்பைச் சொரிந்தும் வளர்க் கிறார்கள். எமது நல்வாழ்வுக்காகத் தங்களால் இயன்ற பல தியாகங்களைச் செய்கிறார்கள். இவ் வாறாக எமது நல்வாழ்வுக்காகப் பாடுபட்ட பெற்றோர் கள் முதியவர்களாக வந்து விட்டால் நாம் அவர் களுடன் அன்பாக நடக்க வேண்டியது இன்றியமை யாதது. அவர்கள் விரும்பும் இடங்களுக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். உணவு உடை முதலியவற்றில் ஒரு குறையும் இல்லாது பார்க்க வேண்டும். நோய், வரும் போது நல்ல மருந்து வாங்கிக் கொடுக்க வேண்டும். முதுமை அடைந்த நேரத்தில் பெற் றோரை மனம் நோகச் செய்தல் பாவச் செயல். அவர் களைப் போற்றிப் பேணுதல் புண்ணியச் செயல் ஆகும்.

## ஔவையார்

து. மயூரன்

ஔவையார் ஒரு பெண்புலவர்.
அவர் மிகச் சிறந்த தமிழ் மூதறிவாளர்.

அவர் ஏழைகளோடும் பழகினார், அறிவாளிகளோடும் பழகினார், அரசர்களோடும் பழகினார்.

அவர் மக்களுக்கு நல்ல அறிவு நூல்களை இயற்றித் தந்தார். ஆத்திசூடி, நன்னெறி, நல்வழி என்பன சிலவாகும்.

எல்லோரும் அவரை அன்போடு ஔவைப் பாட்டி என்று அழைத்தனர்.

*"ஔவைக் கிழவி நம் கிழவி*
*அமிழ்தில் இனிய தமிழ்க் கிழவி*
*என்று துதித்துப் போற்றிடுவோம்*
*இனிதே பாட்டுப் பாடிடுவோம்."*

## இந்து சமயம்

ராஜா கிசோக்குமார்

இந்து சமயம் ஒரு சிறந்த சமயம் ஆகும்.

உலகின் பல பாகங்களில் இந்து சமய மக்கள் இருக்கின்றனர்.
காற்று இல்லாமல் உயிர் இல்லை.
நான் ஓர் இந்து சமயத்தவன்.
அதனால் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்து சமயம் நல்ல ஒழுக்கங்களை எங்களுக்குக் கூறுகின்றது. அதன்படி நடந்து நல்லவனாக வாழ வேண்டும் என்பது எனது ஆசை.

வீட்டில் அப்பா, அம்மா ஆகியோரும் இந்து சமய முறைப்படியே நடக்கிறார்கள். நாங்கள் காலை மாலை கடவுளை வணங்குகிறோம்.

# ASIAN SALON

# ஏசியன் சலூன்

உங்களின் சாதாரண
தோற்றத்தையும் கவர்ச்சியானதாக்கும் கலை
எங்களிற்குக் கைவந்தது

| | |
|---|---|
| 585 Parliament St.<br>Toronto<br>Ontario<br>M4X 1P9<br>(416) 960 3235 | 1233 Ellesmere Rd.<br>Scarborough<br>Ontario<br>M1P 2X8<br>(416) 757 8002 |

உங்களிற்குச் சேவை
செய்வதற்காக இரு
இடங்களில்
காத்திருக்கிறோம்




# Niro Stills

COMPLETE PHOTO
COVERAGE FOR YOUR..

- ☑ WEDDINGS
- ☑ BIRTHDAY'S
- ☑ & ALL OTHER OCCASIONS

## S.Balan
(Professional Photographer)

**Tel: (416) 490 7936**
**Mobile: (416) 918 5619**

Free Enlargement

**நிரோ ஸ்டில்ஸ்**

## தமிழ்

சு. சுரேஷ்

தமிழ் எங்கள் தாய் மொழி.
தமிழ்க் கலாச்சாரம் சிறந்தது.

தமிழ் எல்லா மொழிகளிலும் இனிமையானது.

தமிழுக்கு அமுதென்று பெயர்.
தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

தமிழை விரும்பிப் படிப்போம்.
தமிழில் பேசி மகிழ்வோம்.

கனடா இந்து மாமன்றம், தமிழ் சமயம், சங்கீதம், வீணை, வயலின், பரத நாட்டிய வகுப்புக்களைத் தமிழ்ப் பிள்ளைகளுக்காக நடாத்துகிறது. பெருந்தொகை மாணவர்கள் அங்கே படிக்கிறார்கள். நான்கு ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இப்போது தமிழ் நன்கு எங்களுக்குத் தெரிகிறது. தொடர்ந்து தமிழைக் கற்போம்.

## சுட்ட பழம்

அனுப்பிரியா பாலேந்திரன்

ஔவையார் ஒரு நாள் நீண்ட தூரம் நடந்தார். நன்றாகக் களைத்துப் போனார். அதனால் ஒரு நாவல் மர நிழலில் இருந்தார். மரத்தில் ஒரு சிறுவன் நாவற் பழங்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். பாட்டி அவனிடம் தனக்கும் பழங்கள் தரும்படி கேட்டார். அப்போது சிறுவன் “பாட்டிக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?” என்று கேட்டான். பாட்டிக்கு விளங்கவில்லை. “சுட்ட பழம் போடு” என்று சொன்னார். சிறுவன் பழத்தைக் கீழே போட்டான், அதில் மண் ஒட்டி விட்டது. பாட்டி பழத்தை எடுத்துக் கையில் வைத்து ஊதினார். சிறுவன் “பாட்டி! பழம் நன்றாகச் சுடுகின்றதா?” என்று கேட்டுச் சிரித்தான். பாட்டிக்கு வெட்கமும் துக்கமும் ஏற்பட்டது. அரசர்களாலும் அறிஞர்களாலும் மதிக்கப்பட்ட ஔவையார் இடைச் சிறுவனிடம் தோற்றுவிட்டார். பாட்டி சிறுவனைப் பார்த்து “நீயாரப்பா?” என்று கேட்டார். “பாட்டி என்னைத் தெரியாதா?” என்று கேட்ட சிறுவன் மறைந்து விட்டான். பச்சை மயில் மீது கையில் வேல் ஏந்தி முருகன் அங்கே நின்றார். உண்மையான அன்புடைய ஔவையாருடன் முருகன் விளையாடினார். ஔவையாருக்கு அருள் கொடுத்தார். ஔவையார் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து முருகனுக்கு அழகிய பாமாலைகளைச் சூட்டி மகிழ்ந்தார்.

நாங்களும் இறைவனை உண்மை அன்புடன் வணங்கி அருள்பெறுவோம்.

## எங்கள் முன்னோரை மறவோம்

உ. சஞ்சீவன்

நான் ஒரு மாணவன். தமிழ் மண்ணில்—யாழ்ப்பாணத்தில் பிறந்தவன். புலம் பெயர்ந்து கனடாவில் வசிக்கிறேன். தாய் மொழி தமிழ், சமயத்தால் இந்து. ஆனால் ஆங்கில மொழியில் கல்வி கற்கிறேன். தமிழையும் சைவ சமயத்தையும் கற்க இங்கு வசதி இல்லை. இந்நிலையில் கனடா இந்து மாமன்றம் உருவாக்கப்பட்டது. அம்மன்றம் தமிழ் மாணவர் நன்மை கருதி சனி, ஞாயிறு நாட்களில் தமிழ் மொழி, இந்து சமயம், பரத நாட்டியம், வீணை, வயலின், சங்கீத பாடங்களுக்கான வகுப்புக்களை ஆரம்பித்து நடாத்திவருகின்றது. லெமொறோச் கல்லூரியில் நடக்கும் வகுப்பில் நானும் சேர்ந்து படிக்கிறேன். அங்கு நான்கு பெண் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். எழுபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இப்பொழுது தமிழை மேலும் படிக்கும் ஆசை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது. நல்ல முறையில் பாடங்கள் நடைபெறுகின்றன. மன்றம் எங்களுக்குப் புதிய உணர்வைத் தந்துள்ளது. எங்கள் பண்பாடு இங்கு நிலைத்து நிற்க வழி செய்துள்ளது. தமிழ் மாணவர்கள் எல்லோரும் இந்த நல்ல தருணத்தைப் பயன்படுத்தி அங்கு போல் இங்கும் ஒரு குட்டி யாழ்ப்பாணத்தை உருவாக்குவோம். தமிழ் வளர, சமயம் வளரக் கற்பவை கற்று அதன்படி நடப்போமாக.

*எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி*
*என்றென்றும் வாழியவே*

## இந்து மாமன்றம்

வி. யாழினி

தமிழும் கலையும்

நம் இரு கண்கள்

சைவசமயம்
எம் உயிராகும்

நல்ல அற நெறி ஒழுக்கம் பண்பினை

நயமாய்ப் புகட்டும்
இந்துமாமன்றம்

பாலர் நாங்கள்
பாடி ஆடிப்
பயின்று மகிழும்
பண்புகள் பலப்பல

பாரெலாம் போற்றிட
யாவரும் வாழ்த்திட
என்றென்றும் வாழிய!
இந்து மாமன்றம்
எங்கள் கனடா
இந்து மாமன்றம்.

## தமிழர் எம் துயரம்

க. மலைமகள்

தமிழராய்ப் பிறந்த எமக்குத் தாய் நாட்டில் சண்டை. தனி நாடு கேட்டதனால் தாயகமே தவறியது. பச்சிளம் பாலகர் கூடப் படாததுன்பம் படுகின்றனர். தூக்குகின்றனர் துப்பாக்கி, தொடர்கின்றன துயரங்கள். மக்கள் நாம் என்ன செய்வோம் மண்ணைவிட்டு ஓடுகிறோம்.

ஓடி வந்த நெஞ்சகமே ஏன் எம்மை வாட்டுகிறாய் நிம்மதியிழந்து வந்த எமக்கு நித்தமும் வேதனையா? வானத்தில் பறக்கும் பறவைக்குக் கூடவாழும் வரை நிம்மதி. மானத்தமிழருக்கு இன்று வாழ்க்கையே போராட்டமா?

## இன்பம்

குருடனுக்குக் கண் தெரிந்தால் இன்பம்
முடவனுக்குக் கால் நடந்தால் இன்பம்
செவிடனுக்குக் காது கேட்டால் இன்பம்
ஊமைக்குப் பேச்சு வந்தால் இன்பம்
தமிழனுக்குத் தமிழ் படித்தால் இன்பம்
எனக்குத் தமிழ் என்றும் இன்பம்.

## பேனா

மொழியைப் பொறிக்கும் முகவரியை விளக்கும் கவிதைகளை வடிக்கும் கருத்துக்களைப் பதிக்கும் கருவியென உலகில் உயர்ந்தது தான் பேனா.

## ஆலய வணக்கம்

ஷாமினி சிவதாசன்

நான் வெள்ளிக்கிழமையில் கோயிலுக்குப் போவேன். நாங்கள் பால், பழம், பாக்கு, வெற்றிலை, தயிர், தேன், மஞ்சள் கொண்டு போவோம். ஐயரைக் கொண்டு அர்ச்சனை செய்வோம். கோயிலுக்குப் போகும் பொழுது அம்மா சேலை கட்டுவார், அப்பா வேட்டி உடுப்பார், அக்காவும் தங்கையும் சுரிதார் அணிவார்கள். பிள்ளையாரைத் தலையில் குட்டிக் கும்பிடுவோம். தீருநீறு பூசி, சந்தனம், குங்குமம் வைப்போம். வீட்டுக்குப் போய் கோயில் பிரசாதம் சாப்பிடுவோம்.

*கடவுளை நம்பினோர் கைவிடப்படார்*
*ஆலயந் தொழுவது சாலவும் நன்று.*

*சாந்தலிங்கர் தாண் மலர்வாழ்க!*

# தமிழ்ச்சமய நெறி

கயிலைமாமுனிவர் திருப்பெருந்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார்
பேரூர் ஆதீனம். தமிழ் நாடு

மொழியாலும், மெய்யுணர்வாலும் உயர்ந்த இலக்கியங் களைப் பெற்றிருப்பது தமிழகம். பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கிய இலக்கணங்களை யுடையது தமிழ். இம்மொழியினை உயர்தனிச் செந் தமிழ் என அறிஞர் போற்றுவர். "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" எனத் தொல்காப்பியம் கூறும். தமிழ் வாழ்வியல் இலக்கணத்தையுடையது; சமயநுண் பொருளை வளமாகப் பெற்றுத்திகழ்வது. சங்ககாலப்பாடல்கள் காலத்தால் முற்பட்டவை. அப்பாடல்களில் வாழ்வின் அகம், புறம் என்னும் இரு கூறுபாடுகளையும் புலமையோர் வகுத்துள்ளனர்.

தமிழ் இலக்கியங்களைப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு எனப்பகுத்துக் கூறுவர். இவற்றுள் முதன்மையாக முதல் நூலாக விளங்குவது பத்துப்பாட்டு. பத்துப்பாட்டில் முதற்பாட்டாக விளங்கு வது திருமுருகாற்றுப்படை. திருமுருகாற்றுப்படை "உலகம் உவப்ப வலனேர்பு திரி தரு, பலர்புகழ் ஞாயிறு" என உலகத்தை முதலாகக் கொண்டு தொடங்குகிறது. அனைத்துயிரும் இன்புறுதலை விரும்பும் உணர்வை வெளிப்படுத்தி "உலகம் உவப்ப" எனத் தொடங்கியுள்ளார் நக்கீரர். மனித இனம் உடலைப்பேணுவதுடன் உள்ளத்தை வளமாக்கும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறது. அதனால் தான் "வாய்த்தது நந்தமக்கீதோர்பிறவி மதித்திடுமின்" என்று அப்பரடிகளும் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தை உணர்த்தும் வகையில் மனித வாழ்வு மனநலத்தால் சிறக்க வேண்டும். புலன்வழிச் செல்லும் போக்கை நெறிப்படுத்தவேண்டும் என்பதே ஆன்றோர் கொள்கை. இது சமயநெறியாகத் திகழ்கிறது.
திருமுருகாற்றுப்படை

"எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்துறையும்
செலவுநீ நயந்தனை ஆயின்"

என்று வழிகாட்டுகிறது.
அந்த நெறி இறைவன் சேவடி படருஞ் செம்மலுள் ளத்தைத்தரும். செம்மல் உள்ளப் பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருளைக் காணும் அறிவை வளப்படுத்தும்.

செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்லாகத் திகழும் சங்க இலக்கியத்தில் தமிழ்ச்சமய நெறி பற்றிய கருத்துக்கள் மிளிர்கின்றன. தமிழ்ச்சமய நெறிகளில் சிவநெறி "தனக்கென முயலாது பிறர்க்கு என முயலும் தன்மையால் உலகம் உண்டு" என்னும் கருத்தை வலியுறுத்துவதாகும். தேவர்களும், அசுரர்களும் திருப்பாற்கடலைக்கடைகின்றனர் அப்பொழுது மிகவும் கொடிய வெப்பத்தை உடைய தீய ஆலகாலமாகிய நஞ்சு வருகிறது. அதனைக் கண்டு அனைவரும் அஞ்சி ஓடுகின்றனர். ஆனால், அனைத்துயிர்க்கும் அருள் நல்கி நிற்கும் சிவன் அதனை உண்டு அனைவரையும் காப்பாற்றி "நீலமணிமிடற்றன்" என்ற அழகிய பெயரையும் பெறுகின்றான். இச்செயல் தனக்கென வாழாமையை வலியுறுத்துகிறது.

இச்செய்தியைக் "கண்ணி காரிநறுங்கொன்றை" எனத்தொடங்கும் புறநானூற்றுப் பாடல் உவமையாக எடுத்துக்கூறும் தன்மையை நினைவு கூரலாம். அதியமான் சிறந்த வள்ளல். "மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம்" என்பதற்கேற்ப ஆட்சிபுரிந்தான். அவன் நாட்டில் அமைந்துள்ள பெரியமலையின் பள்ளத்தாக்கில் பல்லாண்டுகட்கு ஒருமுறை கிடைக்கும் கிடைத்தற்கரிய நெல்லிக்கனி ஒன்று அவனுக்குக் கிடைத்தது. அதனை உண்டவர்கள் பல்லாண்டு வாழும் சாவாமூவாத் தன்மையைப் பெறுவர் என்பதனையும் அதியமான் உணர்ந்திருந்தான். அத்தகைய நெல்லிக்கனியைத் தானை சூழ அத்தாணி மண்டபத்தில் பலரறிய வைத்திருந்த போது கடும் வெய்யிலால் களைப்புற்ற பெரும் புலவராகிய ஔவையார் அம்மண்டபத்திற்கு வந்தார். அவரது களைப்பையறிந்த அதியமான் அரிதாகக் கிடைத்த நெல்லிக்கனியை வழங்கினான். ஔவையாரும் உண்டு மகிழ்ந்த நிலையில் இறுதியில் அதன் பெருமையை உணர்ந்தார். மற்றவரும், மன்னன் இதனையுண்டிருந்தால் நெடிதுநாள் ஆட்சியிலிருந்து நன்மை செய்வானே என்று எண்ணினார்கள். இக்குறிப்பை உணர்ந்த ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த செய்தியைப்

"பால்புர பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணிமிடற் றொருவன்போல

மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கி
சாதல் நீங்கி வெமக்கீந்தனையே"
என்னும் பாடல் வெளிப்படுத்துகிறது.

நீலகண்டம்:-

தமிழ்நெறி, பிறரைப் பேணுதலும் தனக்கென வாழாமையுமாகும். அதுவே, நமது சமய நெறி என்பதை வலியுறுத்தும் வகையில் நீலமணிமிடறு எடுத்தாளப்படுகிறது.

"கறைமிடறு அணியலும் அணிந்தன்று அக்கறை
மறைநவில் அந்தணர்நுவலவும்படுமே"

எனப்புறநானூற்றுக் கடவுள் வாழ்த்துக்கூறுகிறது. தேவரெல்லாம் அமுதுண்ண தான் நஞ்சுண்டு தமக்கு அணிகலனாகக் கொண்டான் என இப்பாடல் கூறுகிறது. நீலகண்டனாகிய இறைவனை வழிபடுவதற்குத் தமிழ் கட்டுண்டதாகையால் மதுரையம்பதியில் சங்ககாலத்திற்கு முன்பு தொட்டுப் பெருங்கோயில் இருந்தது என்பதையும் மன்னரும் மக்களும் வழிபட்டனர் என்பதையும்

"பணியிய ரத்தைநின் குடைய முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னிசிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை பெயதிரே"

என்ற புறப்பாடல் புலப்படுத்துகிறது. இப்பாடலால் மன்னன் திருக்கோயிலை வலம் வந்த செய்தி புலனாகிறது. இதில் உலகாளும் மன்னவன் குடிமக்கள் வருத்தமின்றி வாழ்வதற்காக வெண்கொற்றக்குடை கவித்த மன்னனாயினும் திருக்கோயில் வலம்வரும்பொழுது தான்காக்கின்றேன் என்னும் செருக்கற்று உலக உயிர்கட்கெல்லாம் முழுமுதலாகிய இறைவன் காப்பவன் என்று எண்ணிக்குடைமடங்கட்டும் என்றார். வழிபாட்டுக்குரியது திருக்கோயில். அதில் எழுந்தருளியுள்ள இறைவன் முழுமுதல் என்பதைப் "பிறவாயாக்கைப் பெரியோன் கோயில்" எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

கோயிலில் வைத்து வழிபாடு செய்யும்மூர்த்தங்களுள் கலை நயத்தாலும் அழகாலும் சிறந்த மூர்த்தம் ஆடல்வல்லான் மூர்த்தமாகும். இவ்வாடல்வல்லானின் திருக்கூத்துத் தத்துவப்பொருள்மிக்கதாகும். இக் கூத்தப்பெருமான் ஆடிய கூத்துக்களைக் கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையில் அமைந்துள்ள கடவுள் வாழ்த்து பண்டரங்கம்(பாண்டுரங்கம்) கொடு கெட்டி, காபாலம் என வகைப்படுத்திக் கூறுகிறது.

அப்பாடல்

மாருப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி
படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்காற் கோடுய ரகல்குறிக்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ

.................................................................................

பண்டரங்க மாடுங்காற் பணையெழி லணைமென்றோள்
வண்டரமற்றுங் கூந்தலாள் வளர்தூ க்குத்தருவாளோ

.................................................................................

தலையங்கை கொண்டுநீ காபால மாடுங்கால்
முலையணிந்த முறுவலார் முற்பாணி தருவாளோ
என அமைந்துள்ளது.

மாடமலிமறுகின் கூடலில் சங்கப் புலவர்களுள் ஒன்றாக இருந்து திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும் தமிழ் ஆய்ந்த செய்தியினை இறையனார் களவியல் உரையாசிரியர் நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். திருக்கோயில் வளாகத்திலேயே தமிழ்ச்சங்கம் இருந்த செய்திகள் கூறப்படுகின்றன. திருக்கோயில் வழிபாட்டு முறைமையை

நறும்புகை எடுத்துக் குறிஞ்சிபாடி
இமிழிசை அருவியொடு இன்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூ உய் எனத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் விளக்கியுள்ளார்.

தீந்தமிழ்

சங்ககாலப் பாடல்கள் வாழ்வாங்கு வாழ்ந்த மக்களது ஒளிபடைத்த உள்ளப்பாங்கால் சான்றோர் சென்ற நெறிகாட்டும் ஒண்தீந்தமிழ்ப்பாடல்கள். மணநலத்தால் உயிர்க்கு ஆக்கம் தேடிய வாழ்வியல் நெறிகளில் வழிபாட்டுணர்வை வெளிப்படுத்துவன. மொழிக்கு மொழி தித்திக்கும் மூவர்திருமொழியும், மனங் கரைந்து மலங்கெடுக்கும் திருவாசகமும், உள்ளினை உருக்கி உள்ளொளி பெருக்கும் தெய்வப்பாடல்களைப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தர் திருநெறிய தமிழ் வல்லவர். சங்ககாலக் கருத்தை யொட்டித் திருநீலகண்டமாகிய நீலமணிமிடறுபற்றிய அருட்பாடல்களை அந்நெறியே நின்று பிறர்க்கென வாழ்வது சமய அடிப்படை என அருளியுள்ளார். முகனமர்ந்து ஏத்தும் வழிபாட்டில் ஈடுபடுவோர் நல்ல கோயில்களை வளர்க்க வேண்டும். நீர் நிலைகளை உருவாக்க வேண்டும். அதனால் மனம் களிப்படையும். களித்த மனத்தால் திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளை அந்தியும் நண்பகலும்

கைப்போது மலர்கொண்டு போற்றினால் தீவினைகள் தீண்டப்பெறாது என்பதை

''காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென்றிரு பொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றது நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்''
என அருளியுள்ளார்.

இவ்வருளாளர்களைச் சேக்கிழார் பெருமான் தமிழ்ச் சமய நெறி தான்பெற்ற புண்ணியக்கண் இரண்டு எனப்போற்றுகின்றார். இத்தகைய தமிழ்ச் சமய நெறிக்குரிய நமது திருக்கோயில்கள் இடைக் காலத்தில் அலகில் செழுந்தமிழ் மரபை இழந்து அயல் மரபுகட்கு உரியவையாயின. தமிழர்கள் தமிழ்ச் சமய நெறியைத்திருக்கோயில் கருவறையுள் காணும் முயற்சியில் ஈடுபடவேண்டும். உலகிலேயே மிகச்சிறந்த சிற்பக்கலைகள் நிறைந்த கலைக்கோயில்கள் ஆயிரங்கால் மண்டபங்கள் விண்ணளாவிய கோபுரங்கள் தமிழர்கள் படைப்பாக விளங்குகின்றன. மனநலத்திற்கு வழிகாட்டும் இத்திருக்கோயில்கள் பொலிவிழந்து இருள் நிறைந்து வௌவால்கள் தங்கியிருக்கும் நிலைமாற வேண்டும். தமிழ் கேட்கும் இச்சையால் காசுநித்தம் நல்கிய இறைவனைச் சொற்றமிழ்பாடி வழிபடும் வாய்ப்புப் பெருக முயல்வது தமிழறிந்த சான்றோர் கடமையாகும்.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

நடைபாதையில் கண்ணாடித்துண்டை வீசுகிறாய் — நீ திரும்பிவரும் போது உன்காலிலே குத்துகிறது. குளிக்கும் அறையில் எச்சிலைத் துப்பிவிடுகிறாய் — நீ திரும்பிக் குளிக்கும் அறையின் உள்ளே போனபோது — நீயே வழுக்கி விழுகின்றாய்.

மாங்கல்யத்தில் மூன்று முடிச்சுப் போடுவதேன்? முதலாவது முடிச்சு கணவனுக்கு அடங்கியவள். இரண்டாவது முடிச்சு தாய்தந்தையர்க்குக் கட்டுப்பட்டவள். மூன்றாவது முடிச்சு தெய்வத்துக்குப் பயந்தவளென்பதை உறுதிப்படுத்த; கைப்பிடித்தவளைக் காப்பேன் என்பதற்காகவே கையில் காப்புக் கட்டப்படுகிறது.

கோவில் என்று எழுதுவது சரியா? கோயில் என்று எழுதுவது சரியா? இது ஒரு பகுபதம். கோ இல் அதாவது கோ என்றால் அரசனையும் இறைவனையும் குறிக்கும். அரண்மனையையும் ஆலயத்தையும் அப்பெயரால் குறித்தார்கள். இலக்கணப்படி இ ஈ ஐ வழி யவ்வும் ஆகவே கோ+இல்= கோவில் என்றுதான் எழுதவேண்டும் வழக்கில் கோயில் என்று எழுதுவதுமுண்டு.

உலகில் எல்லாமதங்களிலுமே உருவம் அல்லது உருவம் சார்ந்த வழிபாடு இருக்கிறது. அடையாளபூர்வமாகவாவது ஒரு குறியையோ, ஒருபொருளையோ வணங்குகிறார்கள். ஏனெனில் வழிபாட்டிற்குப் பாவம் மிகவும் முக்கியம். இதனைத் தூண்டுவதற்கு அத்தகைய உருவகம் அவசியமாகிறது. இதற்குக் காரணம் ஞானம் என்பதே. அத்தகைய ஒருபொருளை விஷயமாக இல்லாவிட்டால் மனது ஏற்று நிலைக்கச் செய்ய முடியாது என்பதுதான், அதற்கு ஓர் உருவத்தை அமைத்துத்தான் ஆகவேண்டும். மனித உருவமாகத் தோன்றவே நான் விரும்புகின்றேன் என்று பகவானே கூறியதாகச் சொல்லப்படுகிறது. அதனால்தான் மனித உருவில் வைத்து வழிபடுகிறோம். உலகமுழுவதும், கிரேக்கர்கள் காலம் முதலாக உருவவழிபாடு வழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

— ஸ்ரீமத் ஆண்டாள் சுவாமிகள்.

# நல்லவண்ணம் வாழலாம்

சுவாமி ஆத்மகனாநந்தா
Ramakrishna Mission
Colombo-6

பிறப்பு, இறப்பு என்பவை வாழ்க்கையின் இரு முக்கிய நிகழ்ச்சிகள். இவ்விரு நிகழ்ச்சிகளும் மனித சக்திக்கு அப்பாற்பட்டு நடக்கக் கூடியவை. இவற்றை மாற்றவோ, தடுக்கவோ யாராலும் இயலாது. ஆனால் இவ்விரு நிகழ்வுகளுக்கும் இடைப்பட்ட காலமாகிய வாழ்க்கையை, விரும்பிய வகையில் அமைக்கும் சுதந்திரம் மட்டும் மனிதனுக்கு அளிக்கப்படுகிறது. அந்தச் சுதந்திரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்வாங்கு வாழ்ந்தவர்களை இவ்வுலகம் கண்டிருக்கிறது. ஆனால் அவர்கள் எண்ணிக்கை மிகச் சொற்பமே. பெரும் பான்மையான மக்கள், அறியாமையின் காரணத்தினால் இந்தச் சுதந்திரத்தைச் சரியான முறையில் பயன்படுத்தத் தவறியவர்களாக, எப்படியோ வாழ்ந்து மறைகிறார்கள். இந்த வகையைச் சேர்ந்த மக்களில் சிலருக்குச் சரியான வழிகாட்டல் கிடைக்காத காரணத்தினால் வாழ்க்கை வீணாகிப் போகிறது. சரியான வழிகாட்டல் இருந்தும் அதைப் பின்பற்றும் ஆர்வம் இல்லாதவர்களாக, மனம் போன போக்கில் வாழ்ந்து மடிபவர்கள் எண்ணிக்கைதான் அதிகம். எப்படியும் வாழலாம் என்பது ஒரு சாதாரண விடயம். அதில் எந்தச் சிறப்பும் கிடையாது. இருந்தும், இப்படிப்பட்ட வாழ்க்கையையே நாடியவர்களாய் வாழும் மக்களை என்னவென்று கூறுவது? இத்தகையவர்களை ஒட்டகத்தோடு ஒப்பிட்டுக் கூறுவார் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர். ஒட்டகம் முட்செடிகளையே விரும்பிச் சுவைக்கும். இதனால் அதன் வாயில் முள் தைத்து இரத்தம் கசியலாம். இருந்தும் அதைப் பொருட்படுத்தாது அது முள்ளையே நாடித் தின்னும். அவ்வாறே உலக மாந்தரும் கூட. உலக இன்பங்களினால் துன்பம் நேரிடினும், திரும்பத் திரும்ப உலக இன்பங்களையே நாடி அலைவது அவனது சுபாவம். இது எப்படியும் வாழலாம் என்பதன் நிலைப்பாடு.

இந்நிலைக்கு முற்றிலும் மாறுபட்டது நல்லவண்ணம் வாழலாம் என்பது. நல்லவண்ணம் வாழ்தல் என்றால் என்ன? எந்த வகையில் இது முதலாவது வகையிலிருந்து சிறப்பைப் பெறுகிறது. ஓர் உதாரணத்தின் மூலம் இதை நன்கு அறியலாம்.

ஒரு கரடுமுரடான பாறாங்கல். அதில் எந்தக் கவர்ச்சியும் இல்லை. குறிப்பிட்ட பயன் ஏதுமின்றி ஒரு மூலையில் விழுந்து கிடக்கிறது அது. அந்த வழியாகச் செல்லும் எந்த ஒருவரும் கூட அதை ஏறிட்டும் பார்ப்பதில்லை. பல ஆண்டுகள் அது நிலைத்திருக்கலாம். ஆனால் அவ்வாறு பயனற்று வீழ்ந்து கிடப்பதற்கு பதில் இல்லாமலே இருந்திருக்கலாம். ஒருவேளை அது ஒரு சிற்பியின் கையில் அகப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். பிறகு அதற்கு என்ன நேருகிறது? மதிப்பும், மரியாதையும், நித்தம் வழிபாடும் நடக்கிறது. ஏன், எவ்வாறு, என்ன காரணத்தினால்? சிற்பியின் கையில் அது அழகான தெய்வீக வடிவத்தைப் பெற்றதும், கோயிலில் வைத்துப் பூசிக்கும் தகுதியைப் பெற்றுவிடுகிறது. கேட்பாரற்று மூலையில் கிடந்த கல், ஆயிரக்கணக்கான மக்களால் பூசிக்கப்படும் உயர்வைப் பெற்றது என்றால், காரணம் அதில் ஏற்பட்ட மாறுதலே. அந்த அசிங்கமான, கரடுமுரடான கல்லினுள் மறைந்து கிடந்த அழகிய உருவை வெளிக் கொண்டுவந்த நிமிடமே அதன் வாழ்க்கையில் ஒரு பெருத்த மாற்றம், உயர்ந்த மாற்றமும் கூட.

வெறும் பாறாங்கல்லாகக் கிடப்பது என்பது, எப்படியும் வாழக்கூடியவர்கள் நிலை.

அழகிய சிலையாக வடிக்கப்பட்டு வழிபடப்படுவது என்பது, நல்லவண்ணம் வாழ்பவர் நிலை.

பாறாங்கல் சிலையாக மாறியதன் விளைவாக, அதற்கு மட்டும் விமோசனம் இல்லை, அதனால் வேறு எத்தனை ஆயிரம் பேரும் கூட நன்மை பெறுகின்றனர் என்பதையும் உணர வேண்டும்.

இங்கு ஒரு முக்கியமான விடயத்தைக் குறிப்பிட வேண்டும். கல் சிலையாக மாறியதன் மாயம் என்ன? இதில் மாயமோ, மர்மமோ எதுவும் கிடையாது. இக்கல், சிறந்த சிற்பி ஒருவரின் கையில் கிடைத்தது ஒரு காரணம். மற்றது, அச்சிற்பியின் உளி ஏற்படுத்திய துன்பங்களைப் பொறுமையுடன் அக்கல் ஏற்றது. இவ்விரு காரணங்களுமே கல் சிலையாக உருமாற்றம் பெற்று, உயர்வு பெற வழிகோலின.

அவ்வாறே ஒரு சாதாரண வாழ்க்கை, மேன்மை பெறத் தகுந்த வழிகாட்டலும், தினசரி பயிற்சியும் அவசியம். இதுவே சமயத்தின் நோக்கமும் கூட. "பாமரனைப் பண்புள்ளவனாக்கி, பண்புள்ளவனைத், தெய்வீக நிலைக்கு உயர்த்துவதே சமயத்தின் நோக்கம்" என்பார் சுவாமி விவேகானந்தர். சமய நூல்களும், சமய ஆசாரியர்களும் கூறும் சமய உண்மைகளைச் சரிவரத் தெரிந்து கொண்டு, பொறுமையுடன் அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்தல் அவசியம்.

"உத்திஷ்ட்டத, ஜாக்ரத, ப்ராப்யவரான் நிபோதத"; "சோம்பேறியாக இராதே, தகுந்தவர்களை அணுகி, நல்லுபதேசம் பெற்று, உழைத்து, வாழ்க்கையில் மேன்மை பெறுவாய்" என்று அறை கூவல் விடுகிறது உபநிடதம். "பருகலாம் பரமாயதோர் ஆனந்தம் மருகலானடி வாழ்த்தவே" என்று இறைவழிபாட்டின் உயர்பலனைக் கூறுகிறது திருமுறை.

நல்லவண்ணம் வாழ ஆசைப்படுவோம். அதற்கான ஊக்கத்தைப் பெற நல்லோர் நட்பை நாடுவோம், நல்ல சூழலை வளர்ப்போம், வாழ்க்கையின் நற்பயனை எய்துவோம்.

"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

நாம் அனுபவிக்குந் துன்பங்களுக்கு நமது வினை காரணமேயன்றி, மற்றவர்களல்லர் எவரையும் நோவாதே.

புகையிரதத்தில் ஏறும்போதே இறங்கும் ஸ்ரேசனை நிச்சயப்படுத்தி "ரிக்கெற்" வாங்கிவிடுவதைப் போல ஓர் உயிருக்குப் பிறப்பதற்கு முன்பே இறப்பு நிச்சயமாகி விடுகிறது.

காலை தான் இறைவழிபாட்டிற்கு ஏற்ற நேரம். காலையில் மனம் தெளிந்து இருக்கும். அப்போது இறைவனை வழிபடுவது நல்லது. வெள்ளைத் துணியில் சாயம்படுவது போல் தெளிந்த உள்ளத்தில் இறையுணர்வு படியும். சூரிய வணக்கம் செய்த பிறகு வழிபாடு செய்ய வேண்டும்.

மாலையில் கோயில் வழிபாடு செய்யலாம். இரவு படுக்கப் போகுமுன் தியானம் செய்யலாம்

மனித நேயமே மனித வாழ்வின் புனித நேயம்.

— வாரியார்.

குற்றம் புரிவது அறியாமை. அதைப் புரிந்து செயற்படுவது அறிவின் செயலாகும். அறிவாக இருந்து உணர்த்துபவன் இறைவன். ஆக, அக்குற்றத்தைத் தவறு என்று சுட்டிக் காட்டும் போது இறைவன் பாவமன்னிப்பு அளிக்கின்றான். இறைவனுக்காகக் காட்சியளித்து அருள் பாலிப்பவன் குருநாதன்

— குருஜீ அவர்கள்.

*காப்பு*

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்

— கந்தர் அநுபூதி.

பகவான் என்ற சொல் இறைவனுக்கு மாத்திரம் பொருத்தமானது.

உலகத்தைப் புரிந்து வாழ் துயர் நீங்கும்.

— சுவாமி கெங்காதரானந்தர்

# சைவம்

டாக்டர் ஆ. ஞானம், துணைவேந்தர்
புதுவைப் பல்கலைக் கழகம்

வேதகாலங்கட்கு முன் இந்திய கண்டம் முழுவதும் சைவ சமயம் பரவியிருந்தது என்பதற்கு ஆதாரங்கள் பல இருக்கின்றன. மொகஞ்சதாரோ, ஹரப்பா போன்ற சிந்து வெளிப் பள்ளத்தாக்கில் காணும் பண்டைய நாகரிகப் புதைபொருள்களில், சிவலிங்கங்கள், நந்தி, பசுபதி, தட்சிணாமூர்த்தி, அம்மன், யோகநிலையில் இருக்கும் உருவங்கள் முதலியவை காணப்படுவதி லிருந்து கி.மு. 5000 ஆண்டுகட்கு முன்பிருந்தே சைவம் இந்திய உபகண்டம் முழுவதிலும் பரவி யிருந்ததனை அறிய முடிகின்றது. இன்று அது சுருங்கிக் காஷ்மீரத்திலும், கர்நாடக மாநிலத்திலும், தமிழகத்திலும், பிரத்தியபிஞ்ஞா, வீரசைவம், சைவம் என முறையே வழக்கில் இருக்கின்றது.

வேத காலத்திலிருந்து, வேத உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டும், தனித்தும், பல ஆன்மீக, தத்துவ விளக்கங்கள் வளரத் தலைப்பட்ட போது, சைவமும் தொடர்ந்து, ஆகம, வேத நூல்கள் கூறும் தத்துவங்களைச் சார்ந்து தனிச் சமயமாக மக்களிடையே பரவி வந்தது. சைவம் மட்டும் வேதங்களை விட, ஆகமங்களையே பெரிதும் அடிப்படை நூல்களாகக் கொண்டு, அதன் சித்தாந்தங்களை வளர்த்துக் கொண்டது. வேத உபநிடதங்களில் காணும் முரண்பட்ட கருத்துக்களை விளக்க பிரம்ம சூத்திரம் எழுதப்பட்டது போல, ஆகமங்களின் மூலக் கருத்துக்களை மெய்கண்டார், சிவஞானபோதம் என்னும் நூலில் சூத்திரங்களாக எழுதினார்.

வேத, ஆகமங்களோடு மட்டுமின்றி, சங்கத் தமிழ் இலக்கிய நூல்களும் தொல்காப்பியமும் மற்றும் இன்று பன்னிரு திருமுறைகளாகக் கருதப்படும், கி.பி.7 — ஆம் நூற்றாண்டிலிருந்து 12 — ஆம் நூற்றாண்டு வரை வளர்ந்த சைவ பக்தி நூல்களையும், அவற்றுள் முக்கியமாக திருமூலர் எழுதிய திருமந்திரத்தையும் ஆதாரங்களாக அமைத்துக் கொண்டு சைவம் வளர்ந்தது. மொழிவழியில் தமிழையும், பண்பாட்டு வழியில் தமிழர்களையும் பின்னணியாகக் கொண்டது சைவ சமயமாகும். சைவ சமயக் கோட்பாடுகள் அதன் 14 சாத்திர நூல்களாகிய சிவஞானபோதம் உள்ளிட்ட திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான சித்தியார், இருபா.:.து, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப.:.றொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, சங்கற்ப நிராகரணம், உண்மை நெறிவிளக்கம் என்ற நூல்களிலிருந்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

இந்திய வேதாந்த சமயங்கள் வேத, உபநிடத, பிரம்ம சூத்திரங்களோடு, இதிகாசங்களையும், பகவத் கீதையையும் தங்கள் மூல நூல்களாகக் கொண்டுள்ளன. சைவம், வேத, ஆகமங்களைத் தவிர, மற்றவற்றை அவ்வளவாகப் பின்பற்றுவதில்லை. சைவத்தின் அணுகுமுறை, பிரதியட்சம், அனுமானம், சப்தம் (ஸ்ருதி) என்ற பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு, பகுத்தறிவோடு (ஆன்ம ஞானம்) ஆய்வதாகும்.

மற்ற தத்துவஞானங்களை ஒட்டி, கடவுள், ஆன்மா, உலகம் என்ற முப்பொருள்களையும் அவற்றின் தொடர்புகளையும் விளக்குவதுதான் சைவம். பிற சமயங்களின் மேல் வெறுப்புறாமல், தனிமனிதனின் ஆன்ம சிந்தனையை ஊக்குவிக்கும் சில சமயங்களுள் இதுவும் ஒன்று.

சைவ சமயம் கடவுள் என்ற ஒரு மெய்ப் பொருள் உண்டு என்று வலியுறுத்தி, "அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற கொள்கையைக் கொண்டது. ஒவ்வொருவருக்கும் ஆன்மா உண்டு; கடவுள் ஆன்மாவுடனும், ஆன்மா உடலுடனும் பிணைந்துள்ளன என்பது சைவத்தின் கருத்து. கடவுளது குணங்கள் எட்டு என்றும், அவை முழுமையான தனிமை, சுத்தம், தன்னறிவு, கட்டுக்கடங்காத் தன்மை, அழகு, ஆனந்தம், எங்கும் உள்ளவன், எல்லாம் வல்லவன் என்று விளக்கப்பட்டுள்ளது. இந்த எட்டுக் குணங்களைக் குறுக்கி, சத், சித், ஆனந்தம் என்கின்ற உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற முக்குணங்கள் என்றும் கூறுவர்.

சைவ சித்தாந்தப்படி, கடவுளை உருவ, அருவ, அருவுருவ நிலைகளில் அமைத்து, வணங்குவர். உருவ வழிபாட்டிற்குத் தில்லை நடராஜனையும், அருவ வழிபாட்டிற்குச் சிதம்பர ரகசியத்தையும், அருவுருவ வழிபாட்டிற்குச் சிவலிங்கத்தையும் உதாரணங்களாகக் கொள்ளலாம். கடவுளுக்கு, காத்தல், அழித்தல், உற்பத்தி, மறைத்தல், கருணை என ஐந்தொழில்கள் உண்டு. அவர்கள் தரும்

விளக்கம். கருணை என்பது சைவத்தில் ஒரு முக்கிய சொல். ஆன்மாவை, ஆணவ மலத்திலிருந்தும், வினை, மாயை போன்ற பிற மலங்களிலிருந்தும் (அசுத்தங்கள்) விடுவிக்கக் கூடியது கடவுளது கருணை ஒன்றுதான் என்பதைச் சைவர் வலியுறுத்துவர். அதாவது, மனித ஆன்மா, முக்தி பெற வேண்டுமாயின், தன் முயற்சியோடு கடவுளது கருணையும் வேண்டும் என்று சொல்லி, கடவுளது கருணையை முயற்சியினால் தான் பெறமுடியும் எனவலியுறுத்தி அதற்கான வழிகளையும் விளக்கியுள்ளது.

கடவுளுக்கும், ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பை அது விளக்கும்போது, ஆன்மாவோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டு (ஒன்றாகவும்), தனித்து நின்று (வேறாகவும்), ஆன்மாவோடு கலந்து நின்றும் உடனாகவும் பல நிலைகளில் செயல்களைச் செய்து கொண்டு இருப்பவர் கடவுள் என்று விளக்கம் தரப்பட்டிருக்கின்றது.

சைவர் ஆன்மாக்கள் பல உண்டு என்று கூறும் பன்மைவாதிகள். ஆன்மா மூன்று நிலையில் இருக்கக் கூடியது; முதலாவது, ஆணவத்தோடு கட்டுண்ட நிலை; இது கேவலாவத்தை என்று குறிக் கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை — இம் மூன்றோடும் பிணைந்து இருக்கும் ஆன்மா, சகலாவத்தை எனப்படும். இந்த நிலையில்தான், ஆசை, அறிவு, பலதரப்பட்ட கிரியைகள் (வேலைகள்) யாவும் ஆன்மாவிற்கு ஏற்படுகின்றன. இந்த நிலையில் உள்ள அறிவு முழுமையானதல்ல; அது நிலையற்றதான உலகப் பொருள்களைப் பற்றியது. நிலையான கடவுளை உணர, இந்த அறிவு உதவாது. மூன்றாவது நிலை சுத்தாவத்தை எனப்படும். இந்நிலையில்தான், பூரண அறிவு பெற்று இறைவனைத் தெளிவாக உணரும் தன்மைகிட்டும்.

ஆன்மா, இறைவனது அழித்தல் என்ற தொழிலால், கேவலாவத்தை நிலையிலும், படைத்தல் காத்தல் மறைத்தல் என்ற தொழில்களால் சகலாவத்தை நிலையிலும், அவனது கருணையாகிய பண்பால் சுத்தாவத்தை நிலையிலும் இருக்கும். ஆணவம், கன்மம், மாயை, இம்மூன்றோடும் இணைந்த சகலா வத்தை நிலையில் இருக்கும் ஆன்மா தான், பிறப்பு — இறப்பு என மாறிவரும் சுழற்சியில் சிக் குண்டு இருக்கும். இத்தகைய சுழற்சியில் களைப் புற்று, அது சற்று இளைப்பாறும் நிலைதான், எவ்வுணர்வுமற்ற ஆணவத்தோடு மட்டும் இணைந்த கேவலாவத்தை நிலை.

படைக்கப்படாமல் எப்போதும் நிரந்தரமாக உள்ள பல ஆன்மாக்கள், கருமத்தின் காரணமாக பலவேறு உடலைப் பெற்று, இவ்வுலகில் உழலுகின்றன. இதனைப் பசு என்று (ஆணவத்தால் கட்டுண்ட ஆன்மா) சொல்லுவார்கள். இவ்வான்மா எப்போதும் ஏதாவது ஒன்றைச் சார்ந்திருக்குமேயல்லாமல் தனித்திருக்காது. ஒன்று ஆணவத்தோடு சார்ந்து இருக்கும்; அல்லது மும்மலங்களோடு இணைந்திருக்கும்; அல்லது இறைவனோடு சார்ந்திருக்கும்.

ஆன்மாக்களின் லட்சியமே, இத்தகைய அறியாமை, ஆணவம் போன்ற தளைகளிலிருந்து இறைவனின் கருணையால் விடுபடுவதாகும்.

இதற்கான மார்க்கங்களாக நான்கைச் சைவர்கள் சொல்லுகிறார்கள். முதலாவது தாசமார்க்கம் எனும் கிரியை. உடலுழைப்பால் இறைவனுக்குச் செய்யும் தொண்டுகள், கோவில்கட்டுவது, திருக்கோயில் களைச் சுத்தம் செய்யும் பணி, நந்தவனம் அமைத்தல், மாலை தொடுத்தல், ஏனைய திருப்பணிகளைச் செய்தல் யாவும் இதனுள் அடங்கும். நாவுக்கரசரது உழவாரப் பணியை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். இரண்டாவது புத்திரமார்க்கம் என்னும் சரியை. மகன் தந்தையைப் போற்றுவது, தொழுவது போன்ற தொடர்புடையவரிடத்தில் அன்பு காட்டுதல் சரியை எனப்படும். ஞானசம்பந்தரது பக்தியை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். மூன்றாவது யோகம் என்னும் சகமார்க்கம். அதாவது, இது உற்ற நண்பனது நட்புப் போன்ற அன்பு காட்டும் உணர்வு வழிப்பட்ட வழி. சுந்தரர் இதற்கு எடுத்துக் காட்டு. இறுதியாக ஞானம் எனும் ஞானமார்க்கம். ஈசுவரனைப் பற்றிய அறிவு சார்ந்த வழி. மாணிக்கவாசகரை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

ஒருவன் இத்தகைய நான்கு வழிகளில் ஒன்றில் செயல்பட்டு, மனத்தில் விருப்பு — வெறுப்பு அற்ற நிலையைப் பெறலாம். இது இறைவனையடையும் முயற்சிகளுள் முதல் நிலை. அடுத்து, மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை இம் மூன்றையும் தவிர்க்க வேண்டும். ஆணவம் பழுத்து, கழன்றுவிடும் நிலையை அடையும். இது மலபரிபாகம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இதற்கடுத்து, கடும் யோக சாதனைகளால், மனப் பக்குவம் பெற்று, இறைவனது கருணையினையும் பெற்று, அவனை அடையும் நிலை. அப்போது அருள் வந்து அணைகிறது. இது சத்தினிபாதம் என்று சொல்லப்படுகின்றது. இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்தினிபாதம், என்ற நிலைகள் வழியாக

உடலோடேயே, நம் வாழ்நாளிலேயே, இறைவனைச் சேரலாம். இதைச் சைவத்தின் தனிச்சிறப்பாகச் சொல்லலாம். இது சீவன் முக்தி என்று அழைக்கப்படுகின்றது. இறுதியில் உடலும் நீங்கிய பின், இறைவனோடு நெருங்கி அமைவது முக்தி நிலையாகும்.

இறைவன், ஆன்மா என்பதற்கு அடுத்து உலகைப் பற்றிச் சைவம் கூறுவதைப் பார்ப்போம். இறைவனைப் 'பதி' என்றும், ஆன்மாவைப் (கட்டுண்ட) 'பசு' என்றும், உணர்வு நிலையிலான ஆணவம் என்ற அறியாமையையும், ஆன்மாவைத் தொடரும் வினையையும், இவ்வுலகிற்கெல்லாம் மூலப்பொருளாக அமைந்ததும், கண்ணுக்குத் தெரியாத அளவில் நுண்ணியதாயும் உள்ள சடப் பொருளாகிய மாயையையும் சேர்த்துப் 'பாசம்' என்று சொல்லுகிறார்கள். மாயையால்தான் உலகமும், உலகப் பொருள்களும் ஆக்கப்பட்டன. சைவ, சித்தாந்தத்தில் கூறப்படும் வேதாந்தம் கூறும் சொல்லும் மாயை எனும் மயக்கம் அல்ல; அது கண்ணிற்குத் தெரியாத நுண்ணியது. உலகம் முழுவதும் அழிந்த பின், உள்ள ஊழியிலிருந்து மீண்டும் உலகப் பொருள்களும் உயிர்களும் இறைவனால் ஆக்கப்படுகின்றன. உலகம் சுத்தமாக அழிந்தால், மாயைதான் மிஞ்சும். உலகம் ஆக்கப்பட வேண்டுமாயின், அது மாயையிலிருந்துதான் வரும். அது ஒரு உள் பொருள்; நிஜப் பொருள். உலகே மாயை என்று சொல்லும்போது நாம் உணரும் காட்சி, திரிபு அல்லது மயக்கம் அல்ல. ஆக, சைவம், மாயை என்ற சொல்லை ஒருவிதமான கண்ணுக்குப்புலப்படாத நுண்ணிய பொருளைக் குறிக்கின்ற காரணப் பெயராக உபயோகப்படுத்தியிருக்கின்றது. அது இப்போது நமக்கு விஞ்ஞானத்தின் மூலம் தெரியும் அணு போன்றது என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

மாயை ஒரு கண்ணுக்குத் தெரியாத சூட்சுமப் பொருள். அதிலிருந்து தான் இவ்வுலகம் முழுவதும் வந்தது என்பது சைவ சித்தாந்தம். மாயைதான் உயிருக்கு உடலையும், உலகையும் ஏனைய பொருள்களையும் ஆக்கிக் கொடுப்பது. உலகம் அழிந்து மீண்டும் உண்டாகும் போது, மாயை எனும் சடப் பொருட்கள் தான் மிஞ்சும். அவற்றிலிருந்துதான் மீண்டும் உலகம் ஆக்கப்படுகின்றது. நிலம், நீர், காற்று என்னும் உலகப் பொருள்களுக்கு இன்னொரு சடப்பொருளான மாயை தான் அடிப்படை என்பது சைவத்தின் முடிவு.

உலகம் சூனியத்திலிருந்து வந்தது என மேலை நாட்டினரும், பிரம்மத்திலிருந்து வந்தது என வேதாந்திகளும், பிரகிருதி எனும் மூலப் பொருளிலிருந்து வந்தது என சாங்கியரும், மாயை எனும் நிஜ, சடப் பொருளிலிருந்து வந்தது என சைவமும் கூறுவதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

மண் எவ்வாறு பானைக்கு மூல காரணமாகின்றதோ, அவ்வாறு மாயை இவ்வுலகிற்கு மூலகாரணமென்றும், இறைவன் குயவனைப் போல நிமித்த காரணம் என்றும், இறைவனது சக்தி, குயவனின் ஏனைய கருவிகள் போன்று துணைக் காரணம் என்றும் கூறப்பட்டிருப்பதிலிருந்து மாயைக்கும் உலகிற்கும் உள்ள தொடர்பு தெளிவாகின்றது.

சைவம் *36* தத்துவங்களைப் பற்றிப் பேசுகிறது. மாயையிலிருந்து *24* தத்துவங்கள் தோன்றுகின்றன, பஞ்ச பூதங்கள் அவற்றில் அடங்கும். மாயையிலிருந்தே உலகப் பொருள்கள் உருவாகின்றன என்று தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அச்சடப் பொருட்களிலிருந்து வந்த உடல், உயிர்களிலிருந்து மேலும் புத்தி, சித்தம், அகங்காரம் என்ற உள உணர்வுகளை உருவாக்குகின்றது. மாயை — சக்தியோடு சேர்ந்து *36* தத்துவங்களாகவும் அவற்றிலிருந்து பஞ்சபூதங்கள் வருவதாகவும் சொல்லுமிடத்து, *36* தத்துவங்களை *36* மூலப் பொருட்களாகவும் (*36* elements), அவற்றின் அணுக்களாகவும் (Atoms), தான் கொள்ள வேண்டும். மூலப் பொருள்களின் சேர்க்கையே பஞ்சபூதங்களாகும் (மண், வாயு, நீர், தீ, ஆகாயம்). ஆக மாயை என்பது அணுவிற்குள் உள்ள பகுதி களைச் (Sub-atomic particles) சுட்டுவதாகத் தெரிகின்றது. இன்றைய விஞ்ஞான உண்மைகள், உலகைப் பற்றிய சைவத்தின் விளக்கங்களோடு முழுவதுமாகப் பொருந்துவதைக் காண முடிகின்றது. மாயையை (Sub-atomic particles) மூன்று விதமாகப் பிரித்து, சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆக, உலகப் பொருட்கள் பற்றிய சைவ விளக்கங்கள் தெளிவாக உள்ளதோடு மட்டுமல்லாது, உலகத்தையும், ஒரு 'பாசம்' என்றும், இந்த உலகப் பொருள்களின் மீது உள்ள பாசம் நீங்கினால்தான் ஆன்மா வீடுபேறு பெறமுடியும் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இறைவன், ஆன்மா, உலகம் என்ற மூன்றினுள் உலகம் என்பதை 'மாயை' என்ற பெயரில் 'பாசம்' என்னும் தொகுப்பில் சேர்த்ததைப் பார்த்தோம்.

# கொழும்பு பூட்

INTERNATIONAL FOOD SUPER STORE

# COLOMBO FOOD

இலங்கை, இந்திய, கனடா உணவுப் பொருட்கள்
உடன் மரக்கறி, பால், பழ வகைகள்,
தமிழ் வீடியோப் படம் ஆகியவற்றிற்கு
இன்றே நாடுங்கள்.......

Colombo Food
2815 Eglinton Ave, East
Scarborough, Ontario
M1J 2E1

**Fax:**
(416)265-1265

**Tel:**
(416)265-1265

கிடந்த பல ஆண்டுகளாக,
பல இன மக்களின்
நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்று
நகை வியாபாரத்தில்
முன்னணி வகிக்கும் ஒரே
இடம்

நித்தியா நகை மாளிகை.

**Finest Quality 22k, Gold & diamond jewellery Expert Custom jewellery & Repairs**

**Nittiya Jewellers**

2425 Eglinton Ave, E. Unit 4A, Scarborough, Ont, M1K 5G8
Tel : (416) 757-6568

| | |
|---|---|
| 1620 Gerrard St. E<br>Toronto<br>Ontario<br>M4L 2A5<br>(416) 465 5065 | 3852 Finh Ave. E<br>Suite 307<br>Scarborough, Ont.<br>M1T 3T9<br>(416) 297 5889 |

**Free Car Parking**

அத்தொகுப்பில் மாயையோடு, ஆணவம், கன்மம் என்ற இரண்டினையும் சேர்த்திருப்பது சிந்திக்கத்தக்கது. ஆன்மா, முக்தி பெற வேண்டுமாயின் பாசம் அறவே அகற்றப்பட வேண்டும். அதன் முதல் பொருளாகிய 'ஆணவம்' என்பது அறியாமையைக் குறிக்கும். ஆணவம் (ego), அறியாமையில் எழும் தற்பெருமை, செருக்கு, சினம், கோபம், வஞ்சனை என்ற எத்துணையோ மனத்தைச் சார்ந்த கெட்ட குணங்களைக் குறிப்பதால், அறியாமை என்ற சொல்லால் அது குறிப்பிடப்படுகின்றது.

கன்மம் என்பது கர்மா, வினை, விதி, ஊழ் என்ற யாவையும் குறிக்கும் ஒரு சொல். ஒருவன் வாழ்நாளில் செய்யும் நல்லவை, கெட்டவை (சமுதாய, சமய நோக்கில்) அவனது ஆன்மாவைத் தாக்கி விகாரமடையச் செய்வதால் ஆன்மா எங்கு சென்றாலும் அதன் விகாரத்தால் தாக்கமடைகிறது. முன் பிறவியில் செய்த பாவ புண்ணியங்கள் ஆன்ம விகாரங்களாகிப் பின், பிறப்பையும், பிறந்த பின் உள்ள வாழ்க்கையையும் பாதிக்கும் என்பது அனுமான முடிவு. கன்மம் வலுவுடையது. அதிலிருந்து யாரும் எதுவும் தப்ப முடியாது. பல பிறவியிலும் அது தொடரும் என்பதை உலகாயதம் தவிர உலக சமயங்கள் யாவும் ஏற்றுக் கொண்டுள்ளன. மேலை நாட்டவர் சமயச் சிந்தனைகளில் பழவினை (முன் பிறப்பில் சேர்ந்த வினை) என்பது இல்லை என்பார்கள். அவர்கள் கொள்கைப்படி, முன் பிறவி என்பதே இல்லை. இந்தப் பிறவிக்குப் பிறகு ஒரே ஒரு பிறவி தான் உண்டு; அதன்பின் மோட்சம் அல்லது நரகம் என்பது அவர்களது நம்பிக்கை. பழவினை மட்டுமே உண்டு என்பது சமண, பௌத்த சமயக் கோட்பாடு. பழவினையும், அதனை இயக்கும் இறைவனும் உண்மை என்பதோடு, இவ்வாழ்க்கையில் சேரும் புது வினையும் வரும் பிறவிகளில் தாக்கம் ஏற்படுத்தும் என்பது சைவ சித்தாந்தம் உள்ளிட்ட ஏனைய இந்திய சமயங்களின் தத்துவம். சைவத்தில் இந்த வினை மூன்று வகைகளாகச் சொல்லப்படுகின்றது. முதலாவது சஞ்சிதம் என்பது. இது பல பிறவிகளில் செய்த மொத்த வினைகளைக் குறிக்கும். பிராரப்தம் என்பது இப்பிறவியில் அனுபவிக்கும் முன் வினையைக் குறிக்கும். மூன்றாவது ஆகாமியம். இது, இப்பிறவியில் புதியதாகச் சேரும் புதிய வினைகளைக் குறிக்கும். இதனையே விதி என்றும், ஊழ் என்றும் சொல்லுவர். சைவத்தில் பழவினையை அனுபவிக்கும் போது நம்முயற்சியால் அதன் பயன்களைக் குறைத்து அனுபவிக்கலாம் என்று, —14— கூறப்பட்டுள்ளது; இது இவ்வாழ்வில் முயற்சிக்கும் இடமளிக்கின்றது. வினை (விதி)யாயிருப்பின் நம்மால் ஆவது ஒன்றில்லை என மன நிலையை (Fatalism) தவிர்க்கக் கூடிய வழிமுறைகள், குறிப்பாக இறைவனருளை நாடுதல் மூலம் சொல்லப்பட்டுள்ளன.

வினைப்பயனைப் பற்றிய விளக்கத்தில் ஒரு பாவத்தை ஒரு புண்ணியத்தால் தீர்க்க முடியாது. இரண்டும் தனித்தனியே அனுபவிக்கப்பட வேண்டியவை. நன்மை தீமைகளை அவரவர்களே அனுபவிக்க வேண்டும். சந்ததிகளுக்கோ, மற்றவர்களுக்கோ அதில் பங்கில்லை. விதிவிலக்கு இறைவனிடமிருந்து தான் கிடைக்கும். மேலும், தீவினை நீக்கி நல்வினை செய்தால் மட்டும் போதாது. பற்றற்ற வினை, அதாவது பலனை எதிர்பார்க்காமல் செய்யும் தன் கடமைதான் பிறப்பை ஒழிக்கும் எனச் சைவ சமயத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
வெல்லா மறவென் னைமிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே

— கந்தர் அனுபூதி.

சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகுஞ் — சீரியர்
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடம் உடைந்தக்கால்

— ஔவையார்.

# திரிகரணங்களைத் திரிய விடாதே

வியாகரண சிரோமணி,
சிவாச்சார்ய கலாநிதி.
சிவஸ்ரீ பூரண. தியாகராஜக் குருக்கள் B.A.Hons(cey)

இவ்வுலகினிலே மானிடராகப் பிறந்த நாம் நாடோறும் பலகாரியங்களைச் செய்கின்றோம். சில முழுப்பயனையும் தருகின்றன. பல எதிர்பார்த்தபடி முழுப்பயனையும் தருவதில்லையே! எனக் கலங்குகின்றோம். இதன் மூலகாரணம் யாது? என ஆழமாகச் சிந்திப்போமானால் எங்கோ ஒரு குறைபாடு — அதாவது எடுத்த கருமத்தைத் திரிகரணசுத்தியுடன் செய்யவில்லை என்ற கசப்பான உண்மை புலனாகும். மனம், மொழி, மெய் எனும் மூன்றினாலுமே நாம் வினைகளைச் செய்கின்றோம். ஆனால் அவற்றை ஒருமுகப்படுத்தித் திரிகரண சுத்தியுடன் செய்கின்றோமா? எனச் சிறிது சிந்திப்போம்.

இந்து சமயத்துக்கு மூலாதாரமானதும் மிகப் புராதனமானதுமாக உள்ள நூல் வேதங்கள். சைவசமயிகள் வேதத்தைப் பொது நூலாகவும், ஆகமங்களைச் சிறப்பு நூலாகவும் கொள்வது மரபு. வேதங்களின் அந்தத்தில் — இறுதியிலுள்ளவை — சாரமாயுள்ளவை உபநிடதங்கள். இதில், நாம் மேலான வாழ்வு பெறப்பல அரிய அறிவுரைகள் உள்ளன.

தைத்திரீய உபநிடதத்திலே ஒரு குருவானவர் குருகுலவாசஞ் செய்து தன்னிடம் கல்வியைப் பூரணமாகப் பயின்று விடைபெறும் மாணவர்களுக்கு அறிவுரை கூறும் பாங்கிலே சில பகுதிகள் அமைந்துள்ளன. **சத்யம் வத** = உண்மையே பேசு, **தர்மம் சர** = கற்றதற்கிணங்க அவரவர்கட்கு விதிக்கப்பட்டுள்ள தருமங்களை, அறங்களைச் செய். சத்தியத்திலிருந்து ஒரு போதும் வழுவுதல் கூடாது. தர்மத்திலிருந்தும் வழுவுதல் கூடாது. **மாத்ரு தேவோ பவ** = தாயைத் தெய்வமாகக் கொள். தந்தையையும் குருவையும் தெய்வமாக மதித்து நட என்பவை சில.

ஒருவன் வாழ்நாள் முழுவதும் சத்தியத்தையே கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும். என்றும் மாறாமல் காலத்தால் தேயாமல் என்றும் இருப்பதே "சத்" எனப்படும். "சத்"துடன் பின்னிப்பிணைந்து இருப்பதே சத்யம். இது உண்மை, வாய்மை, மெய்மை என்று கூறப்பட்ட போதிலும் இவை ஆழமான பொருள் பொதிந்த சொற்கள். உள்ளிருந்து, உள்ளத்திலிருந்து (தோன்றும்) **சத்யம் = உண்மை.** அதனையே நாம் வாயினால் மொழியும் போது வாய்மை ஆகின்றது. மனதில் நினைத்து வாயினால் சொல்லி அதனையே மெய்யினால் (உடலினால்) செய்யும் போது மெய்மை எனப்படுகின்றது. ஆகையினாற்றான் நாம் எந்தக் காரியத்தையும் செய்யும் போது அதனைத் திரிகரணசுத்தியுடன் அதாவது மனம், மொழி, மெய் ஆகியவற்றின் ஒருமைப்பாட்டுடனும் தூய்மையாகவும் செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே அது பூரணமான வெற்றியை, பலனைத் தரும். உதாரணமாக:— ஒருவரிடம் நாம் ஓரிடத்துக்கு "வருகிறோம்" என்று கூறும்போது, அது உள்ளத்திலிருந்து முழுமனதுடன் வரவேண்டும். இது உண்மை. உள்ளத்தில் எண்ணியதையே வாயினால் மொழியும் போது வாய்மை. மனத்தில் எண்ணியதையே வாயினால் மொழிந்து, அதனையே, சொல்லியபடி வருகிறேன் என்று கூறிய இடத்துக்குப் போனால் தான் அது மெய்மை ஆகின்றது. உள்ளத்திலே "போவதில்லை" எனத் தீர்மானித்துவிட்டு, மேலெழுந்தவாரியாக வாயினால் மட்டுமே "வருவதாகச் சொல்லிவிட்டு" அவ்விடத்துக்கு மெய்யினால் உடலால் போகாமலிருந்தால், வாயில் மட்டுமே சத்தியம், உள்ளத்திலும், மெய்யிலும் செயலிலும் சத்யம் இல்லை என்றாகின்றதல்லவா! எனவேதான் மூன்று கரணங்களும் ஒன்றாகச் செயற்படாமையினால் தான் சில காரியங்கள் முழுமையான பலனைத் தருவதில்லை என்பதனை உணரலாம்.

**"யதா சித்தம் ததா வாச;**
**யதா வாச: ததா க்ரியா:"**

பெரியோர்களுக்கு "எண்ணம் எவ்வாறோ அப்படியே சொற்கள். சொற்கள் எப்படியோ அப்படியே செயல்கள்" அமையும் என்பது இதன் பொருள். "பெரியோர்களின் எண்ணம், சொல், செயல் யாவும் ஒன்றே" என்ற பழமொழியும் இதனையே வலியுறுத்துகின்றது.

மேலும் ஆலயம் சென்று இறைவனை வணங்கி

அருள்பெற்று நலம்பெற வேண்டும் என விரும்பினால், முதலில் அதனையே மனப்பூர்வமாக உளமார எண்ணி ஆலயம் செல்ல வேண்டும். வேறு விடயங்களில் மனத்தை அலைபாயவிடாமல், இறை நாமங்களை வாயாரக்கூறி வாழ்த்தி வணங்குவதுடன், வலம்வருதல் போன்ற பணிகளையும் செய்து, முக்கரணங்களும் ஒன்றுபட முழுநம்பிக்கையுடன் வேண்டித் துதித்தால் நம்பிரார்த்தனைகள் நற்பலனைத் தருமென்பதில் ஐயமில்லை.

இறைவணக்கம் போன்றே செய்யும் செயல்கள் அனைத்தையும் முழுமனத்துடனும் முக்கரணங்களும் ஒன்றுபடச் செய்ய முயன்றால் பலன் நிச்சயம் கிடைக்கும். பல காரணங்களால் புலம்பெயர்ந்து வாழுகின்ற நாம் பல்கலாச்சாரம் மலிந்த நாட்டில் நமது இளம் சந்ததியினர் போலி நாகரிகத்தில் மதிமயங்கி வழி தவறிச் செல்லாமலும், நல்லனவற்றை ஏற்று தீய வேண்டத்தகாத பழக்கங்களை நீக்கி நல்வாழ்வு வாழவும், நமது சமயம், அவற்றின் பெருமை, கலை கலாச்சாரம், பண்பாடு, மொழி போன்றவற்றை நேரம் வாய்க்கும் வேளைகளில் நம் குழந்தைச் செல்வங்களின் மனதில் பதியுமாறு நயம்பட உரைத்து நல்வழிப்படுத்தி நற்பிரசைகளாக வாழ வழிவகுக்க வேண்டியது பெற்றோர்களின் பெரும் பணியன்றோ!

எனவே, நாம் இவற்றை உளமாரச் சிந்தித்துச் செயலாற்றி நிறை வாழ்வு பெற இறைவன் திருவருள் புரிவானாக.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

ஏய்ப்பவர்க்குக் காலம் என, எண்ணி விடாதே!
பொய் எத்தனை நாள் கைகொடுக்கும்? மறந்து விடாதே!

— கவிஞர் கண்ணதாசன்.

பக்திநெறியே முக்திநெறி என்று மட்டும் வாழாமல் தொண்டு நெறியாலும் புண்ணிய உலகத்தின் புனிதப் பயன்களை அடைய முடியும்.

— அருள்திரு. அடிகளார்.

நல்லதை எண்ணுக, நல்லதைப் பேசுக, நல்லதைச் செய்க, அதுவே நற்றவமாகும்.

— விவியண்.

நீ கடவுளை உணர வேண்டுமா!
அன்பாயிரு, உண்மையே சொல்,
அறிவாளியாயிரு, ஆண்மை யோடிரு

| | | |
|---|---|---|
| சுறுசுறுப்பாயிரு | ஆனால் | படபடப்பாயிராதே |
| பொறுமையாயிரு | ஆனால் | சோம்பலாயிராதே |
| சிக்கனமாயிரு | ஆனால் | கருமியாயிராதே |
| அன்பாயிரு | ஆனால் | அடிமையாயிராதே |
| இரக்கங்காட்டு | ஆனால் | ஏமாந்துபோகாதே |
| கொடையாளியாயிரு | ஆனால் | ஓட்டாண்டியாய்விடாதே |
| வீரனாயிரு | ஆனால் | போக்கிரியாயிராதே |
| இல்லறத்தை நடத்து | ஆனால் | காமவெறியனாயிராதே |
| பற்றற்றிரு | ஆனால் | காட்டுக்குப் போய்விடாதே |
| நல்லோரை நாடு | ஆனால் | அல்லோரை வெறுக்காதே |

— ஸ்ரீ ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள் அருள்மொழிகள்.

# WHAT IS HINDUISM? WHY ARE THERE SO MANY GODS, RITUALS AND SYMBOLS IN IT?

BY RAJAGOPALAN SAMYKURUKAL - B.A.

Hinduism is the oldest of all living religions. It could be referred to as the mother of all religions. It is not found by any Prophet. Christianity, Buddhism, Islam, and Judaism owe their origin to their respective Prophets and their dates are fixed. But Hinduism has no such Prophet as its founder, and no date can be fixed for its beginning. Hinduism is as old as the world itself. Therefore it has been called the Eternal Religion or "Sanatana Dharma"

It is regrettable that Hinduism has not been properly understood by some Hindus as well as by others. According to Swami Sivananda in his book entitled "All about Hinduism", Hinduism, unlike other religions does not dogmatically assert that the final emancipation is possible only through its means and not through any other. Hinduism allows absolute freedom to the rational mind or man. It allows the widest freedom in matters of faith and worship. It allows absolute freedom to the human reason and heart with regard to questions such as nature or God, Soul, creation, form of worship, and goal of life. Hinduism does not depend on the acceptance of any particular doctrine or in the observance of some particular rituals or form of worship. It allows everybody to reflect, investigate, inquire, and cogitate. Hence all sorts of faiths, various forms of worship, diverse kinds of rituals and customs have found their way within Hinduism and are cultured and developed in harmonious relationship with one another.

The following portion from a book entitled "The Myths and Gods of India" by Alain Danielou, published by Inner Traditions International Ltd. Rochester, Vermont, USA gives the correct picture about Hinduism.

"The work 'Hindu' used for convenience, (by the Greeks to indicate the people who lived east of Indus river) can be misleading, for it may convey the idea that Hinduism belongs to a particular country, to a particular human group, to a particular time. Hinduism according to Hindu tradition and belief, is the remnant of a universal store of knowledge which at one time was accessible to the whole of mankind. It claims to represent the sum of all that has come to be known to man through his own effort or through revelation from the earliest age of his existence."

"Whatever value we attribute to more recent religion, we should not attempt to equate Hinduism with them. Hinduism cannot be opposed to any creed, to any prophet, to any incarnation, to any way of realization, since one of its fundamental principles is to acknowledge them all and many more to come. Hinduism or rather the "Eternal Religion" (Sanatana Dharma) as it calls itself, recognizes for each age and each country a new form of revelation and for each individual according to his of her stage of development a different path of realization, a different mode of worship, a different morality, different rituals, different Gods. Hindus accept the fact that the mystery of creation and destiny of mankind can be approached from various points of view, and each point of view will have some truths in it." This accounts for the existence of numerous Gods, Symbols and rituals in Hinduism. Hinduism is the only religion which sees God in everything and everybody. The Omnipresence of God is fully recognized in

Hinduism. In other religions God is regarded as separate from man and the world, and is looked upon as an independent Judge above, giving rewards and punishment for human acts. But according to Hinduism, human beings and all other living beings are not separate from God but parts of God. They are individual souls, being the parts of the Universal Soul, called God. The individual soul is prevented from realizing the truth that it is a part of the Universal Soul, as it is covered with three kinds of dirt or "Maya" namely ego, illusion, and effects of its past sinful actions caused by these two factors. Through prayers and meditations, with the help of symbols and rituals, and through various types of experiences in several births the soul undergoes a transformation and is cleansed of all its dirts ( the three types of "maya") and reaches a higher level of understanding and realization, when it is in a position to understand God of the Universal Soul and merge with it, giving up its dual nature. At this stage the individual soul is liberated from its cycle of birth and death. It is said to have attained a state called "mukthi" or liberation. All the rituals and symbols in Hinduism are meant for preparing the individual for this goal. There have been many saints who have reached this level and merged with God. They are called Gurus or Swamis or Nayanmars in Hindu tradition. It is the aspiration of every Hindu to reach this state and this is the ultimate purpose if all the Hindu rituals.

It is the cardinal belief of Hinduism that each individual soul will ultimately merge with the Universal Soul - God, after undergoing series of experiences through its own actions, in different births. The whole Universe is regarded as a playground in which the God plays his "Lila" by allowing each soul to behave or act in the way it likes and see to itself the results of his or her own actions. These results are based on the "Law of Karma" which is an illustration of the scientific concept that "Each action has an equal and opposite reaction." The individual soul by its own observation and inquiry about its own actions and results ultimately finds a path suitable to its own nature, to merge with God - The Supreme and Universal Soul. Each religion, each way of worship, though different, is considered to be a valid path leading ultimately to the same goal. Thus Hinduism recognizes the fact there can be different paths leading to the same destination. Saint Ramakrishna says "Truth is one, but paths are many." This is another reason for the existence of variety of Gods of variety of Gods and symbols in Hinduism.

The Ultimate reality which all religions refer to as "God" is worshipped by the Hindus in many forms and names. To mention a few as examples, Siva, Vishnu, Krishna, Brahma, Ganesha, Subramaniya, Vairavar, Parvathy, Durgai, Lakshmi, Sarasvathy and so on. In order to understand, how one God can be worshipped in different forms we could use an individual as a simile. In the ordinary world it is possible for an individual to assume different names and appearances depending upon the role he plays in his life, for example let us assume that there is a person by the name of John. John would first be a son born to a parent. For his parents he will always be their son performing the duties and obligations of a son. When John goes to school with a school uniform, he becomes a student for the teachers in his school and he has to perform the duties of a student. The same John can be a prefect, monitor, a sportsman, appearing in different dresses and performing different functions. In course of time the same John could be a lecturer in a University or holding a big position as an officer in an establishment with completely different dress and background, and performing different duties. When John marries he becomes a husband to the wife with a different role and appearance. With the birth of a child John would become a father performing the duties of a father to son, and with a birth of a grandson he would be a grandfather, performing another different role. When this same John tries to do some gardening in his backyard, he would be farmer with different tools and appearance.

When he is with a friend, he would be in a different role trying to be helpful to his friend. He can also be an uncle to some one and a nephew to another. He can be a brother to one person and a cousin to another. Thus a single person by the name of John could assume different names with different relationships, different roles and different appearances. Through this example we could see how an ordinary man could assume different names and forms while he performs different roles. If an ordinary man could assume so many different roles in his normal life, we may imagine how many different roles and names, the almighty creator of the universe could take in order to perform the activities of the universe. Hence in Hinduism, the one invisible supreme almighty God is considered as appearing in different forms in order to fulfill different roles or to demonstrate different aspects of the reality.

Each aspect of God is given a different name and form in Hinduism. When God acts as the creator he is Given the name of Brahma, with symbolic features depicting principles involved in creation. Similarly when God performs the role of a protector he is worshipped as Vishnu of Krishna with all the symbols reflecting protection. All that is created is destroyed but the destruction is not final because the matter and energy in the universe cannot be destroyed. Everything disappears in order to take another form. Hence there is destruction to take another form. When God performs this role Hindus name his as Siva or Rudra. When God is looked upon as a remover of all the obstacles and giver of success, he is given the form of Ganesha. The name and form of Subramaniya is given when God is invoked to conquer all the evils in the world.

When God is regarded as an embodiment of all the knowledge he is called Sarasvathy, When he is giver of all the wealth, he is called Lakshmi, When giving the strength he is referred to as Parvathi or Durgai. When God performs the role of a watcher or a Security officer to the world and its beings, he is worshipped as Vairavar.

Symbols and Rituals are signs for expressing the invisible, by means of visible of sensuous representations. In Hinduism each aspect of Divinity or Ultimate reality, is symbolized in such a manner that each such aspect has affinities with some particular form, number, color, plant, animal, part of the body, vital energy particular constellations, sounds rhythms etc. Thus an aspect of divinity can be represented and worshipped in various forms such as a mental figuration, a geometrical diagram (Yantra), an anthropomorphic image (Murthy), a spoken formula (Mantra), a particular human being (mother, teacher), a particular fruit, an animal, a tree, a mineral etc. Any of these forms may be used as a support for the ritual of meditation to reach the Divine Principle of which they are the images. Thus in Hinduism we have so many symbols representing various principles of the ultimate reality. The Hindu Temple itself is constructed in such a manner that it Symbolizes a human body. The God within the innermost chamber of the temple represents the soul within the human body. Every part of the Temple corresponds to some part of the Human body. The curtain like cloth that is hung in front of the Deity and is removed only at the time of offerings and prayers (Poojas), represents the three bonds of Anava (Ego), Karma (Sinful acts), and Maya (Illusion). These form the veil that prevents the individual from knowing God. As a symbol, the curtain is removed when we pray god, indicating that we get rid of these bonds by praying God.

Professor Mircea Eliade a historian of religions, describes how the discovered the value of religious symbolism.

"The second part of the lesson I learned, is the meaning of symbols. In Romania, I hadn't been particularly attracted to religion:

To my eyes all those icons in the churches seemed merely to clutter them up. I didn't

regard the icons as idols, of course, but still......well, in India I happened to live for a time in Bengali village and I saw the women and girls touching and decorating a "Lingam", a phallic symbol of more precisely an anatomically very accurate stone phallus and naturally the married women at least could not be unaware of what it was, of its physiological function. So I came to understand the possibility of "seeing" the symbol in the "Lingam". The "Lingam" was the mystery of life, of creativity, .. of the fertility that is manifested at every cosmic level and that manifestation of life was Shiva in the form of "Linga". So this possibility of being religiously moved by the image and the symbol - that opened up a whole world of spiritual values to me"

"Shiva Linga" is an important symbol in Hinduism, which symbolizes the generative power of the nature. This has an appearance of the male organ inserted in the yoni, the female organ, and symbolizes the act of procreation. According to Asian Mythologies compiled by Yves Bonnefoy and translated by Wendy Doniger "This is for Siva the Symbolic equivalent of the reclining Vishnu whose awakening causes a lotus to emerge from his naval, a lotus that bears Brahma. We may even safely assert that the lotus stem has same symbolism as Siva's linga - page 67.

According to Bhavatgeetha every existence movable or immovable comes into being by the union of Prakriti and Purusha, and according to science the entire universe and all its contents are combination of matter and energy. The Hindus consider this principle as Siva and Shakthi and, the form of Arthanathesvara - another form of Siva - A half male and half female figure, too depicts this principle.

Siva is also Worshipped in the form if Nadaraja - or Dancing Siva. This represents the scientific principle there is always a vibration in nature and everything in nature happens because of this vibration. Movement is the most primal act of existence, and without this principle of movement universe itself would not have come into existence. Dancing Siva symbolizes God as the cause of all movements or vibrations in nature, which has no beginning or end.

Similarly there are various other symbols like the "Chakarautha" of Lord Krishna and the Vel (arrow) of the Lord Murugan, the Musical instrument of Veena in the hands of Sarasvathy and so on. Such symbols are so many that we cannot find enough space here to describe the significance of each of them. We could only say that each symbol has a deep meaning which if understood properly would enable us to realize God.

Just as there are many forms of God representing the different aspects of one God, and many symbols depicting various principles of God realization, so are there many paths or methods to realize God. Basically all these paths can be categorized into three. Bhakthi Yoga (The path of devolution), Karma Yoga (The path of action), Jnana Yoga (The path of knowledge and wisdom). "Yoga" means uniting with God. Hence these are paths or steps advocated in Hinduism to realize God in order to be liberated from the cycle of birth and death, and its consequent sufferings. Through their own experience great Saints have discovered these methods or paths to realize God.

The path of devotion consists of various rituals. As one writer says, "Ritual is a kind of magic art through which with the help of sounds, forms, rhythms, gestures, flowers, light, incense, and offerings, the mind of the worshipper is carried away from its material pre-occupations, to a world of divine environment." There are so many rituals in Hinduism that we cannot describe or explain the significance of each of them in this article. However we may look at few examples to show that each ritual has a deep meaning behind them. Having a deity or a picture symbolizing certain aspect of God, lighting different kinds of lamps in front of the deity,

offering flowers and various precious things to the deity is a kind of ritual expressing the personal feeling of devotion to God. The devotee personifies God in the form of deity and makes all sorts of offerings to it thereby demonstrating his feeling of love and attachment to God. The story of Kannapa Nayannar is a classic example of this method. In the story it is said that, one day, he saw one of the eyes in the eyes in the stone figure of the deity that he was worshipping, was bleeding. The Nayanar was so attached and loving towards God that he actually felt that something was hurting the God's eye. Overtaken by feelings of devotion he plucked his own eye and replaced the deity's eye with his one. Thereupon it is said God appeared in front of him in real person and blessed him for his devotion. He is said to have merged with God by this kind of devotion. People express devotion to God in many ways. Rituals are sometimes methods of expressing such devotion. Besides there are some rituals that prepare the mind of a devotee to worship God, for example every day, early in the morning, every Hindu after a bath or wash, applies a kind of white, holy ash called "Viboothi" on his forehead in three lines. This is a ritual symbolizing the idea that we should have our mind pure in order to pray God. The white ash indicate purity. Forehead indicate the mind. The three lines indicate that, a person should be pure, in thought, word, and deed and try to remove the three bordages, ego, illusion, and Karma, so that soul can be liberated. God's name is chanted while applying this Holy ash. This ritual also reminds to the person performing it, that everything in this world will ultimately be reduced to dust or ash and therefore should not be greedy for worldly things. We ourselves will one day be reduced to ashes. Hence do long as we live, we should be loving and caring for others, rather than being selfish. This idea is reminded when we apply the Holy ash on our forehead. This act is also accompanied by lighting a lamp in front of a deity that the person worships. The lamp is a symbol that signifies "enlightenment" of the mind. Hence the devotee makes his mind pure and enlightened by this ritual, so that he is able to realize God.

The second category is the Path of action or "Karma Yoga." This consists of performing one's duties in each of his position in life, perfectly and sincerely, without attachment to its results, dedicating all such results to God. All activities in life are performed as dedications to God. The duties of a parent to children, and vise versa, the duties of a teacher to a student and vise versa, the duties of a kind to his subjects and vise versa, the duties involved in every position that we occupy in life are all performed in the best manner possible without any shortcomings dedicating all such actions to God. It is believed in Hinduism that when one dedicates all his actions to God, he could realize God and become one with God in course of time. In "Bhagavath Geetha" Lord Krishna advises Arjuna to dedicate even the act of fighting and killing to him, and teaches the principles of "Karma Yoga" in the battlefield. If we do every action in our life with the utmost dedication to God without any personal likes or dislikes, we can realize God. This is one of the cardinal principles of the path of action or "Karma Yoga".

The third category is the path of knowledge or wisdom, "Jnana Yoga." This consists of rational inquiry and discretion. The individual always contemplates and tries to understand the purpose of every happenings, in relation to God's plan, He tries to understand the play of god in everything and everybody , and through his knowledge and wisdom he communes with God. He may not express his feelings in any rituals but will contemplate and meditate to himself in silence, understanding God in everything that happens around him and he himself will consider himself as an instrument in the hands of God to perform certain activities or duties. He regards himself as a link in the chain of events in God's creation and plays the role expected of him by God. In this way through his mental powers of concentration and understanding, he realizes God and merges with it. Saint Manikavasagar

was an example of this "Jnana marga."

Thus in Hinduism there are several names and forms of God, several rituals and several methods of realizing God. It divides the entire humanity into certain categories, according to their temperament or aptitudes called "Gunas". People are categorized as belonging to "Satva Guna" "Rajas Guna". "Satva Guna" indicate high intellectual capacity, "Rajas Guna" indicate high physical capacity, and "Thamasa Guna" refers to lethargic or people with less physical and intellectual capacities. The different paths of God realization described above suits to these three different category of people. The path of knowledge or wisdom is related to "Satva Guna" the path of action or Karma is related to "Raja Guna" while the path of devotion or "Bhakthi" is related to "Thamasa Guna". Thus in Hinduism people can worship God in any manner suitable to them and follow any methods to realize God. This absolute freedom accounts for the existence of number of names, forms, and rituals in Hindu religion. Saint Ramakrishna is one of great teachers who had practically demonstrated that God can be realized through any religious path if followed sincerely. Any one who is really keen in understanding Hinduism in its true sense may read his teachings.

"OM NAMASIVAYA"

**Mode of Passion**

One in the mode of passion is never satisfied with the position he has already acquired; he hankers to increase his position. If he wants to construct a residential house, he tries his best to have a palatial house, as if he would be able to reside in that house eternally. And he develops a great hankering for sense gratification. There is no end to sense gratification. He always wants to remain with his family and in his house and to continue the process of sense gratification. There is no cessation of this. All these symptoms should be understood as characteristic of the mode of passion.

Excerpts from: Bhagavad-Gita As It Is.

In the Kaliyuga, the easiest path of salvation is the attachment to the feet of the Guru. The meanings and significance of the word "Guru" is many-fold but the main significance of the term "Guru" is removal of darkness, leading the ignorant to knowledge, from darkness to light. This transition can take place only when the Sishya (Disciple) seeks the feet of the "Guru" for liberation from worldly desires. It is the "Guru" who will show His disciple the way to liberation. This is the greatest "Tatwa" (Principle) embodying "Guru Bakthi" (Guru Worship)".

The incarnation of Lord Shiva came in the form of 'Shankara', born to Nambudhri (Kerala Brahmins) parents. At the early age of five, Shankara was anointed with the sacred thread and was immediately ordained to take 'Sanyasa', (a pathe which even elders fear to take) by reanouncing worldly materials. In order to get his mother's permission to become a Sanyasi, Shankara deliberately staged a life and death drama and got her approval. With thism came the tour of Shankara known as "Digvijaya" which covered the entire Indian continent. His rich experience in the material and spiritual world resulted in His message "Guru Angri Padme Ththah Kim Ththah Kim Ththah Kim" (There Is Nothing In The World Beyond The Lotus Feet Of The Guru. He Is All And End All Of The Human Evolution).

- Gurunathar and Guruji

# இந்து மத சிந்தனைகள்

ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள்

நாம் இந்து மதத்தில் பிறந்ததே பூர்வ புண்ணியம் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் நம் மதத்தில் கூறப்படாத விடயங்கள் எதுவுமே உலகத்தில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு நம் மதம் பலவித நூல்களை உடையதாய் இருக்கின்றது. இதனை மேல் நாட்டு அறிஞர் பலரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

வடமொழியும் தமிழும் இந்து சமயக் கலாச்சாரத்தின் இருகண்கள் என்றே போற்ற வேண்டும். சமஸ்கிருத மொழியில் பாண்டித்தியம் பெற்ற ஜெர்மானிய அறிஞர் மார்க்ஸ் முல்லர் அரிய பெரிய உண்மைகளை வெளியிட்டிருக்கிறார். இந்து மதத்தை ஆதார மாக வைத்துத்தான் இந்துக்கள் வாழ்கின்ற இமயம் முதல் குமரிவரை பரவியுள்ள பிரதேசத்தை இவர்கள் இந்தியா என்று அழைத்தனர்.

மார்க்ஸ் முல்லர் தன்னுடைய நூலில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

"இந்தியாவில் மனித சிந்தனை முழுமையான அளவில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதனால் உலகுக்கு அவர்கள் அளித்துள்ள சிந்தனைகள் முழுமையான வடிவம் பெற்றவைகளாக இருக்கின்றன. வாழ்வியல் பிரச்சினை பற்றித் தீர்க்கமாகச் சிந்தித்து உன்னதமான முடிவுகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்." அதுபோலவே திருமதி மானிங் என்கிற அம்மையார் "இந்து சிந்தனை, மனித மனம் எட்டிப் பிடிக்கக் கூடிய அனைத்தையும் விரிவாகவே விளக்கிக் காட்டியிருக்கிறது" என்று குறிப்பிடுகிறார்.

இவர்கள் அனைவரையும் வியப்பில் அழுத்திய விஷயம் என்ன?

வாழ்க்கையில் எத்தனை துறைகள் உண்டோ அத்தனை துறைகள் பற்றியும் இந்து மதச் சிந்தனையாளர்கள் தெள்ளத் தெளிவான கருத்துக்களை வெளியிட்டிருக் கிறார்கள். வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால் அவை அனைத்திலும் இழையோடி நிற்கும் ஒற்றுமையைப் பற்றி இந்து மதம் கூறியது போல் வேறு எந்த மதமும் கூறவில்லை என்றே சொல்லலாம். சுவாமி விவேகானந்தர் 1893இல் சிக்காக்கோ நகரிலே சர்வமத மகாநாட்டிலே பேசிய பேச்சு உலகம் முழுவதுமே கேட்டது. விவேகானந்தரின் வீரமுழக்கத்தின் பின்பு தான் இந்து சமய தத்துவத்தை ஓரளவு உலகம் உணர்ந்தது. பலர் இந்து சமயத்தைப் பற்றித் தாம் கொண்டிருந்த தாழ்வு எண்ணங்களை மாற்றிக் கொண்டனர்.

ஜியு. போப் என்னும் பாதிரியார் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு கிறிஸ்து மதத்தைப் பரப்ப வந்திருந் தார். அதுவும் தமிழ் நாட்டிற்கே வந்திருந்தார். தமிழருக்குத் தமிழிலே சொன்னால் தான் விளங்கும். ஆதலால் தமிழைக் கற்கத் தொடங்கினார். தமிழின் இனிமை அவரை விழுங்கி விட்டது. திருவாசகத் தைக் கசடறக் கற்றார். "ஆவியிலே எளியவர்கள் பாக்கியவான்கள்" என்ற கிறிஸ்துவின் போதனைக்கு உதாரண புருஷர் மாணிக்கவாசகரே தான் என்பதை ஐயமற உணர்ந்து கொண்டார்.

"தான் பெற்ற இன்பம் உலகமும் பெற வேண்டும்" என்ற கருணை அவருள்ளத்திலே முகிழ்த்தது. அதனால் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். உலகம் திருவாசகப் பெருமையை உணர்ந்தது. தமிழர்களும் திருவாசகப் பெருமையை ஆங்கில மொழி மூலம் கற்று உணர்ந்தனர். இந்த விடயத்தில் ஜியு. போப் அவர்களுக்கு இந்துக்களா கிய நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இங்கிலாந்தில் வாழ்ந்த ஜோட் என்பவர் இந்துக் களைப் பற்றிக் குறிப்பிடும் போது, தங்களுக்குப் புறம்பான விஷயங்களையும் பொறுமையோடு ஏற்றுக் கொள்ளும் சகிப்புத்தன்மை இந்துக்களிடம் இருப் பது பாராட்டற்குரியது என்கின்றார். இந்தப் பண்பு இந்துக்களிடம் இயற்கையாகவே அமைந்திருப்பதற் குக் காரணம் உலகில் காணுகின்ற அனைத்தையும் விருப்பு வெறுப்பின்றி நேசிக்க வேண்டும் என இந்து மதம் அவர்களுக்குப் போதித்திருப்பதுவே ஆகும்.

அகிம்சையே இந்துக்களுடைய வாழ்க்கை நெறி. அகிம்சையே பரமதர்மம் என்பது இந்து மதக் கோட்பாடுகளில் ஒன்று. பசுக்களை வழிபடுவது இந்துக்களின் வழக்கம். கோமாதா என்று பசுவை அழைப்பது உண்டு.

இந்துக்கள் பசுவை வழிபட்டதற்குச் சிறப்பான காரணங்கள் உண்டு. அது ஒரு சாதுவான பிராணி. பால் கொடுத்து உலகை இரட்சிக்கின்றது. தான் ஈன்ற கன்றுக்கும் பால் கொடுத்து மனித இனத்துக் கும் அமுதத்தை வழங்கும் காமதேனு பசு. இத் தனையும் கொடுக்கும் அது அமைதியாக இருந்து பால் கறந்து கொள்ள அனுமதிக்கிறது. அதன் பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகிய அனைத்தும் கிடைக்கின்றன. பெரிய பெரிய

வாழிய சைவ நீதி

# ஸ்ரீ சிவா நகை மாளிகை

கலைவண்ணச் சிற்பிகளின் கைவண்ணத்தில்
மாற்றுக் குறையாத தங்க நகைகள்




**Sri Siva Jewellery**
721 Bloor Street West
Toronto, Ontario
M6G 1L5
Tel: (416) 531 4867; Fax: (416) 531-6527

தமிழ் நேயர்களின் முதலாவது தெரிவு

Radio



கீதவாணி

88.9 FM (STEREO) அலைவரிசையில்

சனி காலை 8 மணி தொடக்கம் 10 மணிவரை........

ஞாயிறு காலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை........

- தேர்ந்த இசை
- பேட்டிகள்
- போட்டிகள்
- நாடகங்கள்
- இசையும் கதையும் இன்னும் பல...

விளம்பரதாரர்கள் இப் பொழுது விரும்பி
விளம்பரம் செய்வது கீதவாணியிலேயே.....

உங்கள் விளம்பரங்களுக்கு:

Tel: (416)321-5199

Fax: (416)321-3844

Pager (24 hours) 867-0066

கோயில்கள் எல்லாவற்றிலுமே கோபூசை நடைபெறுகின்றது.

அகிம்சையின் வடிவமாகவும் அமுதத்தை வழங்கும் காமதேனுவாகவும் பசுவைச் சிறப்பித்து இந்துக்கள் வழிபட்டார்கள். போர்த்துக்கேயர் காலத்திலே யாழ்ப் பாணத்தில் வீட்டுக்கொரு மாடு இறைச்சிக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டம் இருந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியில் ஞானப்பிரகாசர் என்பவர் இருந்தார். அவர் இந்தப் போர்த்துக்கேயரின் அதிபாதகமான செயல்களுக்கு உடன் பாடில்லாதவராக இந்தியா சென்று சிதம்பரத்தில் தங்கினார். சிதம்பரத்தில் அவர் வெட்டிய திருக்குளம் இன்றும் ஞானப்பிரகாசம் என்ற பெயரோடு விளங்குகின்றது.

இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடான அகிம் சையை ஆற்றல்மிக்க கருவியாகப் பாவித்து, காந்திஜி இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தந்தார் என்கிற உண்மையினையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக் கொள்வது நல்லது. இந்தியாவை ஆண்ட அசோகரும் அக்பரும் கூட அகிம்சையையே வற்புறுத்தினர்.

இந்து சம்பிரதாயப்படி எளிமையான வாழ்க்கைக்கு விசேஷமான மரியாதை உண்டு. வறுமை ஒரு குற்றமாகவும் கேவலமான ஒரு நிலையாகவும் இந்துக்களால் கருதப்படவில்லை. துறவிகள் மதிக்கப்பட் டார்கள். ஏழைக்கல்விமான்கள் போற்றப்பட்டார்கள். மன்னர்களை விட மகரிஷிகளுக்கு அதிகமான சமூகச் செல்வாக்கு இருந்தது. மன்னர்களுக்கு இவர்கள் ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்திருக்கிறார்கள். காரணம் மகான்களின் உன்னத சிந்தனையில் மன்னர்களுக்கு நம்பிக்கையும் விசுவாசமும் இருந்தன.

பழங்கால ரிஷிகள் வேதவிற்பன்னர்களாக மட்டும் இருக்கவில்லை. தவசிரேஷ்டர்களாகவும் இருந்தார் கள். போர் வீரர்களாக இருந்தார்கள். விஞ்ஞானிகளாக இருந்தார்கள். சமூக வாழ்க்கைக்குத் தேவையான பல விஷயங்களிலும் வழிகாட்டிகளாக விளங்கினார்கள்.

தனுர்வேதம் என்பது போர்க்கலை பற்றிய விஞ்ஞானம், ஆயுர் வேதம் என்பது மருத்துவம் பற்றிய விஞ்ஞானம், அர்த்தசாஸ்திரம் என்பது பொருளாதாரம் பற்றிய விஞ்ஞானம், கந்தர்வ வேதம் என்பது இசை பற்றிய விஞ்ஞானம்.

இந்துமத சிந்தனைக்கு மூலமாக உள்ளது சாதனை நெறியாகும். சாதனை இல்லையேல் சாத்தியம் இல்லை. சாதனை மூலம் தெளிவதே உண்மை ஞானம். ஆகவே நாம் எல்லோரும் சாதனை செய்து உண்மையைத் தெளிவோமாக.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

நிஜம் ஒன்றே. ஆனால், பிரதிபலிப்புக்கள் பலவிதம், ஒரே சூரியன், தேங்கியுள்ள தெளிவான நீரில் தெளிவாகவும், ஓடும் நீரில் அசைவது போலவும் அழுக்குத் தண்ணீரில் அழுக்காகவுமே பிரிதிபலிப்பதைக் காண்கிறோம். இதில் நாம் காணும் வேறுபாடுகள் நீரிலேயே உள்ளனவேயன்றி, சூரியன் ஒன்றே. தேகம் ஒரு பாத்திரம் போன்றது. மனது அதிலுள்ள நீர் போன்றது. இதில் காணப்படும் பிரதிபிம்பமே ஆத்மாவினுடையது. அந்தந்தத் தேகத்தின் தன்மையைப் பொறுத்தே பிரதிபலிப்பு இருக்கும்.

ஆரம்பமும் இறுதியும்:- சூரியனுடைய ஒளிக்கு ஞானமார்க்கத்தை ஒப்பிடுகின்றனர். பக்திமார்க்கம் சந்திரனுடைய ஒளிக்கு ஒப்பிடப்படுகின்றது. ஞானம், அறிவொளி என்னும் பிரகாசத்துடனும் பக்தியோ பரவசமான ஆனந்தத்தையும் அளிப்பதாகவும் விளங்குகின்றன. பக்தியும் ஞானமும் ஒரு பதார்த்தத்தின் ஆரம்பமும் முடிவும் எனலாம்.

பக்தி என்பது இறைவனிடம் மனத்தைச் செலுத்துதலே ஆகும். எவ்வித பலனையும் கருதாது பரம்பொருளை விட உயர்ந்ததொன்றுமில்லை என்று அவனைப் பூரண சரணாகதியடைதலே உயர்ந்த பக்தியாகும்.

— பகவான் சத்திய சாயிபாபா.

# இந்து மத பொக்கிஷம்

கவிதாராஜன் — மொன்றியேல்

இறைவனை நினைத்துக் கொள்ளும் போது மனம் சாந்தி அடைகிறது, துயரங்கள் தூரவிலகிச் செல்கின்றன.

காயம் மெய்யற்றது, மாய வாழ்க்கை மெய்யற்றது, இவ்வுலக இன்பங்கள் யாவும் போலியானது என்ற மெய்ப்பொருள் உணர்த்தி மனிதனை நன்னெறிக்குய்ப்பது "நாதன் நாமம் நமச்சிவாயவே" என்றுணர்ந்த பின்பே மனம் நற்கிரியைகளைச் செய்வதில் நாட்டம் கொள்கிறது.

இறைவன் அன்பு வடிவானவன். ஆன்மாவை நகர்த்திச் செல்லும் ஐந்து குதிரைகளையும் அடக்கி மலங்கள் எனும் மூன்று மதிற்சுவர்களையும் தகர்த்து அறத்தின் வழியே ஆத்மாவை, சீரம் எனும் தேரில் இருத்தி அழைத்துச் செல்லும் சாரதியும் இறைவனே!

"அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறது உலகப் பொதுமறை.

அந்த அன்பே சிவம் என்று மந்திரம் சொல்கிறார் திருமூலர்

"அன்பும் சிவமுமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."

இந்துமதம் என்றால் என்ன? என்று பொருள்விளக்கம் யாரும் கேட்டால்;

"உன்னை உனக்கறிவித்து உனக்குள்ளேயே
இறைவனைக் காட்டி மாயப் பிறப்பறுக்கும்
மனத் தூய்மை தருவது"

இந்து மதமே என அடித்துரைப்பேன்.

மநுதர்மத்தினை மனித நீதிமன்றத்தில் மனச்சாட்சி வைத்துப் பரிந்துரை செய்து அறிமுகப்படுத்தியதும் இந்து மதமே.

இந்து மதத்திற்கு "சனாதன தர்மம்" என்பதே ஆதிப் பெயராக இருந்தது என்று அண்மையில் ஒரு வரலாற்று நூலைப் படிக்கும் போது பார்த்தேன். அண்மித்த காலத்தில் தான் அதற்கு இந்துமதம் என்று பேர்வந்தது.

மனிதர்கள் தமக்கு யாருமற்ற போது தம்மை அநாதை என்று சொல்லிக் கொள்வதைக் காண்கிறோம்.

இவ்வுலகில் பிறந்தபின் தாய், தந்தை, உடன்பிறப்புக்கள், உறவினர் இப்படி ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம் செய்கிறார்கள். அந்த அறிமுகங்கள் மேல் அன்பு, பாசம் செலுத்துவதும் அவை இழந்து போகும்போது அநாதை என்று எண்ணி வருந்துவதும் மனிதனின் அறியாமையே.

இறைவன் படைத்த உயிர்கள் எல்லாவற்றிற்கும் அவனே தாயுமாகித் தந்தையுமாகி நின்று அன்பு செலுத்துகிறான். யாரும் அநாதைகள் அல்ல.

"பாலினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் — பரிந்து"
என்றும்

"நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"

என்றும் திருவாசகத்தில் மணிவாசகர் மெய்யுருகி நிற்கின்றார்.

ஆன்மா இந்தச் சீரத்தை எடுத்தது, இறைவனை உள்ளமர்த்திப் பூசனை செய்வதற்காகவே என்று உணர்ந்து கொண்டோம் என்றால் பாவங்கள் செய்ய மனம் விழையாது.

காயமே கோயிலென்றும், கடிமனம் அடிமை என்றும், நேயமே லிங்கம் என்றும், ஈசனைப் பூசனை செய்யப் புறப்பட்டுவிட்டால் நீ மரணத்தை வென்றுவிடுவாய்.

இறைவனுக்குக் கோயிலாக இருக்க வேண்டும் என்பதற்காகவே என் உடம்பைப் பேணிக் காத்து வருகிறேன் என்று மந்திர மொழி கூறுகிறார் திருமூலர்.

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினில் உத்தமன் கோயில்கொண் டானென்
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே."

மனித மனங்களைச் சலவை செய்து மநுதர்மத்தைப் போதித்து மண்ணிலே பஞ்சமா பாதகங்கள் நிகழாமல் தடுக்க நான்கு வேதங்களாய் நின்று ஞனோபதேசம் செய்யும் இந்துமதத்தின் பெருமைதனைத் தேசமெல் லாம் போற்றத் தொண்டாற்றி வருகிறது **"கனடா இந்து மாமன்றம்"** என்றால் அது மிகையாகாது.

சைவநீதியின் மேன்மைகள் கூறும் பக்தி இலக்கியக் களஞ்சியமாக "சைவநீதி" எனும் இந்து மத சஞ்சிகை வெளியிட விழைந்தது இம்மன்றம், என்பதறிந்து ஆனந்தம் கொண்டேன்.

இச் சிறியேன்தன் புன்மதி கொண்டு இந்து மதம் எனும் மாகடல் நீரில் அள்ளிய சிறுதுளி அமுதினை மேலோர் பலரின் கருத்தினைச் சுமந்துவரும் சஞ்சிகையில் அலங்கரித்து வெளிவர அன்புபாலித்த மாமன்றச் சிவத்தொண்டர்களுக்கு இன்னுயிர் என் உடல் தரிக்கும் நாள்வரை நன்றிகள் சுமந்திருப்பேன்.

மதத்தின் அவசியத்தை மக்களுக்குப் புரிய வைத்து பின்னர் இந்து மதத்தின் மேன்மையை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

மதம் என்பது பிறவிப் பெருங்கடல் நீந்தி, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் சேரும் வரையும் மனிதன் எவ்வண்ணம் வாழவேண்டும் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆத்மீக தத்துவங்களால் விரிவுரை செய்வது. மதம் மநுதர்மத்தின் வியாக்கியானம், மனிதனுக்கு மனிதத்தைப் போதிக்கும் போதிமரம்.

அகவாழ்வின் ஆரோக்கியத்தின் ஆதாரம், இறைவழிபாட்டையும் அதனால் விளையும் அகத்தூய்மையையும் எடுத்துக் கூறி வீட்டின்பப் பேருலகிற்கு வழிகாட்டி அழைத்துச் செல்வது மதம்.

மனிதனுக்குள் ஆழ்ந்த துயிலில் இருக்கும் ஞானக் கண்ணைத் திறந்து இவ்வுலக வாழ்க்கையில் ஐக்கியமாகிவிட்ட மனிதனுக்கு அவ்வுலக அருமைகளை அறிவித்து, பற்று அறுத்து, பற்றற்றான் பாதம் பற்றும் பரிபக்குவத்தை உபதேசிக்கும் சற்குருவானதும் மதமே.

காலம் இருபதாம் நூற்றாண்டைச் சுருட்டி வைத்து விட்டு இருபத்தி ஓராம் நூற்றாண்டிற்கு வரவேற்பு விழா எடுக்கத் தயாராகிறது.

இன்று விஞ்ஞானம் தன் வினைத் திறனால் பலசாதனைகள் படைத்து வருகிறது. விஞ்ஞானத்திற்கும், மதக்கொள்கைக்கும் இடையில் சிண்டு முடிந்து மோதலிக்க வைத்து இனி, வேத தத்துவங்கள் சாதலைக் காணும் எனக் கருத்துக்கள் பிறக்கின்றன.

மதமும், விஞ்ஞானமும் மனிதவாழ்வில் எவ்வாறு பங்கேற்றுக் கொள்கின்றன என்பதனை "விஞ்ஞான உலகில் மெய்ஞான வெளிச்சம்" என்னும் நூலில் விரிவாக எழுதி வெளியிடவுள்ளேன். விரைவில் அந்த நூல் வெளிவர இறைவன் அருள் தருவான்.

இங்கே கட்டுரையின் அளவு கருதிக் குறிப்பாகச் சில கூறித் தொடர்கின்றேன்.

விஞ்ஞானம் என்பது; மனிதனின் நாகரிக வளர்ச்சிக் கேற்ப, புலன்கள் தேடும் புறவாழ்வின் தேவைகளுக்கு விருந்துபசாரம் செய்வது.

புறவளத்தைப் பெருக்க விஞ்ஞானம் அவசியமானது என்றால், மனவளத்தைப் பெருக்க ஆன்மீக தத்துவங்களை அறிமுகம் செய்து, மனிதநெறி மண்ணில் தழைத்திருக்க மதமே அவசியமாகிறது.

உடல் அழகை அலங்கரித்துப் பார்க்க ரசம் பூசிய கண்ணாடியை விஞ்ஞானம் நம்முன் நிறுத்தி வைத் தது என்றால், ஆன்மீக தத்துவங்களால் வடித்த கண்ணாடிக்கு பக்திரசம் பூசி உன்னையே நீ அறிந்து உய்யும் வழிதேடு என அகத்தினை அழகு செய்து பார்க்குங் கண்ணாடியை மதமே தயாரித்துக் கொடுத்தது.

இவ்வுலக வாழ்க்கை வசதிகளை அனுபவிக்க பல சாதனங்களை விஞ்ஞானம் தயாரித்துக் கொடுத்தது.

இவ்வுலகில் வாழ்வாங்கு வாழவும் அதனால் அவ்வுலகில் பேரின்ப முத்திநிலை காணவும் மனிதனைப் பக்குவப்படுத்தும் மெய்ஞ்ஞான தத்துவங்களை மதமே தயாரித்து வழங்கியது.

உலகில் அறிவியலும், விஞ்ஞானமும் தந்த அளப்பரிய அன்பளிப்புகளை எல்லாம் மனித வாழ்க்கையோடு நல்ல பயன்தரும் வண்ணம் கலந்து செயற்படுத்த முதலில் மனிதனுக்குள் மனிதம் பக்குவம் பெற வேண்டும்.

மனோபக்குவம் அடையாத வரையில் மனிதன் உருவத்தால் மட்டுமன்றி உள்ளத்தாலும் மனிதத்தின் மகத்துவத்தைத் தெரிந்து வாழாதவனானால் விஞ்ஞா னத்தின் எந்தத் தரவுகளும் மனித சமூகத்தை அழிவின் பாதையிலேயே வழி நடத்திச் செல்லும். இந்தக் கருத்திலேதான் விஞ்ஞானம் பின் தங்கி மதம் மேலோங்கி நிற்கிறது.

எனது வாதம் கூரிய வாள் தேவையற்றது என்பதல்ல. அதனைக் குணமுடையோன் கையில் கொடுக்கப்படாத வரை அதனால் அபாயம் என்பதே.

தாக்கவரும் கொடிய விலங்கை அழிப்பதற்குத் துவக்கின் தேவை அத்தியாவசியம் என்பதை ஒப்புக் கொள்கிறேன்.

ஆனால், அதுவே ஒரு முரடன் கையில் கொடுக்கப்பட்டால் சிறிய தகராற்றிற்காகத் தன் நண்பனையே நோக்கித் திருப்பி விடுவான்.

விஞ்ஞானம் தந்த அணுசக்தி எனும் அதி உன்னத தரவு பற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கருத்தை இங்கே தருகிறேன்.

"அணுசக்தியின் உதவிகொண்டு கிடைத்தற்கரிய நல்ல

ஆக்கங்களும் உருவாகலாம் பெருவாரியான அழிவுகளும் நிகழலாம்.

அப்பேற்பட்ட இந்த அணுசக்தி உலகிலேயே ஆக்கங்களை மட்டும் உருவாக்கப் பயன்படுமானால் அதன் பிறப்பிற்காக நாம் வந்தனம் பாடுவோம்.

அதுவே, நாட்டில் அழிவுகளை உருவாக்கும் ஆயுதம் ஆனால் அதன் பிறப்பிற்காக நாம் வருத்தப்படுவோம்" என்கிறார்.

புறஉடல் அழுக்கை அகற்றச் சவர்க்காரத்தைத் தயாரித்துக் கொடுத்த விஞ்ஞானத்தால் அகத்தைச் சலவை செய்ய எந்தத் தயாரிப்புக்களையும் தரமுடியாமல் போனது.

இங்கே தான் மதத்தின் அவசியம் மனிதனுக்குத் தேவையாகிறது.

உளவியல் ஆராய்ச்சியாளர்களினதும், விரிவுரையாளர் களினதும் மனோவள வாழ்க்கைத் தத்துவங்கள் பள்ளிப் பாடங்களாகவும் கேட்டுச் சுவைப்பனவாகவும் இருந்தனவே ஒழிய மனித உள்ளங்களில் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தியதாக இல்லை.

காரணம், மனிதன் புலன்களை அடக்கி ஆளும் வித்தையைக் கற்றுக் கொள்ளாதவரை எந்த உப தேசங்களும் அவனுக்குப் பலன் அளிக்கப் போவதில்லை. ஐம்பொறிகளின் வசப்படாமல் தன்னைத் தான் உணர்ந்து, அரிதினும் அரிதாம் இந்த மானிடப் பிறவியை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளும் சூட்சுமங்களை ஆன்மீக தத்துவங்களே போதித்து நிற்கின்றன.

இறைவழிபாட்டோடு பக்திரசம் கலந்த ஆன்மீக பானத்தை அருந்துவதன் மூலமே பிறவிப் பெருங் கடலை நீந்தி இறைவனடி சேரமுடியும் என்பதை விளக்கி நிற்பதே மதத்தின் நோக்கமாக உள்ளது.

மனித வாழ்க்கையின் சகல பாகங்களுக்கும் அதன் அத்தியாவசியங்களை அறிவித்து மனித இயந்திரத்தின் உற்பத்திகள் யாவும் மண்ணிற் பயனுறவும் மரணத் திற்குப் பின்னும் ஆத்மாவானது மோட்ச நிலை பெறவும் மனித நெறி கற்பிக்கும் சர்வகலாசாலை போன்று விளங்குவது இந்து மதமே என்று உரைப்பதில் தவறில்லை.

இதன் மூலம் மற்றய மதங்களைக் குறைத்துப் பார்ப்பது என் நோக்கம் அல்ல.

இந்து மதத்தின் சிறப்புக்களை விளக்க விழைகிறேன்.

ஒருவேளை இந்து மதத்தின் சிறப்புக்களை நான் விரித்துரைக்கும் வேளையில் இந்துமதம் இமயம் ஆனால் மற்றயவை சிறுமலைகள் ஆவது தவிர்க்க முடியாததாகி விடும்.

கூலிக்கு ஆட்பிடித்து ஒவ்வோர் வீட்டுக் கதவுகளையுந் தட்டிப் பலவந்தமாகத் திணித்து வளர்க்க வேண்டிய அவசியத்தை இந்து மதம் இன்று வரை பெற்றிருக்கவில்லை.

ஏனென்றால், இந்து மதம் மனித வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த மதம்.

இந்து மதம் வரம்புகளில் நின்று உபதேசம் செய்யவில்லை. கதிர் அறுக்கும் தொழிலாளியின் களைப்பகற்றி வியர்வையைத் துடைத்து விட்டு அவன் ஆத்மாவோடு அன்பாகப் பேசி மனித வாழ்க்கைக்குள் ஒரு வாழ்க்கையை நடாத்துவது இந்து மதம்.

சாக்கிரட்டீசை உலகிற்கு அறிமுகப்படுத்தும் "உன்னையே நீ அறிவாய்" என்ற தத்துவமும் அவன் இந்து மதத்திடம் கடன் வாங்கிக் கூறியதே.

இந்து மதத்தைச் சார்ந்தோர் இறைவனைக் கடவுள் என்றே அழைப்பர். இங்கே தான் அந்த ஆழமான தத்துவம் புதைந்து கிடக்கிறது. கட......உள்(கடவுள்) இந்த ஜகத்தை நிஜம் என்றும் காயத்தை மெய்யென்றும் மயக்கத்தில் இருக்கும் மானிடனே!

முதலில் இந்தப் புறப்பந்தங்களை எல்லாம் கட......பின், உனக்கு உள்ளே உன்னை யார் என்று நீ அறி.

அப்போது உடலும் நானில்லை, மனமும் நானில்லை, இந்திரியங்களும் நானில்லை இறுதியாக, பிரமம் நானே என்று நீ அறிந்து பாவம் செய்யாதிருப்பாய் என்பதையே விளக்கமாகக் கொண்டு கடவுள் எனும் பதப் பிரயோகம் இந்துக்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இறைவன் எங்கும் நிறைந்தவன் என்கிறது இந்து மதம்.

மனிதனின் காட்சிகள் யாவும் கடவுளின் வடிவம், எங்கும் பாவம் நிகழாமல் தவிர்த்துக் கொள்ளவே இறைவன் பார்க்கும் இடமெல்லாம், நீண்டும் பொருள் எல்லாம் நிறைந்து நிற்கிறான் என்ற தத்துவத்தை இந்து மதம் போதித்தது.

அப்படியானால் சொரூபங்களில் கடவுளைக் கண்டு ஆலயந்தேடித் தரிசனம் செய்யும் வழக்கம் எதற்காக?

ஆ+லயம் "ஆ" என்பது ஏகாந்த நிலையையும் "லயம்" என்பது லயித்து நிற்றலையும் குறித்து விளக்கி நிற்கிறது.

மனிதன் என்பவன் சூழ்நிலையின் கைதி, புலன்களின் ஆசைகளைப் புடம்போட்டுப் பார்க்கும் பக்குவத்தை முழுமையாகப் பெற முடியாது தவிப்பவன்.

உதாரணமாக, நம் தேசத்தை விட்டுப் புலம் பெயர்ந்து, அந்நிய தேசத்திற்குள் தற்காலிகமாக நுழைந்த நம்மவர்கள் நம் தேச வழமைகளுக்கோ, தேகஆரோக்கியத்திற்கோ, ஆத்மாவின் தேவைகளுக்கோ முற்றிலும் ஒத்துவராத அந்நிய கலை கலாச்சாரங்களுக்குள் சுலபமாக விழுந்து விடுகிறார்கள். இது அவர்களின் தப்பு என்பதிலும் மனித மனங்களின் அமைப்பு அவ்வண்ணம் என அமைதியாக ஏற்று அந்த மனங்களுக்குப் பரிபக்குவ நிலையை அடையும் வழிகளைக் கற்றுக் கொடுக்கவே இந்துமதம் ஆலய வழிபாட்டினை அறிமுகம் செய்தது.

புறச்சிந்தனைகளில் இருந்து விடுபட்டு மனம் முழுநிர்வாணமாகி ஏகாந்த நிலையில் பிரம்மத்தையே நினைத்து லயித்திருக்க ஆலயம் என்னும் ஒதுக்கிடம் உதவி உடையதாய் இருந்தது.

மனிதனின் பிறப்போடு எப்படி இந்து மத தத்துவம் கலந்து நிற்கிறது என்பதைக் காண்போம்.

இந்து மதத்தின் மூலம், சிவன், சக்தி வடிவாக அமைந்தது.

சிவன் என்பது ஜீவன் அல்லது சீவன் என்றும் சக்தி என்பதை இயக்கம் என்றும் கொள்வோம்.

தாயின் கருவறையில் வைத்தே சீவனும், சக்தியும் அதாவது உயிரும் உயிர்ப்பின் வெளிப்பாடான இயக்கமும் இறைவனால் கொடுக்கப்படுகிறது.

மதம் கருவறைக்குள்ளேயே கலக்கப்பட்டு விடுகிறது.

கருவறையை விட்டு இந்தப் பிரபஞ்சத்திற்குள் வீழ்ந்த பின் சீவனும், சக்தியும் வாழ்க்கைக்கு அவசியம் என்பதனைத் துல்லியமாக விளக்கவே ஒரு தடவை சிவனும், சக்தியும் மோதிக் கொண்டார்கள்.

சிவன் இல்லையேல் சக்தி இல்லை, சக்தி இல்லையேல் சிவன் இல்லை.

இந்த மோதலின் இறுதிவிளைவாக ஒன்றை ஒன்று பகைத்து வாழ்தல் அரிது என்பது உணர்த்தப்படுகிறது. சிவனும் சக்தியும் சரி பாதி நம் உடலில் பங்கேற்றுக் குடியேறி உள்ளார்கள் என்பது புலனாக்கப்பட்டது.

சீவன் நர்த்தனம் உடலில் நின்று விட்டால் அதாவது, உயிர் உறங்கி விட்டால் இயக்கம் தானாக அடங்கி விடும். அதேபோல் உடலின் இயக்கம் அடங்கிவிட்டால் உயிரும் உறக்க நிலை எய்திவிடும்.

இப்படி, மனிதப் பிறப்பின் தத்துவத்தையே சிவன் + சக்தி மூலமாகக் கொண்டு தோற்றம் பெற்றது தான் இந்து மதம்.

ஆதி இந்துக்கள் இலிங்க வழிபாட்டைக் கைக் கொண்ட விளக்கத்தை ஆயுமிடத்து, இலிங்கம் ஆண்குறியாகவும் அதன் பீடம் பெண் குறியாகவும் அதன்மேல் சொரியப்படும் பாலாபிடேகம் இந்தப் பிரபஞ்சத்தில் இறைவனின் குழந்தைகளாக மனித இனத்தைத் தோற்றுவிக்கும் அமிர்த விந்தாகவும் விளக்கம் தருவதைக் காணலாம். இது காட்டுமிராண்டியாய் இருந்த மனிதனுக்குக் கலவியின் முக்கியத்துவத்தை விளக்குவதாகவுள்ளது.

கலவி என்பது காமத்தின் தேவையை நிறைவு செய்வதற்காக அல்ல. மண்ணில் ஜீவாத்மாவின் படைப்புக்களைப் பரமாத்மா, உங்கள் கலவிகளைக் காரணமாகக் கொண்டே நிறைவேற்றி வருகிறார். எனவே கலவி புனிதமானது. அதில் பாவங்கள் கலவாதிருக்க வேண்டும் என்று உணர்த்தி இந்து மதம் மனித வாழ்வோடு, தான் இரண்டறக் கலந்து நிற்கிறது.

இந்து மதம் இயற்கையின் படைப்புக்களை அர்த்தப்படுத்தித் தழுவிக் கொண்ட மதம்.

மாரியைப் போற்றுதலும், அக்கினியையும், வாயுவையும் பகவான் என்று ஏத்துதலும், சூரியனை வணங்குதலும் இப்படி இந்தப் பிரபஞ்சத்தின் இயக்கத்தின் மூல கர்த்தாக்களை நவீன விஞ்ஞானம் இன்று கண்டு பிடித்துச் சொல்லுவதற்கு முன்னரே இந்துமதம் எடுத்துரைத்து வணக்கம் செலுத்தியது.

இந்துக்கள் மத்தியில் சூரிய வழிபாடு "இருக்" வேத காலத்திற்கு முன்னரே தோன்றிவிட்டது. இந்த உலகம் சரீரம் ஆனால் சூரியனே ஆத்மா என வேதங்கள் போற்றுகின்றன.

இந்து மதம் இறைவன் படைப்பில் எல்லோரும் சரி நிகர் என்ற சமத்துவத்தைப் போதிக்கிறது.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பர் ஆகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே"

இறையன்போடு புசித்து உருசிபார்த்து மாமிசத்தைப் படைத்த கண்ணப்பனையும் கனிவோடு ஏற்றுக் கொண்டது இந்து மதம்.

இந்து மதம் அறிந்தவர், அறியாதவர், பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடுகளைக் கடந்து நிற்கிறது. இதையே தாயுமானவர்:-

"அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது எனும் பெரிய
ஆப்தர்மொழி ஒன்று கண்டால்,
அறிவுஆவது ஏது; சில அறியாமை ஏது; இவை
அறிந்தார்கள் அறியார்கள் ஆர்?

எவர் சிறியர் ; எவர் பெரியர் ; எவர் உறவர் ; எவர் பகைஞர் ;
யாதும் உனை அன்றி உண்டோ?
இகபரம் இரண்டினிலும் உயிரினுக்கு உயிர் ஆகி
எங்கும் நிறைகின்ற பொருளே"

என இறைவனின் நோக்கில் மனிதம் சமத்துவமே என்று விளக்குகிறார்.

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் மயக்கத்தில் நிலையற்ற உலகப் பொருட்களை நம்பி, சிற்றின்பச் சேற்றில் வீழ்ந்து பாவத்தில் கிடக்கும் ஜீவாத்மாவிற்கு பரமாத்மாவின் தன்மையைப் புரியவைத்து இறைவனைச் சேர்ந்துகாணும் பேரின்ப நிலைக்கு இந்துமத வேதங்கள் ஆதாரமாக நிற்கின்றன.

இன்னும் இந்துமதமேன்மைகளைப் பறைசாற்றி நிற்கும், தேவாரம், திருமந்திரம் போன்ற திருமுறை அடக்க நூல்களும் புராணங்களும் ஆழ்வார்கள் அருளிய திவ்விய பிரபந்தங்களும் சித்தர்களின் பகுத்தறிவுத் தத்துவங்களும் சாற்றுகின்ற பக்தி இலக்கியப் பெருங்கடலுக்குள் நான் மூழ்கி எடுத்து வந்த முத்தெல்லாம் இங்கே பதிப்பதற்குப் பக்கங்கள் பலநூறு வேண்டும். ஆதலால், காலங்கள் கைகொடுத்தால் அதுவும் இறைவனுக்குச் சித்தமானால் இந்துமத உயர்வுகளை இந்த மனம் பாடிக் கொண்டே இருக்கும்.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

மருந்து பாதி, மனநம்பிக்கை பாதி. பிரார்த்தனை பாதி, நம்பிக்கை பாதி. நம்பிக்கையோடு பிரார்த்தித்தால் விதியின் வேகம் குறைந்து விட்டதாகவே உனக்குத் தோன்றும்.

பொய்யான இந்தக் காயத்தைக் காப்பாற்றப் பொய் சொல்லாதே! திருடாதே! பிறரை ஏமாற்றாதே! உயிர் இறைவன் கொடுத்த கடன். உடல் இலவசமாகக் கொடுத்த பரிசு. தலை வழுக்கை விழுவதோ, ரோமம் நரைப்பதோ, பல் விழுவதோ இறைவன் நமக்குப் போடும் "ஞாபகக் கடிதம்".

வாழ்க்கை தேர்போலச் சென்று நாய் போலத் திரும்பும்.

சிவலிங்கத்தின் உண்மை :— ஆத்மஜோதியில் அருட்சோதி சூழ, சிவஜோதி விளங்குகின்றது.
வட்டமாகிய கல் — ஆத்மஜோதி
சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார் — அருட்ஜோதி
மேல் நோக்கிய லிங்கம் — சிவஜோதி
ஜோதியுள், ஜோதியுள், ஜோதி.

— இராமலிங்க வள்ளலார்.

உன்னை நீ நிறுக்காதே, கற்றுவல்ல மற்றோரே மதிக்க வேண்டும்.

— வேதியன்.

இது மாறுமா?:- மக்களுள் தீயோரைக் கல்வெட்டில் செதுக்குகிறோம், நல்லோரை ஓடும் தண்ணீரில் எழுதுகிறோம்.

அதிகாரம் செயமுன்பு கீழ்ப்படியக் கற்றுக் கொள்.

— ஸாலான்.

# சிவமும் சக்தியும்

சி. கனகலிங்கம், பீ. ஏ.

"ஏகம் சத்"; "ஓம் தத் சத்" இவைகள் வேத வாக்கியங்கள். மெய்ப்பொருள் ஒன்றே; பிரணவ சொரூபியாகிய அம்மெய்ப்பொருள் ஒன்றே நிலையானது, என்பவை இவற்றின் கருத்துக்கள். எல்லாம்வல்ல முழு முதலாகிய இம்மெய்ப்பொருளையே, நாம் சிவம் என்றும் சிவன் என்றும் சிவபிரான் என்றும் குறிப்பிட்டு வணங்குகின்றோம். சிவனை வழிபடுவதால் எமது சமயம் சைவ சமயம் என்று அழைக்கப்படுகின்றது. அது இந்துசமயம் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

எமது சமயத்தின் ஆரம்பம் எப்பொழுது என்பது எவராலும் அறுதியிட முடியாது இருக்கின்றது. கி.மு. 5000ம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்த சிந்து வெளி நாகரிக மக்கள் சிவ வழிபாடுடையவர்களாக இருந்திருக்கின்றனர். இந்த உண்மை சிந்து வெளிப்பள்ளத்தாக்கில் அகழ்வு ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஜோன் மார்சல், வீலர் போன்ற அறிஞர்களது உறுதியான முடிவு. இம்முடிவு எமது சமயத்தின் தொன்மையினையே எடுத்துக் காட்டுகின்றது. மேலும், காலத்தால் முற்பட்ட எமது பண்டைய இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களிலும், ஆங்காங்கே சிவனைக் குறிக்கும் கூற்றுக்கள் இடம் பெறுகின்றன. இக்கூற்றுக்களும் எமது சமயத்தின் தொன்மையைச் சுட்டி நிற்கும் ஆதாரங்களாகும்.

" பணியிய ரத்தை நின் குடையே முனிவா
முக்கட் செல்வர் நகர் வலஞ் செலற்கே"

என்ற புறநானூற்று அடிகள் ஓர் உதாரணம். அரசன் ஒருவனை விளித்து, நினது வெண்கொற்றக் குடை முக்கட் பெருமானாகிய சிவனது திருக்கோயிலை வலம் வரும் போது பணிவதாக என்று வேண்டுவதனையே இவ்வடிகள் கொண்டுள்ளன.

எல்லாம்வல்ல மெய்ப்பொருளாகிய இறைவனின் உருவம் இத்தகையது; குணங்கள் இத்தன்மையன; நிறம் இப்படிப்பட்டது என்பன போன்றவற்றை எவராலும் குறிப்பிட முடியாது. இறைவன் எல்லாம் அறிபவர், எங்கும் நிறைந்தவர், எங்கள் மனம், வாக்கிற்கு அப்பாற்பட்டவர். அவர் அளவற்ற வல்லமையுடையவர். அவர் அளவற்ற சக்தியுடையவர். இச்சக்தியை பராசக்தி (பரா = அளவற்ற) திருவருட் சக்தி, ஆதிசக்தி என்றெல்லாம் கூறுவர். இச்சக்தியினாலேயே எம் பெருமான் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் ஆகிய கிருத்தியங்களைச் செய்கின்றார். இறைவனது இப்பல்வேறுபட்ட கிருத்தியங்கள் அதாவது செயற்பாடுகள் காரணமாகத் தத்துவம் உணர்ந்த ஞானிகளும், அருளாளர்களும் இறைவனைப் பல்வேறு இடங்களில் பல்வேறு வகைகளில் பல்வேறு நாமங்களில் அழைத்துள்ளனர். ஆனால் இறைவன் ஒருவனே.

இது எவ்வாறென்றால் ஒருவருடைய தந்தையார் (அப்பா) இன்னொருவருக்குக் கணவராகிறார், இன்னொருவருக்கு மகனாகிறார், இன்னொருவருக்குச் சகோதரன் ஆகின்றார். மற்றும் ஒருவருக்கு ஆசிரியன் ஆகின்றார். இப்படியாக அயலவனாக நண்பனாக எத்தனையோ முறைகளில் மாறுகின்றார். ஆனால் அவர் ஒருவர்தான். இவ்வாறே இறைவனும் பல்வேறு நாமங்கள் சூட்டி அழைக்கப்படுகின்றார். இதனை வேதம் "ஏகம் சத் விப்ரா பஹீதா வதந்தி" என்று மிக அழகாகக் கூறுகின்றது. ஒப்பற்ற மெய்ப்பொருள் ஒன்றே: உண்மையை உணர்ந்தவர்களால் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றது என்பதே இதன் பொருள். இதனையே ஞானசம்பந்தப்பெருமான் பல பல வேடம் தாங்கும் பரன் என்றார்; மாணிக்கவாசக சுவாமிகள் "ஏகன் அநேகன்" எனப் பாடி உருகினார்.

இறைவன் அளவற்ற சக்தியுடையவன். அவரது சக்தியை அவரிடமிருந்து வேறுபடுத்த முடியாது. எவ்வாறு நெருப்பில் இருந்து சூட்டினை வேறுபடுத்திக் கூறமுடியாதோ அவ்வாறே இறைவன் வேறு, சக்தி வேறு என்று கூறமுடியாது. இறைவனே சக்தி; சக்தியே சிவம். சிவமாகிய பரம்பொருள் சிவசக்தி ஆகின்றது. பரம்பொருள் கருணையே வடிவானது. கருணையே வடிவான பரம்பொருளைக் கருணையே வடிவான அன்னையாகக் காண்கின்றோம். அப்பனிலும் கருணை மிக்கவள் அல்லவா அன்னை.

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"
"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"
"தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய்"

என்ற அருட்பாடல் அடிகள் இறைவனை அன்னை

யாக வெளிப்படுத்துகின்றன.

"அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ"

என்ற திருத்தாண்டக அடிகள் ஒருபடிமேலே செல்கின்றன.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே"

என்ற அபிராமிப்பட்டரது அடிகள் இறைவனது முத்தொழில்களையுமே சக்தியின் மேல் ஏற்றி வைக்கின்றது.

இவ்வாறு பரம்பொருளைச் சக்தியாகக் கண்டு வழிபடும் மரபு உயரிய மனித நாகரிகத்தின் செயற்பாடென அறிஞர்கள் கொள்கின்றனர். நாகரிகம் அடைந்த மக்கள் எனக் கருதப்படும் பண்டைய கிரேக்கர், உரோமர்களிடையே இம்மரபு விளங்கியமையைக் காண முடிகின்றது. பண்டைய உரோமர் தமது முக்கிய தெய்வத்தை JOVE என்று அழைத்தனர். அதே வேளை JOVE இன் சக்தியாக JUNO என்னும் பெண் தெய்வத்தை அழைத்தனர்.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

வெண்ணெய் எடுக்க வேண்டுமானால் சூரிய உதயத்திற்கு முன்னமேயே கடைய வேண்டும். பகல் வேளையிலே கடைந்தால் வெண்ணெய் நன்றாய்ச் சேராது. அதுபோல சிறுவயதிலேயே ஆன்மிக நெறி நின்று மனத்தைக் கடவுளிடம் செலுத்துபவர்களே இறைக்காட்சி பெறுவர்.

வட இந்தியப் பெண்கள் ஒன்றின்மேல் ஒன்றாக நாலைந்து தண்ணீர்க் குடங்களைத் தலைமேல் வைத்து நடந்து போகும் பொழுது உடன் போகிற பெண்களோடு தங்களுக்குள்ள இன்ப துன்பங்களைப் பற்றிப் பேசுவார்கள். ஆனால் அதே சமயத்தில் அவர்களது மனம் குடங்களின் மீதே நிலைத்திருக்கும். அவ்வண்ணமே நன்னெறியில் செல்லும் மனிதனும் தன்னுடைய சிந்தையை எப்பொழுதும் நிலைதவறாது உண்மை வழியிலே நிறுத்த வேண்டும்.

<u>ஜீவன் முக்தன் உலகத்தில் எவ்வாறு வாழ்கிறான்:-</u> மீன் கொத்திப் பறவை நீருக்குள் முழுகுகிறது. ஆனால் அதன் இறகுகளைத் தண்ணீர் நனைக்காது. அது தன் சிறகுகளை ஒருமுறை உதறிவிட்டால் அதில் நீர் ஒட்டிக் கொண்டிருந்தாலுங் கூடச் சிதறி விடுகின்றன. மீன் கொத்திப் பறவையைப் போல மனம் உலகியலில் ஒட்டிக் கொள்ளாமல் அவன் வாழ்கிறான்.

— குருதேவர் வாக்கியம் — பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேசம்.

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை — உபாயம்
இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்

— நல்வழி

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு

— திருக்குறள்

# சைவ விரதங்களும் விழாக்களும்

திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம்
மலேசியா

"*அரிது அரிது மானிடராதலரிது*" என்பது ஔவைப் பாட்டியின் அமுதமொழி. பெறுதற்கரிய மானிடப் பிறவியை, மேலும் சுடர்விடு தீபம் போன்று உயரிய பிறவியாக்குபவை ஒழுக்கம், ஆசாரம், பண்பாடு ஆகிய குணங்களாம். இவற்றை உறுதியோடு கடைப் பிடிக்க வழிவகுத்து, சீரிய வாழ்க்கை வாழ வழி காட்டிகளாக விளங்குபவை, விரதங்களும் விழாக்களும் ஆகும்.

விரதம் என்ற சொல்லுக்கு நியமத்துடன் சங்கல்பம் செய்து கொண்டு அனுட்டிக்கும் கருமம் என்று பொருள். இதனை நோன்பு அல்லது தவம் என்றும் கூறலாம். விரதம் என்றால் என்ன என்பது ஒரு கேள்வி. இதற்கு சைவத்திரு ஆறுமுக நாவலர் பெருமான் கூறும் விளக்கம்:-"*நமது மனம், பொறி வழி போகாது நிறுத்தற் பொருட்டு, உணவைச் சுருக்கி, மனம் வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்*" என்பதே. உண்மைதான். அன்ன சுரணை கூடினால் அட்சரசுரணை குறையும் என்பது ஒரு பழமொழி. சாப்பாட்டுப் பிரியனுக்குக் கல்வியில் மனம் லயிக்காதது போன்றே உணவு உண்டபின் புலன்களை அடக்கி இறை வழிபாடு செய்வதும் இயலாத காரியம். நா அடங்கினால் உடல் கட்டுப்பட்டு உள்ளம் அமைதியை, இறை உணர்வைப் பெறும். இதனால் தான் விரதத்திற்கு இலக்கணம் கூறவந்த பெரியோர்கள் "*தனித்திரு — பசித்திரு — விழித்திரு*" என வகுத்துள்ளார்கள். விரதமிருப்பதனால் கருவி கரணங்களைச் சிறிதளவேனும் உள்முகமாகத் திருப்பும் வாய்ப்பு மனிதனுக்குக் கிடைக்கிறது. ஆத்மீக வளர்ச்சியின் பெருமை, விரதங்களையும் விழாக்களையும் முறையாகக் கடைப்பிடிப்பதிலேதான் தங்கியுள்ளது.

பொதுவாக விரதம் கடைப்பிடிப்பவர்கள் யாவரும் கைக்கொள்ளவேண்டிய சில விதிமுறைகள் உண்டு. விரத தினத்திலும் அதற்கு முதல் தினமும் மறுதினமும் மாமிச உணவைத் தவிர்க்கவேண்டும். "*நோன்பென்பது கொன்று தின்னாமை*" என்பது ஔவைப்பாட்டி விரதத் திற்குக் கூறும் வரைவிலக்கணம். இன்னும், அதிகாலை யில் எழுதல், நீராடித் தூய வஸ்திரம் தரித்தல், விபூதி உருத்திராக்கம் முதலிய சமயச்சின்னங்களை அணிதல், இல்லத்தில் இறைவழிபாடு செய்தல் ஆகியவையும் விரதமெடுப்போர் கவனிக்க வேண்டிய கட்டுப்பாடு களாகும். திருமணமானவர்கள் விரத நாட்களில் குடும்ப உறவைத் தவிர்க்க வேண்டியதும் அவசியம். உபவாசமிருப்போர் முதல் நாளிலும் அடுத்த நாளிலும் ஒரு நேரமே உணவு உண்டு விரதத்தை மேற்கொள்ள வேண்டும். விரத காலங்களில் அடியார்களுக்கு விருந்தளித்தல், தான தருமம் செய்தல் மிகவும் நல்லது.

விரதங்களுள் சில நித்திய விரதங்கள் என்றும் வேறு சில காமிய விரதங்கள் என்றும் கூறப்படுகின்றன. ஒருவிதமான பலனையும் கருதாமல் விரதங்களைத் தொடர்ந்து கடைப்பிடித்தல் நித்திய விரதங்களாகும். காமிய விரதங்கள் என்பது ஒரு தேவையை முன்னிட்டு, தமது தேவைகளை இறைவன் முன்வைத்துக் குறிப்பிட்ட கால எல்லைவரை கடைப்பிடித்து, அதன்பின் முறைப்படி உத்தியாபனம் செய்பவையாகும். இவை தவிரப் "*பிதுர் விரதங்கள்*" என்ற பெயரில், இறந்தவர்களுக்காகக் கடைப்பிடிக்கும் விரதங்களும் உள்ளன.

சைவ விரதங்களை நம் முன்னவர்கள், பல பிரிவு களாக வகுத்துள்ளனர். அவையாவன, சிவவிரதம், விநாயக விரதம், தேவி விரதம், சுப்பிரமணிய விரதம் என்பன. இவை தவிர வார விரதங்கள், திதி விரதங்கள், நட்சத்திர விரதங்கள் என்றும் பல விரதங்கள் அநுஷ்டிக்கப் பெற்று வருகின்றன. இனி, முக்கியமான விரதங்கள் சிலவற்றைச் சிந்திப்போம்.

## I. விநாயக விரதம்

ஒரு கருமத்தைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்பு, குறிப்பிட்ட கருமம் இடையூறின்றி நிறைவேறுவ தற்கு, விநாயகர் வழிபாடு மிகவும் முக்கியமானது. சிறப்பாகக் கூற வேண்டுமானால் வாழ்க்கையில் தடைகள் ஏற்படாதிருக்கவும் எடுத்துக்கொண்ட பணி வெற்றி பெறவும் விநாயக வழிபாடு, விநாயக விரதம் அவசியமாகிறது. விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களாவன: வாரந்தோறும் கடைப்பிடிக்கும் வெள்ளிக்கிழமை விரதம், விநாயக சதுர்த்தி, மாத சதுர்த்தி, விநாயக சஷ்டி என்பன.

*1. வெள்ளிக்கிழமை விரதம்:* வாழ்க்கையில் வெற்றி பெற, சித்தி விநாயகரை வேண்டி, பிரதி வெள்ளிக்கிழமைகளிலும் எடுத்துக் கொள்ளும் விரதமிது. இவ்விரதத்தை முதன் முதலில் வைகாசி

மாதத்தில், வளர்பிறையில் வரும் வெள்ளிக்கிழமையில் ஆரம்பிக்கவேண்டும். முடிந்தால் உபவாசம் இருக்கலாம். இயலாதவர்கள் பால் பழம் அருந்தலாம்; அல்லது ஒரு நேர உணவு உண்டு விரதம் ஏற்கலாம்.

*2. விநாயக சதுர்த்தி:* இது விநாயக விரதங்களுள் மிகவும் சிறப்புடையது. சைவர்கள் மட்டுமன்றி எல்லா இந்துக்களுமே இவ்விரதத்தை விரும்பிக் கடைப்பிடிப்பார்கள். ஆவணி மாதத்தில் சுக்கில பட்ச சதுர்த்தியில், நடுப்பகலில் சதுர்த்தி இருக்கும் தினத்தில், இவ்விரதம் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

விநாயக சதுர்த்தி விரதமேற்போர், அதிகாலையில் துயிலெழுந்து, நீராடி, அன்றாடக் கடமைகளை முடித்தபின், பிரார்த்தனை, வழிபாடு, ஆலயதரிசனம் ஆகியவற்றில் ஈடுபடவேண்டும். அன்றைய தினம், பகலில் ஒரு நேர உணவு உட்கொண்டு, இரவில் பால், பழம் அருந்தி விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். விநாயகருக்குரிய சிறப்பான நிவேதனங்கள் தேங்காய், அப்பம், மோதகம், அவல், பொரி, கடலை, எள்ளுருண்டை, இளநீர் ஆகியன. பழங்களுள், நாவல் பழம், விளாம்பழம், மாம்பழம் ஆகியவை விசேஷமானவை. விநாயக சதுர்த்திப் பூசையில் மேலுமொரு முக்கிய அம்சம், நிவேதனம், அர்ச்சனைப் பொருள் ஆகியவை எண்ணிக்கையில் 21 ஆக இருக்க வேண்டும். உதாரணமாக 21 அறுகம்புல், 21 புஷ்பம் ஆகியவை.

இல்லத்தில் பூசை செய்ய வசதி இல்லாதவர்கள் அபிஷேகப் பொருள்களை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று, சமர்ப்பித்து, ஆலயத்தில் பெருமானுடைய அபிஷேகம், பூசை, ஆராதனை ஆகியவற்றில் கலந்து வழிபாடியற்றலாம்.

இவ்விரதம் கடைப்பிடிப்போர், மனோவலிமை, காரியசித்தி, அடாப்பழி நீங்குதல், நல்ல சந்ததி, செல்வம் ஆகியவற்றைப் பெற்றுப் புகழோடு வாழ்வர். சதுர்த்தித் தினங்களில் தேவர்கள் கூட விரதம் கடைப்பிடித்துச் சாபநீக்கம் பெற்றனர். இவ்விர தத்தை 12 வருடங்கள் தொடர்ந்து கடைப்பிடித்துப் பின் விநாயகப் பெருமானுக்குச் சிறப்பாக அபிஷேகம் ஆராதனை வழிபாடு செய்து நோன்பை நிறைவு செய்யலாம்.

*3. மாத சதுர்த்தி:* இவ்விரதம், முழுமுதற் பொருளான விநாயகப் பெருமானை வழிபட்டு ஒவ்வொரு மாதத்திலும் வருகின்ற வளர்பிறைச் சதுர்த்தியில் கடைப்பிடிப்பதாகும். இந்நாளில் விநாயக வழிபாடு செய்து 21 அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்து பகல் ஒருபொழுது உணவு உட்கொண்டு இரவில் பால் பழம் அல்லது பலகாரம் உண்டு விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

*4. விநாயக சஷ்டி விரதம்:* இதனைப் பெருங்கதை விரதம், பிள்ளையார் விரதம், பிள்ளையார் கதை என்று கூறுவார்கள். கார்த்திகை மாதத்துக் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக மார்கழி மாதச் சஷ்டியிறுதி யாகவுள்ள இருபத்தொரு தினங்களும் கடைப்பிடிக்கப் பெறும் விரதம் இது.

முன்னொரு காலத்தில் விஷ்ணு பொய்ச்சாட்சி சொல்லிய குற்றத்திற்காக அவரைக் குருட்டுப் பாம்பாகும் படி சபித்தார் உமையம்மை. அவர் உடனே பாம்பாக மாறி ஓர் ஆலமரப் பொந்தினுள்ளிருந்து விநாயகப் பெருமானை வேண்டித் தவம் செய்தார். விநாயகக் கடவுள் அச்சாபத்தை நீக்கி அருள் செய்தார். இச்சாபம் நீங்கப் பெற்ற தினமாகிய மார்கழி மாத வளர்பிறைச் சஷ்டி நாளே விநாயக சஷ்டியாகும். இந்தச் சஷ்டி தினத்தை இறுதியாகக் கொண்டு, 21 நாட்கள் கடைப்பிடிக்கும் விரதத்தை விநாயகப் பெருங்கதை விரதமென அழைப்பர்.

இவ்விரத ஆரம்ப நாளில், இருபத்தோரிழையிலான நூல் காப்பினை அந்தணர் மூலம் ஆண்கள் வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் கட்டிக் கொள்ள வேண்டும். இருபது நாட்களும் ஒரு நேர உணவுண்டு, இறுதி நாளில் உபவாசமிருந்து, அடுத்த நாள் பாரணை பண்ண வேண்டும். தினமும் விநாயகப் பெருமானுக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை என்பன நிவேதனம் செய்து, விநாயகர் சரிதத்தைக் கூறும் பெருங்கதை, விநாயகர் புராணம் முதலியவற்றைப் படிப்பதும் கேட்பதும் மிகவும் அவசியம். இன்னும் விநாயகர் அகவல், விநாயகர்கவசம் போன்றவற்றைப் பாராயணம் செய்து வழிபாடு செய்ய வேண்டும்.

சைவமக்களுக்கு இக்காலம் மிகவும் புனிதமான காலமாக இருப்பதால் இவ்விரத காலங்களில் அதிகாலையில் நீராடி ஆசாரசீலராக ஆலயம் சென்று இறைவழிபாடு செய்வது நற்பலனைத் தரும். முற்காலத்தில் பெரிய முனிவர்கள், அந்தணர்கள், அரசர்கள் ஆகியோர் இவ்விரதத்தை நோற்று விநாயகக் கடவுளின் பேரருள் பெற்று விளங்கினர் என்பதை விநாயகர் புராணம் கூறுகின்றது.

## II. சிவ விரதம்

சிவவிரதங்களில் சிறப்பாகப் பத்து விரதங்களைப் பற்றிய விபரங்கள் கீழே விளக்கப்படுகின்றன.

*1. சோமவாரவிரதம்:* சோமவாரம் என்பது திங்கட் கிழமை. சிவபெருமானுக்கு மிகவும் விருப்பமான நாள் இது. சோமன் என்றால் சந்திரன் என்று பொருள். சந்திரன் இவ்விரதத்தை முறையோடு

கடைப்பிடித்துச் சிவபெருமானின் சடாபாரத்தின்கண் இருக்கும் பேற்றைப் பெற்றான். தவிர, தன்னுடைய பெயரோடு கூடிய இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பவர்கள் பெரும் செல்வம், புத்திரப் பேறு, நற்கதி ஆகியவற்றை அடைய வேண்டும் என்று சிவபெருமானிடம் வரம் பெற்றான் என்பது புராண வரலாறு.

இவ்விரதத்தை ஏற்பவர்கள் கார்த்திகை மாதம் முதலாம் திங்களில் ஆரம்பித்து, ஒவ்வொரு திங்கள் தோறும் அநுட்டிக்க வேண்டும். இத்தினத்தில் அதிகாலையில் நீராடி அன்றாடக் கடமைகளை முடித்து ஆலய தரிசனம் செய்தல் வேண்டும். உபவாசம் இருத்தல் மிகவும் முக்கியம். இயலாதவர்கள் இரவு ஒருபொழுது ஏற்கலாம். அதிகமானவர்கள் பகல் முழுவதும் உபவாசமிருந்து இரவு இல்லத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்து உணவு உட்கொண்டு, விரதத்தை நிறைவு செய்கின்றனர்.

சிவாலயங்களில் விசேட தீபமேற்றுதல், அபிஷேகம், ஆராதனை, வில்வத்தினால் அர்ச்சனை செய்தல், மாவிளக்கிடுதல் ஆகியவை புண்ணியச் செயல்களாகும். இத்தினத்தில் அந்தணத் தம்பதியினரைப் பார்வதி பரமேஸ்வரனாகப் பாவனை செய்து அவர்களுக்கு இயன்ற தானம் வழங்கி உபசரிப்பதும் நன்று. இவ்விரதத்தைப் பன்னிரண்டு வருடமாயினும் கடைப்பிடித்தபின் நிறைவு செய்யலாம். வாரந்தோறும் விரதமேற்க முடியாதவர்கள், கார்த்திகைச் சோமவாரம் மாத்திரம் நோன்பிருக்கலாம். இவ்விரதத்தை முறையாகக் கடைப்பிடித்து, சிவனை வழிபாடு செய்வோர், வினைகள் நீங்கிப் பேறெய்துவர்.

*2. திருவாதிரை விரதம்:* இவ்விரதம் மார்கழி மாதத்திலே வரும் திருவெம்பாவையின் இறுதி நாளாகிய மார்கழித் திருவாதிரையில் கடைப்பிடிக் கப்படும் விரதமாகும். அன்று சிறப்பாகக் கூத்தப் பெருமானுக்கு அதிகாலையில், உதயத்திற்கு முன் ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். ஆருத்திரா என்பதன் பொருள் திருவாதிரை நட்சத்திரம் ஆகும். சிதம்பரத்திலே கூத்தப் பொருமானை, மார்கழித் திருவாதிரை நாளில் கண்டு தரிசிப்பது பேரின்பம் பயப்பதாகும். இப்புண்ணிய நாளில் உபவாசமிருப்பது மிக நன்று. இயலாதவர்கள் ஒரு நேர உணவை உட்கொண்டு தானதருமம் செய்யலாம்.

இவ்விரத நாளில் சிறப்பு நிவேதனமாகக் களி செய்து வைப்பார்கள். களி என்றால் மகிழ்ச்சி என்றும் பொருள் உண்டு. சிவபெருமானுக்கு மகிழ்வூட்டும் அமுதமாகக் களி அமைந்து விடுகிறது. இத்திருவாதிரை விரத நாளைப் புகழ்ந்து,

"*ஊர்திரை வேலை யுலாவும் உயர்மயிலைக்*
*கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்*
*கார்தரு சோலைக் கபாலீச் சரம் அமர்ந்தான்*
*ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்*"

எனத் திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியுள் ளார்.

*3. உமாமகேஸ்வர விரதம்:* கார்த்திகை மாதப் பௌர்ணமி தினத்தில் கடைப்பிடிக்கப்படும் விரதமிது. உமாமகேஸ்வர மூர்த்தம் மிகவும் மேலான மூர்த்த மாகும். உலக வாழ்க்கைச் சிறப்புக்கும் மேம்பாட்டிற் கும் இவ்விரதம் மிகவும் பொருத்தமானது. அம்மையுடன் அப்பனையும் சேர்த்துப் பூசித்து, இவ்விரதத்தை முறையாகக் கடைப்பிடிப்பவர்களுக்கு அஷ்ட ஐஸ்வரியம், மதிப்பு, உயர் பதவி யாவும் கைகூடும்.

இத்தினத்தில் அன்றாடக் கடமைகளை முடித்த பின், உமாமகேஸ்வர கும்பங்களை அமைத்து அபிஷேகம் செய்து வஸ்திரமணிவித்து அலங்காரம் செய்து அமுது படைத்து ஆராதனை செய்து வணங்கிய தும் சிவாலய தரிசனம் செய்து ஒரு பொழுதுண்டு விரதமேற்க வேண்டும். மறுநாட் காலை முதல்நாள் அமைத்த கும்பவிம்பத்தை வணங்கி அவற்றைத் தானமாக அந்தணருக்கு அளிக்க வேண்டும். இங்ஙனம் இவ்விரதத்தைப் பதினைந்து வருடம் தொடர்ந்து கடைப்பிடித்துப் பின் உரிய முறைப்படி பூர்த்தி செய்யும்போது தம்பதி பூசை செய்து நிறைவேற்றுவது நற்பலனைத் தரும்.

*4. சிவராத்திரி விரதம்:* சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவர்களுக்கு மிக முக்கியமான விரதம் சிவராத்திரியாகும். உலக நிலையாமையை உணர்ந்து இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தருகின்ற, ஆன்மாவை ஈடேற்று கின்ற, மகாசிவராத்திரி விரதத்தைச் சைவர்கள் தவறாமல் கடைப்பிடிப்பது சாலச் சிறந்தது. சிவ ராத்திரி என்றால் சிவனுக்குரிய இராத்திரி எனப் பொருள்படும்.

மாசி மாதத்து அபரபட்சச் சதுர்த்தசியிலே சிவராத் திரி விரதம் மேற்கொள்ளப்படுகிறது. பகலில் திரயோத சியும் இரவில் சதுர்த்தசியும் இருக்குமேயானால் அந்நாள் மிகவும் சிறப்புடையது. பாரணையின் போதும் சதுர்த்தசி இருக்குமாயின் நன்று.

சிவராத்திரி இரவில் நான்கு ஜாமமும் சிவபூஜை சிவலிங்க வழிபாடு மிகவும் அவசியம். ஆலயங்களில் நான்கு ஜாமங்களிலும் சிறப்பாக அபிஷேகம், பூசை நடைபெறும். சிவராத்திரி விரதமிருப்போர் முதல்நாள் ஒரு பொழுதுணவுண்டு விரதநாளில் முறைப்படி

நித்திய கருமத்தை முடித்து உபவாசமிருந்து, இரவில் சிவாலயம் சென்று, இறைவனை வணங்கிப் பஞசாட்சர சபம் செய்து சிவநாம பஜனை ஆகியவற்றில் ஈடுபட்டிருந்து, மறுநாள் காலை, நீராடி ஆலயதரிசனம் செய்து காலை ஒன்பது மணிக்குள் பாரணை பண்ணுதல் வேண்டும். இயலாதவர்கள், லிங்கோற்பவ காலம் வரையிலாவது, அதாவது இரவு ஒரு மணிவரையிலாவது விழித்திருத்தல் நன்று.

இந்தச் சிவராத்திரி, *(1) நித்திய சிவராத்திரி (2) பட்ச சிவராத்திரி (3) மாத சிவராத்திரி (4) யோக சிவராத்திரி (5) மகா சிவராத்திரி* என்று ஐந்து வகைப்படும்.

மாசி மாதம் கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவு வேளையில் சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றினார். அன்றே மகா சிவராத்திரி என அழைக்கப்படுகிறது.

இறை வழிபாட்டிற்குத் தடையாயிருப்பவை ஊணும் உறக்கமுமாகும். "*கண்ணைத் துயின்றவமே காலத் தைப் போக்காதே*" எனப் பாடுகின்றார் மணிவாசகப் பெருமான். தூக்கத்தைத் துறந்து கண்ணுதற் பெருமானை வழிபாடு செய்வதற்கு உகந்தநாள் சிவராத்திரி.

அறிந்தோ அறியாமலோ, ஒருவன் சிவராத்திரியன்று விழித்திருந்து இறைவனைத் தொழுதால் புண்ணியப் பேறு கிட்டும். சிவராத்திரி நாளில் அறியாமலேயே உணவின்றி, விழித்திருந்து அந்நாளைக் கழித்த அங்குலன் என்ற வேடன் முத்தி பெற்றான் என்று புராணங்கள் கூறுகின்றன. எனவே கொடிய பாதகங் களையும் பழிகளையும் செய்தவர்களும் சிவராத்திரி விரதம் அநுட்டித்த பயனால் புண்ணிய லோகங்களை அடைவார்கள் என்பதை அங்குலன் என்ற வேடன் கதை நிரூபிக்கின்றது. வேடனுக்கே இக்கதி என்றால் உள்ளன்போடு, இறையுணர்வோடு முறையாக உபவாசமிருந்து விரதமநுட்டிப்பவர்கள் மேலான கதியடைவர் என்பதில் சந்தேகமில்லை. சிவராத்திரி விரதம் மற்றைய எல்லா விரதங்களிலும் மேன்மையானது. பல யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் இவ்விரதத்தை அநுட்டிப்பது ஈடேற்றம் விளைவிக்கும்.

இவ்விரதத்தைத் தொடர்ந்து இருபத்து நான்கு வருடங்கள், அல்லது பன்னிரண்டு வருடங்கள் கடைப்பிடித்தபின் விரதத்தை முறைப்படி நிறைவு செய்யலாம்.

*5. கேதாரீஸ்வரர் விரதம்:* கேதாரம் என்பது இமாலய பர்வதத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். நான்கு வேதங்களின் சிரம்போன்று சிறப்புடன் விளங்குவது. இவ்விரதத்தைக் கேதாரகௌரி விரதம் எனவும் கூறுவதால், இது சக்தி விரதங்களுள் ஒன்று எனச் சிலர் தவறாகக் கொள்கின்றனர். கேதாரேஸ்வரப் பெருமானை அத்தலத்து ஈஸ்வரியாகிய கேதாரகௌரி அம்பாள் வணங்கி மேற்கொண்ட விரதமாகையால் இவ்விரதத்திற்கு இப்பெயர் ஏற்பட்டுள்ளது. இது உண்மையில் சிவ விரதங்களில் ஒன்று.

புரட்டாசி மாதப் பூர்வபட்ச அட்டமித் திதியில் தொடங்கி, அமாவாசை வரையிலுள்ள இருபத்தொரு நாட்கள் இவ்விரதத்துக்குரிய நாட்களாகும். இருபத் தொரு நாட்களும் கடைப்பிடிக்க முடியாதவர்கள் இறுதி நாளாகிய ஐப்பசி மாதத்துக் கிருஷண பட்சத்துச் சதுர்த்தசித் திதியில் முறையாக விரத மநுட்டிக்கலாம்.

இத்தினத்தில் காலையில் நீராடி அன்றாடக் கடன் களை முடித்துப் பூரண உபவாசமிருக்க வேண்டும். இருபத்தோரிழைகள் கொண்ட பட்டு நூல் ஒன்றை முறுக்கி லிங்கம் அல்லது கும்பத்தின்மீது வைத்துப் பூசை முடிவில் தினம் ஒரு முடிச்சாக இருபத் தொரு நாட்கள் முடிந்து, கடைசி நாளில் பூஜை பிரார்த்தனை முடிந்தபின் இக்காப்புக் கயிற்றினைக் கையிலோ கழுத்திலோ அணிந்து கொண்டு விரதத்தை நிறைவு செய்யலாம். உபவாசமிருக்க இயலாதவர்கள் கேதாரேஸ்வரருக்கு நிவேதிக்கப்பெற்ற உப்பில்லாப் பலகாரத்தை உண்ணலாம். நிவேதிக்கும் பொருள்களான அதிரசம், சர்க்கரை உருண்டை, சந்தன உருண்டை, மஞ்சள் உருண்டை, வெற்றிலை பாக்கு என்பவற்றை ஒவ்வொன்றிலும் இருபத்தொரு எண்ணிக்கை வைத்து நிவேதனம் செய்ய வேண்டும். இன்னும் பழவகை, தேங்காய், ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பதால் கணவன் மனைவிக்கு இனிய இல்லற வாழ்வும் நன்மக்கட் பேறும் கன்னியர்க்குக் கண்ணிறைந்த கணவரும் அஷ்ட ஐஸ்வரியமும் கைகூடும்.

*6. கல்யாணசுந்தர விரதம்:( பங்குனி உத்திரம் )* சிவபெருமானைக் கல்யாண சுந்தரமூர்த்தியாக வழிபட்டுப் பங்குனி உத்திர நாளில் கடைப்பிடிக்கப் படும் விரதமிது. மதுரையில் மீனாட்சியம்மனைச் சுந்தரேசப்பெருமான் திருமணம் செய்த திருநாள் இதுவாகும்.

இவ்விரத நாளில் உபவாசமிருத்தல் மிக நன்று. இரவில் பழம் அல்லது பாயாசம் அருந்தலாம். இய

லாதவர்கள் மத்தியானம் ஒரு பொழுது உணவு உட்கொள்ளலாம். நீண்ட நாட்களாகத் திருமணம் ஆகாமல் தடைப்பட்டுள்ள ஆண் பெண் இரு பாலரும் இவ்விரதத்தை முறைப்படி கடைப்பிடித்தால் விரைவில் திருமணப் பேறு கிடைக்கும். மக்கட் பேறில்லாதோரும் கல்யாணசுந்தர விரதமேற்று மக்கட் பேறடையலாம்.

*7. சூலவிரதம்:* தைத்திங்களில் வரும் அமாவாசைத் தினத்தில், சூலாயுதத்தைத் தரித்த சிவபெருமானை, சூலாயுதப் பெருமானாக வழிபட்டு இவ்விரதம் நோற்கப்படுகிறது. கடைப்பிடிப்போர் நோய்பிணியின்றி, பகையின்றி நீண்ட ஆயுள் பெற்று வாழ்வதோடு இறுதியில் முத்தியின்பம் பெறுவர்.

*8. இடபவிரதம்:* இடபம், விடை, எருது என்பன ஒரு பொருட்சொற்கள். இடபம் சிவபெருமானுக்கு வாகனமாக அமைந்தமையால் இடபாரூடர் எனவும் அழைக்கப் பெறுகிறார். வைகாசி மாத வளர்பிறை அட்டமியில் சிவபெருமானை இடபாரூடராகத் தியானித்து நோற்கும் விரதமிது. பகலில் ஒருபொழுது உணவுண்டு விரதமிருப்பது முறை. இறை சிந்தனையோடு இடபவிரதமேற்போர் சகல செல்வங் களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வார்கள்.

*9. பிரதோஷ விரதம்:* பிரதோஷம் என்றால் மாலைப் பொழுது. இப்பிரதோஷ விரதம் முக்கியமாக மாலை நேரத்தில் கடைப்பிடித்து வழிபாடு செய்வதாகும். பிற்பகல் சுமார் நாலரை மணியிலிருந்து இரவு ஏழரை மணிவரையிலான மூன்று மணி நேரம் பிரதோஷகாலம் எனப்படும். இவ்வேளையில் சிவபெருமானை விசேஷமாக வழிபாடு செய்வதே இவ்விரதத்தின் முக்கிய நோக்கமாகும்.

கந்த புராணத்தில் இவ்விரதம் சிறப்பாகக் கூறப்படு கிறது. சிவவிரதங்களில் மிகவும் விசேஷமானது. அமாவாசை பௌர்ணமி இரண்டிற்கும் பிறகு வரும் பதின்மூன்றாவது நாளிலே இவ்விரதம் கடைப்பிடிக்க ப்படுகிறது. இவ்விரத நாளிலே வழக்கம் போல் அன் றாடக் கடமைகளை முடித்துப் பகல் முழுவதும் உணவு அருந்தாமலிருந்து மாலை நாலரை மணிக்குச் சிவாலயம் சென்று சிவதரிசனம் செய்து, பிரதோஷ பூசையைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்ய வேண்டும். இயன்றவர்கள் சுவாமி வழிபாட்டிற்கு அபிடேகத் திரவியங்கள், மலர்மாலை, அறுகம்புல்மாலை ஆகியவற்றைக் கொடுத்து உதவலாம். உபவாசமிருக்க இயலாதவர்கள் பிரதோஷ காலம் கழிந்தபின், இரவில் பால் பழம் உண்டு, மறுநாள் காலை பாரணை பண்ணலாம்.

பிரதோஷ காலத்தில் கோயிலில் வழிபாடு செய்வோர் கர்ப்பக்கிரகத்திலுள்ள சிவபெருமானை இடபதேவரின் இரு கொம்புகளுக்கிடையே கண்டு தரிசித்து வணங்க வேண்டும் என்பது விதி.

முன்னொரு நாள் திருப்பாற்கடலில் ஆலகாலவிஷம் தோன்றியபோது பரமசிவன் தேவர்கள் மீதும் சர்வலோக ஆன்மாக்கள் மீதும் கருணைகொண்டு அவ்விஷத்தை அருந்தித் தமது கண்டத்தில் நிறுத்தியருளினார். தேவர்கள் மீண்டும் பாற்கடலைக் கடைந்த போது அமிர்தம் தோன்றியது. அத்தருணம் அனைவரையும் மகிழ்விக்கும் வண்ணம் இறைவன் இடபதேவரின் கொம்புகளுக்கிடையில் நின்று திருநடனம் புரிந்தருளினார். இதனைக் கண்டு வணங்கிய தேவர்கள் வினைநீங்கப் பெற்றார்களாதலின் நாமும் அத்தினத்தில் இடப தேவரின் இரு கொம்புகளுக்கிடையே கண்டு பிரணவத்தோடு கூட அரகரவென்று சொல்லிச் சிவபெருமானை வணங்க வேண்டும்.

சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை என்ற நான்கு மாதங்களுள் ஒன்றில் சனிக்கிழமைகளில் பிர தோஷம் வரும் நாளாகப் பார்த்து இவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். ஒரு வருடகாலம் இந்தப் பிரதோஷ விரதத்தைக் கடைப்பிடித்த பின் நிறைவு செய்யலாம்.

இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பவர்களுக்குக் கடன், வறுமை, நோய், பயம், அவமிருத்து, மரணவே தனை, பாவம் ஆகியவை யாவும் நீங்கி முத்திப் பேறு சித்திக்கும் என்று சைவத்திரு ஆறுமுக நாவலர் அவர்கள் உரைத்துள்ளார்கள்.

*10. திருவெம்பாவை: (பாவை நோன்பு)* திருவெம் பாவை மார்கழித் திருவாதிரைக்கு முந்திய ஒன்பது தினங்களில் நடைபெற்று திருவாதிரை நாளோடு நிறைவு பெறும். இந்தப் பத்து நாட்களும் எல்லா ஆலயங்களிலும் சிறப்பாக அதிகாலையில் பூசை வழிபாடுகள் நடைபெறுவதோடு மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப் பெறும். தவிர மார்கழி மாதம் முழுவதுமே பனிக்குளிரையும் பாராமல், மிகவும் அதிகாலையில் எழுந்து நீராடி அருகிருக்கும் ஆலயங்களுக்குச் சென்று மணிவாசகரின் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி, ஆண்டாள் அருளிய திருப்பாவை முதலிய பாடல்களைப் பாடி இறைவனை வழிபாடு செய்வது வழக்கம். மார்கழி மாதம் தேவர்களுக்குப் புலர் காலைப் பொழுதாக விளங்குவதால் இம்மாதம் முழுவதுமே இறைவழி

பாட்டுக்கு உரியதாக ஓதுக்கப் பெற்றுள்ளது.

இவ்விரதம் ஆதிகாலத்திலிருந்தே சிறப்பாகப் பெண்களால் கடைப்பிடிக்கப்பெறும் ஒரு விரதமாக அமைந்துள்ளது. இதற்குப் *"பாவை நோன்பு"* என்றும் ஒரு பெயர் உண்டு. நாடு வளம் பெற்றிருப்பதற்கு முக்கியமான மழையை வேண்டியும், இல்லற வாழ்வு சிறக்க நல்ல கணவனை வேண்டியும் பெண்கள் கடைப்பிடிக்கும் விரதம் இது.

இத்திருவெம்பாவை விரதத்தில் முதல் ஒன்பது நாட்களும் ஒவ்வொருவரும் அதிகாலையிலெழுந்து நீராடி ஆலயம் சென்று உரிய பாடல்களைப் பாடிச் சிவபெருமானை வணங்கி ஒருபொழுது உணவு உட்கொண்டு பத்தாம் நாள் திருவாதிரையில் உபவாசமிருந்து பதினோராம் நாள் காலை பாரணை செய்து இவ்விரதத்தை நிறைவு செய்ய வேண்டும்.

ஆன்மாவானது மலமாகிய இருளிலே அழுந்தி வேதனைப்படாமல், திருவருளில் படிந்து திருவருட் பெருக்கிலே திளைத்தல் வேண்டும் என்பதே திருவெம்பாவையின் தத்துவக் கருத்தாகும். திருப்பெருந் துறைப் புராணம் இதனை அழகாகச் சித்தரிக்கிறது.

*மலவிருளூற் றுறங்காமல் மன்னுபரி பாகமருட்*
*செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை*
மந்திரங்கள் எல்லாவற்றுள்ளும் துயிலெழுப்பும் மகா மந்திரமாகவும் விளங்குவது திருவெம்பாவை.

## III. தேவி விரதம்

உமாதேவி, சிவபெருமானுடைய திருவருட்சக்தியாவர். சத்தியாவது நெருப்பும் சூடும் போன்று சிவத்துடன் வேறுபாடின்றி உள்ள வல்லமையாகும். தேவியைக் குறித்து அநுட்டிக்கும் விரதங்களாவன, வெள்ளிக்கிழமை விரதம், ஐப்பசி உத்திரவிரதம், நவராத்திரி விரதம், வரலட்சுமி விரதம் ஆகியவை.

*1. வெள்ளிக்கிழமை விரதம்:* சித்திரைத் திங்கள் வளர்பிறை முதல் நாளும் வெள்ளிக்கிழமையும் சேர்ந்த நாளில் தொடங்கி வெள்ளிக்கிழமை தோறும் உரிய முறைப்படி கைக்கொள்ள வேண்டிய விரதமிது. இவ்விரதமெடுப்போர் தேவிக்குச் சர்க்கரை அமுது படைத்து ஒருபொழுது உணவு உட்கொண்டு, நோன்பிருக்கலாம். தேவியை நினைந்து வெள்ளி விரதமெடுப்போர் எல்லா வளங்களும் பெற்று நற்கதியடைவர்.

*2. ஐப்பசி உத்திர விரதம்:* ஐப்பசித் திங்கள் உத்திர நாளில் பார்வதிதேவியைக் குறித்து விரதம் மேற்கொண்டு தொழுது, போற்றிப் பாடிப் பகல் ஒருநேரம் உணவு ஏற்று இவ்விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

*3. நவராத்திரி விரதம்:* மக்களின் முக்கிய தேவைகளை நிறைவு செய்யவும் ஆன்ம ஈடேற்றம் பெறவும் உலகமாதாவாகிய உமாதேவியை விசேடமாக வழிபாடு செய்யும் புண்ணியகாலம் நவராத்திரியாகும். நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள். இந்த ஒன்பது நாளும் உமாதேவியாருக்கும், துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய சக்திகளுக்கும் விசேட பூசைகள் நடைபெறும். உற்சவங்கள் நடப்பதுமுண்டு. துர்க்கை வீரத்தையும், இலட்சுமி செல்வத்தையும் சரஸ்வதி கல்வி, ஞானங்களையும் கொடுக்கும் சக்திகளாகும்.

கன்னி மாதமாகிய புரட்டாதி மாதத்தில், பூர்வ பட்சத்துப் பிரதமைத்திதி முதலாக உள்ள ஒன்பது இரவுகள் நவராத்திரி எனவும், பத்தாம் நாள் விஜயதசமி எனவும் அழைக்கப்படுகிறது.

நவராத்திரி விரதத்தின் ஒன்பது நாட்களுள் பிரதமை முதல் மூன்று நாட்களும் துர்க்காதேவி சொரூபமாகவும், சதுர்த்தி முதல் மூன்று நாட்களும் இலட்சுமி வடிவமாகவும், சப்தமி முதல் மூன்று நாட்களும் சரஸ்வதி உருவமாகவும் பராசக்தியைப் பாவனை செய்து, கும்பம் முதலியவற்றில் ஆவாகனம் செய்து விசேட பூசை செய்யப்பெறும்.

நவராத்திரியில் ஒன்பதாம் நாள் துர்க்காதேவி மகிடாசுரனைக் கொன்ற பாவனை காட்டப்பெறும். அதிகமான வீடுகளில் கடைசி மூன்று நாட்களில், அல்லது இறுதி நாளாகிய மகா நவமி தினத்தில், சரஸ்வதி பூசை கொண்டாடப்பட்டு வருகிறது.

மகாநவமிக்கு அடுத்த பத்தாவது நாளாகிய தசமித் திதிநாள், விஜயை எல்லாக் காரியத்துக்கும் வெற்றி நல்கும் சக்தியாகையால் அன்றைய தினம் அவளை ஆராதனை செய்து அவரவர்க்குரிய ஆயுதக்கலையையோ வித்தையையோ பயிற்சி செய்தால் அவ்வித்தையில் பூரண நிறைவு பெற்று நன்மையடையலாம் என்பது உறுதி. இன்னும், தேவி மகிடாசுரனைக் கொன்று வெற்றி பெற்ற நாள் விஜயதசமி என்றும் கூறப்படுவதுண்டு.

விஜயதசமி தினத்தை *"மானம்பு"* நாள் என்று

கூறுவர், மான் என்றால் மகான் அல்லது பெரியவர் என்பது பொருள். கடவுள் அம்புபோட்டுக் கொல்லுவது அசுரனையே. அசுரன் எனக் கூறுவது ஆன்மாக்களை வருத்தும் மலமாம்.

நவராத்திரியின் விசேட அம்சம், வீடுகளில் கொலு வைத்தலாகும். முதலில் இல்லத்தின் ஒரு பகுதியில், தூய்மையுடனும் அழகுப் பொலிவுடனும் கொலு மண்டபம் அமைத்தல் வேண்டும். இங்கே 5,7,9 என ஒற்றைப் படையாகப் படிகளை அமைத்துப் பொம்மைகளைக் கொலுவைத்துப் பூசைகளுடன் சங்கல்ப பூர்வமாக முறைப்படி கும்பத்தை அமைக்க வேண்டும். சக்தி கும்பத்தைக் குடத்தில் வைத்துச் சுற்றிவர மணல் பரப்பி அதிலே நவதானியங்களிட்டு முளைக்க விடுவது வழக்கம். நவதானியங்கள் வளர் வதைக் கொண்டு குடும்ப வளத்தை நிர்ணயிப்பவர் களுமுண்டு.

நவராத்திரி விரதத்தை முறைப்படி கடைப்பிடிக்க விரும்புவோர் முதலெட்டு நாட்களும் பகலில் உணவு உண்ணாது இரவில் பூசை நிறைவு பெற்ற பின், பால் பழம் பலகாரம் ஆகியவற்றை உண்டு, நவமியில் உபவாசமிருந்து, பத்தாம் நாள் விஜயதசமி யன்று காலை ஒன்பது மணிக்குள் பாரணை செய்தல் வேண்டும். விஜயதசமியன்று அதிகாலை அறுசுவை உண்டி சமைத்து விசேடபூசை செய்து நிவேதித்து ஆராதனை செய்தபின் படிப்பு, தொழில் ஆகியவற்றை ஆரம்பித்த பின் பாரணை செய்வதே விதி. இங்ஙனம் ஒன்பது ஆண்டுகள் தொடர்ந்து இவ்விரதம் அநுட்டித்த பின் நிறைவு செய்யலாம்.

நவராத்திரி விரதத்தில் மேலும் கவனிக்க வேண்டிய தொன்றுண்டு. இவ்விரதம் ஒன்பது நாள் என்று சொன்னாலுங் கூடச் சில சமயங்களில் எட்டு நாட்களி லும் அமைந்து விடுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் வேறொரு விதியுமுண்டு. சரஸ்வதியை மூல நட்சத்திரத்தில் ஆவாகனம் செய்து வழிபட ஆரம்பித்துத் திருவோண நட்சத்திரத்தில் நிறைவு செய்ய வேண்டுமென்பதை மனதில் கொண்டு, சரஸ்வதிக்குரிய நாட்களைத் தெரிவு செய்தபின், துர்க்கா லட்சுமிக்குரிய நாட்களை உசிதப்படி நிர்ணயித்துக் கொள்ளலாம்.

நவராத்திரி காலங்களில் மங்கையர்களை அழைத்துப் பூசையில் கலந்து கொள்ளச் செய்வதுடன் இறுதியில் அவர்களுக்கு மஞ்சள், குங்குமம், பட்டு, பணம், வெற்றிலை, பாக்கு, பழம், தேங்காய் ஆகியவற்றை அளிப்பது நன்று. கொலுவுக்கு அழைத்தல் என்று இதனைக் கூறுவார்கள்.

*4. வரலட்சுமி விரதம்:* வரலட்சுமி விரதம், ஆவணி மாதப் பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமையில் கடைப்பிடிக்கப்படவேண்டிய விரதம். உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, *ஐயனே! பூவுலகில் சகல செல்வங்களையும் நலன்களையும் மக்கட் பேற்றையும் வழங்கக் கூடிய விரதம் எது?* என்று கேட்ட சமயம் இறைவன் தேவிக்கு இந்த விரத மகிமையைக் கூறியதாகப் புராண வரலாறு கூறுகிறது.

இத்தினத்தில்தான் மாலை வேளையில் மகாலட்சுமி பாற்கடலில் தோன்றினாள் என்பதும் வரலாறு. மகளிர்க்கு விசேட விரதமாகிய இத்தினத்தில் உபவாசமிருந்து ஒன்பது முடிச்சிட்ட கயிற்றைக் கும்பத்தில் வைத்துப் பூசை செய்து பெண்கள் வலது கரத்தில் கட்ட வேண்டும். இப்பூசைக்கு விசேடமான அர்ச்சனைப் பொருள் அறுகு. விசேடமான நைவேத்தியம் நெய்ச்சாதம். இதனைத் தொடர்ந்து ஒன்பது ஆண்டுகள் கடைப்பிடித்த பின் விரதத்தை நிறைவு செய்யலாம்.

இவ்விரதத்தை முறையாகக் கடைப்பிடிப்பவர்கள் தீர்க்க சுமங்கலிகளாகச் சகல பாக்கியங்களையும் பெற்றுப் புகழோடு வாழ்வார்கள்.

## IV. சுப்பிரமணிய விரதம்

சுப்பிரமணியப் பெருமானை நினைத்து மூன்று முக் கியமான விரதங்கள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அவையாவன வாரவிரதமாக வெள்ளிக்கிழமையும், நட்சத்திர விரதமாகக் கார்த்திகை (கிருத்திகை) விரதமும், திதி விரதமாகச் சஷ்டி விரதமும் ஆகும்.

*1. வெள்ளிக்கிழமை விரதம்:* சுப்பிரமணியக் கடவுளை வேண்டி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கடைப்பிடிக்க வேண்டிய விரதமிது. இந்த விர தத்தை ஐப்பசி மாத முதல் வெள்ளிக்கிழமையில் ஆரம்பிக்க வேண்டும். எல்லா வெள்ளிக்கிழமை களிலும் நோன்பு இருக்க முடியாதவர்கள் மாதந் தோறும் வரும் கடைசி வெள்ளிக்கிழமையில் விரதமிருக்கலாம். அதுவும் இயலாதவர்கள் ஐப்பசி மாத வெள்ளிக்கிழமைகளில் விரதமிருப்பது நன்று.

வெள்ளிக்கிழமை விரதத்தை முறைப்படி கடைப்பிடி த்தவர்கள் நினைத்த காரியம் நிறைவேறப்பெற்றுப் பெருவாழ்வு எய்துவர்.

*2. கார்த்திகை விரதம்:* கார்த்திகை மாதத்தில் வரும் கார்த்திகை ( கிருத்திகை ) நட்சத்திரம் முதலாக ஆரம்பித்து மாதந்தோறும் கார்த்திகை

நட்சத்திரத்தில் முருகப்பெருமானை நினைந்து அநுட்டிக்கும் விரதமிது. இத்தினத்தில் உபவாச மிருப்பது மிகவும் நன்று. இயலாதவர்கள் இரவில் பழம் அருந்தலாம். அதுவும் முடியாதவர்கள் ஒரு பொழுதுண்டு முருகனுடைய ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்யலாம்.

இத்திருக்கார்த்திகைத் தினம், கார்த்திகைத் தீபம், விளக்கீடு எனவும் அழைக்கப்படுகிறது. பிரமாவும், திருமாலும் சிவபெருமான் தமக்குச் சோதிரூபம் காட்டியபோது அவ்வொளி வடிவைத் தமக்கு என்றும் காட்டியருள வேண்டும் என வேண்டினர். அதற்கு இறைவன், மீண்டும் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் இவ்வுருக் காட்டுவோம் என்றருளினார். அத்தினத்தை நினைவு கூர்வதே கார்த்திகைத் தீப விழா.

இத்தினத்தில் தீபங்கள் ஏற்றி வைத்து இறைவனைச் சோதி வடிவில் வழிபடுவார்கள். திருவண்ணாமலைத் தலத்திலே மலையுச்சியிலே கார்த்திகைத் தினத்தில் பெருந்தீபமேற்றி வழிபாடு நடைபெறுகிறது. "*ஆடிப்பாடி அண்ணாமலை தொழ ஓடிப்போம் நமதுள்ள வினைகளே*" எனப் பாடுகிறார் அப்பர் பெருமான்.

திருக்கார்த்திகைத் தினத்தில் ஆலயங்களில் சொக்கப் பனை கொளுத்தி அது உயர்ந்து பிரகாசமாக எரியும் போது சோதிரூபமாகவும், திருவண்ணாமலைத் தீபமாகவும் பாவனை செய்து, பக்தப் பெருமக்கள் திரளாகக் கூடி வழிபாடு செய்வார்கள்.

திருக்கார்த்திகை நாள் குமராலய தீபம் எனப்படும். முதல் நாள் அல்லது மற்ற நாள் அல்லது அதே தினத்தில் பௌர்ணமி தினத்தில், மற்றைய எல்லா ஆலயங்களிலும் இல்லங்களிலும் இவ்விழா சர்வாலய தீபம் என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது. இல்லங்களிலும் ஆலயங்களிலும் சுற்றிவர அகல் விளக்குகள் ஏற்றுவது புற உலக இருளை அகற்றுவதாகும். இத்தீபத் திருவிழா நாளில் நமது அகவிருள் அகன்று ஞானவொளி இதயத்தில் மலர இறையருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

" *ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி* "

*3. கந்தசஷ்டி விரதம்:* முருகக் கடவுளுக்குரிய சிறப்பான விரதங்கள் மூன்றினுள் கந்தசஷ்டி விரதம் உயர்வானதாக விளங்குகிறது.

ஐப்பசி மாதத்தில் வரும் தீபாவளி அமாவாசையை அடுத்த வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டி ஈறாக வுள்ள ஆறு நாட்கள் கந்தசஷ்டி விரதமாகும்.

சுப்பிரமணியர் சூரனை அழித்து அவனுக்கும் மற்றும் யாவருக்கும் அருள்புரிந்த தினம் சஷ்டி.

இந்த விரத நாட்களில் முதல் ஐந்து நாட்களும் விரதமிருந்து முருகன் ஆலயம் சென்று இரவில் பால் பழம் அருந்தி ஆறாம் நாள் உபவாசமிருந்து ஏழாம் நாள் அதிகாலை இறைவழிபாடு செய்தபின் அடியார்க்கு அன்னமிட்டு பாரணை செய்ய வேண்டும். ஆறு தினங்களும் உபவாசமிருக்க இயலாதவர்கள் ஒரு பொழுதுண்டு ஆறாவது நாள் உபவாசமிருக்க வேண்டும். இவ்விரத நாட்களில் ஆலய தரிசனம் செய்வதோடு கந்தசஷ்டிக் கவசம், கந்தரநுபூதி, முருகன் புகழ்மாலைகள் யாவும் பாடுவது நன்று.

இன்னும், இவ்விரதமேற்போர் முதலாம் நாளே ஆலயம் சென்று காப்புக்கட்டிச் சங்கல்பித்து ஆறு நாட்களும் விரதமிருந்து இறுதி நாளில் காப்பைக் கழற்றித் தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

கந்த சஷ்டி விரதம் கடைப்பிடிப்பவர்கள் மக்கட் பேற்றையும் சுகபோகங்களையும் சகல செல்வங்களையும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வர். இவ்விரதத்தை ஆறு அல்லது பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து ஏற்றபின் முறைப்படி நிறைவு செய்யலாம்.

ஆன்மாக்களாகிய நாம், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், ஆகிய ஆறு பகைகளையும் மும்மலங்களையும் அகற்றி ஆண்டவனின் மலர்ப்பாதங்களையும் அடைய வேண்டும் என்பதற்காகவே அநுட்டிக்கும் விரதம் கந்த சஷ்டி விரதம் என்பதைக் கந்த புராணம் சிறப்பாக விளக்குகிறது.

## V. விழாக்கள்

நமது விழாக்களைப் பற்றிச் சிந்திப்போமானால் பொதுவாக எல்லாம் பக்தி அம்சத்தை அடிப்படை யாகக் கொண்டவையாக விளங்குகின்றன. விழாக் களை, பண்டிகைகளைக் கொண்டாடும்போது மக்களுக்கு உற்சாகமும் மன நிறைவும் உண்டா கின்றன. சில விழாக்களில் ஆடை அணிகள் முக்கியமாகவும் இன்னும் சிலவற்றில் கலையுணர்வு மிகைப்பட்டும் தோன்றும். முக்கியமான விழாக்கள்

சில இங்கே குறிப்பிடப் பெற்றுள்ளன.

*1. சித்திரை வருடப் பிறப்பு:* எல்லா மதத்தினருமே தத்தம் வருடப் பிறப்பினைச் சிறப்பாகக் கொண்டாடு கிறார்கள். இவ்வாறே சைவமக்கள் வருடப்பிறப்பைச் சிறப்பாகக் கொண்டாடுவது பாரம்பரிய வழக்கமாக இருந்து வருகிறது. தமிழ்ப் புதுவருடம் சித்திரை மாதத்தில் ஆரம்பமாகிறது.

இப்புத்தாண்டு தினத்தில் மக்கள் அதிகாலையில் எழுந்து மருத்து நீர் தேய்த்து நீராடிப் புத்தாடை அணிந்து இல்லத்திலே தீபமேற்றி இறைவழிபாடு செய்து பெற்றோரை வணங்கி ஆசீர்வாதம் பெறுவார்கள். அதன் பின்பு ஆலயத்திற்குச் சென்று வணங்கிப் புதுவருடப் பலன்களை வாசிக்கக் கேட்டும், உற்றார் உறவினர் இல்லங்களுக்குச் சென்று உறவாடியும் மங்கலமாகக் கொண்டாடுவார்கள்.

இன்னும் சான்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை வணங்கி ஆசீர்வாதம் பெறுவதும் புதுவருட விழாவின் முக்கிய அம்சமாகும். புதுவருடப் பிறப்பன்று அதிகாலை, இல்லங்களில் சூரிய பொங்கல் புரிந்து, சூரியவழிபாடு செய்து ஒளிநிறைந்த, பிரகாசமான நல்வாழ்வு வேண்டுகின்ற வழக்கமும் உண்டு.

வருடத்தின் முதல் நாளான சித்திரை வருடப்பிறப்பை, இறைவழிபாட்டுடன் ஆரம்பித்தால் அந்த வருடம் முழுவதும் பிரகாசமான வாழ்க்கை, இலட்சுமி கடாட்சம், காரியசித்தி, நோயின்மை, இறை அருள் யாவும் கைகூடும்.

*2. வைகாசி விசாகம்:* வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம் முருகப் பெருமான் உதித்த தினமாகும். இத்தினத்திலே முருகனது கோயில்களில் சிறப்பான அபிஷேகங்கள், பூசைகள், திருவிழாக்கள் நடைபெறும்.

வைகாசி விசாக நாள் புத்தர் பெருமான் பிறந்ததும், ஞானம் பெற்றதுமாகவும் இருப்பதால் பௌத்தர்களும் இத்தினத்தில் விழா எடுப்பார்கள்.

— அடுத்த இதழில் தொடரும்..

நன்றி: சிங்கப்பூர் திருமுறை மாநாட்டு மலர்

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

மகாபுருஷர்களுடைய தொடர்பு கிடைத்தற்கு அரியது. அதனுடைய இயக்கம் அறிதற்கரியது. அதனுடைய பயன் தவறாது சம்பவித்தேயாகும்.

மாயையைத் தாண்டிச் செல்பவர் யாவர்? பற்றினை அறுப்பவர், மகாபுருஷரைப் பேணுகின்றவர், மமகார உணர்ச்சியை நீக்குகின்றவர் — இவர்களே மாயையைத் தாண்டுபவர்கள் ஆவர்.

இறைவன் ஒருவனையே நாடுகின்ற பக்தர்கள் தழுதழுக்கும் குரலில், மயிர்க்கூச்செறிய, கண்ணீர் சிந்த ஒருவருடனொருவர் இறைவனையே பற்றிப் பேசுவோர்களாய், தமது குலங்களை மட்டுமேயன்றிக் குவலயம் முழுவதையுமே புனிதமாக்குகின்றனர்.

— நாரதர் வாக்கு.

கடவுட் பசி கொண்டவன் கீதை முழுவதும் படிக்க வேண்டுவதில்லை. அதன் ஒரு சுலோகத்தைக் கற்று அதை நடத்திக் காண்பித்தாலே போதும். ஒரு தீப்பெட்டியில் பல குச்சிகள் இருக்கின்றன. நெருப்பை மூட்டுவதற்கு ஒரு தீக்குச்சியைக் கிழித்தாலே போதும். அக்கறையும் முயற்சியும் இருந்தால், சிறு தீப்பொறியைப் பெரும் தீயாக மாற்றிவிடலாம். இதற்கு எல்லாத் தீக்குச்சிகளையும் பற்ற வைக்க வேண்டாம். கீதையில் மொத்தம் எழுநூறு தீக்குச்சிகள் இருக்கின்றன. மெய்யறிவு என்ற தீயை இதில் எந்தக் குச்சியிலிருந்து வேண்டுமானாலும் பற்ற வைக்கலாம். அநுபவம் என்ற கல்லில் அதைத் தேயுங்கள் போதும்.

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா.

# "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள்

ஈழத்திரு நாட்டில் நடைபெறும் விடுதலைப் போரினால் பாதிப்படைந்து மேலை நாடுகளுக்கு அகதிகளாகப் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் பெரும்பான்மையோர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்களே. நாம் பிறந்த நாட்டின் கலை, கலாச்சார, சமய அனுட்டான, வழிபாட்டு முறைகள், பண்பாடுகளை மேலைத்தேசப் பண்பாடுகள் மத்தியில் பேணிப் பாதுகாப்பதென்பது மிகவும் சிரமமான காரியம். அப்படியிருந்தும் முக்கியமாக இளைய தலைமுறையினர் மத்தியில் எமது சமய தத்துவங் களையும், வழிபாட்டு முறைகளையும் புகட்டுவது மிக மிகச் சிரமமாகவே உள்ளது. காரணம், இங்கு சமயக் கல்வி புகட்டப்படுவது இல்லை. எமது சமயநூல்கள் பெரும்பான்மையாகத் தமிழ் மொழியிலேயே உள்ளன. சிறார்களுக்குத் தமிழ் அறிவு இல்லை. எமது தாய் மொழி தெரியாது அதனால் சமய அறிவைப் புகட்ட முடியாது. இதனால் எம் சிறார்கள் மேலைத்தேச பழக்க வழக்கங்களில் வேரூன்றி எமது கலாச்சாரங்களில் இருந்து வேறுபடும் அபாயம் தோன்றி உள்ளது. இவ் வகையான அபாயங்களில் இருந்து எமது சமூகத்தை யும் குறிப்பாக இளையதலைமுறையினரைக் காத்திடும் முயற்சியில் பல சங்கங்கள், தமிழ் அமைப்புக்கள், சமய அமைப்புக்கள், தனி நபர் குழுக்கள் ஈடுபட்டிருக்கின்றன. இவற்றின் முக்கிய நோக்கம் தமிழ் மொழி, சமய அறிவு என்பவற்றைக் கற்பித்தல் மூலம் எமது சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பை இயன்றளவு நீக்கி எமது பாரம்பரியத்தைக் காத்திடுவதாகும். இந்த முயற்சியில் "கனடா இந்து மாமன்றம்" தனது பணியினைச் செவ்வனே செய்து வருகின்றது. சென்ற வருடம் நவராத்திரி விழா மிகவும் சிறப்பான முறையில் கொண் டாடப்பட்டு அன்றையதினம் சமயக்கல்வி, தமிழ் மொழி வகுப்புக்கள், தேவார பண்ணிசை வகுப்புக்கள், பரத நாட்டிய வகுப்புக்கள் ஆகியன ஆரம்பிக்கப்பட்டு நடை பெற்று வருகின்றன. இந்து மாமன்றம் அத்துடன் நின்றுவிடாது "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற எம்சமய நம்பிக்கையில் "சைவநீதி" என்னும் சமய சஞ்சிகையை ஆரம்பித்து, தமிழ்க்கல்வி மூலம் எழுத் தறிவையும் சமய அறிவையும் வழங்க முன்வந்துள்ளது. இப்பணி ஓர் அற்புதமான பணியாகும். பல பத்திரிகைகள் இங்கு வெளிவந்து மக்களுக்குப் பல தகவல்களைத் தருகின்ற போதிலும் சமய சஞ்சிகைகள் குறைவாகவே வெளிவருகின்றன. குறிப்பாக இந்துதீபம், மதம், ஆலயமணி வரிசையில் சைவநீதியும் தன் மேலான பணி யைச் செவ்வனே செய்வதற்கு அனைவரும் ஆதரவு நல்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். சைவநீதி சஞ்சிகை மக்களுக்கு ஆன்மீக ஞானத்தைத் தொடர்ந்து புகட்டி வர வேண்டும்.

நாம் வாழும் நாட்டில் மனிதன் இயந்திரகதியில் செயற்பட்டு வாழ வேண்டியுள்ளது. நேரமின்மை, ஓய்வின்மை காரணமாகப் பெரியோர்களுக்கே எமது பாரம்பரியத்தைப் பேண முடியாமல் உள்ளது. இருப்பினும் எம் இளைய தலை முறையினரை நாம் மனதில் நிறுத்தி அவர்களின் நல்வாழ்விற்காக எமது இல்லங்களில் காலை, மாலை நேரங்களில் இறைவனைப் பிரார்த்தனை செய்தல், தேவாரபாராயணம் முக்கியமாக கூட்டு வழிபாடு செய்தல் இவற்றின் மூலமும் வாரத்தில் ஓரிருநாளாவது அல்லது நேரங் கிடைக்கும் போது ஆலய தரிசனம் செய்தல், வழிபாட்டு முறைகளை உரிய முறையில் சொல்லிக் கொடுத்து எமது சமய தத்துவங்களை அவர்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டும். அத்துடன் எமது சிறார்களுடனும் எமது உறவினருடனும் நாம் தமிழ் மொழியில் உரையாடுதல் மூலமும் தமிழையும் சைவத்தையும் பேணிப் பாதுகாக்க முடியும். சைவசமயிகளாகிய நாங்கள் சைவ உணவு உட்கொள்வதே மிகவும் சிறந்ததும் பயனுள்ளதும் ஆகும். "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காதே" என்பதும் "கொல்லாமல் கொன்றதைத் தின்னாமல" என்பதும் பெரியோர் வாக்கு. கூடியளவு வெள்ளி, செவ்வாய் முக்கிய விரத நாட்களிலாவது மாமிச உணவைத் தவிர்த்து மரக்கறியை உண்பதன் மூலமும் எம்விரத அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும் நாம் சிறார்களுக்கு வழிகாட்டிகளாக மாற முன்வர வேண்டும்.

தமிழ்—சைவப் பணியாற்றும் சைவநீதி சஞ்சிகை ஆசிரியர்குழு பண்டிதர் வீ.வ.நல்லதம்பி அவர்களைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு வெளிவரு கின்றது. அவரும் அவரது குழுவும், அவரது மன்ற உறுப்பினர்களும் தங்கள் பணியை மேன்மேலும் தொடர, உடல், உள, பொருளாதாரபலம் நிறைவாகப் பெற்று நற்பணி தொடர இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

"வாழிய சைவநீதி"

"பாக்கியங்கள் எல்லாம் பழுத்து மனம்பழுத்தோர்
நோக்குந் திருக்கூத்தை நோக்குநாள் எந்நாளோ ?"

— தாயுமானவர்

# சமயம் வெறும் சம்பிரதாயமா?

தம்பையா சிறீபதி — சட்ட அலுவலர்

இன்று கனேடிய மண்ணில் குறிப்பாக ரொறன்ரோ மாநகரில் பல இந்து ஆலயங்கள் சைவமக்களின் வழிபாட்டிற்காக அமைக்கப் பெற்றுள்ளதை நாங்கள் காணக்கூடியதாக இருக்கின்றது. அது மட்டுமல்ல இந்த ஆலயங்கள் எந்நேரமும் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றன. ஆனால் இங்கு வருகின்ற மக்கள் கூட்டமும் ஆலயமும் தங்களுக்கு உரித்தான சமயக் கடமைகளைச் செய்கின்றனவா? என்பதே எனது பணிவான கேள்வியாகும்.

இந்துக்கள் ஆலயங்களுக்குக் காலங் காலமாகச் செல்லுகின்றார்கள். ஆனால் இந்து மதக்கோட்பாடுகள் என்ன என்பதனை அறிந்து செல்கின்றார்களா? இந்து மதம் சொல்லும் தத்துவங்கள் யாது என்று அறிந்து செல்கின்றார்களா? என்னைப் பொறுத்த மட்டில் இந்துக்கள் இன்று கோவில்களுக்குச் செல்வது வெறும் சம்பிரதாயமாக உள்ளதேயன்றி இன்னும், ஒரு பிறமதத்தவர் எம் சமய தத்துவங்கள் யாது? பொருள் யாது? என்று கேட்டால் நாங்கள் வெறுமனே கையைப் பிசையும் கையாலாகாத்தனத்திலேயே உள்ளோம் என்று மிகவும் கவலையுடன் சொல்லுவேன்.

நிலைமை இப்படியானால் இதனை நிவர்த்தி செய்யும் பொறுப்புக்கள் யாரில் தங்கியுள்ளது என்பதே இன்றைய கேள்விக்குறியாகும். வேதாந்தத்தினை வெறுமனே வேடிக்கையாகக் கொள்வதால் என்ன பிரயோசனம்? இன்று இந்து மதத்தினைத் தழுவும் மேலை நாட்டார்; பிற இனத்தவர் இந்து மதத்தினைப் பற்றி அறிந்துள்ளவை கூட எம் சைவத் தமிழ் மக்கள் அறிந்திருக்கவில்லை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

சைவமும் தமிழும் இருகண்கள் போன்றவை. "திருநெறிய செந்தமிழ்" என்று ஞானசம்பந்த சுவாமிகள் கூறியுள்ளார். இப்படியான இத்திருநெறிய செந்தமிழினை, தமிழர்களாகிய யாம் அறியாமல் இருப்பது வேதனைக்குரியதாகும். பெற்றோர்களாகிய பலர் தம் குழந்தைகளை ஆலயங்களுக்கு அழைத்துச் செல்கின்றார்கள், ஆனால் அங்கு வரும் குழந்தைகள் ஆலயத்தினை ஒரு விளையாட்டு மைதானமாகப் பாவிக்கின்றார்களே தவிர அதனை ஒரு புனிதமான இடமாகக் கொள்வதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் பெற்றோர்களாகிய நாங்களே என்பதனை மறுக்க முடியாது. ஆலயம், பொழுதுபோக்குவதற்கான இடமல்ல, காலத்தினை கருத்தோடு கழிப்பதற்கான ஒரு மதிப்பிற்குரிய இடமாகும். ஆலயத்திற்கு வரும் குழந்தைகள் தெய்வ சந்நிதானங்களை வெறுமனே நூதன சாலைகளில் உள்ள சிலைகளைப் பார்ப்பதனைப் போன்று பார்ப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. சிலைகளின் அமைப்புக்கள் அம்சங்கள் என்ன என்பதனைப் பெற்றோர்களாகிய நாங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறி, தெய்வ சந்நிதானங்களில் ஒரு பக்தி பூர்வமான சூழ்நிலையைக் குழந்தைகளின் மனத்தில் உண்டாக்க வேண்டும். இது ஒவ்வொரு இந்துப் பெற்றோர்களினதும் ஆலய நிருவாகிகளினதும் பாரிய பொறுப்பாகும்.

ரொறன்ரோ நகரில் பல ஆலயங்கள் உண்டு. இன்னும் எத்தனையோ ஆலயங்கள் உருவாகுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஆலயங்கள் வெறுமனே பெயரளவில் ஆரம்பிக்கப் பெறுவதில் என்ன இலாபம்? ஆலயம் என்பது மனிதனின் அறிவாலயம். இது மனிதகுலத்தினை அறிவுறுத்தித் திருத்தும் அருளாலயம். எனவே, இதனை மிகப் புனிதமான உணர்வோடு, நோக்கோடு ஆரம்பித்தல் அவசியம். கோயில் ஒன்றை உருவாக்கிவிட்டோம் என்று கூறிக் கொள்வதால் மனம் நிறைவு பெற்று விட முடியாது. அதன் பூரணமான நோக்கம் எம் ஆன்றோர்கள் சான்றோர்கள் கூறிய வழியில் அமைந்தாலே அது திருத்தலமாகும். இல்லையேல் அதுவும் ரொறன்ரோ மாநகரில் உள்ள கட்டடங்களோடு சேர்ந்து இன்னும் ஒரு கற்கட்டடமாக அமையுமேயன்றி கருத்துமிக்கதாக அமையாது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

இந்த மண்ணில் பிறந்து வாழ்கின்ற எம் குழந்தைகளும் பெற்றோர்களும், கோயிலுக்குப் போகின்றார்கள், நாமும் போகிறோம் என்ற ஒரு கருத்தில் தான் போகின்றார்கள் அல்லது வீட்டில் பிள்ளைகளை விட்டுச் சென்றால் குழப்படி. கையோடு கூட்டிச் செல்வோம் என்று ஆலயத்திற்கு அழைத்து வருவது போன்ற ஓர் உணர்வே அக்குழந்தைகள் கோயிலில் நடந்து கொள்ளும் முறையைப் பார்த்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. ஆனால் ஆலயம் என்பது தமது ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டும் ஒரு உயரிய தாபனம் என்பதனை எப்படி அவர்கள் மனங்களில் நாங்கள் உருவாக்கப் போகின்றோம்

என்பதை உணர்வது இன்று இங்கு வாழ்கின்ற ஒவ்வொரு இந்துப் பெற்றோரினதும் தலையாய கடமையாகும். அதற்குப் பெற்றோர் மட்டுமல்ல ஆலயங்களும் மிகவும் சிரத்தை எடுத்து குழந்தைகள், இளைஞர்கள் மனதில் இந்து சமயக் கருத்துக்களைப் பதியவைக்கக் கூடிய சொற் பொழிவுகளை, பிரசங்கங்களை அடிக்கடி நடாத்தும் பொறுப்பினை எடுக்க வேண்டும். ஆலயங்களில் மணி ஓசையுடன் இறை மணங்கமழும் பாசுரங்கள், பக்திப் பாடல்கள், வேதபாராயணங்கள் என்பன பூசை நேரங்களுக்கிடையில் ஒரு சில நிமிட நேரமாவது ஒலிக்கச் செய்தல் வேண்டும். கோயில் அர்ச்சகராக இருக்கும் அந்தணப் பெருமக்கள் எம் குழந்தை களுக்கு பூசை புனருத்தாரணம் என்பனவற்றின் பலாபலன்கள், நோக்கம் என்பனவற்றை விளக்கிக் கூற வேண்டும், பேச வேண்டும். முடிந்தால் அவற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிட்டு இலவசப் பிரசுரமாக விநியோகிக்க வேண்டும். இல்லையேல் இன்னும் ஒரு தலை முறைக்குப்பின் ஆலயங்கள் எல்லாம் வெறும் அர்த்தமின்றி உருவாக்கப் பெற்ற மடாலயங்களாக மாறக்கூடும் என்பது எனது சிந்தனை.

இன்று இம்மண்ணில் பல இந்து சமய ஸ்தாபனங்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. இச்சமய ஸ்தாபனங்களில் செயற்றிறனுடைய பலர் அங்கம் வகிக்கிறார்கள். இவர்களின் கடமை என்ன? இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களை, தத்துவங்களை மக்கள் மனதில் அதிலும் குறிப்பாக வளர்ந்து வரும் சமுதாயத்தின் மனதில் பதியவைக்கக் கூடிய பக்திப் பாடல்களை, சமய நாடகங்களை, நடனங்களை, சொற்பொழிவுகளை இங்குள்ள சிறார்களைக் கொண்டு நடாத்தத் தம்மாலான முயற்சிகள் யாவற்றையும் எடுக்க வேண்டும்.

இன்று சந்திக்குச் சந்தி, நாளுக்கு நாள் ஏதேதோ நிகழ்ச்சிகள் எல்லாம் நடை பெறுகின்றன. மக்கள் எல்லாவற்றுக்கும் ஆதரவு நல்கியே வருகிறார்கள். எனவே, இந்து சமய ஸ்தாபனங்கள் தங்களால் இயன்றளவு இந்து சமயத் தத்துவங்களை விளங்க வைக்கும் இயல், இசை, நடன, நாடக அரங்குகளை உருவாக்க வேண்டும். குறிப்பாக, அதற்காக இங்கு வாழ்கின்ற கலைஞர்களை, இளைஞர்களை, சிறுவர்களைப் பங்குபற்ற வைப்பதன் மூலம் இங்குள்ள மக்களை இந்து சமயத்தின் வளர்ச்சியில் ஈடுபடச் செய்யலாம் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

தமிழகத்திற்கு அடுத்தபடியாக எனது கணிப்புப்படி கனடா மண்ணில் தான் அதிகமான தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளிவருகின்றன என்றால் அது மிகையாகாது. அதுமட்டுமல்ல நல்ல பல வானொலிப் படைப்புக்கள் கூட இங்கு உண்டு. இந்த அமைப்பாளர்கள் சமயத்திற்கும், மொழிக்கும் தயங்காது சேவை செய்து வருகின்றார்கள். அவர்களை இந்து சமய ஸ்தாபனங்கள் பயன்படுத்தினால் மேலும் அபிவிருத்திகள் உண்டு.

அதே போன்று ஒளிபரப்பும் ஸ்தாபனங்களின் உதவியைக்கூட நாடி நம் சமயத்தின் தத்துவங்கள், பாடல்களைப் புகட்டும் நல்ல நிகழ்ச்சிகளை நடத்தலாம். இன்று ரொறன்ரோவில் புகழ்பெற்ற, ஏன் வட அமெரிக்காவில் என்று கூடக் கூறக்கூடிய ரிச்மண்ட்ஹில் கணேசர் ஆலயத்தினர் இதற்கு முன்னோடியாகப் பல நிகழ்ச்சிகளை நடத்தலாம். இவர்களால் நடாத்தப் பெற்ற ஒளிபரப்பும் சேவை நிறுத்தப்பட்டது ஏன் என்பது தெரியவில்லை. பண நெருக்கடி ஒரு காரணமாக இருக்கலாம். அப்படியானால் அதற்கான வழிவகைகளை இந்த ஆலயம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதனை இக்கட்டுரை மூலம் அறியத்தர விரும்புகின்றேன். வசதி படைத்த ஆலயங்கள் பணவருவாய் உள்ள ஆலயங்கள் இதற்கான முயற்சிகளில் ஈடுபடத் தயங்கினால் மற்றச் சிறு ஆலயங்கள் எப்படி இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும் என்பது எனது ஆதங்கம்.

எனது பணிவான நோக்கம் எல்லாம் மதம் என்பது, நான் இந்து என்று வெறுமனே சொல்லிக் கொள்வதற் காக அமையும் ஒரு பொருளாக இருக்கக் கூடாது. இந்து என்று என்னைக் கூறிக் கொள்ளும் போது இந்து மததத்துவம் சொல்லும் அரும்பெரும் பொருள் கருத்துக்கள் என்ன கூறுகின்றன? என்பதனை உணர்ந்து அதன் வழிச் செல்லும் தன்மையை ஒவ்வொரு இந்து மதத்தவனும் கொண்டிருக்க வேண்டும் என்பதே.

இந்து மதங்கூறும் தத்துவங்கள் இன்றைய உலகின் நாகரிகத்திற்கும் சட்டத்திற்கும் சூழ்நிலைக்கும் பொருத்தமானதும் உவப்பானதும் ஆகும். அவை பற்றிப் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டு போகலாம். எனினும் எனது கட்டுரையை முடிக்கும் முன்பு ஒரு உதாரணத்தைக் கூறி முடிக்க விரும்புகின்றேன்.

இந்து மதத்தில் அர்த்த நாரீஸ்வரர் என்ற ஒரு வடிவம் உண்டு. இதில் இறைவனும் இறைவியும் சரிபங்காகத் தம் உடலைப் பகிர்ந்து கொள்வது போன்ற தோற்றம். இது ஆணும் பெண்ணும் வாழ்வில் இணை பிரியாதவர்கள், சமமானவர்கள், இருவரும் இன்றி எதுவும் இவ்வுலகில் நடவாது

என்பதனை மறைமுகமாகக் கூறிநிற்கும் அற்புதக் காட்சி. இதனைத்தான் இன்று மேலை நாடுகள் ஆணும் பெண்ணும் சமம் என்று வாய் கிழியக்கத்திப் பெண் உரிமைக்காகப் போராடி வருகின்றன. ஆனால் என்றோ கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்பே எமது இந்து சமயம் இதைக் கூறிவிட்டது. இதை இன்று மேற்கு நாடுகளில் வாழும் நம் குழந்தைகள் இளைஞர்கள் அறிவார்களா? எம் சமயத்தின் தீர்க்கதரிசனம் பற்றி அவர்கள் அறிந்திருப்பார்களா? நம்மொழியின், சமயத்தின் பெருமையை குடத்தில் வைத்த விளக்காக அவற்றின் தத்துவம் அறியாமல் பொருள் அறியாமல் வைத்து வெறும் பெருமைக்காக நாம் இந்துக்கள் என்று கூறுவோமானால் நாம் எமது சமயத்தினை வெறும் சம்பிரதாயத்திற்காகக் கைக்கொள்ளுகின்றோமேயன்றி வேறு எந்த வகையிலும் அல்ல என்பதே உண்மை. இது நிச்சயம் மாற்றப்பட வேண்டும்.

வாழ்க! வளர்க!! திருநெறிய செந்தமிழ் சைவம்.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

இந்த உலகில் தன்நிலையிலிருந்து தாழ்ந்தாலும் உயர்ந்தாலும் எந்நிலையிலும் மாறாதிருப்பது தந்தை, தாயரது அன்பு ஒன்றேயாம்.

— நாமகள்

கறள் ஏறிய இரும்பைக் காந்தம் ஈர்க்காதது போன்று அழுக்கு நிறைந்த மனதைத் தெய்வீக ஒளி கவர்ந்தெடுப்பதில்லை.

— சுவாமி கெங்காதரானந்தா.

திருமுறை எங்கள் தமிழ்மறை
திருக்குறள் எங்கள் பொதுமறை

— குன்றக்குடி அடிகளார்

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்

— திருவள்ளுவர்

தாமதித்து வழங்கப்படும் நீதி ஒரு அநீதியாகும்.
Delayed Justice is an Injustice.

நெஞ்சில் உள்ளதையே வாயால் சொல்லு! உனது சொல்லுக்கும் சிந்தைக்கும் அத்தியந்த ஒற்றுமை இருக்கட்டும். அப்படி ஒற்றுமை ஏற்படாவிட்டால் உனக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது.

இறந்து போனவனை, சிவபதவி அடைந்துவிட்டான் என்கிறோம். பதவி ஆசை பிடித்து அந்தப்பதவி இந்தப்பதவி என்று அலைகின்ற மனிதன், இறுதியில் அடைகின்ற பதவி சிவபதவி. உச்சமான உன்னதமான பதவி, எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பதவி. போட்டி இடுவோர் இல்லாத பதவி. சீக்கிரம் கிடைக்க வேண்டும் என்று பலரும் விரும்பாத பதவி அது. நீங்கள் விரும்பியோ விரும்பாவிட்டாலோ தப்ப முடியாத பதவி. தவிர்க்க முடியாத பதவி.

மரணம் வெல்ல முடியாததுதான். ஆனால் மரணத்துக்கு நேரம் குறித்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கொடுமைக்கு ஈடு வேறு எதுவும் இல்லை. நதி இழுத்தால் படகு ஓடுகிறது. விதி இழுத்தால் வேற்றூர் செல்கிறோம். வேறு என்ன?

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்

— திருவள்ளுவர்.

# யாவர்க்கும் அறிவரியோன்

வித்துவான் — புலவர். இ.சி.சோதிநாதன்

கனடா இந்து மாமன்றத்தின் சார்பில் மலரும் மலரில் இந்து சமயம் எவையென்பதனைக் குறிப்பிடுவது மிக மிக முக்கியமானதாகும். சைவம், வைணவம், சாக்தம், காணாபத்யம், கௌமாரகம், சௌரம் என்னும் அறு வகைச் சமயங்களை அடக்கியது தான் இந்துசமயம். இந்து சமயத்தவர்கள் பலவேறு நிலைகளில் பல தெய்வத் திருவுருவ வழிபாடுகளைச் செய்வார்கள்.

திருவிழாக்கள், ஊர்வலக் காட்சிகள், அவற்றில் நடை பெறும் கச்சேரிகள், பிரார்த்தனை முறைகள் யாவும் தத்துவார்த்தங்கள் கொண்டவை.

சமயங்கள் ஆறில் சைவசமயம் அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்த இறைவனை, சோதிப் பிளம்பாகிய பரமேஸ்வரனைப் பரம் பொருளாகக் கொண்டது. பழம் பெரும் சமயமது. சிவத்தை முழுமுதற் கடவுளாக வணங்குபவர்கள் சைவர்கள். சைவம் என்பது சிவத்து டன் சம்பந்தமுடையது என்பது பொருள்.

நாம் பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்குவதனால், பொய்நெறி சேராமல் தடுத்து, நன்நெறி யிலே செல்வதற்காகப் பேதகம் செய்து கொண்டிருக்கிறார் இறைவன். பேதகம் செய்வது தீயவழி செல்லாமல் நல்வழிப்படுத்துவதற்காக. இதனாலேயே கடவுளுக்குச் சிவம் என்று பெயர் வந்தது. அடுத்தது நன்மை தீமையற்றதும் சிவன் தான். அங்கு இங்கு என்று பகுக்க முடியாமல் எங்கும் சிவனிருப்பதனாலே சிவன் என்று பெயர். நிறமிலான், குறியிலான், குணமிலான் ஆயவனைச் செந்நிறத்தன் எனக் கூறுவர். ஆதலின் சிவன் என்று அழைப்பர் என்பர்.

தேடிக் காணொணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன் என்றும், தாயுமான சுவாமியென்றும் இப்படிப் பல பெயரிட்டு அழைத்தாலும் திருமூலர் அன்பு என்று அழைக்கிறார்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்"

என்கிறார். இறைவனை எல்லாவிடத்தும் இறைமயமாகக் கண்ட தாயுமானவர்,

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

எனக் கூறுகிறார். வள்ளுவப் பெருந்தகையும்

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்
கென்பு தோல் போர்த்த உடம்பு" என்றும்

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

எனவும் இயம்பியுள்ளார். அன்பே உருவான இறைவன் உமையோடு இணைந்தே எச்செயலையும் செய்கிறார்

"சிவமெனும் பொருளும் ஆதிசக்தியோடு சேரின்
எத்தொழிலும் வல்லதாம்"

என்பதனால் சிவத்தின் வல்லமைக்குச் சக்தியென்று பெயர்.

"எத்திறன் நின்றான் ஈசன் அத்திறம் அவளும்
நிற்பள் — சித்தியார்"

சிவம் நம்மை நன்நெறிப்படுத்தும் போது சக்தியும் சேர்கிறாள் அவளும் அவரும் ஒன்றுதானே.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத்திறம் பாடி ஆடேலோ ரெம்பாவாய்"

அம்மை நம்மை வளர்ப்பவள் தானே! எங்களை என்ன? பிரம்மா விஷ்ணுவைக் கூடப் பேதிக்க நேர்ந்தது. ஒருபோது பிரம்மாவுக்கும் நாராயணனுக் கும் பேதம் வந்துவிட்டது. நான் பெரிதா? நீ பெரிதா? என்ற பேதம். நான் புவன போக சீவராசிகளைப் படைக்கிறேன். எட்டு வகையான இயற்கை வடிவங்களையும் படைக்கிறேன் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் என்னும் ஆன்மா ஆகிய அட்ட மூர்த்தங்களைப் படைக்காமல் இருந்தால் நீர் எதைக்காப்பீர் எனப் பிரமதேவர் பிரமிக்கத்தக்க வகையில் இறுமாந்து கேட்டார்.

காத்தற் தொழிலைச் செய்யும் இலட்சுமி காந்தனாகிய நாராயணன் பிரபஞ்சத்தையும் சகல சீவராசிகளையும் காத்தருளுபவரல்லவா? பிரம்மனே! உனக்குத் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாமே நான்; நானின்றிப் பிரபஞ்சமில்லை; பஞ்ச பூதங்களும் நான்; பரப்பிரம்ம மும் நானே; நான் இல்லாது ஒரு பொருளுமிராது என்று அறுதியிட்டுக் கூறினார். செருக்குற்ற இரு வரின் சொற்போர் முடிந்தது; விற்போர் தொடங்கினர்; சரமாரியாகச் சாதாரணமான படைகளை உபயோகித்த பின்னர் ஆளுக்கு ஆள் ஈசுர படையை ஏவினர். இவை இரண்டும் மோதி அக்கினி தோன்றி அகிலம் முழுவதும் பரவ அப்போது சோதிமயமான மலை இருவர் மத்தியிலும் தோன்றியது.

அடியவர்களை விட்டகலாதவனாகிய இறைவன் வானவர் காணாதவனல்லவா? இச்சோதிவடிவின் அடிமுடியைக் காணவல்லவர் எவரோ அவரே பரப்பிரமம் என்று அசரீரி எழுந்தது. இவ்வாக்கினைக் கேட்ட இருவரும் திகைத்துக் கோபம் தணிந்து பிரம்மா அன்னப் பறவை வடிவம் கொண்டு முடியைத் தேட ஆகாய வெளிகள் அளவற்ற புவனங்களைக் கடந்தும் முடியைக் காண முடியவில்லை. வராக ரூபம் எடுத்த நாராயணன் அண்ட சராசரங்களைத் துளைத்துக் கொண்டு பாதாளமேழுக்கும் மேற்பட்டுப் போயும் அடியைக் காண முடியவில்லை.

நோக்குக்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டவன் இறைவன். அவன் காட்டினாலன்றி அரி அயனால் காண முடியுமா?

"ஆதியும் நடுவு மீறும் அருவமு முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பு மின்றி
வேதமும் கடந்து நின்ற விமலன்" அல்லவா?
— கச்சியப்பர்.

அகந்தை ஒழியவில்லை. காண முடியவில்லை

"ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்காய்
வானாடர் காணாதமண்"

என்பது திருவருட்பயன்.

"நாரணனே! மண்ணைக் கிளந்தாயே யிடந்தாயே
அங்கு எங்கெல்லாம் போனநீர் நாங்கூர் வந்து
எமக்கு அருள மாட்டீரா?"

என்று பாடுகிறார்.

"வராகமாகி யிம்மண்ணை யிடந்தாய்
நாரணனே! நல்வேதியர் நாங்கூர்
சீரார் பொழில் சூழ் திரு வெண்ணக்குளத்துள்
ஆரா அமுதே அடியேற்கு அருளாயோ"
— திருமங்கைஆழ்வார்பாசுரம்.

"நின்மலை தனக்கு மூத்த நீலமா மலைக்கும் வேதப்
பொன்மலை தனக்கும் நாப்பட் புரைதவிர் பதுமராக
மன்மலை நின்ற தென்ன மாறு கொண்டவர் தம்மிற்றாம்
தென்மலை வுறாத வண்ணம் தோன்றிய சுடரைக்
கண்டார்"
— சிவராத்திரி புராணம்

தம்மிலும் மேலான பரம் பொருள் பரமசிவனே என்ற உணர்வு உதித்தது. உடனே இறைஞ்சி இறைவனைத் துதித்தனர். அவர்களின் வேண்டுதலுக்கு இலிங்கோற்பராகத் திருவருள் புரிந்து பிரமனின் மலைப்பை நீக்கி திருமாலின் (மால் என்றால் மயக்கம்) மயக்கத்தை நீக்கிப் பதவியை வழங்கி ஏகமானார். சோதிப் பிழம்பு தோன்றிய இடத்தில் ஓரரிய மலை உருப்பெற்றது. அதுவே அண்ணா மலையாகும். அருணாசலம் சென்றால் இன்றும் இலிங்கோற்பராகத் தோன்றிய சிவலிங்கத்தை வழிபட வாய்ப்பும் வசதியும் உண்டு. அத்தல ஈசனைத் தொழ வினைகள் வழுவி ஓடுமென ஞானசம்பந்தர் தமது தேவாரத்தில்

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய
— ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித் திரண் மழலைமுழவதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம்
— அறுமே."

என்று பாடியுள்ளார்.

ஏகமாய் எல்லாமாய் விரவியிருக்கும் நின் பாதம் அல்லால் எனக்கென்ன பற்று என்பதனைத் திருநாவுக்கரசர்

"இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புனலும்
— காற்றும்
உரமார் பவனம் எட்டுத் திசை யொளி உருவம்
— ஆனாய்
அரவுமிழ் மணிகொள்சோதி! அணி அண்ணா
— மலையுளானே
பரவுநின் பாதமல்லால் பரமநான் பற்றிலேனே"

என்பதாலும், திருவெம்பாவையில்

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும்"

"பாசம் பரம் சோதிக் கென்பாய்"

"சோதி திறம் பாடிச் சூழ் கொன்றைத்தார் பாடி"

என்றும்
திருவாசகத்திலே

"சோதியே! சுடரே! சூழ் ஒளி விளக்கே!
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால் கொள் வெண்நீற்றாய்
பங்கயத்(து) அயனுமால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர் குருந்தம் மேவிய சீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே"

அயன் மால் காணாததைத் திருவங்கமாலையில் திருநாவுக்கரசுநாயனார்:-

"தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு
நான்முகனும் தேடித் தேடொணாத் தேவனை
என்னுள்ளே தேடிக்கண்டு கொண்டேன்."

ஆறாந்திருமுறையில் சோதியாக இறைவன் இருப்பதை

"ஓசை யொலி யெலா மானாய் நீயே
— — — தேசவிளக் கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி"

ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பாவில்

இடர் கெடுத்தென்னை — என்ற பாவில் — — — நற்சோதியுட் சோதி — — — அடல் விடைப்பாகா — — — — இதே போன்று பலவிடங்களில் இறைவனின் அருள் வேண்டிவிளிப்பதைப் பரக்கக் காணலாம். இலிங்கேஸ்வரராகத் தோன்றிய காலம் இராத்திரிகளில் சிவராத்திரியாகும்.

சிவராத்திரி

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய சிவனை வழிபடுவதற்குத் தலை சிறந்த நன்நாள் சிவராத்திரியாகும். இது மாசிமாதத்தில் தேய்பிறைச் சதுர்த்தசி கூடும் இரவு ஆகும். இத்தினம் பகல் திரயோதசியும் இரவு (நடுநிசியில்) சதுர்த்தசியும் வியாபித்திருப்பது மிகவும் உசிதமுடையதாகிறது என ஆகமங்கள் எடுத்துரைக்கின்றன. ஏன் முக்கியமானதென நாம் உய்த்துணர்ந்தால் சக்தி ரூபமான திரயோதசியும் சிவரூபமான சதுர்த்தசியும் ஒன்று சேரும் புண்ணிய காலமது. சதுர்த்தசி வியாபித்த மறு நாள் பாரணை சேர்ந்திருப்பது விரத மேண்மைக்குத் தக்கதாக அமைந்திருப்பதை உணர முடிகிறது.

இந்தச் சிவராத்திரி விரதம், நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என ஐவகைப்படும்.

— அடுத்த இதழில் தொடரும்

சான்றோர் சொல்லமுதம்.

வாழ்க்கையிலே பலர் பல மணிநேரம் துன்பம் தாங்காமல் தற்கொலையைப் பற்றிச் சிந்திப்பதுண்டு குழம்பும், புலம்பும், தவிக்கும், தத்தளிக்கும் நன்மை கிடைத்தவுடன் வாழ்ந்து பார்க்கலாம் என்ற சபலம் வரும். கோடைக்கால வெய்யிலால் காய்ந்து போன ஏரிகள் மாரிக்கால மழையால் மறுபடியும் நிரம்பவில்லையா?

புத்தனின் அமைதியும் சத்தியத்தின் நீண்ட கரங்களும் நியாயத்தின் நெடிய உருவமாக எவன் எழுந்து நிற்கிறானோ அவன் அருகிலே நிற்கவேண்டும். எங்கே நல்ல உள்ளம் இருக்கிறதோ அங்கேதான் சோதனைகளும் இருக்கும். விதி எப்படி இருக்கிறதோ அப்படித்தான் வழியும் போடப்பட்டிருக்கும்.

காலைக் கழுவும்போது முழுப்பாதத்திலும் தண்ணீர் ஊற்றி ஒரு காலால் மற்றக் காலைத் தேய்த்துக் கழுவச் சொல்லுவார்கள். முன் காலில் தண்ணீர் விழுந்து குணுக்காலில் விழாமல் போனால் எந்த இடத்தில் தண்ணீர் படவில்லையோ அந்த இடத்தில் சனீஸ்வரன் வந்து உட்கார்ந்து கொள்வான்.

திருமணத்தின் போது அக்கினி வளர்க்கின்றார்களே ஏன்? ஒழுக்கத்துக்கு அக்கினி சாட்சியாகின்றான். வழிதவறினால் தண்டிக்கின்றான். அம்மி மிதிக்கிறார்களே ஏன்? அம்மி எல்லாருக்கும் வேண்டியது. என்கால் உன்மீது தான் இருக்கும் உன்னைத் தாண்டிப் போகாது. படியைத் தாண்டமாட்டேன் படிதாண்டாப் பத்தினி. அருந்ததியைப் பார்ப்பது ஏன்? அருந்ததியைப் போல நிரந்தரக் கற்புடையவளாக இருப்பதற்கு. பால், பழம், பாலோடு சேர்ந்த பழம் போலச் சுவை பெறுவோம்.

நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

— ஔவையார்.

# வேதநெறியும் சைவத்துறையும்

க. சின்னையா B.A.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனித வாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"
— பெரியபுராணம் —

வளமான வயலும் குளிர்மயமான சோலையும் பரவலாக விளங்குவது சீர்காழி. அங்கே மூன்று வயதுச் சின்னஞ்சிறு பாலகன், தண்ணீர்க் கரையிலே தனிமையாக நிற்கிறான். எங்கும் ஒரே சூனியம். வெறிச்சோடிக் கிடக்கக் காண்கிறான், அவன் வாயோ புனிதவாய், புனிதனை வாயார வாழ்த்த வாய்த்த வாய். குமுதவாய் மலர்கிறது, வார்த்தைகள் நாத வடிவில் "அப்பா" எனப் பரிமளிக்கின்றன. ஆடல் பார்த்திருக்கும் அம்மையப்பன் தோன்றுகிறான். ஆட்டத்தைப் பார்த்திருப்பவன் ஆளுதற்குங் காத்திருப்பவனல்லவா? அப்பன் அம்மையைப் பார்க்கிறான். அவளோ உண்ணாமுலை உமையாள். புனிதவாயில் ஞானப்பால் சொரிகிறது. பிள்ளையார் ஆளுடைய பிள்ளையாரானார் — திருஞானசம்பந்தர் ஆனார். வேத நெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலிவுறவும் பண்ணோடிசைப்பாடல்கள் பரவலாயின. தேன் மடை திறந்து, ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கிய இறைவண் புகழ் எங்கும் திகழ்ந்தது. சைவம் விளங்க வேத நெறி தழைத்தது.

வேத நாயகனாக, வேதத்தைத் தோற்றுவித்தவனாக வேதத்தின் உட்பொருளாக வேத வடிவினனாக விளங்குபவன் ஈசன், திருமாலைச் சுருதி நாயகனாகக் கூறுவார்கள் ஆழ்வார்கள், சிவனை வேதநாயகனாக வேதத்தின் விழுப் பொருளாக ஏற்றிப்போற்றுவர் நாயன்மார்கள். நெறி என்பது உண்மைப் பொருளைத் தேடுவது. வேதப் பொருள் காட்டும் வழிச் சென்று உண்மைப் பொருளைத் தேடுவது வேதநெறி. நெறி என்பதற்கு நீதி, நேர்மை எனவும் பொருள் உண்டு. நீதியான மார்க்கத்தில் வழிப்படுத்துவது சைவநீதி. "பங்கயத் தயனுமாலறியாநீதி" என்பது திருவாசகம். நீதியாகச் சோதிவடிவில் நின்றது சிவலிங்கம் (லிங்கம் = லி — லயம்; கம் போதல் விங்கம் தோன்றுவதற்கும் மறைவதற்கும் ஆய் உள்ள பொருள்). எனவேதான் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்றார்.

வேதகாலம் கி.மு. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்தது. இவ்வுலக வாழ்வினை வழிப்படுத்தி ஆன்மீகத் துறையில் நெறிப்படுத்துவன வேத வாக்கியங்கள். வேத நெறியைக் கடைப்பிடிக்கும் சமயங்கள் வைதிக சமயங்களாம். சமணம், பௌத்தம் போன்றவை அவைதிக சமயங்கள். வைதிக சமயங்களுள் காணாபத்தியம், சைவம், சாக்தம், வைணவம், கௌமாரம், சௌரம் என்பன அகச் சமயங்கள். சைவ சமயமும் சைவசித்தாந்தக் கருத்துக்களும் உண்மையும் உயர்வும் உடையன என மெய்யியலாளர் ஆய்ந்து கூறியுள்ளனர். வேதாந்தம் ஏகான்மவாதக் கொள்கை யுடையது. பரமாத்மா(ஈஸ்வரன்) ஒன்றே உள் பொருள், மற்றைய யாவும் மாயை என்பது அவர்கள் கருத்து. எடுத்துக் காட்டாகச் சூரியனையும் நீர்க்கலங்களில் தோன்றும் விம்பங்களையும் எடுத்துக் கூறுவர். சூரியன் உள்பொருள், நீரிற் தோன்றும் விம்பங்கள் மாயை. இது கேவலாத்வைதக் கொள்கையை உடையது.

"மிண்டிய மாயா வாதமென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்து"

என்கின்றார் மாணிக்கவாசகர், இவர் மாயாவாதக் கொள்கையைக் கண்டிக்கின்றார்.

வைஷ்ணவர்கள் பரமாத்மா ஜீவாத்மா இரண்டுமே உள்பொருள் என்பர். இவர்கள் விஜிஷ்டாத் வைதிகள். இறை, உயிர், தளை மூன்றும் உள் பொருள் என்பது சைவ சமயத்தவர் கொள்கை. இவர்கள் சுத்தாத் வைதிகள். அத்துவிதம் என்பது அ +துவிதம், அதாவது துவிதம் அல்லாதது. அ என்பதற்கு அல்ல என்பது பொருள். துவிதம் இல்லை என்பது பொருந்தாது. இல்லை என்றால் உண்டு என்பது தொக்கு நிற்கிறது. எனவே அத்துவிதம் என்பது ஒன்றல்ல, இரண்டல்ல, ஒன்றிரண்டுமல்ல என்பது கருத்து.

வேதம் கடல் போல் பரந்தது; எல்லையற்றது; ஆழமானது. அதன் வழி நின்று ஆன்மா ஈடேற்றம் பெற நெறிப்படுந் துறைகள் சைவம் முதலிய அகச் சமயங்கள். சமயங்கள் யாவும் ஆறுகள் போன்றவை. ஆறுகள் ஈற்றில் கடலோடு சங்கமமாவது போல் சமயங்கள் ஈற்றில் இறைவனைச் சென்றடையும் மார்க்கங்கள் என்பர் விவேகானந்தர் ்பான்ற ஞானிகள். வைதிக நெறி இறை நெறி. வைதிக

சமயங்கள் வேத நெறியில் தலைப்படுபவை. ஆனால் சமணம், பௌத்தம் போன்ற அவைதிக சமயங்கள் புறம்பானவை. பௌத்தம் கடவுளைப் பற்றியே உட்கொள்ளவில்லை. எனவே அவை இறைவனை அடையும் சுத்த சன்மார்க்கமெனல் எப்படி என்பது சிந்திக்க வேண்டியது?

வேதங்கள் கூறும் ஞானோபதேசங்கள் கரைகடந்தவை. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாகக் கைக்கொண்டு நெறிப்படுவது இயலாத காரியம். ஏனெனில் நமது ஆயுட்காலம் மிக மிகக் குறுகியது. வேதவாக்குகள் அனைத்தையும் பின்பற்றுவது மகா சமுத்திரத்தை நீந்திக் கடப்பது போன்ற செயற்கரிய சாதனையாகும். இதற்குப் பதிலாக இகத்தில் நல்வாழ்வும் பரத்தில் பரம் பொருளின் திருவடிகளும் சித்திக்குமாறு சில நல்லுரைகளையாவது பின்பற்ற வேண்டியது பிறவி எடுத்தவர் கடமையாகும்.

சங்க காலத்தின் பின் தமிழ் மக்களுடைய சுதந்திரம் தளர்ந்தது. களப்பிரர் ஆட்சியில் குடிமக்களின் உயிரும் உடைமையும் ஊசலாடின. உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் இல்லாத காலம். இதனை இருண்ட காலம் என்பர். இக்காலத்தில் மன்னனையே காவலனாக நம்பி வாழ்ந்த சமுதாயம் நிலை குலைந்தது. மன்னனையே சுற்றிச் சிந்தித்திருந்த மக்கள் யாதுமாகி நின்ற பரம் பொருளையே சிந்திக்கத் தொடங்கினர். அவனன்றி அணுவும் அசையாது என்ற உண்மையை உணரத் தொடங்கினர். இக்காலத்தில் ஆழ்வார்களும் நாயன்மார்களுந் தோன்றி அருள் நெறிப்படுத்தப் பண்ணோடிசைந்த பாடல்களைப் பாடி மக்களை வழிப்படுத்தத் தலைப்பட்டனர். பக்தி இயக்கம் ஆரம்பமானது. வேத நெறி மீண்டும் உயிர்க்கத் தொடங்கியது. சைவத் துறை விளங்கத் திரு முறைகள் தோன்றின. வேதம் இறைவனுடைய வாக்கு. சைவத் திருமுறைகள் அடியார்கள் வாயிலாக ஆண்டவன் அருளிய வாக்கு.

நாயன்மார்கள் இறையருளோடு சைவ மார்க்கத்தைப் பரப்புவதில் முனைந்து நின்றனர். அதற்கு அவர்கள் கையாண்ட கருவிகள் தமிழும் இசையும். இசையின் ஆற்றலை அதனுடைய காந்த சக்தியை உணர்ந்த பெரியோர் பண்ணோடிசை பாடிக் கான வெள்ளத்தைப் பரப்பினார்கள். மார்க்கங்கள் அனைத்திலும் பக்தி மார்க்கமே பயமற்றது. ஆண்டவனையே துணையாகக் கொண்ட அன்பர்க்கு குலையாத மன உறுதி ஏற்படுகிறது என்பதற்கு அப்பர் சுவாமிகள் வாழ்க்கை வரலாறு எடுத்துக் காட்டு. பல்லவ மன்னன் அழைத்த பொழுது;

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை அல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை"

எனக் கூறிச் செல்ல மறுக்கிறார் நாவுக்கரசர். பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்காது செம்மையேயாய சிவபதத்தைச் சிந்தித்துத் திடமான அன்பும் தளராத பிடிப்பும் இறைவன்பால் வைத்தவர்க்கு அஞ்சுவது யாதொன்றுமில்லை; அஞ்ச வருவதுமில்லை.

சைவத்துறை விளங்க வழிப்படுத்துந் திருமுறைகள் பன்னிரண்டு. முதலாந் திருமுறையில் ஆளுடைய பிள்ளையார் கண்ட அக்காட்சியைப் பாலூறு தேன் வாயால் காட்டுகின்றார்.

"தோடுடைய செவியன் விடை ஏறியோர்
தூவெண் மதி சூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
னுள்ளங் கவர் கள்வன்"

தோடு மாதர் அணிகலன். சிவன் குழை நக்கும் பிஞ்ஞகன். குழை — காதணி. எனவே தோடுடைய செவியன் என்று பாடியதன் மூலம் சிவனை மாதொரு பாகனாகக் காட்சிப்படுத்துகிறார். மாதொருபாகன் எனில் ஒருபாதி உமை ஒருபாதி சிவனென்று. பின்னமில்லாது விளங்குபவர்.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்பது உமாபதி சிவாசாரியார் வாக்கு. விடையேறி என்பதால் அவரே காக்குந் தெய்வம். தருமமே இடபவாகனம். சுடலைப் பொடி பூசி என்பதால் அவரே உருத்திரனாக அழித்தற் தொழிலையுஞ் செய்கின்றார். உள்ளங்கவர் கள்வன் என்பது பக்தியின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. நான்காந் திருமுறை "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என ஆரம்பிக்கிறது. இறைவன் உயிர்களுக்குப் புரியும் அருளை உணர்த்துகிறது.

"நல்ல குருநாதன் நம்மை வருத்துவது
கொல்லவல்ல, கொல்லவல்ல, பொல்லா வினை
அறுப்பதற்கே"

பித்தா எனத் தொடங்கி "எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய்" என ஏழாந்திருமுறை ஆரம்பிக்கிறது. இது ஈசன் உணர்த்தினாலன்றி உள்ளங்கள் எதனையும் உணர மாட்டா என்பதனைத் தெளிவுறுத்துகிறது. இவ் வுண்மை சுந்தரமூர்த்தி நாயனாருடைய அனுபவ உணர்வு. பந்த பாசங்களில் மூழ்கியிருக்கும் ஆன்மா அவற்றினின்று மனம் விடுபடுவதற்கு வேண்டுதல்

வேண்டாமை இலாத இறைவன் மேல் பாசம் கொள்ள வேண்டும் என்பது வள்ளுவன் வாசகம். பூரணத்துவம் உள்ள பரமாத்மாவை அடைவதற்கும் பூரணத்துவம் சித்திக்கப் பெறுவதற்கும் அவனருள் வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்கின்றார் மாணிக்கவாசகர். ஆண்டவனின் அருளைப் பெற அவன்தாள் வணங்க வேண்டும். ஆனால் அவன்தாள் வணங்குவதற்கும் அவனருளைப் பெற வேண்டும். இது ஒரு சுழல் வட்டம். இந்த உண்மையை எடுத்துக்காட்டுவது சைவத்திருமுறைகள்.

எட்டாவது திருமுறை மணிவாசகரின் திருவாசகம், சிவானுபவச் செல்வம், சைவ சித்தாந்தம் இலக்கணம். திருவாசகம் இலக்கியமாக விரிவுபடுத்தும் தெளிவு.

ஒன்பதாவது சிவானுபவச் செல்வர்களின் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு. நாம் வாழ இறைவனை வாழ்த்தும் பாங்குடையன. பத்தாந் திருமுறை அருளுபதேசத்தில் தொடங்கி, சிவனருளில் திளைத்து சிவத்துதியோடு முடியும் மந்திரமாக, ஞானநூலாக அமைகிறது. இது தமிழில் கூறப்படும் சிவாகமுமாம், இறைவன் அருளையும் அவனடியார்களின் பெருமையையும் விளக்குவனவாக அமைந்துள்ளது பதினொராந் திருமுறை, பன்னிரண்டாந் திருமுறை அன்பு நெறி விளக்கும் கருவூலமாக, தொண்டர் சீர் பரவும் கருவி நூலாக விளங்குகிறது.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க பூதபரம்பரை பொலியத் தோன்றிய குரவர்கள் நால்வர். அவர்களில் மூவர் முதலிகளை மாத்திரம் நாயகப்படுத்தி, திருவாதவூரரைக் குறியாது திருத்தொண்டர் புராணம் ஆக்கப்பட்டுள்ளது. இதற்கான காரணம் யாதோ?

சங்கரரின் மாயாவாதக் கொள்கையை மறுப்பதாலும், மூவர் முதலிக்குப்பின் எழுந்த அத்துவிதக் கொள் கையை ஆதரிப்பதாலும், திருக்கோவையாரில் குறிக்கப் படும் வரகுண பாண்டியன் கி.பி. 9ம் நூற்றாண்டினன் ஆதலாலும் சுந்தரர், அப்பர், சம்பந்தர் ஆகிய மூவ ரையுங் குறித்து வாதவூரரைக் குறியாது செல்வதாலும் வாதவூரர் கி.பி. 9ம் நூற்றாண்டிற்குப் பிந்தியவர். ஆனால் அருண்மொழித் தேவராகிய சேக்கிழார் கி.பி. 12ம் நூற்றாண்டின் முற்பகுதியினர். எனவே வாதவூரர் திருத்தொண்டர் புராணத்தில் குறிக்கப் பெறாதது ஆராய்வுக்குரியது. சேக்கிழார் இயற்றிய பெரிய புராணம் மன்னனை வழிப்படுத்தும் நோக்கமாக ஆக்கப் பெற்றது. அந்தப் புராணத்திலே அறுபத்து மூன்று நாயன்மாரையும் பாடியுள்ளார். அதைப் படித்துப் பார்த்த மன்னனும் மனம் மாறினான்.

பெரிய புராணம் சமய இலக்கியமாக, மக்கள் இலக்கியமாக, வரலாற்று நூலாக, தனித்தமிழ் முதல் நூலாக விளங்குகின்றது. அறிவை அன்பிலே தோய்த்து வழங்குகின்றது. சைவம் செழிக்க, சிவநெறி தழைக்க வழி சமைத்தது. "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" என மீனாட்சி சுந்தரம்பிள்ளை சேக்கிழாரைப் போற்றுமளவு சிறப்புமிக்கது. கவித்துவம் பிளிற்றும் காப்பியமாக சந்தமிகு செந்தமிழன் காப்பியமாகப் பாடி மக்களைக் கவருஞ் சிறப்பினைக் கொண்டது. நூற்பொருளை முகப்படுத்துவது போல பெரியபுராண வாழ்த்துப்பா அமைகிறது. ஈசன் உலகெலாம் என அடி எடுத்துக் கொடுக்க பாபரவுகிறது.

"உலகெலா முணர்ந்து ஓதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

உலகிலுள்ள மக்கள் மனத்தினால் சிந்திப்பதற்கும், வாக்கினால் ஓதுவதற்கும் இயலாமல், மனங் கடந்ததாய், பூரணப் பொருளாய், வாக்குக்கு எட்டாத முழுப் பொருளாய் நிற்பவன் இறைவன். அவனுடைய இயல்பையே "உலகெலா முணர்ந் தோதற்கரியவன்" எனும் முதலடி துலக்குகிறது.

இறைவன் காலங் கடந்தவன்; அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவன்; உருவமில்லாதவன் என வேதங்களும் சாஸ்திரங்களும் சொல்கின்றன. ஆனால் அவன் எல்லாம் வல்லவன்; கருணாமூர்த்தி நம்மை ஆட்கொள்ளும் பொருட்டு தன் நிலையிலிருந்து வந்து எம் உள்ளத்தில் எழுந்தருளுகிறான். திங்களும் கங்கையுந் தரித்த கோலத்தோடு இயல்பாக உருவம் இல்லாதிருந்தும் காட்சியளிக்கிறான். இதை "நிலவுலா விய நீர்மலி வேணியன்" என்ற அடி அழகாக எடுத்துக் காட்டுகிறது. மும்மலங்களும் நீங்கிய சீவன் முத்தர்களுக்கே நிலவும் நீருங்கொண்ட வேணியனாகத் தோற்றமளிப்பார். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களுமுடையோர் சகலர், மாயை நீங்கியவர், பிரளயாகலர்; கன்மம், மாயை இரண்டுமே நீங்கியவர் விஞ்ஞானகலர். மாயையும், கன்மமும் நீங்கிய விஞ்ஞானகலருக்கு ஈசன் சோதிவடிவாய்க் காட்சியளிப்பார். ஆதலால் "அலகில் சோதியன்" எனச் சேக்கிழார் பாடினார். மும்மலங்களும் நீங்கப் பெறாது சகலராக இருப்பவர் மீளா அடிமையாக ஈசனுக்கே ஆளாக முயல்பவர்கள் தரிசிப்பதற்காக அம்பல வாணனாகக் காட்சியளிப்பார். இதனையே அம்பலத்தாடுவான் என்ற அடி விளக்குகிறது.

எனவே மும்மலங்களும் நீங்கப் பெறாத உயிர்களுக்கு அம்பலத்தில் ஆடும் உருத்திர தாண்டவமூர்த்தி நிலையிலும் இருமலங்கள் நீங்கப் பெற்றவர்களுக்குச் சோதிமயமாகவும், மும்மலங்களும் நீங்கப்பெற்றவர் களுக்கு நிலவுலாவிய நீர்மலி வேணியனாகவும் காட்சியளிப்பான் என்பது தெளிவாகிறது. திருவடி திருவருள், திருவருள் சக்தி;

"தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தருஞ் சக்தி" என்கிறார் உமாபதி சிவாசாரியார். "வாசி அருளி அதை வாழ்விக்கும், மற்றதுவே ஆசிலுருவமு மாங்கு" — திருவருட்பயன். வா — சக்தி, சி — சிவம். சக்தி சிவத்தின் குறிப்பறிந்து ஆன்மாக்களை உய்விக்கும் திருவருளே குருவடிவாய்வந்து ஆட்கொள்ளுகிறது. திருவருள் ஆன்மாவிற் பதிதல் சத்திநிபாதம் எனப்படும். இருவினையொப்பு, மலபரிபாகம் ஏற்படுமிடத்து திருவருள் ஆன்மாவிற் பதிந்து சிவத்தோடு சேர்க்கிறது.

இதுவே தாடலை போற் கூடும் கூடல் நிலை.

அம்பலத்தில் நடராசப் பெருமான் ஒற்றைக் காலைத் தூக்கிக் கொண்டு நிற்கிறான். நாமெல்லோரும் அவன் தாளைப் பற்றிக் கொள்ள எளிதான நிலையில் நிற்கிறான், அதை வணங்குவோம் என்பதை விளக்க "மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என்று பாடினார். சைவத்துறையின் நிறைவைக் காண்கிறோம்.

இத்தனை கோலங்களில் இறைவனின் அழகைக் கண்டு, மனம் ஒன்றிச் சிவன் அன்பர்களாக மாறுவதைத்தான் திருமுறைகள் உட்கருத்தாகக் கொண்டுள்ளன. சொல்பவர் உள்ளத்திலும், கேட்பவர் உள்ளத்திலும் சிவபக்தியைப் பெருக்கி வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கச் செய்வன திருமுறைகள்.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

நமது மூளையில் உயர்பகுதி என்றும் தாழ்ந்த பகுதி என்றும் செயல் திறனை ஒட்டி இரண்டு பகுதிகள் இருக்கின்றன. உயர்பகுதி மிகவும் முக்கியமானது. மிக நுட்பமான அறிவு, கற்பனை, கலைநுட்பம், தியானம் செய்யும் ஈர்ப்பு ஆகியவை அங்கேதான் பிறக்கின்றன. தாழ்ந்த பகுதி சாதாரண புலன்களின் வேலையைச் செய்கிறது. சாப்பிடுவது, சாதாரண வேலைகளைச் செய்வது, உணர்ச்சிவசப்படுவது ஆகியவற்றை இது பார்த்துக் கொள்கிறது. உயர்பகுதி ஆபீசர் மாதிரி, தாழ்ந்த பகுதி பணியாளர் மாதிரி, சில அலுவலகங்களில் ஆபீசர் சரியாகச் செயற்பட மாட்டார். அப்போது பணியாளர் இஷ்டப்படி வேலைகள் நடக்கும். திறமை குறைந்து போகும். சாதாரண மனிதனின் சிந்தனை, சக்தி இப்படித்தான் வீணாகிப் போகிறது. உயர்பகுதி நன்றாகச் செயற்பட்டால் மனிதன் உயர்ந்து போகிறான். தெய்வீகமான உணர்வுகளும் ஆன்மீக விழிப்பும் உண்டாக வழி பிறக்கிறது. நமது முன்னோர்களின் மனோபலம் இப்படித்தான் உண்டாயிற்று. அவர்கள் இதைப் புத்தி என்று அழைத்தார்கள். சாதாரண வேலை செய்பவனை அதனால்தான் புத்தியை உபயோகிக்கக் கூடாதா? என்று கடிந்து கொள்கிறோம். மனிதன் வாழ்க்கையில் உயர வேண்டுமானால் இந்தப் புத்தியைப் பயன்படுத்த வேண்டும்; அதைச் செழுமைப்படுத்த வேண்டும். அதற்காகத்தான் முன்னோர்கள் ஜபம், தபம், தியானம் என்றெல்லாம் ஏற்படுத்தி வைத்தார்கள்.

— டாக்டர் பி. ராமமூர்த்தி.

நல்ல சுவையான தின்பண்டம் உங்கள் பசியைத் தீர்க்க வேண்டுமானால் அதைத் தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாலோ, கண்களில் ஒற்றிக் கொண்டாலோ, அதன் முன் விழுந்து வணங்கினாலோ போதாது. கீதையும் இப்படித்தான் பக்தியும், ஞானமும், கர்மமும், வைராக்கியமும் இனிப்பாகக் கலந்த சுவையான தின்பண்டம் அது. அதைச் சாப்பிடுங்கள், அருந்துங்கள். அதில் ஒரு கவளம் போதும். அறுவடை செய்த தானியத்தை எல்லாமா பசித்தவன் சாப்பிட்டுவிடுகிறான்? கையளவு அரிசி போதுமானது. தாகமெடுத்தவன் கோதாவரிவறண்டு போகும்படி அத்தனை நீரையும் பருகிவிடுவதில்லை. ஒரு குவளை நீர் போதுமானது.

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா.

# "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை"

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச சர்வானந்தக்குருக்கள்

ஔவைப் பாட்டியார் பாடிய இந்தச் செய்யுள் வாக்கியத்தை எங்கள் வீட்டுப்பாட்டியும் சொல்லித் தந்தாள். ஔவைப் பாட்டியை எங்களுக்குத் தெரியாது. எங்கள் பாட்டிக்குந் தெரியாதுதான், ஏறக்குறைய இற்றைக்கு இரண்டாயிரமாம் ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்து அரிய நீதிநூல்கள் பலவற்றைத் தமிழ் மக்களுக்கு அருளிச் செய்த தமிழ் மூதாட்டியே அவர். நமக்குத் தெரியாத அந்தக் கூனல் கிழவியை இன்றும் நாம் நினைவு கூருகின்றோம். அவரை என்றுமே தமிழுலகம் நினைவில் வைத்துக் கொள்ளும் என்பதும் யாவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

இந்த உலகத்திலே மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான நல்ல அறிவுரைகளைப் பாடியருளியவர் ஔவையார் என்னும் பெண்புலவர் என்பதை அறிந்தோம். இவரின் பாடல்கள் இனிமையும் எளிமையும் கருத்துச் செறிவும் முக்காலத்திற்கும் ஏற்புடையனவாக அமைந்தவை. யாவருக்கும் நன்கு விளங்கக் கூடிய வகையிலே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி ஆகிய நீதிநூல்களை உலகத்திற்குத் தந்து நீதிநெறிகளை நிலைநிறுத்தினார். அவற்றில் கொன்றைவேந்தனில் அமைந்ததே "தந்தை சொன் மிக்க மந்திரம் இல்லை தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை" என்ற எனது மகுட வாக்கியமாகும்.

மந்திரம் என்பது நினைப்பவரைக் காப்பது என்பது பொருள். இங்கு தந்தையினுடைய சொல்லிலும் பார்க்கப் பாதுகாப்புத் தரவல்லது வேறொன்றுமில்லையென்பதும் தாயிலும் பார்க்க வழிபடவேண்டிய ஸ்தானம் வேறில்லை என்பதும் பொருளாகும். இதனால் வேதமந்திரங்களுக்கோ வழிபடு தலங்களுக்கோ சிறப்பில்லையா? என்ற கேள்வி எழும். அண்டசராசரங்கள் முழுவதற்கும் மேலான ஒரு தலைவன் இருக்கின்றான், அவன் எல்லாவற்றையும் கடந்து நிற்பவன். அதனால் அவனைக், கடவுள் என்று அழைக்கின்றோம்.

இவ்வுலகிலே பிள்ளைகளுக்கு முதலில் அவர்களின் கண்கள் கண்ட தெய்வங்கள் பெற்றோரே. அப்பெற்றோரின் வழிகாட்டலின் பிரகாரமே நாம் கடவுளைப்பற்றி அறிகிறோம். அவரை அடையும் வழிவகைகளை அறிகிறோம். கடவுளை அடைவதற்கான வேதமந்திர நெறிமுறைகளை அறிகின்றோம். அதன் பிரகாரம் நாமேன் பிறந்தோம் என்று சிந்தித்துத் தெளிந்து பிறவிப்பயனை அடைய முற்படுகிறோம். இவற்றிற்கெல்லாம் ஆரம்ப கருத்தாக்கள் தந்தை, தாயரே. ஆலய தரிசனம் செய்யப்புகும் பக்தன் ஒருவன், கோபுரதரிசனம் செய்து உட்பிரவேசித்ததும் விநாயகர், நந்தி, பலிபீடம், பரிவார மூர்த்திகளைத் தரிசித்து வணங்கிய பின்பே மூல மூர்த்தியை வழிபடுகின்றான். இது போலவே நாம் நமது இளமைப் பராயத்திலிருந்தே தந்தை தாயரையும் போற்றி வருதல் வேண்டும் என்று பெருவாயின் முள்ளியார் எனும் பெரும்புலவர் தமது ஆசாரக் கோவை என்னும் நூலில்

"வைகறையாமம் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதிற்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை." என்று முந்திய பேரறிஞர் கண்ட நீதியை எழுதியுள்ளார்.

இன்னும் ஆசாரக் கோவையில் நாலடியாரில் கீழ்க்காணப்படும் ஐந்து பேரையும் தேவரைப் போலத் தொழுதெழ வேண்டும் என்பதையும் நாம் நன்கு நோக்குதல் வேண்டும்.

" அரசன் உபாத்தியாயன் தாய் தந்தை
தம்முன் நிகரில் குரவரிவரிவரைத்
தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே
யாவருங் கண்ட நெறி " என்பதுவே அதுவாகும். அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தம்முன் (தமயன்) இவர்கள் ஐவரும் ஐம்பெருங்குரவர்களாவர்.

இன்னும் "தாயோடு அறுசுவை போம்
தந்தையொடு கல்வி போம்"என்பதும் மேலவர் கூற்றாகும். மக்களுக்கு வேண்டிய அறுசுவை யுணவை ஆக்கி விருப்போடு உணவு கொடுப்பவள் தாய்.

"*தந்தை மகற் காற்றும் நன்றி அவையத்து*
*முந்தியிருப்பச் செயல் என்ற வள்ளுவர்*"
வாக்கிற்கு அமைய பிள்ளைகளின் கல்விக்குப் பொறுப்பாகத் தந்தையே உடந்தையாக இருக்கிறார்.

*"மதலையைப் பெறும் நாள் துன்பம் வளர்த்திடும் நாளும் துன்பம்*
*விதலை நோயடையின் துன்பம் வியன் பருவத்தும் துன்பம்*
*கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்*
*இதமுறல் எந்நாள் சேயால் என்றைக்குந் துன்பமேதான்."*

என்னும் பனுவலுக்கமைய ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கும் பொழுது பிள்ளையைப் பெற்றெடுக்கின்ற போதும் அவர்களைச் சீராட்டித் தாலாட்டி உணவு உடையளித்து, கல்விகற்பித்துச் சான்றோனாக்கும் போதும் அவர்கள் நோய்வாய்ப்பட்ட போதும், வாலிபப் பருவத்தின் போதும் பிள்ளை இறந்துவிட்ட போதும் பெற்றோர்படுந் துன்பம் அளவிடற்கரியது, எனவே பிள்ளைகளால் பெற்றோர் சந்தோஷப்படுவது எப்போ? என்றைக்குந்துன்பமே. மேலும் குழந்தைப் பருவத்திலே நோய் வந்துவிட்டால் தாயானவள் கைக்கின்ற மருந்தைக் குழந்தைக்காகத் தான் குடித்து அந்த மருந்தின் பயனைத் தாய்ப்பால் மூலம் ஊட்டிக் குழந்தையின் நோயைச் சுகப்படுத்துகிறாள். இதனை,

"மகவை ஈன்ற தாய் கைத்திடு மருந்து வாய் மடுத்து பகைபடும் பிணியகற்றிடும் பான்மைபோல்"

என்னும் புலவர் கூற்றை நாம் படித்து உணருதல் வேண்டும்.

ஔவையின் அறநெறி நூலாகிய ஆத்திசூடியில் அன்னையும் பிதாவும் முன் னறிதெய்வம், தந்தை தாய் பேண் என்பனவற்றை நாம் படிக்கும் பொழுது நம்முன்னோர் தகப்பனையும் தாயையும் அன்று எங்ஙனம் போற்றிப் பாதுகாத்து வந்தார்கள் என்பதை அறியக் கூடியதாகக் காண முடிகிறது. எனவே, தமிழ்ப் பெருமக்கள் எங்கிருந்தாலும் தம் பெற்றோரைத் தெய்வமாகவே எண்ணி வாழ்ந்து தாமும் சிறப்புற்றார்கள். அதனாலேதான் தமிழ்ச் சமுதாயம் சமய நெறிபோற்றுஞ் சமுதாயமாக, பண்பட்ட சமுதாயமாக, மேம்பட்ட சமுதாயமாக நாட்டில் எல்லோராலும் மதிக்கப் பெற்று வரலாறு படைத்த சமுதாயமாக வளர்ந்து வந்தது. பழிபாவங்களுக்கு அஞ்சியும் செய்நன்றியுணர்ந்து நற்பிரசைகளாக வாழ்ந்தும் காட்டியது. தரும நெறியுணர்ந்து, "நான் நடப்பது போலவே, எனக்கும் நடக்கும்" என்ற கடவுள் நியதியை ஓர்ந்து சிந்தித்தும் நடந்தார்கள். அன்று நம்முன்னோர் நன்றே செய்தமையாற்றான் நாம் இன்று வரை சிறந்த மனிதர்களாகப் பகுத்தறிவால் நலன்களைப் பக்குவப்படுத்திச் சிறந்தவர்களாக வாழ்கின்றோம். காலதேச வர்த்த மானத்தின் மாறுபாட்டாலோ அல்லது கல்வித்திட்ட மாறுபாடு, சட்டதிட்ட மாறுபாடு காரணமாகவோ அல்லது தாய் மொழியறிவு, சமய அறிவு நிறைவு பெறாத காரணத்தாலோ இன்று இங்கு பல குடும்பங்களிலே பெற்றோர்களின் மதிப்பு, செழிப்பு — களிப்பு, குறைந்துவிட்டதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. இன்னும் ஒருதலைமுறையின் பின்னே இந்நிலை எந்நிலையாகுமோ என அஞ்சவும்படுகிறது. இவற்றை உண்மை நெஞ்சங்கள் கேட்கும் பொழுது பண்பு நிறைந்த பரந்துபட்ட சமுதாயம், பழம் பெருமை போற்றி வந்த சமுதாயம் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்ற கவலை தமிழ் மக்கள் பலருக்கு ஏற்பட்டிருக்கின்றது. சமுதாயச் சிற்பிகளாகிய பெற்றோரை மனம் வருந்தாது பாதுகாப்பது பிள்ளைகளாகப் பிறந்தோரின் தலையாய கடமையாகும். அறிவறிந்த மக்களின் பண்பும் அதுவேயாகும். அதனைவிடுத்து, கடுங்குளிரில் இரவு பகல் தெரியாது நாங்கள் நாயாக அலைந்து திரிந்து உழைத்து வருகிறோம். மூன்று நேரமும் சாப்பிடவும் வேண்டும், அதற்கு மேலும் சொகுசுச் சாப்பாடு, வெற்றிலை பாக்கு பேப்பர் வாசிக்க, அடடா போதும் கூப்பிட்டதும் போதும் நாங்கள்படுகிறபாடும் போதும். கிடைக்கிறதைச் சாப்பிட்டுவிட்டு ஒரு மூலையில் ஒதுங்கிக் கொள்ளக்கூடாதா? அறுபதுகள் சாகுதுகளுமில்லை என்று சுடும் வார்த்தைகளால் பேசிப் பெற்றோரைக் கலக்கமடையச் செய்வதும் எச்சரித்துப் பயப்படுத்துவதும் ஏன் அரசாங்கம் வழங்கும் அகதிப்படியையும் பெற்றோரிடமிருந்து பறித்தெடுத்துத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவதாகவும் சொல்லப்படும் செய்திகளைக் கேட்க நெஞ்சம் நோகிறது. பிள்ளைகள் மாத்திரமா இக்கொடுஞ் செயல்களைச் செய்கிறார்கள்? மக்களுக்கு வந்த மருமக்களும் கொடுமையிற் கொடுமை செய்கிறார்களாம். இந்த நாட்டுச் சட்டம் பெண்களுக்கு நல்ல வாய்ப்பை அளிக்கிறது. பெண்கள் கணவனின் பெற்றோருக்குச் செய்யும் அநீதிகளை பிள்ளையானவன் கேட்க முடியாது. கேட்டால் கூட்டிக் கொண்டுபோய் வைத்துப்பார், அல்லது இந்த வீட்டில் வைத்துப்பார், நான் பிள்ளைகளுடன் வேறிடம் போகிறேன் என்று "சிங்கிள் மதர்" அடிப்பார்கள். இதனால் வாய்ப்பூட்டு ஆகிவிடுகிறார். பொய்யும், புரட்டும், உருட்டும் மேலோங்கி நீதி, நியாயம், கடமை, உரிமை பின் தள்ளப்படுகின்றன. அன்பும், அருளும் ஒளிந்து கொள்ள ஆணவம் ஆட்டம் போடுகிறது. எல்லாப் பெண்களையும் இங்ஙனம் சொல்ல முடியாது ஏன்? தமிழ்க் குலத்தின் மானங்காத்து வருபவர்கள் பெண்களே. ஆனால் ஒருசில ரூபிகளால் தான் பெண் குலத்திற்கே அவமானம் உண்டாகிறது. "நூலுங் கற்கிலர் நுண்ணறிவுமிலர்" ஆகிய

இருபாலாரும் விடும் பிழைகள் சமுதாயத்திற்கே கேடுவிளைவிப்பதாக அமைகின்றது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண்ணிங்கே
இளைப்பில்லைக் காண் என்று கும்மியடி"

என்று பாரதி பாடினான். அதனை நாம் வரவேற்கிறோம். பாரதி தீமையான கருமங்களைச் செய்து பண்பாட்டிற்கு எதிராக செயற்படு என்று எண்ணிப்பாடவில்லை. நீதி நெறி வழியில் உரிமை உண்டு, அதன்படி செயற்படுங்கள் என்று உணர வைக்கவே பாடினான்.

இந்த உலகத்திலே எமக்குக் கண்கண்ட தெய்வமாகிய பெற்றோரை நம்முயிரினும் மேலானவர்களாகப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு பிள்ளைகளின் முதற் கடமையாகும். தன்னைப் பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்கத் தம்பி கும்பகோணத்திலே கோதானம் செய்ததாக ஒரு கதையுண்டு. இங்கு பெற்றோர் உண்ண உணவுக்கு உடுக்க உடைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டு வாழும் போது பிள்ளைகள் ஆடம்பரச் செலவுகள் செய்வது, மதுபானத்திற்குச் செலவழிப்பது, சூதாடுவது முதலானவற்றில் பணத்தைச் செலவழிப்பது தகுதியான, ஏற்கக் கூடிய செயலாகுமா? நாம், தாய் நாட்டில் மகிழ்வோடு வாழ்ந்தோம், பெற்றோரை, மற்றோரை மகிழ்வு கொள்ளச் செய்து வாழ்ந்தோம். அந்த நற்பண்புகளை அங்கு விட்டு விட்டு இங்கு வரவில்லையே. அப்படியானால் அந்த நற்பண்புகள் இக்கரைக்கு வந்ததும் அக்கரைக்குத் திரும்பி விட்டனவா? ஒரு சிலர் செய்கின்ற அநீதியான, ஒழுங்கற்ற செயல்கள் பலதமிழ் மக்களின் மேம்பாட்டிற்குக்களங்கமாக அமையக்கூடாது. பிழைவிடுவது மனித சுபாவமாயினும் அந்தப் பிழைகளை உணர்ந்து திருந்திக் கொள்வதே சிறந்த செயற்பாடாகும். இதனாலேதான் "பிழையை உணர்ந்து திருந்து பெரிய மனிதனாவாய்" என்று நல்லோர் சொல்வார்கள். கண்ணால் கண்ட தெய்வத்தைப் போற்றிப் பாதுகாக்கின்ற மக்கட் சந்ததி மன்னி (நிலைபெற்று) வாழும் என்றும் அவர்களே கண்ணால் காணமுடியாத கடவுளரையும் கண்டு கொள்ள முடியும் என்றும் சைவ நூல்கள் சான்று பகர்கின்றன. எனவே, நாம் வாழ, நம் நாடு வாழ, நம் பண்பாடு நிலைக்க, சைவநீதி நிலைபெற பெற்றோரைப் போற்றி மற்றோரை மதித்து முந்தையோர் முறைகளைக் கைக்கொள்ளுவீர்களாக. இதனால் வருகின்ற பெரும்பயன் நாம் நன்கு வாழ வழி சமைக்கும்.

"நீ பதினான்கு வருடம் காட்டில் வசித்துவா. உன் தம்பி பரதன் நாடாளட்டும் என்று தந்தையாகிய தசரதன் சொற்படி இராமன் காடு சென்றான்." குறித்த கால எல்லையில் தீயோரை அழித்துத் தேவர்களைக் காத்து, தெய்வநீதி போற்றிப் பேர் புகழுடன் திரும்பி வந்து தாயாரின் ஆசிபெற்று குலகுருவாகிய வசிட்டரால் முடிபுனையப் பெற்றான். பெற்றோரை மதித்து, குருவைப் போற்றி நீதிநெறி மறைகளைச் செயற்படுத்தியதனால் இன்றும் ஸ்ரீ இராமனை நாம் நினைவு கூருகின்றோம்.

ஏன்? நமது சமய குரவர், சந்தான குரவர்களின் திருப்பாடல்கள் பலவற்றை நோக்குங்கள். கருவில் திருவினராகிய அப்பெரியார்கள் இறைவனைத் தந்தையாகவும் தாயாகவும் கண்டு தொழுகிறார்கள். ஆனந்தக் களிப்பெய்துகிறார்கள் "எந்தை ஈசன் எம்பெருமான், தாயாகிவந்த தயவான தத்துவனே, பால் நினைந்தூட்டுந்தாயினும் சால" என்ற அருண் மொழிகள் தந்தை, தாயரின் மேலான சிறப்புக்களை எடுத்துக் காட்டி நிற்கின்றன. மனித நிலையிலும் சரி தெய்வ நிலையிலும் சரி நமது சைவநீதி பெற்றோருக்குப் பெருமதிப்பைப் பண்டு தொட்டு அளித்து வந்திருக்கிறது.

வந்தேமாதரம் பாடிய பாவலர் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே" என்று பாடும் போது தன்பெற்றோரை மற்றோரிலும் பார்க்க நேசித்து உளமுருகிப் பாடுவதையும் பாருங்கள். எனவே, ஒளிவாக்குமிக்க உத்தமர் கூற்றுக்களை உற்றுணர்ந்து பெற்றோரை இப்பிறவிக் கடவுளாக உளத்திருத்தி என்றும் போற்றிப் பாதுகாக்க வேண்டும். இவ்வுலக வாழ்வை அவர்கள் நீக்குங்கால் அவர்களுக்குச் செய்யும் இறுதிக் கடன்களையெல்லாம் பக்தியோடு செய்து அவர்களின் ஆன்மா இறைவனடி சேர இறைவனைத் தோத்திரிக்க வேண்டும். நாம் இருக்கும் வரையும் அவர்களின் நினைவாக மாதாமாதம் அனுட்டிக்கும் அமாவாசை, பூரணை விரதங்களையும் ஆண்டுத்திதி முதலானவற்றையும் பக்தியொடு அனுட்டித்து பரமன் திருப்பாதங்களைத் தொழுதேத்தி பிற்சந்ததியினருக்கும் வழிகாட்டிகளாக வாழவேண்டும். சைவசமயத்தினரால் பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டு வருகின்ற சைவநீதி நெறிமுறைகள் மனுநீதியின் பாற்பட்டவை. அவற்றைப் போற்றிப் பாதுகாத்து எதிர் காலச் சந்ததியினர் சைவநெறியில் வாழ வாழ்ந்து காட்டுவோமாக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக
— உலகமெல்லாம்"

# சைவமரபும் விநாயகர் வணக்கமும்

சிவப்பேரன்பர் சி. இலகுப்பிள்ளை
வெள்ளவத்தை

விநாயகர் வணக்கம் சைவ மக்களிடையே முக்கியத்துவம் பெற்றுள்ளது. விநாயகர் என்பதன் பொருள் தமக்கு மேலாக வேறொரு தலைவர் இல்லாதவர் என்பதேயாகும். அப்படியாயின் பரம் பொருளாம் சிவபெருமானுக்கும், விநாயகப் பெருமானுக்கும் பேதம் இல்லை என்பதை உணர முடிகிறது. சிவனின் மூத்த குமாரராக விநாயகர் குறிப்பிடப்படுகிறார். இதனாலேயே இவருக்குப் பிள்ளையார் எனும் திருநாமமும் கிடைத்தது.

பிள்ளையார் பெருமையும் அருமையும் வாய்ந்தவர். "ஓம்" எனும் ஒலியிலிருந்தே இந்த உலகமும் ஏனைய அண்டங்களும் தோன்றுவதற்கான தொடக்கம் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. ஒலியே முதற் தோன்றிய காரணத்தால் ஒலி வடிவினரான விநாயகருக்கு, எக்கருமத்தையும் தொடங்குவதற்கு முன்னர் முதல் வணக்கம் செலுத்துவது எவ்வளவு பொருத்தமானது என்பதைச் சிந்திக்கும் போது சைவ மரபின் பெருமையை அறிய முடிகின்றது.

ஓங்கார மூர்த்தியாகவும், பேரறிவே உருவாகவும் விளங்குகின்ற விநாயகப் பெருமானின் திருவடித் தாமரைகளை மெய்யன்புடன் தினமும் வணங்கித் துதிப்போர்க்கு நல்ல வாக்குண்டாகும், நல்ல மனமுண்டாகும், நல்ல நோக்குண்டாகும் என்று உறுதி கூறுகின்றார் ஔவைப் பாட்டியார்.

கணபதியென்றும் பெயர் பெறுகின்ற விநாயகர் பிரமச்சாரியாகவே குறிப்பிடப்படுகின்றார். ஆயினும் சித்தி, புத்தி எனும் இரு தேவியர்கள் உண்டு என்று புராணங்கள் கூறுகின்றன. சித்தி என்பது எடுத்த கருமங்களில் வெற்றி பெறுதல். புத்தி என்பது அறிவு, விவேகம் மற்றும் உள ஆற்றல்கள் ஆகியவை. வாழ்வில் சகல சித்திகளையும் கொடுப்பவராக உள்ளார். விநாயகரை உள்ளன்போடு வழிபாடு செய்பவர்க்கு அவர்களின் அறியாமையை அகற்றி அவர்களிடம் அறிவொளியை ஏற்றுகிறார். சித்தியும், புத்தியும் அவ்வகையில் விநாயகரின் திருவருட் சக்திகள் ஆயினர்.

ஞான முதல்வனான விநாயகரை நினைத்து முதலில் வழிபாடு செய்த பின்னரே எந்த நாட் கருமத்தையும் செய்கின்ற வழக்கம் எம்மிடையே இருந்து வருகின்றது. விநாயகரின் திருவுரு வத்தைப் பசுவின் சாணத்தினாலோ, மஞ்சள் மாவினாலோ பிடித்து அறுகம் புல்லை அதன் மீது செருகி, மலர் தூவி வணங்குகின்றோம். அறிவு சொரூபியான விநாயகனின் எளிய தன்மையை இது குறிக்கின்றது. அறிவிருக்கும் இடத்தில் எளிமையும், இனிமையும், அன்பும் இருக்க வேண்டும் என்பதை இது காட்டுகின்றது.

பூரண கும்பம் மங்கலமானது. அதனை வைக்கும் போது முதற்காரியமாகப் பிள்ளையார் பிடித்துப் பூசிக்கும் வழக்கம் எம் சைவர்களிடையே நிலவி வருகிறது. பிள்ளையாரை வணங்கினால் வாழ்வில் எடுத்த முயற்சிகள் யாவும் நிறைவு பெறும் என்ற நம்பிக்கையைக் கொண்டு வாழுகின்ற மக்கள் ஏமாற்றமடைவதில்லை. "நம்பினார் கெடுவதில்லை" என்பது நான்கு மறையின் தீர்ப்பாகும். இதற்கிணங்க எம்முன்னோர்கள் வாழ்ந்த, மிகவும் வாழ்க்கை வசதிகள் குறைந்த காலத்தில் வாழ்வித்தது இத்தகைய பரிபூரண நம்பிக்கையே என்பதை மறுக்க முடியாது.

சைவ சமயத்தின் முதற் கடவுளாகிய விநாயகப் பெருமான், பேரன்பு நிறைந்தவர், பேராற்றலும் பேரழகும் வாய்ந்தவர், எங்கும் எதிலும் நிறைந் திருப்பவர். வாழ்க்கை செம்மையுறுவதற்கு மனதில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும், செயலில் நல்லவை வேண்டும். விநாயகர் வழிபாடு இவ்வளவையும் மக்களுக்கு வழங்குகின்றது. நாமும் விநாயகரை நித்தமும் வணங்கி வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று உய்வு பெறுவோமாக.

---

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்

— திருக்குறள்.

# இந்து தர்மத்தின் மன வெளிப்பாட்டுக்கு ஓர் அறிமுகம்

அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை எம் . ஏ

தர்மம் என்ற சொல் மதங்களுக்குப் பொருந்துமா? என்ற கேள்வி நீண்ட காலமாகப் புத்தகப் புத்திஜீவிகள் எண்ணங்களைப் புடம் போட்டு வருகிறது. தர்மம் என்பது ஓர் ஒழுக்கவியற் கோவை அல்லது அறன் எனப்பட்டு எழுதப்பட்டும், எழுதப்படாததுமான சட்டங் களின் தொகுப்பு. இதற்கு நீதிமன்றங்கள் நியாய துரந்தரர் கள் எல்லாமே மனத்தின் பல்வேறு பிரிவுகள் தான்.

மனத்தினைப் பதப்படுத்தித் தர்மம் என்ற விதையினை வளர விடுவதற்காக மதங்கள் என்ற வளமான நிலங்கள் தேவைப்பட்டன. இன்றும் தேவைப்படுகின்றன. இனியும் தேவைப்படும். இதுவொன்றே மதங்கள் நிலைத்து நிற்ப தற்கு அடிப்படையானதாக அமைந்து விடுகிறது.

மதங்கள் அழிய வேண்டும் என்று கூறிக் கொண்டே மனங்கள் பதப்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவதும் அது உயர் குழாத்தினரால் நடாத்தி முடிக்கக் கூடிய செயலாக எடுத்துக் காட்டுவதும் ஒரு போலியான நடவடிக்கையாகும். மனங்கள் சமூகத்தின் நிறுவனங் களின் எந்தவொரு செயற்பாட்டினாலும் மாசுபடுத்தப்படு கின்றன. குறிப்பாக மத நிறுவனங்களின் செயற்பாடுகள் மிக ஆழமானவை என்பது சில தத்துவ ஞானிகளது முடிந்த முடிபாகும். நிறுவனங்கள் என்றபதம் அங்கத் தினரையும் அவர்களது விழுமியங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் வெளிக்காட்டி நிற்பதாகும்.

குழந்தை பிறக்கும் பொழுது அதன் மனமானது வெள்ளை வெற்றுத் தாளினைப் போன்றது. அதில் எழு தப்படுபவை அழிக்கப்படுவதில்லை. திருத்தி வேறு ஒரு இடத்தில் திரும்பவும் எழுதப்படுகின்றன என்பது அனு பவ முதிர்ச்சி பெற்றவர்களின் கூற்றாகும். தெளிவாகத் திருத்தி எழுதப்படாத இத்தகைய செயற்பாடு மன முரண்பாடுகளையும் குழப்பங்களையும் தோற்றுவித்து மனமுறிவுகளை ஏற்படுத்தி வருகிறது. குழந்தைகள் பல ஐயப்பாடுகளை இதுவா அல்லது அதுவா சரி என்ற வகையில் தீர்த்துக் கொள்ளமுனைவதனை நாம் காண முடிகிறது. எனினும் ஐயம் திரிபுகள் தெளிவுபடுத்தப்படு கின்றனவா?

மனிதன் பிறந்ததிலிருந்து வெள்ளை மனமானது எண்ண அலைகளினாற் பாதிக்கப்படுகிறது. எப்பொழுதோ பதிந்திருந்த பதிவுகள் நினைவு நிலைக்குக் கொண்டு வரப்படுகின்றன. இச்செயற்பாடுதான் கடவுள், ஆன்மா, கர்மம், மறுபிறப்பு, குருதிருவருள், பாசசக்தி, ஆணவம், மாயை போன்ற பல்வேறு சொற்பதங் களுக்கு விளக்கங்களை வெளிக்கொணர விழைந்து நிற்கின்றது.

இந்த நிலையிலேதான் மதங்கள் எல்லாம் சமூக மனங்களின் வெளிப்பாடுகள் என்றும் மனங்கள் எல்லாம் மதங்களின் வெளிப்பாடுகள் என்றும் பரஸ்பர தொடர்பினைக் குறிப்பிட்டு நிற்கின்ற தெளிந்த தத்து வம் வெளிக் கொணரப்படுகிறது. இந்த மதங்களுக் குத் தோற்றம், வளர்ச்சி, அழிவு போன்ற உயிரியல் வாழ்க்கைச் சக்கரம் உண்டா? என்ற கேள்வியின் மத்தியிலேயே எமது மதங்கள் ஆதியானது, சிறந் தது, மற்றவர்களால் ஏற்கப்பட வேண்டியது, மற்ற வர்கள் மேல் திணிக்கப்பட வேண்டியது என்பன போன்ற மேலாதிக்க சிந்தனையாளர்களின் ஆதிக்க வெறிக்கு மதங்கள் உட்படுத்தப்பட்டன. இவை ஒரு புறம் மத வெறியினையும் மத வெறுப்பினையும் ஏற் படுத்தின. சந்தர்ப்பவாதிகளின் தன்னலத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. மறுபுறம் பலயுத்தங்களுக்கு அடிப்படையாகவும் வாதப் பிரதிவாதங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தலையங்கமாகவும் இருந்து வந்தன. இன்றும் கூட மன எண்ணத்தில் எழுதப் பட்ட ஒழுக்கக் கோவையினைத் திருத்தி எழுத முயன்று வரும் போராட்டத்தில் மதங்களும் மதப் பிரிவுகளும் தோன்றி வருகின்றன. ஆனால் மதங்க ளோ வாழ்க்கைச் சக்கரக் கோட்பாட்டுக்கு உட்படுத் தப்படாத வளர்ச்சி அல்லது சீர்திருத்தம் என்ற செயற்பாட்டினை மட்டுமே கொண்டிருக்கின்ற அமைப்பாக இருந்து வருகின்றன.

இந்துமதம் எப்பொழுது தோன்றியது என்றால் தெரியாது என்று சொல்பவர்களைத் தான் கேள்விப் படுகிறோம். கிறிஸ்தவம் எப்பொழுது தோன்றியது என்றால் கிறிஸ்துவினால் சீர்திருத்தத்துக்கு உட்பட் டது என்றும், பௌத்த மதம் கௌதம புத்தரினால் சீர்திருத்தப்பட்ட அறக் கோவை என்றும் எண்ணத் தோன்றுகிறதல்லவா? கடவுளின் குழந்தைகளாக அவர்களை வழிபடும் எங்களுக்கு முழுமுதற் கடவுள் என்பது இயற்கையினைப் போன்றது என்ற ஒற்றுமைப்பட்ட முடிவு ஏற்படுகிறது. கடவுட் தத்துவமே ஒரு இயற்கை விதிதான். இந்துமதம் என்புது இயற்கை விதியின் வெளிப்பாடுதான்.

இந்நிலையில் விஞ்ஞானங்களின் வளர்ச்சி இக்கடவுட் தத்துவத்துடனும் இயற்கை விதிகளுடனும் முரண்படுகிறதே என்று கூறும் திரிசங்கு சுவர்க்கிகள் தோன்றி மறைகிறார்கள். விஞ்ஞானப் பதங்களுக்கு விடைகாணக் காண விடைகாணமுடியாத எத்தனையோ புதிர்கள் என்ற கதவுகளைத் திறக்க வேண்டி ஏற்படுகிறது. தொடர்ந்து வரும் இச்செயல்கள் முடிவில்லாப் போராட்டமாக இருந்து வருகிறது.

ஆனால் மதங்கள் இவைகட்கு அப்பாற்பட்டவை. "மனம் எனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றி" விடை காண முயன்றதில் தான் கௌதம புத்தர், யேசு கிறீஸ்து, முகமதுநபி, இராமகிருஷ்ணர் போன்ற பல ஆன்மீக இயற்கை விஞ்ஞானிகள் இயற்கை என்ற தத்துவத்திற்கு விடை கண்டு பிடித்தார்கள். இந்த விடை தான் வாழ்க்கை என்ற தத்துவத்திற்கும் விடையாக அமைந்து விடுகிறது.

புத்தருக்கு முன்னர் எத்தனையோ முனிவர்களும் சிந்தனையாளர்களும், யோகிகளும் மனத்தினை நெறிப்படுத்திக் கண்டுபிடித்த புரியாத புதிர்களுக்கான விடைகளின் எண்ண அலைகள் தான் இந்து என்ற தர்மத்தின் வளர்ச்சிப்படிகளாக அமைந்து வந்தன.

இவ் எண்ண அலைகள் எவ்வாறு மாசுபடுத்தப் பட்டன? தமது தேவைகளுக்காக நியாயப்படுத்தப்பட்டு வந்தவை வழிவழி வந்தோரால் அநியாயம் எனக் கண்டு பிடிக்கப்பட்டன. இவை வரலாற்றின் ஊடாகப் பார்க்கக் கூடிய எச்சங்களாக இருந்து வருகின்றன. இன்று இந்து தர்மத்திற் காணும் குறைகள் யாவும் சந்தர்ப்பவாதக் கும்பல்களினால் தமது தேவைக்காக உட்புகுத்திய உப ஒழுக்கக் கோவைப் பிரிவுகளின் தொகுப்புக்கள் என்பது தெளிவு. இத்தெளிவு மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்குத் தெற்றெனப் புலப்படுவதில்லை. இதுவே இந்து மதம் பற்றிய பல வாதப் பிரதிவாதங்களுக்கும் தற்காலிக முடிவுரைகளை ஏற்படுத்துவதற்கும் அடிப்படையாக அமைந்து விடுகின்றது.

ஆழமான ஆய்வுகளினாலும், தெளிந்த சிந்தனை களினாலும், அகச்சார்பற்ற நியாய வெளிப்படுத்துகை களினாலும் எங்கே? எதற்காக? யாரால் சொல்லப் பட்டன அல்லது உரை எழுதப்பட்டன? இதுவா இந்து தர்மத்தின் இயற்கை விதி என்ற ஆய்வுச் சிந்தனை வெளிப்பாட்டினாலேயே ஒரு இந்துவையும் இந்து தர்மத்தினையும் அடையாளம் காணமுடியும்.

சிவம் என்ற இயக்கமற்ற பருப் பொருளில் சக்தியினை உட்புகுத்துவதனால் ஐம்பெருந் தொழில் வகைகள் நடாத்தப்படுகின்றன என்ற இந்து தத்துவத்தின் உண்மை வெளிப்பாடுதான் பிரபஞ்சத் தில் உள்ள எந்த ஒரு அமைப்பிலும் காணப்படு கிறது. இதனை விளங்கிக் கொள்வதில் தான் ஒரு இந்து பெருமைப்பட முடிகிறது.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

தூயவாழ்வு:- i) எப்பொழுதும் வார்த்தைகளை அளந்து பேசு, இனிமையாகப் பேசு; ii) உன் தேவைகளை முடிந்த அளவுக்கு, மிக மிகக் குறைத்துக் கொள்; iii) இடைஞ்சல்களையும் துயரங்களையும் அமைதியுடனும் தைரியமாகவும் எதிர் கொள்; iv) இறைவனையே எண்ணி, உண்மையையே கடைப்பிடித்து, தூய வாழ்வு வாழ்வாயாக.

— சுவாமி விவேகானந்தர்.

நீ தெய்வத்தைப் பார்க்கவில்லை என்றாலும் தெய்வம் உன்னைப் பார்க்கிறது.

உன்னை உன்வசப்படுத்தினால் மற்றவர்கள் உன்வசப்படுவார்கள்.

உலோபிகளின் செல்வம் பாம்புப் புற்றிலிருக்குந் தேன் போன்றது.

— சுவாமி கெங்காதரானந்தா.

"காத்திரமான குணசாலி எதிலும்
ஆத்திரங் கொள்ள மாட்டான்" — விவியன்

# தரணியெங்கிலும் சைவம்

சாமி அப்பாத்துரை

சைவ நீதிகள் உலகெங்கும் விளங்க வேண்டும். சைவ நீதிகள் தழைக்குமேயானால் உயிரினங்கள் வையத்து வாழ்வாங்கு வாழும். சைவம் தழைத்து சைவ வட்டத்திற்கு அப்பால் அதன் நாதம் ஒலித்து; புல்லும் பூடும், புழுவும், மரமும், பேயும், கணங்களும் அடங்கிய உயிரினங்கள் அத்தனையும் குறைவிலாது வாழ வேண்டிய சைவம், தரணிக்குரிய தனி வாழ்க்கை வழி.

ஆதியும் அந்தமும் இல்லா ஆதி சிவன், அகில உலகங்களுக்கெல்லாம் அதிபதியாய் அருள் புரியும் சைவம், பல அற அருவிகளைத் தன்னகத்தே சங்க மிக்கச் செய்கிறது. திருமுருகன் வேல் போல் ஆழமாய் அகலமாய் கூர்மையாய் வாழ்க்கையை நெறிப்படுத்தும் வளமான சைவம் தரணிக்குச் சொந்தமானது.

சைவத்தின் சாயல்கள் திக்கெட்டிலும் சிதறிக் கிடக்கின்றன. அமெரிக்க கண்டத்திலே "சிவ திட்டு" எனும் பகுதி இன்றும் இருக்கிறது. அங்கு பல்லாயிர மாண்டுகளுக்கு முன் சைவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

பண்டைய கிரேக்க சாம்ராச்சியத்தில் இந்து வழிபாடுகளின் சாயல்கள் காணப்பட்டிருக்கின்றன. எகிப்தில் பல சிலைகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. பிரமிட்டின் கட்டிடக் கலையில் தென் இந்திய ஆலயங்களின் சாயல்கள் தெளிவாகத் தென்படுகின்றன. மெசப்பதோமிய நாகரிகம் படைத்த மத்திய கிழக்குப் பகுதியில் இன்றும் சைவத்தின் சாயம் பூசப்பட்டிருக்கிறது. லிங்க, முருக வழிபாடுகள், திருக்கலியாண முறைகள், திருவிழாக் கொண்டாடப்படும் சம்பிரதாயங்கள் சைவத்தின் நிழலில் வளர்ந்தவை என்பதை நன்கு புலப்படுத்துகின்றன.

சிவமும் சக்தியும் வேறல்ல என்ற சைவமத தத்துவத்தின் ஓர் அம்சமாக அம்மன் வழிபாடு மேலோங்கி இருந்தது. அம்மன் வழிபாட்டினை கிழக்காபிரிக்காவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதனைக் காண முடிகிறது. நைல் நதி ஓரப்பிரதேசங்களில், பொற்சுரங்கம் செறிந்த மேற்கு ஆபிரிக்க மக்களிடம் இன்றும் அம்மன் வழிபாடு கொண்டாடப்படுகிறது. நேப்பாளைச் சேர்ந்த பூர்வீக குடிமக்கள் இன்றும் அம்மன் வழிபாட்டைச் சைவ முறைப்படி கொண்டாடி வருகிறார்கள்.

சிவனின் காவல் தெய்வமான வயிரவர் வழிபாடு "யொருபா" மக்களிடம் இருந்திருக்கிறது. காவல் தெய்வமாக வயிரவரை வழிபட்டு வந்தார்கள். நாக வழிபாடு உலகின் பலபாகங்களில் சிறப்பாக இருந்தது. ஆதி சிவனின் கழுத்தில் அமர்ந்திருக்கும் பாம்பினை, பால்கொடுத்து வளர்த்து வந்திருக்கிறார்கள். பாம்பு இறந்த போது மரியாதையுடன் அடக்கம் செய்தும் வருகிறார்கள்.

சிவன் வழிபாடு அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இருந்திருக்கின்றது. இந்து சமுத்திரத்தில் அமிழ்ந்து போன லெமூரிய கண்டத்தில் சைவம் தழைத்திருந்தது என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன.

உலகெங்கிலும் மனித உயிரினங்கள் அனைத்திற்கும் உரிய சைவம் மேல்எழுந்தவாரியாகப் பார்க்கும் போது சம்பிரதாயங்கள் சடங்குகள் நிறைந்த ஒரு சமயமாகப் புலப்படலாம். கடவுள் கல்லிலும் முள்ளிலும் இருப்பார். தூணிலும் துரும்பிலும் உள்ளார் என்னும் போது சிலவேளை வேடிக்கையாக இருக்கலாம்.

சில தமிழ் அறிஞர்கள் பண்டைக்கால வீரர்களுக்கு நடப்பட்ட நடுகைக் கல்லை மக்கள் வழிபட்டே திருமுருக வழிபாடு வளர்ந்தது என்கிறார்கள். வீர மனிதனின் மேல் தெய்வீகம் புகுத்தப்பட்டது என்கிறார்கள்.

எங்குமிருக்கும் இறைவனை நாம் ஆத்மாவின் துணை கொண்டு ஓரிடத்தில் காண முடிகிறது. காயமென்ற கோவிலில் "உள்ளம் கவர் கள்வன்" ஒளித்திருக்கிறார். ஆத்ம சுத்தியால் பற்றுக்களை அறுத்து பற்றற்றானைப் பற்றுமிடத்து அங்கு ஆலயம் அமைகிறது.

ஆண்டவனை அடைய மார்க்கங்கள் கோடி! பசித்தவனுக்கு உண்டி கொடுத்து அறவழி நின்று ஆதி சிவன் திருப்பாதம் அடையலாம். அகத்தியனுக்கு அருந்தமிழ் உரைத்த ஆறுமுகவன் வழி நின்று அறிவைப் புகட்டி அறியாமை இருளை அகற்றி ஆண்டவனை அடையலாம். அநீதியை எதிர்த்து வீர முழக்கமிட்டுத் தான் அழிந்தாலும் நீதி அழியக் கூடாது என வீரதீரச் செயல்கள் செய்வதன் மூலம் சிவன் திருப்பாதமடையலாம்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்ததைத் தவிர்த்து, இல்லறத்தில் நல்லறம் கண்டு நானிலம் போற்ற நல்லதைச் செய்து வாழலாம். நாவுக்கரசர்

போல் ஊருக்கு உழைத்து உலகை உய்வித்து பிறர் பெற்ற இன்பத்தைத் தான் பெற்றதாகக் கருதியும், தான் பெற்ற துன்பம் பிறர் பெறாதிருக்கவும் உழைத்து உத்தமனாகலாம்.

மெய்அன்பிற்காக எதனை எப்போதும் செய்யத் துணிந்து பக்திக்குப் புதிய வரைவிலக்கணம் தந்த கண்ணப்பன் வழி நின்று கடவுளை அடையலாம். கண்ணப்பன் காலால் தேய்த்ததும், வாயினில் நீர் கொண்டு வந்து அபிஷேகம் செயய் பெற்றதும், சுவைத்துச் சுவையெனக் கண்ட பச்சை இறைச்சி அமுதத்தை உண்டதும் ஆதி சிவனுக்குக் கிடைத்த பெரும் பக்தன் சேவையாக அமைந்தது.

சிவன், சைவ நெறிகளை வேத ஆகமங்கள் திருமுறைகள் எனப்பல வழிகளால் எம்முன் வைத்திருக்கிறாா். வழிகள் எதுவாயினும் வாகனம் அறவழிப் பாதையில் செல்லக் கடமைப்பட்டிருக்கிறது. அதனால் தான் சைவத்தினை வாழ்வில் கடைப் பிடிப்பதில் பலருக்குப் பலவித கருத்துக்கள் தோன்றுகின்றன. இறைவன்மேல் நம்பிக்கை வைக்க வேண்டும். நம்பிக்கை வைக்கும் போது உள்ளம் உறுதி பெறும். உள்ளத்து உறுதி உள்ளத்தை கற்போல் வைரமாக்குகிறது. வைரமான உள்ளத்தில் இறைவனை இருத்திவிடுவோமேயானால் தீய சக்திகளால் உடலைத் தீண்ட முடிவதில்லை. உடல் உள்ளத்தின் ஆணைக்கு அடங்கி நடக்க முனை கிறது. அந்நிலையில்தான் உலகின் நிலையாமை யை உணர முடிகிறது. அப்போதுதான் ஏமாற்றம், துன்பம், துயரம் என்பன துடைக்கப்படுகின்றன.

தெய்வீக அனுபவம் பெறும் பாக்கியத்தைப் பெற அவன் அருள் இருத்தல் வேண்டும். அவன் அருளால் அவன் தாள் வணங்க, தினமும் இறைவனைப் பற்றிச் சிந்திக்க, செயற்பட முனைய வேண்டும். காலை எழுந்ததும் சுவாமி படத்தை வணங்கலாம், வாரத்தில் ஒரு நாள் விரதமிருந்து இறை சிந்தனையை ஊட்டலாம். உள்ளத்தில் எழும் பொறாமையைக்களைந்து பிறர் வளர்ச்சியினைப் பாராட்டலாம். எழுதேர் உழவர் நல்லதை எழுதலாம். சலுகைகளைக் கண்டு மயங்கி, தன்மதத்தை அடகுவைக்க மறுக்கலாம். பிள்ளைகளுக்கு சமய உண்மைகளை விளக்கலாம். சமய நூல்களை வாங்கி வாசித்துப் பயன் பெறலாம்.

சைவம் தமிழகம், தமிழீழத்திற்கு மட்டும் பொருத்தமானதல்ல, உலகெங்கினுக்கும் உரியவை என்பதை உணருவோம்.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

இரண்டு வேளைகளில் ஈசுவரன் புன்னகை புரிகின்றான். முதலாவது கொடும் நோயால் வருந்திச் சாகும் தறுவாயில் இருக்கும் போது, வைத்தியன் உள்ளே வந்து நோயாளியின் தாயைப்பார்த்து "பயப்படவேண்டாம், உன் மகனுடைய உயிரைக் காப்பாற்ற நான் இருக்கிறேன்" என்று சொல்லும் போது. இரண்டாவது, இரண்டு சகோதரர்கள் தங்களுடை நிலத்தைப் பங்கிட்டுக் கொள்ள அளவு கோலைக் கையில் எடுத்துக் கொண்டு கோடு கிழித்து, அந்தப்பக்கம் உன்னுடையது இந்தப்பக்கம் என்னுடையது என்று சொல்லும் போது.

— ஸ்ரீ இராமகிருஷ்ணர் உபதேசம்

அதிசயங்களுள் இது பேரதிசயம் அல்லவா?
நான் உலக வாழ்வு என்னும் சிறுமையில் உழல்பவன். இதில் செல்ல வேண்டாம் என்று இறைவன் என்னைத் தடுத்து நல்வழியில் நடாத்தினான். என்னிடத்தில் உள்ள குறையை நீக்கி என்னைத் தன்மயம் ஆக்கினான். பரத்தில் நான் ஒன்றுபடும்படி செய்தான்.

— மணிவாசகர்

"சகல உணர்வுகளையும், உறவுகளையும் துறந்துவிட்ட நிலைக்கு நிர்வாணம் என்று பெயர்."

— கலைஞர்

"எரிகிறதைப் பிடுங்கினால், கொதிக்கிறது அடங்கிப் போகும்."

— முதுமொழி.

தேனமுதத் தமிழோசை கனடாவில் நிலைபெறவே
ஆனமட்டும் பணி புரிவோம் என உறுதி பூணுகவே.

கனடா வாழ் தமிழ் மக்களே!
கனடா இந்து மாமன்றம் 1994ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மாணவர்களுக்குக் கல்விப் பணி சிறப்பாகச் செய்து வருகின்றது. தமிழ் மொழி, இந்து சமயம், கவின் கலைப் (சங்கீதம், பரதநாட்டியம், வீணை, வயலின்) பாடங்களுடன் மேலும் கணிதம், ஆங்கிலமொழி — வளர்ந்தோருக்கான ஆங்கில மொழி வகுப்புக்களையும் 1996ஆம் ஆண்டில் ஆரம்பிக்கத் திட்டமிடப் பெற்றுள்ளது.

கற்பிக்கும் பாடங்களுக்கான வருடாந்தப் பரீட்சை உரிய முறையில் ஆண்டு தோறும் கார்த்திகை மாதத்தில் நடை பெறும். சைவசமய பாடப் பரீட்சை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் நடைபெற்றுத் தராதரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

உங்கள் பிள்ளைகளை மேற்குறித்த பாட வகுப்புக்களில் சேர்த்துக் கற்பிக்க விரும்பின் — உங்கள் பகுதிகளில் வகுப்புக்கள் ஆரம்பிக்க வேண்டுமென விரும்பின் கீழ்க்காணும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

வணக்கம்.

தொலைபேசி இல.: (416) 431 6054 (416) 724 0602

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தரம் மிக்க தாலிக்கொடி செய்வதில் தனித்துவம் பெற்றவர்கள்!

# இ.எஸ்.கே.ஜுவலறி

சுத்தமான 22 கரட் தங்கத்தில் உறுதியான வேலைப்பாடுகளுடன் உங்கள் விருப்பமான டிசைன்கள். உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் அசல் தங்க நகைகளைச் செய்வதற்கும் உங்கள் ராசிக்கேற்ப கல்லு மோதிரங்களைச் சுத்தமான கல்லில் செய்து கொள்ளவும் ரொரன்ரோ மாநகரில் முன்னணி வகிப்பவர்கள்!!!!!!!!

# E.S.K.Jewellery

தொடர்புகளுக்கு: K.S.Raja (T.K.R.Selvakumar)
1252 Bloor St. West (near landsdown subway)
Tel: (416) 531 9827 Fax: (416) 940 1243

# கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களுக்கான தமிழ்ப் பாடப் புத்தகங்கள்,
- தமிழ் மொழிக்கான திறமைச் சித்தி பாடநெறிப்புத்தகங்கள்
- இந்து சமய புத்தகங்கள், சஞ்சிகைகள்,
- சரித்திரப் புத்தகங்கள்,
- கனேடிய தமிழ்ப் பத்திரிகைகள்,
- இலங்கை — இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்.

எல்லாவிதமான கடைகள் இருந்தும் தமிழ்ப்புத்தகக்கடை இல்லையே என்ற குறையை நீக்க

## *Kalaimahal Book Depot*

595 Parliament St., Toronto, Ont., M4X 1P9
Tel. / Fax: (416) 944 1818; (416) 944 1941

**எமது முக்கிய சேவை: பணம் மாற்றும் சேவை**






# மணிவாசகப் பெருமானின் பக்தி வைராக்கியம்

கவிஞர். வி. கந்தவனம்

வைராக்கியம் என்பது விடாப்பிடியான உறுதிப்பாடு. பக்தி வைராக்கியம் இறைபக்தியில் ஊன்றி நிற்கும் மனவலிமையைக் குறித்து நிற்கின்றது. வைரக்கற்களுக்கும் சாதாரண கற்களுக்கும் வேறுபாடு இருப்பதைப் போலவே வைராக்கிய பக்திக்கும் சாதாரண பக்திக்கும் பெரும் வேறுபாடுண்டு. சாதாரண பக்தியில் பலன் எதிர்பார்ப்பு இருக்கும். வைராக்கிய பக்தியில் இறைவனிடத்தில் இருந்து எவ்வித பலனும் எதிர்பார்க்கப்படுவதில்லை. பெரிய புராணத்திலே பக்தி வைராக்கியத்தை "விறல்" என்று குறிப்பிடுகின்றார் சேக்கிழார் பெருமான்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்று திருத்தொண்டரின் இயல்பை விளக்குகையில் "விறல்" என்ற சொல்லைக் கையாளுகின்றார். இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம். ஆனால், திருத்தொண்டர்களோ பக்திப் பெருக்கத்தினால் இறைவனை வணங்குதலால் ஆகும் இன்பமே போதும் என்று இருப்பவர்கள். முத்திப் பேற்றினைத் தன்னும் அவர்கள் எதிர்பார்ப்பதில்லை. அத்தகைய "விறல்" மிகுந்தவர்கள் என்கிறார் சேக்கிழார் பெருமான். விறல் என்பது வலிமையை அல்லது வீரத்தைக் குறிக்கும். இரு பொருள்களுமே இங்கு நன்கு பொருந்தி வருகின்றன. பக்தி வலிமைக்கு மனத்தை ஒருநிலைப்படுத்துதல் வேண்டும். இது ஒரு பக்குவ நிலை. மனத்தோடு போராடி அதனை அடிமைப்படுத்தியவருக்கே இந்த நிலை சாத்தியமாகும். இந்தப் போரிலே வென்றவர்கள் திருத்தொண்டர்கள். அதனால் அவர்கள் வீரர்கள் ஆகின்றனர். பக்தி முற்றிய நிலையில் பரமன் பணியன்றி வேறுபணி செய்யாத இவர்களை "வீரத்தார்" என்று சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார்.

மணிவாசகப் பெருமான் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றியவர். சிவனன்றிப் பிற தெய்வங்களை வணங்காத வைராக்கிய நெஞ்சு படைத்தவர். இந்த வைராக்கியத்தைத் திருவாசகத்திலே பல இடங்களில் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

"கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடு அல்லால் நரகம்புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறினிறைவா!
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்கள்
— உத்தமனே."

என்று திருச்சதகத்திலே பாடுகின்றார். கற்புள்ள பெண் தற்கொண்டானையன்றிப் பிற ஆடவரை மனத்தாலும் நினையாதிருத்தல் போல, பக்குவப்பட்ட ஆன்மா தன்னை ஆட்கொண்ட சிவனையன்றிப் பிற தெய்வங்களைக் குடியே கெட்டுப்போனாலும் மதியாதிருக்கும் மனத்திட்பத்தை இவ்வாசகம் முன்வைக்கின்றது.

பிடித்த பத்து மற்றுமோர் உதாரணம். "உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே" என்று சிவபெருமானுக்கே சவால் விடுகின்ற வைராக்கியம், முத்திக் கலப்பு வைராக்கியம் எனப்படும்.

இந்தக் கலப்பு இன்ப அனுபவத்தை மற்றவர்களும் பெறவேண்டும் என்னும் பரந்த நோக்கோடு யாத்திரைப் பத்திலே மற்றைய அடியவர்களையும் அழைக்கின்றார். சிவனின் பெருமையைக் கூறுகின்றார். வாழ்க்கை நிலையாமை பற்றி அறிவுறுத்துகின்றார். அடியவர்களின் சிறப்பை விளக்குகின்றார். புகழ்மின் தொழுமின் பூப்புனைமின், புயங்கன் தாளே புந்தி வையுங்கள் என்று வேண்டுகின்றார். சிவபுரத்தின் சிறப்புக்களைப் பலவாறு எடுத்துக் காட்டி அங்கு சென்று சிவனை வணங்கி மனம் உருகி நிற்போம் வாருங்கள் என்று பரிந்து அழைக்கின்றார். பலர் யாத்திரையில் கலந்து கொள்ளவில்லை. அவர்களுக்காக இனியும் காத்திருக்க அவர் விரும்பவில்லை. அவரது வைராக்கியம் இப்படிப் பேசுகிறது:

நிற்பார் நிற்க நில்லா உலகில் நில்லோம் இனிநாம்
— செல்வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப் புயங்கன் ஆள்வான்
— பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால் பெறுதற் கரியன்
— பெருமானே.

சிவபெருமான் தனக்கு அருள்செய்த பெருங்கருணைத் திறத்தை எண்ணி, எண்ணி வியப்பது மணிவாசகப் பெருமானது இயல்பு. இந்த இயல்பு அச்சோப் பதிகத்தில் பெருமிதமாகின்றது. எனக்கு ஐயன் அருளியவாறு வேறு யார் பெறுவார்? என்று பெருமையோடு கேட்கின்றார். ஆச்சரியப்படுகின்றார். இதுவும் பக்தி வைராக்கியத்தின் வெளிப்பாடேயாகும்.

சிவன் வான நாடரும் அறியொணாதவன். வேத முடிபுகளாலும் தொடரமுடியாதவன். பெரிய கூத்தன். அவன் கூத்தை யாரறிவார்? "நான் அறிவேன். அறியும்படி எனக்கு அவன் அருள் செய்தான். அதுவும் எவ்விதமான தகுதியும் இல்லாத எனக்கு அருள்செய்தான். அவநெறியிற் சென்ற என்னைச் சிவநெறிக்கு இட்டுச் சென்றான். அவ்விதமான அருள் வேறு எவருக்கும் கிடையாது. எனக்குக் கிடைத்தது பெரிய ஆச்சரியம்" என்று மணிவாசகர் பெருமைப்படும் பாடல்களில் இதுவும் ஒன்று:

நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தையெனக்கு
அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார்
அச்சோவே!

நாயன்மார்கள் சிவனுக்கு ஆட்பட்டவர்கள். அதனால் எவ்வித இடரும் வராது என்ற நம்பிக்கைக்கு உட்பட்டவர்கள். இந்த நம்பிக்கை அசைக்க முடியாத நம்பிக்கை. அப்பர் சுவாமிகள் பாடுகிறார்:

அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செய்யும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டே னுக்கே.

தில்லையம்பலத்தில் உள்ள சிவனுக்கு அடிமைபூண்ட எனக்கு அல்லலோ அருவினையோ முன்னைய தீ வினைகளோ எதுவும் செய்யாது என்று நாவுக்கரசர் இறும்பூதெய்துகின்ற நிலையை இங்கு காண்கின்றோம். வயதிற் சிறுவராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்ட பாண்டிமாதேவிக்கு ஒரு சந்தேகம். சமணர்களோ எண்ணில்லாதவர். அவர்களை இப்பாலர் வாதிலே வெல்வாரா என்று கவலையுற்றார். பிள்ளையார் இதனை அறிந்து கொண்டு, "மாதேவியே, என்னை நீ பாலன் என்று கருதி வருந்த வேண்டாம். அல்லல் சேர் சமணர்களுக்கு நான் எளியேன் அல்லேன். காரணம் திருவாலவாயின் கண்ணே எழுந்தருளி இருக்கும் அரன் என் பக்கத்தில் நிற்கின்றான்; வெல்வேன்; அஞ்ச வேண்டாம்" என்று வழுதியின் தேவிக்கு ஆறுதல் கூறுமுகமாக "மானினேர்விழி மாதராய்" என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். இறைவன் துணை நிற்கின்றான் என்கின்ற உறுதிப்பாடு அவருக்குத் துணிவைத்தந்தது.

திருவெம்பாவையிலும் இத்தகைய உறுதிப்பாட்டை மணிவாசகப் பெருமான் வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம். சிவனைப் பிரானாகப் பெற்றவர்கள் சிவனையன்றி, சிவனது அடியார்களையும் அதிகம் நம்புகின்றவர்கள். கன்னிப் பெண்கள் மிகுந்த உறுதியோடு சிவபிரானுக்கே கூறுகின்றார்கள்:

உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்.

இந்தச் சைவப் பெண்கள் சிறந்த படிப்பாளியோ உயர்ந்த உத்தியோகத்தரோ பெரிய பணக்காரரோ தமக்குக் கணவராக வரவேண்டும் என்று விரும்பவில்லை. தமக்கு வரவிருக்கும் கணவர்மாரின் தகைமையை இப்பொழுதே தீர்மானித்து விட்டார்கள். அவர்கள் சிவனடியாராக இருத்தல் வேண்டும். சிவனடியார் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இல்லாத அறத்தவர்; ஈர அன்பினர்; யாதும் குறைவிலார்; வீரம் மிகுந்தவர். அவர்களுடன் வாழ்க்கை நடத்துவது பெரிய பேறு. எந்தவித குறையும் வராது.

இன்னவகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோம்.

என்னும் அவர்களது கூற்றில் சிவ நம்பிக்கையால் விளைந்த தன்னம்பிக்கை நறுக்கெனத் தொனிக் கின்றது. திருமணம் குறித்த இதே வைராக்கியம் பின்வரும் பாடலிலும் வெளிப்படுகின்றது:

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம்
கேள்!
எங்கொங்கை நின்னன்பர் அல்லார் தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழில் என் ஞாயிறு எமக்கு ஏலோர் எம்பாவாய்.

"உன் அன்பர் எமக்குக் கணவராதல் வேண்டும். உனக்கே பகலும் இரவும் தொண்டு புரிதல் வேண்டும். எமது இந்த விருப்பத்தை நீ நிறைவேற்றுவாயேல் சூரியன் எங்கு உதித்தாலும் எமக்கு என்ன?" என்கின்றார்கள். "குடிகெடினும் உன்னையே கொள்வேன்" என்று திருச்சதகத்தில் வெளிப்படுத்திய வைராக்கியம் "இங்கு சூரியன் நிலை திரிந்தாலும் சிவ வாழ்வு கிடைத்தால் போதும்" என்னும் அஞ்சாத நிலைப்பாட்டைக் காட்டுகின்றது. சிவ நெறியில் எதுவும் நிலை தளராது என்பது குறிப்புப் பொருள்.

இவ்விதம் தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த சிவபெருமானின் பெருங்கருணைத் திறத்தில் ஊறித்திளைத்த மணிவாசகப் பெருமான், அவ்வனுபவ ஆனந்தத்தினால் சிவவாழ்விலும் சிறந்ததொன்றில்லை என்ற பக்தி வைராக்கியம் உடையராயிருத்தலை அவரது திருவாசகம் நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

<u>பஞ்சபூதக் தத்துவம்:-</u> வேத சொரூபியான பரமசிவன், பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்(நிலம், நீர், தீ, காற்று, வானம்) ஆகிய பஞ்சபூத தத்துவங்களையும் தன்னுள்ளே அடக்கித் தானே அகிலமாக விளங்குகிறான். கீழ்க்காணும் ஐந்து தலங்களில் அவன் உறைவதாகச் சொல்லுவார்கள்.

| | |
|---|---|
| அப்புலிங்கம் | — ஜம்புகேசுவரம், திருவானைக்கா |
| தேயுலிங்கம் | — திருவண்ணாமலை |
| வாயுலிங்கம் | — காளஹஸ்தி |
| பிருதுவிலிங்கம் | — காஞ்சிபுரம் |
| ஆகாசலிங்கம் | — சிதம்பரம் |

இத்தலங்களில் உள்ள லிங்கமூர்த்திகளைத் தரிசித்து இயற்கையையே இறைவனாகக் காணும் அனுபவத்தை அடியார்கள் பெறுகிறார்கள்.

<u>ஊர் சுற்றிப் பார்க்கலாம்:-</u> பகலிலேயே தங்குமிடம் தேடிக் கொள்ளாவிட்டால், இரவில் இருக்க இடமில்லாது அவன் தவிப்பான். இவ்வுலகு என்னும் பட்டணத்துக்குள் வந்துள்ள நீ இறைவனுடைய அருள் என்னும் தங்குமிடத்தை முதலில் தேடிக்கொள். பிறகு வேண்டியவாறு உலக வாழ்வை நடத்து. அருளைத் தேடிக் கொண்டால் அந்திய காலத்தில் நீ அல்லல்பட மாட்டாய்.

— பகவான் இராமகிருஷ்ணர்.

<u>பாராயணம்:-</u> தினசரி பாராயணம் ஓரளவு செய்யணும். அதுக்கும் மேலே ஜபம். ஜபத்திற்கும் மேலே தியானம். மூன்வது படியாக இருப்பது தியானம். தியானம் பண்ணுவதனாலே மனம் ஒடுங்குகிறது, இன்ப எழுச்சி உண்டாகும்.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்.

— சுவாமி விவேகானந்தர்.

யாவர்க்கு மாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம் பிறர்க்கின்னுரை தானே

— திருமந்திரம்.

# ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமையும் உணர்த்திய சிவயோக சுவாமிகள்

வித்துவான் க.ந. வேலன்
கொழும்பு — 6

சிவயோக சுவாமிகள் இந்த நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தவச் செல்வர். அவரைப் பார்த்தவர்கள், கண்டவர்கள், கேள்விப்பட்டவர்கள் பலர். ஆனால் அவரைத் தரிசித்தவர்கள், அவரை உணர்ந்தவர்கள் மிகமிகச் சிலரே. "உணர்ந்தார்க்கும் உணர்வரியோன் தில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்" என்பார் மணிவாசகர். சிவனுக்கு இயைந்த இந்தப் பொருத்தம் சிவனடியார்க்கும் பொருந்துவதாகும்.

சிவனடியாராகிய சிவயோக சுவாமிகளைச் சிறிது உணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். ஈழத்திலும் இந்தியாவிலுமுள்ள தமிழ் மக்களை, சைவ சமயத்தை, இந்து சமயத்தைக் காத்தருள அவதரித்தவர் நாவலர் பெருமான். அவர் அகத்தும் புறத்தும் தமக்கேற்பட்ட பகைகளைச் சமாளித்துச் சைவப் பயிரைக் காத்து வளர்த்துவிட்ட சூழலில், ஒரு ஞானியை வேண்டித் தவங்கிடந்தது சைவம் — இந்து சமயம். அந்தத் தவத்தின் பயனாகச் சிவயோக சுவாமிகள் அவதரிக்கும் பேறு ஈழத்துக்கு — யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்தது. நாவலர், உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் தன்னகத்தே கொண்ட சைவ சித்தாந்தத் தளத்தில் நின்று தமிழினத்தைக் காக்க நடத்திய போராட்டத்தினால் சைவம் வீறு நடை போட்டது. அதே நேரத்தில் சைவ சித்தாந்தம் வேதாந்தத்துக்கு வேறானது மாறானது என்னும் தவறான கருத்தும் தோன்றலாயிற்று.

வேதாந்த சித்தாந்தமென்பது வெவ்வேறான வழியிற் சென்றடைந்த ஒரே ஆன்ம பக்குவமேயன்றி வெவ்வேறான மதங்களல்ல.

ஆனால், அவை இரண்டும் வெவ்வேறானவை எனக் கொள்ளும் வேதாந்திகளும் சைவ சித்தாந்திகளும் இன்றும் உள்ளனர். இந்தச் சூழ்நிலையிலேயே "வேதாந்த சித்தாந்தம் வேறாகக் கொள்ளோம்" எனக்கூறிய சிவயோக சுவாமிகள் தோன்ற வேண்டியதாயிற்று.

நாவலருக்குப் பின் சைவசித்தாந்தம் மறுமலர்ச்சி யடைந்திருந்த வேளையில் சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகை இடம் பெற்றது. வேதாந்தத்தின் மூலம் இந்திய ஒருமைப் பாட்டைப் பேணிச் சுதந்திரப் போராட்டத்துக்குத் தளம் அமைத்துக் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் பணிக்காக விவேகானந்த அவதாரம் நிகழ வேண்டியதாயிற்று. அமெரிக்காவிலிருந்து பெரும் புகழோடு மீண்ட சுவாமியை முதன் முதலில் வரவேற்கும் பேறு இலங்கைக்கே கிடைத்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுவாமிக்குக் கொடுக்கப்பட்ட மகத்தான வரவேற்பில் முன்னின்று உழைத்தவர்களுள் இளைஞனான யோகநாதனும் ஒருவராவார்.

நாவலர் மறைவால் மகிழ்ந்திருந்த புறமதத்தினருக்கு விவேகானந்தரின் வருகை கவலையளிப்பதாயிருந்தது. சுவாமியின் வருகையினால் இலங்கையில் இந்து மதம் எழுச்சி பெறுவதைச் சகிக்க முடியாத சக்திகள் இந்துக்களிடையே உட்பகையை விதைக்க முனைந்தன. இவற்றுள் பௌத்தர் புறத்தில் நின்றும் கிறிஸ்தவர் அகத்தில் நின்றும் தத்தம் வேலைகளைத் தொடங்கினர்.

சைவ சித்தாந்த மரபினைப் பின்பற்றும் இலங்கைச் சைவர்கள், வேதாந்த மரபினராகிய விவேகானந்தரை வரவேற்பது சைவத்துக்குச் செய்யும் துரோகமல்லவா? ஆகா! எவ்வளவு அனுதாபம் இந்தக் கிறிஸ்துவர்களுக்கு!, இந்தப் பௌத்தர்களுக்கு! இந்தப் பரிவாளர்கள், சில தமிழ்க் கிறிஸ்துவ குருமாரும் சில பௌத்த குருமாருமே அன்றி வேறல்லர். இந்தப் பரிவிலுள்ள சூதை, யாழ்ப்பாணம் புரிந்து கொண்டது. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு தெரியாதவன் போலிருப்பவன் யாழ்ப்பாணத்தான். அப்படி ஒரு எளிமை!

வேதாந்த சித்தாந்தம் என்பது முன்னர்க் கூறியது போல ஆன்ம பக்குவமேயன்றி வேறல்ல. இதனையே மாம்பழக் கதை உட் பொருளாகக் கொண்டது. உலகைச் சுற்றி வந்து முதலில் மாம்பழத்தைச் சிவபெருமானிடம் பெறுவதற்காக முருகன் மயிலில் ஏறிவிட்டான். பாவம்! பிள்ளையார். தொந்தி வயிறு; வாகனம் எலி! உலகு கிடக்கட்டும், சிவனும் சக்தியும் வீற்றிருக்கும் கைலாச மலையைக் கூடச்

சுற்றி வர அவர் முயலவில்லை. அவர் சிவனையும் சக்தியையும் ஒன்றாகக் கண்டு, இறைவனையும் உலகையும் ஒன்றாகக் கண்டு அவர்களைச் சுற்றி வந்து வணங்கி மாம்பழத்தை முன்னராகவே பெற்று உண்டு சுவைத்துக் கொண்டு நின்றார்.

கதாப் பிரசங்கிகளினால் விவரமாகச் சொல்லப் பெறும் இக்கதை ஓர் ஒப்பற்ற தத்துவத்தை நமக்குத் தெரிவிக்கின்றது.

ஏறுமயில் ஏறி விளையாடும் முகங்கூறும் பொருளை முருகா, நீ அருள வேண்டும். ஒருமையாகிய சிவனையும் சக்தியையும் சுற்றி வந்து கண்ட முடிவும் ஒன்றுதான். பன்மையாகிய இவ்வுலகெலாம் பறந்து முருகன் கண்ட முடிவும் அந்த ஒன்றுதான்.

பிள்ளையார் ஒருமையில் பன்மை கண்டார், முருகன் பன்மையில் ஒருமை கண்டார். இதுவே இந்து தத்துவம் கூறும் அத்வைத, துவைத, விசிட்டாத்து வைத, சைவ சித்தாந்த முடிவு.

உலகம் பன்மைப்பட்டே இருக்கும். இது என்றும் மாறா உண்மை. அந்தப் பன்மையில் ஒருமை காண்பதே ஞானம். அதனையே சைவ சித்தாந்தம் சொல்கிறது. இதனையே "ஒன்றாகக் காண்பதே காட்சி" என ஔவையார் உரைத்தார்.

பிள்ளையார் சிவசக்தியாகிய ஒருமையைச் சுற்றி வந்து பன்மைப்பட்ட உலகினைச் சுற்றி வந்த பயனைப் பெற்றார். இதுவே பன்மையில் ஒருமை காணல்.

ஒருமையில் பன்மை கண்டவர், அனைத்தையும் வேற்றுமை நீக்கி ஒன்றாகக் கண்டவர், முதலில் சிவக் கனியைப் பெற்றுக் கொண்டார்.

இந்து மதம் அவரவர் ஆன்ம பக்குவத்துக்கு ஏற்பக் கனி பெறும் வழியைச் சொல்கின்றது. ஆதலால் இங்கு மாறுபடும் கருத்தில்லை. இதனை விளங்காதவர், விளங்கிக் கொள்ள முடியாதவர் நம்மிடையே பகை மூட்டுஞ் செயலை விவேகானந்தரின் வருகையை முன்னிட்டுத் தொடங்கினர்.

இதனை எதிர்த்துக் குரல் எழுப்பியது இந்து சாதனம் என்னும் பத்திரிகை.

சீவனைச் சிவத்தி னொன்றாய்ச் சேர்க்கும்
சித்தாந்தத் தோர்க்கும்
சீவனைப் பரத்தி னொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத் தோர்க்கும்
பாவனை இரண்டும் ஒன்றே பரம
ஞானத்தோர்க் கெல்லாம்
மேவிய கரும காண்டம் விளம்பிடில்
பேத மாமே — சிவபுண்ணிய விதி.

மேலேயுள்ள பாடலால் வேதாந்த சித்தாந்தம் வேறல்ல என்பதை அப்பத்திரிகை விளக்கியுள்ளது. "பதி பசு பாசம் எனப்பகர் மூன்று" என முப்பொருள் கூறிய சைவ சித்தாந்த மூலவராகிய திருமூலர், "சீவன் என்னச் சிவனென்ன வேறில்லை" என வேதாந்தம் பேசுகிறார்.

இந்த ஞானத் தெளிவு வெறும் சமயவாதிகளுக்கு வராது. சமயங் கடந்த இந்த நிலை, சீவன் முத்தர் நிலையாகும். அந்தணர் பிறர்க்கு அடிமையாவ தில்லை என வாது பேசிய சுந்தரன், இல்லை, சாதி பேசிய சுந்தரன், "திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்" எனச் சாதி குலம் பிறப்பு என்னும் கட்டறுத்து விட்டு விடுதலையாகி நிற்கின்றான்.

விட்டு விடுதலையாகி நின்ற யோகசுவாமிகள் கட்டற்றுத் தாம் நின்ற அத்துவித நிலையினை நற் சிந்தனையின் முதற்பாட்டின் முதலடியினால் தெளிவா கக் கூறியுள்ளார்.

**என்னை எனக்கறிவித்தா னெங்கள் குருநாதன்**
**இணையடியென் தலைவைத்தா னெங்கள் குருநாதன்**
**அன்னை பிதாக் குருவானா னெங்கள் குருநாதன்**
**அவனி யெல்லா மாளவைத்தா னெங்கள் குருநாதன்**
**முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள் குருநாதன்**
**மூவருக்கு மறியவொண்ணா னெங்கள் குருநாதன்**
**நன்மைதீமை யறியாதா னெங்கள் குருநாதன்**
**தான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்.**

குரு வணக்கமாக அமைந்துள்ள இம்முதற் பாடல் சுவாமிகள் பெற்றிருந்த அனுபூதி நிலையினைக் காட்டுகின்றது. சீவகரணங்கள், சிவகரணங்கள் ஆன பெருநிலையிலேயே இப்பாடல் பிறந்தது என்பதை இது உணர்த்துகின்றது.

"பாட அறியான் பலகலையும் தானறியான்
தேட அறியான் சிவயோகன்" எனவும்
"எழுவாய் பயனிலைகள் இல்லாமற் பாடித்
தொழுவான் சிவயோகன்" எனவும் தன்னைத் தாழ்மையோடு குறிக்கும் சுவாமிகள் தன்னையறிந்த நிலையிலேயே நற்சிந்தனை என்னும் ஞானப் பனுவலைப் பாடியுள்ளார்.

ஞானிகள் நடத்திய போராட்டமெல்லாம் இந்தத் தன்னை அறியத்தானே. ஏனெனில்,

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை

தன்னை அறியாது தானே கெடுகின்றான்''
எனவே,

''தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே — ஒரு
தந்திரம் நீசொல்ல வேண்டும் வெண்ணிலாவே''
எனத் தாயுமானவர் வேண்டுகின்றார்.
தன்னை அறிந்த நிலையில்,

''சந்ததமும் எனது செயல் நினது செயல்
யானெனும் தன்மை நினையன்றி இல்லாத்
தன்மையால் வேறலேன்''

எனும் அத்துவித நிலை ஏற்பட்டு விடுகிறது. இந்த அத்துவித நிலையைத் தாமெய்தி நின்ற தன்மையினையே என்னை எனக்கு அறிவித்தான் எனச் சிவயோக சுவாமிகள் பாடியுள்ளார்.

இறைவனே அன்னை, பிதா, குருவென உணர்ந்த நிலையில் அவன் திருவடி ஞானத்தால் நாதவிந்து தத்துவம் உணரப் பெற்ற ஆன்மா, அவனியாகி நிற்கும் இறைவனையன்றி வேறெதனையும் உணராது. அவனியாகி நிற்கும் இறை என்பது, இறைவன், பாரிடை ஐந்தாய், நீரிடை நான்காய், தீயிடை மூன்றாய், வளியிடை இரண்டாய், வெளியிடை ஒன்றாய் நிற்கும் நிலையாகும். இதனையே ''அவனியெலாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்'' எனச் சுவாமிகள் பாடுகின்றார்.

மூவினைகளுள முன்னை வினையாகிய பழவினைகள் பாறின
விண்ணுற அடுக்கிய விறகினில் வெவ்வழல் நுண்ணிய
புகில் அவ்விறகு ஒன்றும் இல்லையாகிச் சாம்பலாகி
விடுதல் போலப் பண்ணிய பழவினைகள் அற்றன.

எல்லாப் பொருள்களும் தீயினால் கருகிச் சாம்பலாகி விடும் இயல்பின. புறக் கண்ணால் காணக் கூடிய பொருள்களின் இறுதிநிலை சாம்பலே. சாம்பல் தானே என்று பார்ப்பவர்க்கு அது வெறும் சாம்பலே.

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொரு பிடிசாம்பலாய் வெந்து முடிவர் என்றும் அச்சாம்பலே இறுதிநிலை என்றும் உணர்ந்தவர்க்கு அது சாம்பலல்ல. அதுவே முடியா முதலாகிய சிவம். அதுவே சிவத்தைக் குறிக்கும் சிவசின்னம். அதுவே திருநீறு. எனவே திருநீறு வேறு, சிவம் வேறல்ல. சைவ சமயத்தில் சிவசின்னங்கள் மூன்று. அவை, திருநீறு, உருத்திராக்கம், ஐந்தெழுத்து என்பன. இவை மூன்றும் முன்னை வினையின் முடிச்சை அவிழ்ப்பன. பின்னைவினையைப் பிடித்துப் பிசைவன. இதனையே, முன்னைவினை (பழவினை) நீக்கி விட்டான் எங்கள் குருநாதன் எனச் சுவாமிகள் பாடுகின்றார்.

அடுத்து ''மூவர்க்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்'' என்று பாடுகின்றார். இதனை மேம் போக்காகப் பார்க்கும் போது ஒரு புதுமையுமில்லை. நமது திருமுறைகளிலும் புராணங்களிலும் இச்செய்தி விரித்துக் கூறப்பட்டுள்ளது. ஆனால், சுவாமிகள் இதனை இங்கு குறிப்பிடுவதற்கு ஒரு குறிப்பு உண்டு.

அனுபூதியடைந்து சீவன் முத்தராய் நின்று பாடும் சுவாமிகள், தாம் இறைவனை அடைந்ததையே குறிப்பாக மூவருக்கும் அறியவொண்ணான், ஆனால் எனக்கு எளியன் எனக் குறிப்பிடுகின்றார். அத்தகையோனை,

''நல்லூரில் தேரடியில் நான் கண்டு போற்றினேன்''
''நல்லைப் பதியில் தேரடியில் தேசிகனைக் கண்டு
— தரிசித்தேன்''

எனப் பின்னரும் தாம் கண்ட இடம் சுட்டிப் பாடுகின்றார். அடுத்துவரும் நன்மை, தீமை அறியாதான் எங்கள் குருநாதன் என்னும் இறைநிலையும் புதியதல்ல. அந்த நிலையைத் தான் அடைந்து விட்டேன் என்பதையே சுவாமிகள் குறிப்பாக இங்கும் உணர்த்துகின்றார்.

பின்னரும் இதனையே இருவினை என்பதும்
பேச்சே — சிவசிவ
என்னை அறிந்தேன் இடர் அற்றுப் போச்சே
எனப் பாடுகின்றார்.

இறுதியாக ''நான் தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்'' எனக் குருவணக்க முதற் பாடலை நிறைவு செய்கின்றார். நான் வேறு அவன் வேறு என்னும் இருமை மாறி ஒன்றாகக் காணும் காட்சி பெற்ற போது சீவன் சிவனாச்சு. இப்போது ஒன்று இரண்டு என்றிடும் பேதமும் போச்சு.

இந்த முதற் பாடலிலேயே சுவாமிகள், குரு அருளால் நாதவிந்து தத்துவம் விளங்கப் பெற்றுத் தன்னை அறிந்து அன்னை பிதாக் குருவேயன்றி அவனியெல்லாம் அவனே என உணர்ந்து முன்னை வினை தீர்ந்து மூவருக்கும் அறியவொண்ணானைத் தான் அறிந்து இருவினை ஒப்புப் பெற்று சீவன் சிவனாகும் சத்திநிபாதம் கைவரப் பெற்ற சீவன் முத்தி நிலையை இக்காயத்தே பெற்ற பேற்றை வியந்து பாடுகின்றார்.

# சிவநெறிச் செந்தமிழ் ஏடு

சங்கர சங்கர சம்பு — சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு

பண்டிதர் . புலவர் வீ. வ. நம்பி

கனடாத் தமிழரா யின்று — அத்திக்
கடல்தனைத் தாண்டியே வந்தவர் நாங்கள்
இனத்தால் தமிழரே என்றும் — ஈழம்
இந்தியா பற்பல இடங்களெம் தேசம்
— கனடாத்

தாய்மொழி தமிழே யெமக்கு — எங்குந்
தன்னே ரிலாமொழி தானது வாகும்
ஆய்கலை அறுபத் துநான்கு — அவை
அத்தனை யுமெமக் கரியசொத் தாகும்
— கனடாத்

தமிழுஞ் சமயமு மெங்கள் — தனிவிழி
தானென எண்ணிக் கொண்டு வப்போம்
அமிழ்தக் கலையிவை இரண்டும் — வாழ்வில்
அன்புடன் போற்றியே ஆதரிப் போமே
— கனடாத்

கூடித் தமிழரெல் லோரும் — ஒன்றாய்
கொலுவிருத் தித்தமிழ்ச் சங்கம் அமைத்து
நாடித் தமிழ்ப்பணி செய்வோம் — மக்கள்
நன்கு தமிழ்தனைக் கற்றிட வைப்போம்
— கனடாத்

சைவந் தமிழ்மொழி இரண்டும் — எங்கள்
சந்ததி தோறுமே ஒன்றுட னொன்றாம்
ஐவர் குரவர் களானோர் — காட்டும்
அருண்மொழி யாவுமே கற்று மகிழ்வோம்
— கனடாத்

மெய்யுணர் சைவ சமயம் — அதன்
மெய்ப்பொருள் காணுவம் கனடா விலின்று
தெய்வ அருட்பணி ஆற்ற — மன்றம்
தேவ துணையுடன் கூடிய திங்கே
— கனடாத்

இந்துமா மன்றங் கனடா — எனும்பேர்
இப்புவி தன்னில் இலங்கித் துலங்க
மந்திரம் வேதம் ஒலிக்க — மடமை
மாசற, தேசுற மாதவ மோங்க
— கனடாத்

எண்ணங்கள் நல்லவை யாக — ஏத்தும்
இறைதிரு நாமங் களெங்கு மொலிக்க
மண்ணக மாந்தர் பலரும் — மேலும்
மனங்கனிந் தின்னருள் வேண்டித் தொழவும்
— கனடாத்

தமிழ்மொழி சைவமும் அன்றி — மற்றும்
தமிழ்தரு கவின்கலை யாவுமே சேர
தமிழிசை கூட்டுத் தொழுகை — தூய
தமிழ்த்திரு விழாக்களின் தனித்துவம் பேணி
— கனடாத்

திருத்தொண்டத் தொகையடி யார்கள் — தெய்வத்
திருத்தல மகிமை திருநீ றணிதல்
உருத்திராக் கம்சிவ சின்னம் — எல்லாம்
உருப்பட வைக்கும் திருப்பொரு ளாகும்
— கனடாத்

இன்பம் பெருக்கெடுத் தோட — இறை
இன்னருள் யாவரும் இனிதுபெற் றிடவே
துன்பம் ஒழிந்திட வேண்டி — நாளுந்
தூயோன் திருப்பதம் தொழுதெழு வீரே!
— கனடாத்

மண்ணிற் பிறந்த பயனாம் — அந்த
மாதவன் சீரடி மன்னுதல் தானே
நண்ணி மனத்தில் நினைந்தால் — நமக்கு
நன்மை பலவரும் நாடும் நலமுறும்
— கனடாத்

தானந் தவங்கள் தனித்தனி — ஆற்றி
மோனத் திருப்பணி முறைப்படி செய்யுமின்
ஞானத் திருநூல் நயந்து படித்தால்
வானத் தமரர் வலமிட மாவீர்
— கனடாத்

ஐந்தலை நாகநன் மணியை — அவாவி
அரிதின் முயன்றிடின் அதுபெற லாமே
சிந்தை சிவனிடம் சேரின் எவர்க்கும்
ஏதுமே துன்பமு மெய்திட மாட்டா
— கனடாத்

நட்டம் பயின்றிடும் நாதன் — அவனோ
நம்பின பேர்களைக் கைவிட மாட்டான்
இட்ட முடன் சிவ பாதன் — உலகில்
எல்லாப் பொருளுங் கடந்தவ னன்றோ
— கனடாத்

இந்துமா மன்றங் கனடா — இங்கே
இறைபணிக் காகத் தொடங்கிய மன்றம்
செந்தமிழ்ச் சஞ்சிகை ஏடு — அது
சித்தம் தெளிந்திடவைக்கும் மருந்து
— கனடாத்

இறைவனை நீதியென் றழைக்கும் — இயல்பின்
இதன்பெயர் சைவ நீதி யதாகும்
துறைமிகு கலைபயில் சான்றோர் — பல்லோர்
தரவுகள் நிறைவு பெற்றதிம் மலரில் — கனடாத்

தமிழகத் துள்ளபே ரறிஞர் — எங்கள்
தமிழீழத் தாயகச் சான்றோர் பலரும்
அமிழ்தெனும் சிவநெறி வல்ல — கனடா
அறிஞரும் மலேசியா லண்டன் கலைஞர்
— கனடாத்

எழுதிய ஆசிகள் கவிதை — அறிவின்
எண்ணத் துதித்த கருப்பொருள் யாவும்
முழுதும் சிறந்த படைப்பே — இந்த
மூதறி ஞர்தரம் சொல்லற் கெளிதோ
— கனடாத்

தண்டமிழ் சைவம் சிறக்க — யாண்டும்
தாவிப் பரந்துமே பூத்துக் குலுங்கி
எண்டிசை எங்கும் நிலவ — இளம்
எழுதுநர் யாவரும் இதயத் துவப்ப
— கனடாத்

உதித்தது சைவ நீதி — உலகம்
உவப்பொடு படித்து உறுபொருள் காண்க
பதிந்திடும் மனதில் சமயம் — தமிழ்ப்
பண்புடன் வாழுக! பாரினி லென்றும்
— கனடாத்

சைவத் தமிழ்ப்பெரி யோரே — எங்கள்
சைவ இளைஞர் யுவதிகள் கேளீர்!
கைவசம் நெல்லிக் கனியாம் — அந்தச்
சைவ நீதியைக் கற்றினி மகிழ்வீர்!
— கனடாத்

பொதுப்பணி யோம்ப விரும்பிப் — பொன்
பொருளை யளித்திடு புரவலர் வாழ்க!
மதப்பணி என்றுஞ் சிறக்க — நீதி
மாத மலராய் மலர்வது நன்று
— கனடாத்

சிவநெறிச் செந்தமிழ் ஏடு — நாளும்
சிவக்கொழுந் தாகிச் சுடர்விட வேண்டும்
நவநிதி அருள்நிதி பரப்பி எங்கும்
நலமுடன் ஆட்சி நடைபெற வேண்டும்
— கனடாத்

கிழக்கிலும் மேற்கிலும் சைவம் — நீதி
கிளர்ந்து பொலிந்து வளர்ந்திட வேண்டும்
புழைக்கை விநாயகன் தாதை — எமக்குப்
போதம் அருளி உதவுவார் போற்றி
— கனடாத்

செந்தமிழ்ச் சிவநெறி ஏடு — என்றும்
சிந்தனை கூரச் சிவன்புகழ் பாடி
வந்தனை செய்துமே வந்தால் — பாரில்
முந்தை வினையற முத்தி பெறலாம் — கனடாத்

# குவலயத்தில் ஏதும் தாழ்ந்ததில்லை

நா - அமிர்தரட்ணராஜா

நல்லவரார் இங்கு கெட்டவரார்
வல்லவரார் வலு வற்றவரார் — நல்ல----

நாகத்தின் தலையினில் மணி இருக்கும் — நனி
நறுஞ்சுவை அமுதினில் பிணி இருக்கும்
காகத்தில் போற்றும் குணமிருக்கும் — உவர்க்
கடலது நீர் மழை யாக வரும்.

சிப்பியின் வயிற்றினில் முத்திருக்கும் — உலர்
ஏழையின் வயிற்றினில் அரசு உதிக்கும்
பத்தரை மாற்றிலும் அழுக்கிருக்கும் — உயர்
பார்ப்பனக் குடியிலும் பேய் பிறக்கும்.

போர்பல கண்ட மா வீரர்களும் — தாம்
புறமுது கிட்டிடும் வேளையினில்
நேரிழையாள் களத்திற் குதித்தே — இந்
நிலத்தினைக் காத்திடல் நிகழ்ந்து விடும்.

சூத்திரக் கயிற்றினில் பாவைகள் போல் — நவச்
சுடர்க் கரத் தேவன் கைப் பொம்மைகள் நாம்
கோத்திரம் தகுதியில் பெரியதில்லை — இந்தக்
குவலயத்தில் ஏதும் தாழ்ந்ததில்லை.



# SOUTH PORT

## CUSTOM PICTURE FRAMING

கனடாவில் முதன் முதலாகத் தமிழரால் ஆரம்பிக்கப்பெற்ற மிகப் மிகப் பெரிய ஸ்தாபனம்..........
உங்கள் எண்ணம்போல் வடிவமைக்க ரொரன்ரோவில் மிகச் சிறந்த தமிழர் ஸ்தாபனம்.........

# சௌத் போட் பிக்சர் பிறேமிங்

- உங்கள் திருமணம் மற்றும் கொண்டாட்ட வைபவ படங்கள், குழந்தைச் செல்வங்களின் படங்கள் அனைத்தும் அழகுற மெருகூட்டிச் செய்து தரப்படும்

- சுவாமிப்படங்கள், டிப்ளோமா சான்றிதழ்கள், வாழ்த்துமடல், இயற்கைக் காட்சிகள், நூல் வேலைப்பாடுகள் (ThreadWork), பற்றிக் (Batik) என்பனவற்றை அழகுறச் செய்து கொள்ளலாம்.

- மினிபஸ்சேவைஹ எயர்போட், நயகராபோல்ஸ், வொண்டர் லாண்ட் இவற்றுடன் தினசரி ஒட்டாவாவிற்கும் மினிபஸ் சேவை நடாத்தப்படுகிறது — இருவழிப் பயணம் $50.00 மட்டுமே. ஒரு கிழமைக்கு முன்பே ஆசனங்களைப் பதிவு செய்யவும்.

- ஐரோப்பிய நாடுகளில் வர்த்தக முகவர்கள் தேவை. ஏற்றுமதி வைகாசி மாதம் ஆரம்பமாகிறது

- துரித பணமாற்றுச் சேவை: கனடாவில் இரவு 10 மணிக்கு (இலங்கை நேரம் 8.30) — கொழும்பில் 12 மணிக்குப் பணம் கிடைக்கும்

**3260 EGLINTON AVE. EAST**
**SCARBOROUGH, ONTARIO, MIJ 2H6**

**MARKHAM & EGLINTON (COFFEE TIME பிளாசாவில்)**

**Tel & Fax: (416) 267 5694**

# JAFFNA TAILORS AND TEXTILES



**SPECIALIZES IN.......**

Tel: (416) 750 3634

- Pants,
- Gents Suits,
- Blazers &
- any Kind of Alterations.

Fax: (416) 750 0198



தொடர்புகளுக்கு: ராஜ்

Birkdale Plaza (Sri Lankan Plaza) - (Inside of Variety Store)

1235 Ellesmere Rd., Scarborough, Ontario

*We Sell Readymade Clothing*

# Bala Income Tax Services

*Warden & Finch* சந்திப்பில்..........

## பாலா வருமானவரிச் சேவைகள்

Revenue Canada Authorized Filings

* கூடிய பணம் மீளப் பெற்றுக் கொள்ள
* தனிநபர் வருமான வரி
* சிறுதொழில் வருமான வரி

Contact for any Immigration Matters

தொடர்புகளுக்கு: பாலா (Bala)

**P.Balasubramaniam B.A**

**Tel: (416) 491 6784**

**Fax: (416) 491 8453**

**50 Brookmill Blvd**

**Unit 8, Scarborough, (Basement)**

**Ontario, M1W 2L4**

# சிவபெருமான் தொண்டர் தொண்டன்

புலவர் ஈழத்துச்சிவானந்தன்

சிவபெருமான் ஒரு பெரு நடிகன். நகைச் சுவையாளன். ஊழிக்கூத்தும் ஆடுவான். உலகக் கூத்தும் ஆடுவான். ஆடுபவன் மட்டுமல்லன், ஆட்டுவிப்பவனுமாவன். திருச்சிற்றம்பலத்தில் நடனம் ஆடிய திருவடி என்று அவனுடைய திருப்பாதங்கள் போற்றப்பட்டன. அம்பலத்து ஆடுவான் மலர் சிலம்படிகளையே வாழ்த்தி வணங்கு வதை அடியார்கள் வாழ்வாகக் கொண்டவர்கள். "இனித்தமுடைய எடுத்த பொற்பாதங் காணப் பெற்றால், மனித்தப் பிறவியும்" வேண்டும் பிறவியே என்பது அனுபூதி வாக்காகும்.

உலகம் சிவபெருமானுக்குள் அடக்கம். சிவபெருமான் அடியார்களுக்குள் அடக்கமானவர். சிவபெருமான் மக்கள் குலத்திற்குத் தொண்டு செய்பவர்களுக்கே முதல் திருவருள் செய்திருக்கிறார். திருவீழிமிழலையிலே மக்களின் பஞ்சம் தீர்க்கப் புறப்பட்ட அப்பர் சுவாமிகளுக்குக் குற்றமில்லாத காசு வழங்கி முதல் மரியாதை செய்திருக்கிறார். திருமருகல் திருக் கோயிலுக்குக் கும்பிடப் போன சம்பந்த சுவாமிகள் இளம் பெண் ஒருத்தியின் துன்பக் குரலைக் கேட்டு என்ன? என்று விசாரித்தார். உடன் போக்காய்த் தன்னோடு வந்த கணவன் பாம்பு தீண்டி இறந்து விட்டான் என்பதைத் தெரிவித்தாள். சம்பந்தர் தனது வழிபாட்டைப் பிற்போட்டு, அவள் வாழ்க்கையைச் சிந்தித்தார். "சடையாய் எனுமால் சரண் நீ எனுமால் விடையாய் எனுமால், என்று விழித்து, உடையாய் தகுமோ? இவள் உண்மெலிவே" எனக் கேள்வி எழுப்பினார். திருமருகல் இறைவன் தண்ணளி செய்தான். கருணை காட்டினான். செட்டிப் பெண் களிப்படைந்தாள். இதன் பின்பே சம்பந்தர் திருவீதி வலம் வந்தார். திருநீறு தரித்துக் கொண்டார்.

இறைவனை வணங்க முடியாத அளவுக்குச் சிலருக் குத் துன்பச்சுமை இருக்கும். அவர்களுக்காக மற்றையோர் பிரார்த்திப்பதையும் உதவுவதையும் இறைவன் உவப்போடு கணித்துக் கொள்வான். தொண்டும் வழிபாடுமே இறைவனுக்குப் பிடித்தமான செயல்கள். "தொண்டலாது உயிர்க்கு ஊதியமில்லை" என்றார் அப்பரடிகள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தென்தமிழ் நாட்டிலே நடைபெற்ற சைவசித்தாந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க ஒரு ஆதீன கர்த்தா அழைக்கப்பட்டிருந்தார். அன்றைய தினம் தனுக்கோடியில் புயல். மக்கள் அவலப்பட்ட செய்தி கேட்ட அவர் அங்கு விரைந்தார். மாநாட்டை மறந்தார். தனது பெறுமதி வாய்ந்த உருத்திராக்க மாலையை ஏலம் விட்டு, பணம் சேகரித்துப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவினார். ஏன் மாநாட்டிற்கு வரவில்லை என்று சிலர் கேட்ட போது, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று பதில் அளித்தார்.

தொண்டு செய்வோம், அன்பு செய்வோம், இல்லையேல் பேசாதிருப்போம். சிவபெருமான் கண்டு கொள்ளுவார். இதுவே சைவ நியாயம், நீதி.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

கடவுள்:— ஆன்மாவை உணராத மனிதன் தனக்கு ஆன்மா உண்டென்றும், கடவுளைக் காணாத மனிதன் கடவுள் உண்டென்றும் கூறுவதற்கு அவனுக்கு என்ன உரிமை உள்ளது? கடவுள் ஒருவர் இருந்தால், அவரை நாம் காண வேண்டும். ஆன்மா ஒன்று உண்டெனின் அதை நாம் அறிய வேண்டும். இல்லையெனில் கடவுள் நம்பிக்கையற்று இருப்பதே நன்று. கூற்றும் செயலும் வேறுபட்டு இருப்பதைக் காட்டிலும் நாத்திகவாதியாய் இருத்தலே நன்று

— சுவாமி விவேகானந்தர்.

நீ நடப்பது போல உனக்கும் நடக்கும் — சிவயோக சுவாமிகள்.

ஒழுக்கம்:— அளவுக்கு மீறிய செல்வமும் ஆபத்தானது. அளவுக்கு மீறிய வறுமையும் ஆபத்தானது. இரண்டுமே மனிதர்களை ஒழுக்கங் கெட்டவர்களாக மாற்றிவிடும் — பிளாற்றோ.

# SIVA WORSHIP IN HINDUISM

GEETHANJALI PRABAHARAN
(3RD YEAR STUDENT OF THE UNIVERSITY OF TORONTO)

The general term "God" refers to the ultimate reality or the original source of creation, in almost all the religions, but they differ in their interpretations about it. In Hinduism, there are different names and forms given to God, each representing different aspects of the one ultimate reality. Some of the common names and forms are Brahma, Vishnu, Siva, Ganesha, Subramaniya, Vairavar, Krishna, Durgai, Lakshmi, Saraswathi. As there are so many names and forms referring to God in Hinduism, it is appropriate to inquire as to which form or name is the most supreme one. Though there are differences of opinion among the Hindus regarding this it has been the traditional belief of the Hindus from time immemorial, that "Siva" is the most supreme concept. A study of Siva worship would comprise its historical and philosophical aspects, the different forms in which Siva is worshipped, their meanings, and the reason why this concept is considered the most supreme in Hindu religion.

Historically the origin of "Siva" worship cannot be easily determined, as it appears to have existed from pre-historic period. But most religious historians refer to Vedic or Aryan period when they deal with the origin of Siva worship, for Example, The Perennial Dictionary of World Religions, by Keith Crim, says:

*"The worship of Siva can be traced back to the shadowy figure of Rudra in the Rig Veda and extends to every part of India and South East Asia. Many strands make up the long thread of Siva's History in India" (Page 685)*

Myths and Legends of India by Donald a. Mackenzie says:
*"Siva developed from Rudra, the storm God. He is first mentioned as Mahadeva 'The Great God' in Yajurveda, and in the Mahabharata he is sometimes exalted above Vishnu. In one part he is worshipped by Krishna. He is blue - necked, three - eyed trident - bearing lord of all creatures" (Page 146)*

Thus most of the researchers trace the origin of Siva worship to either Rig Veda or Yajur Veda of the Aryans. But According to the archeological and literary evidences, Siva worship had been there long before the "Vedic Age". In this connection the following extracts from a book entitled World Religions - Hinduism by V.P(Hemant) Kanitkar, may be quoted:
*"For a long time little was known about the Indus Valley people. The remains dug up during the 1920s at various sites in the valley particularly at the sites of two walled cities, Mohenjo - daro and Harappa, now in Pakistan, have proved the existence of a great river civilization which flourished between 3000 and 2000 B.C"*

*"Recent excavations by French Archaeologists have unearthed sites of two further cities at Mehrgarh and Naushahro in Western Pakistan (in addition to Mohenjo-Daro and Harappa, unearthed earlier) which suggests that the Indus Valley Civilization may be even older, being at its height in 6000 B.C" (Page 62).*

*"From the extent of the sites it is believed that the Indus Valley civilization covered an area larger than Egypt or Mesopotamia and was equally advanced in culture."............................*

.......................................................................

*"Unfortunately we know little about the religion*

*of these people, since the only written evidence we have, comes from the seals, (dug up at the sites) which are so far undeciphered."*

.............................................................................

.............................. *"A male deity sitting cross - legged and surrounded by animals became the Hindu Shiva. On some of the seals the deity has a crescent moon on his head, has three faces. These details show a connection with various later names of Shiva such as 'Moon Crested', 'Three faces', 'Lord of Beasts', and 'Great Yogi'. The typical cross - legged yoga posture of the deity, shows the Indian meditation pose and suggests that yoga exercises, meditation, and philosophy are pre-Aryan in origin"* .............................................................

............................................................*"The Aryan newcomers certainly adopted many material things and philosophical ideas from the Indus people, and over many centuries made them completely Aryan."*

As we could see from the above extracts, If the Indus Valley civilization existed long before the coming of Aryans and Vedic culture, and if the origin of Siva worship is to be traced to Indus Valley Civilization, we could safely conclude that Siva worship was not an introduction of the Aryans, to the people of India.

An examination of the language and culture in South India and Northern part of Sri Lanka, clearly indicates that they are distinct from majority of the languages and sub-cultures in India which belong to the Aryan family. Tamil language, according to literary evidences in that language, is said to have existed before the Sanskrit language of the Vedic, Aryan literature. Many of the ancient literature's in Tamil, from South India and Sri Lanka have references to Siva worship. For example, description of God Siva is found in the works of Saint Ahasthiar and Tholkapiar who belong to pre-Aryan period. In another category called "Sangam" literature the dates of which are still uncertain, Lord Siva is said to have appeared in person and participated in one of the literary conferences called "Sangam", challenging one of the poets called Nakirar. According to the story in the literature, Lord Siva is said to have come in disguise to the assembly of poets to test the wisdom of the poets and deliberately recited a verse with a small flaw in it. Nakirar the one of the great poets in the assembly had found the error and challenged the verse. Thereupon Lord Siva is said to have come out if his disguise and shown his third fiery eye, when the poet Nakirar told loudly to the assembly, "Even if you open and show your fiery eye in your forehead, there is really an error in your verse." Tamil literary historians date this group of "Sangam" literature to a period before the Vedic or Aryan era. It is their contention, that Tamil language and culture was in a highly developed state long before the advent of Aryans and Vedic/Sanskrit literature. If it had been so, and if there had been references to God Siva in such Tamil literature's, as shown above, we could safely conclude that Siva worship had been there before the Vedic/Aryan period.

According to Ramayana, and ancient Hindu epic, Ravana of Sri Lanka, (who belongs to pre-historic period,) was a staunch devotee of Siva. It is said that he worshipped Siva with so much devotion that God appeared in his presence and blessed him with great strength. God had to appear again in the form of Rama to destroy Ravana, when he abused his powers. Some oriental historians have interpreted Rama's invasion of Lanka as an event symbolizing Aryan invasion and if King Ravana, who ruled Lanka before this event was a devout Siva worshipper, We could come to the same conclusion that Siva worship existed in certain parts of South East Asia long before the Aryan invasion.

Many archeological evidences connected with Siva worship, such as excavated sites, remains of various kinds, inscriptions and coins, belonging to pre-historic period had been round in Sri Lanka Art places like Nagadeepa, and Keerimalai in Jaffna, Thiruketheesvaram in

Mannar, Oddisuddan in Mullaitivu, Muneeswaram in Chilaw, Villages and Towns in Trincomalee District, and Adams Speak in Kandy. The writer who is from Sri Lanka, is personally aware of these findings. According to legends, Sri Lanka was destroyed along with its King Ravana, when Rama invaded it and after long period of neglect, when the country had been covered with wild jungles, the Sinhalese people from Northern India (who were a section of the Aryans coming into India) settled in Sri Lanka and have become the majority in that country, and embraced Buddhism, which was a later religion. As the government of Sri Lanka too came to be in the hands of Buddhist majority who were not so keen in making any research about Siva worship of Hinduism, evidences found in Sri Lanka have not received enough attention in the hands of research scholars or Religious historians. It appears that pre-historic evidences found in Sri Lanka about Siva worship have not been made available to the Western Researchers in this subject. As a result of this situation, although there are evidenced to indicate that Siva worship had prevailed in Sri Lanka, long before the Vedic or the Aryan period most religious historians do not refer to them. It is hoped that future religious historians will gain access to them, and do more research on this subject of Siva worship.

From my observations of the evidences found in Sri Lanka, and the legends I have read and heard from the elderly people who had lived in that country hereditary, I have reason to believe that the present Dravidian people of South India and Northern Sri Lanka are the descendants of the original Siva worshippers, who might have occupied these regions before the coming of the Aryans to India. It is notable that the term "Saivaism"and "Saivaites" are still in use in South India and Sri Lanka to distinguish the Siva Worship and Siva worshippers from all other later Hindu traditions.

From the above archeological and literary evidences, one could even say that Siva worship existed even long before the term "Hindu" came to be used by Greeks to refer to the people who lived east of Indus river, - words "Hindu" and "India" are derivations from "Indus" because the Indus Valley or Mohenjo-Daro, Harappa civilization mentioned above, had historically existed before the advent of Greek civilization.

Certain Vedic Hymns refer to Shiva of Rudra as God of destruction. This might have been due to the fact that it is only death or destruction by natural forces such as storm, earthquake, fire or floods, that mankind had not been able to prevent with his own knowledge or powers. Human beings have been able to procreate by sexual intercourse, produce their own food, clothing shelter and all other requirements for their life and protection. But when it comes to destruction by some natural forces or death, they had always been helpless and had to think of some supreme power above them, as causing them. Hence fear of death and destruction was the original need of mankind to think of something called "God". Hence of we examine the origin of the idea or concept of God among any communities in any part of the world, we could conclude that the idea itself was borne out of fear of death or destruction by nature. This is why Shiva, the name by which the most ancient people of the orient referred to God, came to be associated with destruction. This is also the reason why some Hindu religious hymns regard cemetery or burial ground as the abode of God Shiva, and worshipped him as God or destruction, An analysis of the description of Siva in Vedic Sanskrit hymns or other Hindu hymns in any Indian or Sri Lankan languages, would indicate that the figure of Siva is nothing but a personification of Nature itself. According to these hymns the world's highest mountain, Himalayas is the abode of Siva, though his powers and grace are omnipresent. The entire universe which includes all the planets comprise his body. He is the source of all the five elements, earth, water, fire, air, and sky. He is

both masculine and feminine. He is everything in the universe. All religious hymns and legends in Hindu literature such as the "Vedas", "Puranas", "Thevarams", and "Tiruvasakam" connected with God Siva support this concept.

A study of the forms of worship that had existed among the aboriginal population all over the world, including the natives of North America, shows features similar to that of Siva worship, namely personification of Nature or natural forces such as rain, thunder, storm, floods, ocean, sky and so on, as a God. We could see such personification of natural forces as Gods in the ancient Greek and Roman legends also. In the most ancient times, different communities in different parts of the world personified nature and gave a certain name to it, indicating God. Siva worship may therefore be considered as representing the most ancient concepts held by mankind, symbolizing the hidden powers of nature that cannot be comprehended by the human mind, as God. Hence it appears that the name given by the ancient people of India and Sri Lanka, in their own language to such personification of nature, indicating God might have been "Siva". Thus Siva worship appears to represent a universal or general phenomenon that had existed all over the world among the entire humanity, during the most ancient times, even though the term "Siva" itself may connote something distinctly Hindu or oriental. Hence we may conclude that, just as the origin of Universe, the origin of Siva worship appears to be a mystery, and cannot be determined in terms of time or period. Accordingly we could see that in Hindu tradition all other gods are said to have been born or created, but no reference is mentioned in any legends or literature regarding the birth of Lord Shiva. Shiva is the only God in Hinduism who is neither born to anyone nor created by any one. According to Hindu tradition Shiva has no beginning or end. He is eternal and is believed to have been there before all creation and will be there even if the universe comes to an end. He is the ultimate source and cause of the Universe itself.

To Be Continued.......

**Excerpts from: Bhagavad-Gita As It Is:-**

**Charity**

In the Vedic literature, charity given to a person engaged in spritual activities is recommended. There is no recommendation for giving charity indiscriminately. Spritual perfection is always a consideration. Therefore charity is recommended to be given at a place of pilgrimage and at lunar or solar eclipses or at the end of the month or to a qualified brahmana or a Vaisnava(devotee) or in temples. Such charities should be given without any consideration of return. Charity to the poor is something given out of compassion, but if a poor man is not worth giving charity to, then there is no spritual advancement. In other words, indiscriminate charity is not recommended in the Vedic literature.

**Three enemies**

One should be very careful of three enemies to human life: lust, anger and greed. The more a person is freed from lust, anger and greed, the more his existence become pure. Then he can follow the rules and regulations enjoined in the Vedic literature. By following the regulative principles of human life, one gradually raises himself to the plateform of spritual realization. In the Vedic literature, the ways of action and reaction are prescribed to enable one to come to the stage of purification. The whole method is based on giving up lust, greed and anger. By cultivating knowledge of this process, one can be elevated to the highest position of self-realization; is perfected in devotional service. In that devotional service, the liberation of the conditioned soul is guaranteed.

# ஓம் என்பதும் வணக்கம் சொல்வதும்

அடியார் — மதம் ஆசிரியர்

ஆரம்பம் ஒன்று இருந்தால் முடிவு ஒன்று இருக்கும். பொழுது புலர்ந்து மறைகிறது, மீண்டும் மறுநாள் பொழுது புலர்கிறது, மீண்டும் பொழுது மறைகிறது. பிறப்பு இருக்கும் வரை இறப்பு இருக்கும், இறப்பு இருக்கும் வரை பிறப்பும் இருக்கும். நாம் பிறந்து இறந்து மீண்டும் பிறப்பது போல இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் அனைத்திற்கும் தோற்றமும் முடிவும் இருக்கும். இயக்கநிலை இயங்கா நிலைக்குப் போகும் போது தோற்றங்கள் இல்லாது போய்விடும். பிரபஞ்சத்தில் படைப்பு நிகழ்கிறது, அதற்குப் பிரளயமும் ஏற்படுகிறது.

படைப்பும் பிரளயமும் கணக்கற்ற தடவைகள் நடந்துள்ளன, இனிமேலும் நடந்து கொண்டுதான் இருக்கும். ஒரு தடவை படைப்பு நேர்ந்து பிரளயம் வருவதற்குப் பல யுகங்கள் செல்லும், எத்தனையோ இலட்சம் வருடங்கள் ஆகும். பிரபஞ்சம் இயக்க நிலையில் இல்லாத ஓய்வு நிலையிலிருந்து இயக்க நிலை ஆரம்பமாகும் போது படைப்பு ஆரம்ப மாகிறது. பிரம்மமாகிய இறைவன் பிரபஞ்சத்தைப் படைக்கும் போது "ஓம்" எனும் பிரணவ ஒலியுடன் ஆரம்பிக்கிறார். "ஓம்" எனும் ஓசை இறைவனே தான். இதை இந்துக்கள் "ஓம்காரம்" "பிரணவ மந்திரம்" என்று சாஸ்திரங்கள் மூலம் அறிகிறார்கள்.

முனிவர்களும் மகான்களும் உயர் நிலையில் சமாதி கூடி பிரம்மநிலை அனுபவிக்கும் போது ஓம்கார ஒலியைத் தம்முள்ளே கேட்டு மகிழ்கிறார்கள். புனிதச் சடங்குகளிலும் புனித மந்திரங்களிலும் முதலில் ஓம்கார மந்திரம் ஒலிக்கப்படுகிறது. நாமஜெபங்களுக்கு முன் ஓம் சேர்க்கப்படுகிறது. ஓங்காரத்தைத்தான் ஆமென் என விவிலிய நூலில் சேர்த்துள்ளார்கள். ஆமின் என இஸ்லாமியர்கள் கூறுகிறார்கள்.

ஓம் என்னும் சொல் முற்காலத்திலே தமிழ் மக்களிடம் பேச்சு வழக்கில் இருந்தது. இப்போது ஈழத்தமிழர்களிடம் ஆங்காங்கேதான் காணப்படுகிறது. இப்போ ஓம் என்பதற்குப் பதிலாக "ஓ" என்பதை மட்டும் உச்சரிக்கிறார்கள். ஓ என்பது அவலத்தைக் குறிக்கும் உணர்வைப் பிரதிபலிக்கிறது. தமிழ் நாட்டிலே 500 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் ஓம் என்றுதான் கூறி வந்தார்கள், பின்பு அந்நியர் ஊடுருவலால் "ஆமா" எனும் சொல்லாக மருவி விட்டது. "ஓ" என்று சொல்லும் அவல உச்சரிப்பை விட்டு "ஓம்" என்று திருத்தமாக உச்சரித்து வரவேண்டும், இதனால் பல நன்மைகள் பெறலாம். ஓம் எனும் ஒலி அதிர்வு நம்மைத் தீய அலை அதிர்வுகளில் இருந்து காப்பாற்றும். "ஓம்" எனும் மந்திரத்தை எவ்வளவு அதிகமாகக் கூறுகிறீர்களோ அவ்வளவுக்கு உங்களிடம் இருந்து சிறந்த ஆற்றல் பெருகும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையிலே கூறுகிறார் "ஓங்காரப் பொருளும் நானே" என்று. அவன் இல்லாத இடமே இல்லை. அந்தப் பரம் பொருளாகிய இறைவனை, அவன் அருளை, ஓங்கார மந்திரத்தை ஜபம் செய்வதால் நிச்சயம் பெறலாம்.

இறைவன் இல்லாத இடம் எது? எதுவுமே இல்லை! அணுவுக்குள் அணுவாக அவனே எல்லா மாக இருக்கிறான். "பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தம்" அல்லவா இறைவன், அவன் இருக்கும் இடம் எங்கே? "வெள்ளை நிறப் பூவும் அல்ல வேறெந்த மலரும் அல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் உறங்குமிடம்" என சுவாமி விபுலானந்தர் கூறினார். நம் ஒவ்வொரு வருடைய உள்ளத்தில் அவர் இருக்கும் போது அவரைத் தேடி எங்கே போவது. உள்ளே இருப்ப வனை உள்ளே மூழ்கித் தேட வேண்டும். நம்முள் ளும் பிறர் உள்ளும் இறைவனை அறிந்து கொள்ளும் படி மகான்களும் முனிவர்களும் பல தத்துவங்களாலும் தேவாரங்களாலும் வெளிப்படுத்தி னார்கள். நாமோ இன்னும் அறிந்து கொள்ளாமல் வாழ்கிறோம்.

*"அண்ணல் இருப்பிட மாரும் அறிகிலர்*
*அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்களுக்*
*கண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்*
*அண்ணலைக் காணில் அவனிவனாகுமே"*

(திருமந்திரம் — 746)

அண்ணலாகிய சிவபெருமான் ஆவியுடன் கலந்துறையும் உண்மையை யாரும் தமது அறிவால் உணர்வதில்லை. திருவருள் துணையால் அவ்வுண்மையை உணர்வார்க்கு இறைவன் தன்னை வெளிப்படுத்துவார். தம்முள்ளே இறைவன் இருப்பதைக் காண்பார்கள். ஆவிநிலையாகிய ஆன்மா பிரகாசிப்பது சிவநிலையாகிய இறைவனின் பிரகாசத்திலிருந்தே.

உள்ளே அவன் இருப்பதைத் திருமூலர் இம்மந்திரத்தின் மூலம் நமக்கு உணர்த்துகிறார். நாம் பிறரைக் காணும் போதும் பிறர் எம்மைக் காணும் போதும் நாம் வணக்கம் சொல்லிப் பழகுவது மிகவும் உயர்ந்த சமய தத்துவம். இறைவன் ஒவ்வொருவர் உள்ளும் இருக்கிறார். இந்த அரிய இரகசியத்தை நாம் உணர்விலே ஊறவிட்டு, பிறருக்கு மரியாதை செய்து பிறர் மீது அன்பு செலுத்தி வாழ வேண்டும். இதில் வெட்கம் ஒன்றும் இல்லை. வெட்கப் படுபவர்கள் கண் இருந்தும் குருடர்கள்.

இந்த உண்மையை அறிந்து பிறரை மதித்து வணங்கும் போது இறைவன் நம்மை ஒவ்வொரு படி உயர்த்திக் கொண்டே போவார். அவர் கருணை தப்பாமல் கிடைக்கும். பண்டைய தமிழினம் உயர்ந்ததற்கும் இறைவனின் அருள் அவர்கள் பெற்று வாழ்ந்ததற்கும் இதைப் போன்ற சிறந்த பண்புகள் இருந்ததனால் தான், நமது தமிழ்ப் பண்பாட்டில் உள்ள பழக்கங்களில் உயர்ந்த சமய தத்துவங்கள் புதைந்து கிடக்கின்றன.

இன்று மாசுபடிந்து கிடக்கும் வைர மாளிகையான தமிழ்ப் பண்பாட்டினைப் பிரகாசிக்கச் செய்வோம்!

ஓம் என்போம்
ஓம்கார நாதனின் அருள் பெறுவோம்,
வணங்கிடுவோம் பிறரை, அவ்வணக்கம் சிவபரம்
பொருளைச் சென்றடையும்.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

கிராம தருமங்கள்:— கிராமத்தில் எல்லோரும் ஒற்றுமையாய் இருப்பது, கிராமத்தில் செய்யும் எந்தக் காரியத்தையும் ஒற்றுமையுடன் செய்வது, கிராமத்தில் ஒரு வீட்டில் ஒரு காரியம் என்றால் அதில் எல்லோருமாகப் பங்கு கொண்டு அந்தக் காரியத்தைப் பூர்த்தி செய்யச் சகாயம் செய்வது, வெளியூர்களிலிருந்து கிராமத்திற்கு வருபவர்களுக்கு அந்தக் கிராமத்தைப் பார்த்தவுடன் அலாதியான ஒரு ஆகர்ண சக்தி உண்டாகும் வண்ணம் அந்தக் கிராமத்தைச் சுத்தமாகவும் நன்றாகவும் வைத்துக் கொள்வது ஆகியவை கிராம தருமங்களாகும்

— ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

நம்மைத் தெரிந்து கொள்ளாமல் வெளி உலகத்தைத் தெரிந்து கொள்ள முடியாது. நம்மைத் தெரிந்து கொண்ட பிறகோ வெளி உலகத்தில் தெரிந்து கொள்ள ஒன்றுமில்லை

— ரமண மகரிஷி.

வரவு அறிந்து செலவு செய்வது சிக்கனம், செலவு அறிந்து வரவு சேர்ப்பது நற்குணம்

— கவிதாசன்.

மறக்க வேண்டியது:— நீங்கள் முக்கியமாக இரண்டு செய்கைகளை மறந்து விடவேண்டும்,

1. நீங்கள் பிறருக்குச் செய்த உதவி.
2. உங்களுக்குப் பிறர் செய்த தீங்கு

— பகவான் சத்திய சாயிபாபா.

இரவில் சீக்கிரமாய்த் தூங்கி, காலையில் விரைவில் எழும் பழக்கம் உள்ளவர்கள் நோய் அற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று அறிவோடு இருப்பார்கள்

— பிராங்கிளின்.

உலகத்தில் எல்லாமே, எல்லோருக்கும், எக்காலத்திலும் இலகுவானவை அல்ல; எல்லாமே, எல்லோருக்கும், எக்காலத்திலும் கடினமானவை அல்ல

— விவியன்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

— திருக்குறள்.

# பக்தி இலக்கியத்தில் அகத்துறை

திருமகள் தங்கவேலு

குருசேத்திரப் பூமி சிவந்து கொண்டிருக்கிறது. பாரதப் போர் தொடங்கப் போகிறது.

அண்ணன் தம்பிகளான கௌரவர்களும், பாண்டவர்களும் எதிரும் புதிருமாகப் போருக்கு ஆயத்தமாக அணிவகுத்து நிற்கிறார்கள்.

அண்ணன் — தம்பி முறையானவர்கள் மட்டுமல்ல. மாமன் — மருமகன், பெரியதந்தை — சிறிய தந்தை, குரு — சிஷ்யர்கள் இப்படி, போரில் எல்லோருமே பல்வகைக் கணைகளோடும் கலன்களோடும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

பாண்டவர் சேனையின் நாயகன் பார்த்திபன் தேரில் காண்டீபமும் கையுமாகச் சண்டைக்கு ஆயத்தமாக நிற்கிறான். தேர்ச் சாரதி வேறுயாருமில்லை. அந்தப் பரந்தாமனே பார்த்தனுக்குச் சாரதியாக இருக்கிறார்.

பீஷ்மர் உரத்த குரலில் சிங்கநாதம் புரிந்து சங்கை ஊதி, போரைத் தொடக்கி வைக்கிறார்.

உடனே சங்குகள் முழங்கின. தாரை தப்பட்டைகள், பேரிகைகள், பறைகள், கொம்புகள் இடிமுழக்கம் போல் போர்க்களம் எங்கும் ஆர்த்தன.

இரு பக்கங்களிலிருந்தும் கணைகள் மழையெனப் பொழிய ஆரம்பித்தன.

அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்துச் சொன்னான், "அச்சுதா! படைகள் இரண்டிற்கும் இடையில் என் தேரைக் கொண்டு நிறுத்து. இங்கு துரியோதனனாதிகள் பக்கம் போர் செய்ய வந்திருப்பவர்களை நான் நன்றாகப் பார்க்க வேண்டும்." பரந்தாமன் பார்த்தனது வேண்டுகோளுக்கு இணங்கத் தேரைச் செருக்களத்தின் நடுவே நிறுத்துகிறான்.

எதிரே பீஷ்மர், அருகில் ஆசான் துரோணர், அண்ணன் தம்பிகள், பாட்டன் பேரன்கள், நண்பர்கள், தோழர்கள், உறவினர்கள். பார்த்தன் உடல் வேர்க்கிறது. கையில் இருந்த கோதண்டத்தை நழுவவிட்டுச் சோகமே உருவாகத் தேரில் உட்கார்ந்து விடுகிறான்.

"அரசுரிமைக்காக அண்ணன் தம்பிகளைக் கொல்ல நான் தயாராயில்லை. பாதகரைக் கொன்றாலும் பாவம் பாவந்தான். இந்தப் பழி வேண்டாம். என்னைக் கௌரவர்கள் கொல்வதாயினும் சரி நான் அவர்களுடன் போர் புரியத் தயாராயில்லை. போர் புரியவும் மாட்டேன்" என்கிறான்.

குழம்பிப்போன பார்த்திபனுக்குப் பரந்தாமன் சத்திரிய தர்மத்தை விளக்குகிறான். "நீ சத்திரியன். போர் உன் தொழில். அதனை நீ செய். பலனை என்னிடம் விட்டு விடு" என்கிறான் கண்ணன்.

கண்ணனது உபதேசமே கீதையாக மலர்கிறது. கீதையின் வாயிலாக ஆன்மாவின் இயல்பினையும், கர்மயோக ஞான யோகங்களையும் வீடுபெறக் காரணமான பக்தியோகத்தையும் கண்ணன் உபதேசிக்கிறான்.

இந்து மதம் வீடுபேறு எய்தி இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு அவரவர் தகுதிக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட மார்க்கங்களை அல்லது வழிகளைக் காட்டுகிறது. அவை படிமுறையில் அமைந்திருக்கின்றன.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பதே அவ் வழிகளாகும்.

சாதாரண மனிதனுக்கும், சராசரி மனிதனுக்கும் ஏற்ற வழி பக்திமார்க்கமாகும். இலகுவானவழியும் இதுவேயாகும். சரியை என்பது நல்லொழுக்கமாகும். உயிர்களிடத்து அன்பு செலுத்துவதாகும்.

கிரியை என்பது கோவில் வழிபாடாகும். பூசை வழிபாடாகும்.

> "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
> தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்
> உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்."

என்பது கிரியை வழிபாடாகும்.

பக்தி மார்க்கத்திற்கும் பக்தி இயக்கத்திற்கும் அடிகோலியவர்கள் சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களுமாவர்.

கி.பி. முதல் மூன்று நூற்றாண்டுகளையும் தமிழ்

நாட்டின் "இருண்ட காலம்" என வரலாற்று ஆசிரியர்கள் வர்ணிக்கிறார்கள். இதுவே "களப்பிரர் காலம்" என்றும் அழைக்கப்பட்டது. களப்பிரர் காலத்தில் அரசியலில் நிலையான தன்மை இருக்கவில்லை. சமூகக் கட்டுப்பாடு குலைந்திருந்தது.

இச் சூழலில் பௌத்த சமண மதங்கள் தமிழரிடையே பரவிச் செல்வாக்குப் பெற்று விளங்கின.

அரசியல், பண்பாடு, ஒழுக்கம் இவற்றில் ஏற்பட்ட நலிவுகளையும், சிதைவுகளையும் சுட்டிக்காட்டி அறத்தையும், அகிம்சையையும் வலியுறுத்திய சமயங்கள் மேலோங்கின.

இயற்கை வழிபாடு, பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற கோட்பாடுகள் வழிவந்த மக்கள் பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துச் சாதியத்தை வளர்த்த வைதிக சமயத்தைத் துறந்து அனைவரும் சமம் என்று அறை கூவிய புதிய சமயங்களைக் கைப்பிடித்தனர்.

இத்தகைய சூழலில் சைவமும், வைணவமும் இப் புதிய மதங்களுடன் போராடி தங்கள் கடந்த காலப் புகழை மீண்டும் நிலை நாட்ட நேரிட்டன. பக்தி இயக்கத்தின் தோற்றம் இங்கேதான் ஆரம்பமாகியது.

வைதிக சமயத்தில் காணப்பட்ட சிக்கல்கள் நிறைந்த சமயச் சடங்குகளுக்கு மாற்றாக இறை பக்தி வலியுறுத்தப்பட்டது.

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும் பிரசாரம் மேற் கொள்ளப்பட்டது.

கடவுளிடம் மாறாத பக்தி அன்பு கொள்வதன் மூலம் எக்குலத்தில் பிறந்தோராயினும் அவர்கள் தங்களை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் ஞான நெறியில் நிற்பவர்களைவிட பக்தி பூண்டவர்களே உயர்ந்தவர்கள் என்ற கோட்பாடும் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் வற்புறுத்தப்பட்டன.

சைவத்தில் நந்தனார் அவரது பக்தி காரணமாக நாயனாராக உயர்த்தப்பட்டார்.

வைணவத்தில் திருப்பாணர் அவரது பக்தி காரணமாகப் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகப் போற்றப்பட்டார்.

சைவ நாயன்மார்களும் வைணவ ஆழ்வார்களும் பக்தி இயக்கம் காலூன்ற வைதிக சமயத்தில் அதுவரை காலமும் மேலோங்கியிருந்த வடமொழி ஆதிக்கத்தை ஒழித்துவிட்டு மக்களது சொந்த மொழியான தமிழில் தேவார திருவாசகங்களையும், திருவாய் மொழிகளையும் திருமொழிகளையும் யாத்து பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றினார்கள்.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் இன்னொரு மரபு வழியான மறுமலர்ச்சிக்கும் வித்திட்டார்கள்.

சங்ககாலத்தில் புலவர்களால் போற்றப்பட்ட அகத்துறை மரபைத் தங்கள் பக்திப் பாடல்களிலும் இடம் பெறச் செய்தார்கள்.

அகத்துறை இலக்கியத்தில் இடம்பெற்ற தலைவன், தலைவி, தோழி, தாய், மகள் பாத்திரங்கள் பக்தி இலக்கியத்திலும் அப்படியே இடம் பெற்றன.

மானிடக் காதல், பிரிதல், புணர்ச்சி, தெய்வீகக் காதல், பிரிதல், புணர்ச்சியாக வடிவம் பெற்றன.

தலைவன், தலைவி காதல் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையிலான தெய்வீகக் காதலாகப் பரிணாமம் பெற்றது.

சமண, பௌத்த சமயங்கள் குறிப்பாகச் சமண சமயம் துறவறத்தை மிகவும் வற்புறுத்துவதாகும். இதனால் துறவறத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் பெண் இனம் பழித்துக் கூறப்பட்டது. நாடகங்களில் சிருங்காரம் இருப்பதால் நாடகமும் வெறுத்து ஒதுக்கப்பட்டது.

இதற்கு முற்றிலும் மாறாக சைவ வைணவ பக்தி இயக்கம் மானிடக் காதலைத் தெய்வீகக் காதலாக மாற்றி வெற்றி கண்டது.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும், ஆண்டாளின் திருப்பாவையும் திருமொழியும் இதற்கு அருமையான உதாரணங்களாகும்.

"ஒவ்வொரு தனிப்பட்ட உயிரும் இறைவன் உறைவதற்குரிய இடமாக இயற்கையிலே அமைந்துள்ளது. மனித உடலும், ஆன்மாவும் இணைந்து இறைவனின் சரீரமாக அமைகிறது. எல்லாக் களங்களையும் இறைவன் தன் எல்லையற்ற அன்பினால் உழுது பக்குவப்படுத்தி விளைச்சலும் காண்கிறான். இந்த வழியில் இறைவனை அடையும் ஆன்மா தன்னை நாயகியாகவே பாவனை செய்கிறது. இறைவனுக்கும் உயிருக்கும் இடையில் நிகழும் மெய்யுணர்வுக் கூட்டுறவைக் காதல் சுவையில் (சிருங்கார ரசத்தில்) மட்டுமே உளவியல் அடிப்படையில் விளக்க முடியும்."

பக்தி இலக்கியத்தில் காதல் சுவையை இந்தக் கண்ணோட்டத்திலேயே நாம் பார்க்க வேண்டும்.

அகத்துறை மரபை அப்படியே வெளிக்கொணரும் அழகை நம்மாழ்வார் இயற்றிய பாசுரங்களில் கண்டு களிக்கலாம்

இவற்றிலெல்லாம் தம்மையே நாயகியாக வெளிப் படுத்துகிறார். பிரிவுத் துயரம் தலைவியின் மன நிலையில் தான் முடியும் என்கிறார் நச்சினார்க்கினியர். அதேபோல் தலைவன் நிலையிலேதான் புணர்ச்சியை நன்கு வெளிப்படுத்த முடியும்.

தனக்கும் தலைவனுக்குமிடையில் புணர்ச்சி இடம் பெற்றதைத் தன் தோழியிடம் தலைவியே எடுத்துரைப் பதைத் திருமங்கையாழ்வார் அழகாகச் சித்தரிக்கிறார்.

"நைவளமொன் றாராயா, நம்மை நோக்கா
நாணினாள் போலிறையே நயங்கள் பின்னும்
செய்வளவில் என் மனமும் கண்ணும் ஓடி
எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன்; கண்டேன்
கனமகரக் குழைபிரண்டும் நான்குதோளும்
எவ்வளவுண் டெம் பெருமான் கோயில் என்றேற்கு
இதுவன்றோ எழிலாலி என்றாள் தாமே"

சங்க காலத்தில் போற்றி ஆராதனை செய்யப் பெற்ற அகத்துறை மரபு, நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் நாயக நாயகி பாவமாகப் பரிணமித்தபின்பே சைவ, வைணவ சமயங்கள் தலை தூக்கின. பௌத்தமும் சமணமும் தமிழகத்தில் நில்லாதொழிந்தன.

பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாளும் ஒருவர். இவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள். திருப்பாவை, நாச்சியார் திருமொழி ஆகிய இரு பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் கொஞ்சும் தமிழில் தேனொடு பால், சர்க்கரை கலந்தது போல் தித்திப்பாக இருக்கும்.

கண்ணனையே காதலனாக வரித்துவிட்ட ஆண்டாள் நாச்சியார், நாயகி, நாயகன் பாவனையில் கண்ணனை இப்படித் துயில் எழுப்புகிறார்.

"குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்,
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி,
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்,
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய் திறவாய்,
மைத்தடங் கண்ணினாய்! நீயுன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்,
எத்தனை யேனும் பிரிவாற்ற கில்லாயால்,
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்!"

கண்ணனைக் காதலனாக வரித்து அவனோடு இரண்டறக் கலந்துவிட்ட நிலையில் தோன்றுகிற கற்பனா பாவம் இது. சங்ககால அகத்துறை மரபில் அப்படியே அமைந்துள்ளது.

<u>சான்றோர் சொல்லமுதம்.</u>

**இறைவனை நினைத்திரு:** எந்த நேரமும் இறைவனை நினைக்க வேண்டும். அது ஆரம்பத்தில் முடியாவிட்டாலும் மூன்று வேளைகளில் தவறாமல் நினைக்கவும். காலை எழுந்தவுடன்; "இறைவனே! இன்று நல்வழியில் நிற்க அருள்புரி" என்று தொழுங்கள். உணவு உட்கொள்ளும் பொழுது, "இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும், அன்பும் உண்டாக அருள்புரி" என்று தொழுங்கள். இரவிற் படுக்கப் போகும் போது, "இறைவனே! இந்த உலகத்திலே, உன் எண்ணமே நிற்க அருள்புரி" என்று தொழுங்கள்.

— வாரியார்

முடியாதவனை மன்னித்துவிடு
விரும்பாதவனைத் தண்டித்துவிடு.

உறவுகளில் மனிதனுடைய இஷ்டமே இல்லாமல் இறைவனே நேரடியாக வழங்கும் உறவுகள் தாய், தந்தை, சகோதர உறவுகள்.

குடும்ப வாழ்க்கை ஒரு அறம் என்று போதித்தது இந்து தர்மம், அதனால்தான், தமிழ், அதனை "இல்லறம்" என்றது.

— கவிஞர் கண்ணதாசன்.

# நல்லூர் குமரன்

- Pure Kanchipuram Silk Sarees
- Wedding Sarees
- Satin Skills
- Aporrva Silk
- Kolam Sarees
- Mysore Skills
- Banaras Skills



இந்தியாவிலுள்ள தரமான
பட்டுப் புடவைகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய
நம்பிக்கையான இடம்

**நல்லூர் குமரன் சாறிபலஸ்**

**Nobody beats Nallur Kumaran's selections & prices Nallur Kumaran means Quality Sarees**

நவீனகர புடவைகளுக்குத் தனித்துவம்
பெற்ற பெரிய புடவை மாளிகை

**நல்லூர் குமரன் சாறிபலஸ்**

2387 Eglinton Ave. East
Suite #6
(Kennedy & Eglinton)
Scarborough
Ontario, M1K 2M5

**Tel: (416) 285-6797**

**Fax:(416) 266-0389**



# நாதன் சிறீதரன் கனடிய சட்டத்தரணி

கனடா இந்து மாமன்றம் வெளியிடும் சைவநீதி சஞ்சிகை
சைவமறுமலர்ச்சியை மேலும் வளப்படுத்த வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

- முதலாவது ஆலோசனைகள் இலவசம்
- சட்ட உதவிப் பத்திரங்கள் ஏற்கப்படும்
- குற்றவியல் குடும்பவியல்
- வழக்குகள் வீடுகள், வியாபாரங்கள், கொள்வனவுகள்
- வர்த்தகப் பதிவுகள்

Tel: (416) 499 6202

NATHAN SRITHARAN *Barrister & Solicitor*

2190 Warden Ave. (Shepperd), Suite 208, Scarborough, Ont.

உங்களது காப்புறுதி தேவைகளுக்கு
நாடுங்கள்.........

# ஈசன் - (416) 493 9560

CONGRATULATIONS MOM & DAD

- **With a new addition to your family it's time to reassess your financial obligation**
- Is the financial future of your spouse and child secure?
- Is your mortgage protected?
- What role does life insurance play?
- I can help you sort through the alternatives

Tel: (416) 493 9560

Fax: (416) 493 9399

SUNLIFE The sorength of the sun is yours

*For all your life insurance needs:* EASAN.M.KRISHNA (Unit Suppervisor)

SUN LIFE of Canada, 245 Fairview Mall Drive
Willowdale, Ontario, M2J 4T1

# மணிவாசகருந் திருவாசகமும்

ஔவை . குணசீலன் — இலண்டன்

அறிவு இருவகைப்படும். ஒன்று உண்மைப் பொருளை (மெய்ப் பொருளை)ப் பற்றிய அறிவு, மற்றையது உலகப் பொருளைப் பற்றிய அறிவு. முன்னையதை மெய்ஞ்ஞானம் என்றும் பின்னையதைப் பொது அறிவு என்றுங் கூறுவர். மெய்ஞ்ஞானம் என்பது கடவுளைப் பற்றிய அறிவு. இதுவே, இம்மை, மறுமை இரண்டின தும் நலங்களையும் ஒருசேரக் கொடுக்கவல்லது. அதனாலேதான் அவ்வறிவைச் சான்றோர்கள் மெய்யறிவு எனக் கூறுகின்றார்கள். பொது அறிவால் மறுமையின்பங் களையோ வீடு பேற்றையோ அறியமுடியாது; இவ்வுலக நலன்களை மாத்திரம் ஓரளவு அறிந்து கொள்ளலாம். எனவே, உலகியலறிவாளர்களை விட மெய்யறிவு பெற்றவர்கள் பல மடங்கு மேலானவர்கள், இவர்களை மெய்ஞ்ஞானிகள் என்று அழைக்கப்படும். இந்த மெய்ஞ்ஞானிகள் அருளிச் செய்த திருப்பாடல்கள், ஆக்கங்கள் அனைத்தும் மெய்ஞ்ஞானப் பாடல்களாக, மெய்ஞ்ஞான நூல்களாக விளங்கித் துலங்குகின்றன.

கடவுள் உயிர்களின் நிமித்தம் செய்யும் செயல்கள் யாவும் "கட்டு" "வீடு" எனும் இருவகைகளுக்கு உட்பட்டனவாகும். கட்டு என்பது வினைகளின் தொகுப்பு. ஆன்மாக்களை வினைகளின் பாற்படுத்தி, அவரவர் வினைகளுக்கேற்ப உடம்புகளைக் கொடுத்து, சுவர்க்கம், நரகம், மத்தியம்(பூமி) என்று சொல்லப்படும் மூவுலகங்களிலும் உழன்று திரிந்து இன்ப, துன்ப, மயக்கங்களை அனுபவிக்கச் செய்தலாகும். வீடு என்பது வினைக்கட்டை அறுத்து, அதனால் உழன்ற துன்பத்தை நீக்கி, இறைவன் தன்னுடைய திருப்பாத நிழலில் என்றும் இருந்து இன்புறச் செய்தலாகும்.

மேற்கூறிய இருநிலைகளிலுமுள்ள ஆன்மாக்களுக்கு அவைகள் உயர்வடையும் வழியைத் தெரிந்து உயர்வடைவதற்காக, இறைவன் நேரடியாகவும், தனது திருவருளைப் பெற்ற ஞானிகள் மூலமாகவும் பல நூல்களைச் செய்தருளி இருக்கின்றார். அவற்றுள் வினைக் கட்டுக்குள் அடங்கிய உயிர்களுக்கான நூல்களை உலகியல் நூல்கள் எனவும் வீடு பேற்றுக்கான உயிர்களுக்குரிய நூல்களை மெய்ந்நெறி நூல்கள் எனவும் அழைக்கப் பெறும்.

மேற்கூறிய இருவகை நூல்களும் ஆய்வுநூல் (சாத்திரம்) அழகுநூல் (இலக்கியம்) என்னும் இருவகையின் பாற்படுத்தப்படும். அழகுநூல்கள் அறிவள வில் மாத்திரம் நில்லாது அனுபவரீதியாகவும் உணரப்படுவதால் அனுபவ நூல்களும் அழகுநூல்களே. எனவே, உலகியல் அனுபவத்தின் வழியில் உலகியல் இலக்கியங்களும் இறைவனின் திருவருள் அனுபவத்தின் வழியாக மெய்ந்நெறி இலக்கியங்களும் விளங்குகின்றன. இந்த மெய்ந்நெறி இலக்கியங்களே "திருமுறைகள்" எனும் பெயரில் பலராலும் போற்றப்பட்டு வருகின்றன. இத்திருமுறை எனப்படும் மெய்ந்நெறி இலக்கியங்களை அருளிச் செய்தவர்கள் மெய்ஞ்ஞானப் பேரறிவாளர் எனப் போற்றப்பெறுவர். இப்பேரறிவாளர்களில் "திருவாசக" மாம் தேனைச் சொரிந்த மணிவாசகர் மெய்ந்நெறி இலக்கியங்களில் சிறப்பான பேரறிவாளர்(மெய்ஞ்ஞானி) ஆகின்றார்.

இவர் தமிழ் கூறும் நல்லுலகமாகிய பாண்டிவள நாட்டிலே மதுரைக்குப் பக்கத்திலேயுள்ள திருவாதவூரிலே அவதரித்தார். அதன் காரணமாக, திருவாதவூரர் என அழைக்கப் பெற்றார். இளமையிலேயே கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கினார். இவரின் சிறப்பியல்புகளைக் கேள்வியுற்ற பாண்டிநாட்டு அரசன் அரிமர்த்தனபாண்டியன் இவரை அழைத்துத் தனது அரசசபையின் முதல்மந்திரி பதவியை வழங்கினான். ஆட்சியிலும் மாட்சியிலும் வாதவூரரின் செயற்றிறமைகளை நேரிற்கண்ட பாண்டிய மன்னன் இவருக்கு "தென்னவன் பிரமராயன்" (பாண்டியன் தந்த அறிவுக்கரசன்) எனும் பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தான். ஆட்சி நிலையில் சிறந்து விளங்கிய அமைச்சர் அதனிலும் மேலான சிவ பக்தியிலும் ஆழ்ந்து மூழ்கினார்.

சோழநாட்டுக் கடற்கரையில் நல்ல அராபிக்குதிரைகள் விற்பனைக்கு வந்திருப்பதாகப் பாண்டிநாட்டரசன் கேள்வியுற்றான். உடனே தமது முதலமைச்சரை அழைத்து நாற்பத் தொன்பதுகோடி பொன்னை அவர் கையில் கொடுத்துக் குதிரைகள் வாங்கிவருமாறு அனுப்புகிறான் மன்னன். அரசபரிவாரங்கள் பக்கஞ்சூழக் குதிரைகள் வாங்கி வரச்சென்ற திருவாதவூரடிகள் வழியில் திருப்பெருந்துறையில் திருவருள் வடிவெடுத்திருந்த ஞானாசாரியர் ஒருவரால் ஆட்கொள்ளப்படுகிறார். எல்லாம்வல்ல பரமசிவனே ஞானாசாரியர் திருக்கோலத்தில் தோன்றித் திருவாதவூரரைத்

தனக்குரியவராக்கிக் கொண்டார். தாம் கொண்டு சென்ற பணம் முழுவதையும் அரசனுக்குக் குதிரை வாங்க வேண்டும் என்பதை மறந்து சிவ சேவையிலே செலவு செய்தார். அரசபணி புறக்கணிக்கப்பட்டதுமல்லாமல் அதனை அறவே மறந்தும்விட்டார். சிவனடியார் இணக்கத்திலும் சிவஞானகுரு சேவையிலும் ஆனந்த பரவசமடைந்தும் இருந்தார்.

இந்நிகழ்வுகளெல்லாம் பாண்டிய மன்னனின் காதுகளுக்கு எட்டின. அவன் சீற்றமுற்று, தென்னவன் பிரமராயனைக் கைப்பிடியாகக் கொண்டு வரும்படி ஆணைபிறப்பித்தான். இந்நடவடிக்கை மேற்கொள்ளும் வரையில் வாதவூர் உலக நடைமுறைகளை மறந்தவராகவே இருந்தார். அரச ஏவலர்கள் அரச கட்டளையை எடுத்துக் கூறினர். நெருக்கடி நேரடியாக வந்து தாக்கிய பொழுது, தான் செய்த பிழையை எண்ணி, பரமாசாரியர் திருமுன் சென்று பணிவோடும் பரிவோடும் நின்று, இனித்தாம் செய்வது என்ன என்று கேட்டார். "ஆவணி மூல நாளிலன்று குதிரைகள் வந்து சேருமென்று சொல்லி அமைதியுற்றிருப்பாயாக" என்று பரமனும் அனுக்கிரகம் செய்து பக்தனை அரசனிடம் அனுப்பி வைத்தார்.

ஆவணி மூலநாளில் குதிரைகள் வந்து சேரும் என்று முதலமைச்சர் வாதவூர் நேரில் சொன்னதைக் கேட்ட அரசன் தனது சந்தேகத்தை அறவே நீக்கினான். எனினும் திருப்பெருந்துறையில் குதிரைகளைக் காணோம் என ஒற்றர் கூறிய வார்த்தைகளைக் கேட்ட அரசன் மீண்டும் சீற்றமுற்றான். குறிப்பிட்டபடி ஆவணிமூல நாளில் குதிரைச் சேவகன் ஒருவன் குதிரைகளைக் கொண்டுவந்து சேர்த்துக் குதிரையேற்றத்தையும் காண்பித்து அரசனிடம் கயிறுமாற்றிக் குதிரைகளை ஒப்படைத்தான். அரசனும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் குதிரையாளனுக்கு முகமன்கூறி விடை கொடுத்தான்.

மறுநாள் குதிரை லாயத்தில் விடப்பெற்று நின்ற கொள்விலைக் குதிரைகளெல்லாம் காட்டு நரிகளாக உருவெடுத்து ஊளைக் குரலோடு ஆர்ப்பரித்து மாறி மறைய அரசனுக்கு அளவற்ற ஆத்திரமுண்டானது. திருவாதவூரருக்கும் போற்றுதலும் தண்டனையும் மாறிமாறிக் கிடைத்தன. பக்தனுக்கு உலக வாழ்வில் உண்டாகுந்துன்பங்கள் அவரின் பக்தியை மேலும் வளர்க்க உதவுவனவாகும். இந்த உண்மையைத் திருவாதவூரர் மூலமாக உலகத்தவருக்கு விளக்க இறைவன் திருவுளங் கொண்டார் போலும்.

அரச கருமங்களுக்காகக் கொடுக்கப் பெற்ற நிதியை நெறிதவறித் திருப்பியது முதற் குற்றம். குதிரைகள் கொண்டுவந்தது போன்று மாயவித்தை காட்டி நரிகளை நாட்டிற்குள் கொண்டு வந்தது இரண்டாவது குற்றம். இக்குற்றச் சாட்டின் பேரில் திருவாதவூரருக்குச் சிறைத் தண்டனை கொடுத்துப் பல துன்பங்களுக்கும் ஆளாக்கினான் அரசன். ஆனால், திருவாதவூரரோ மனம் கலங்காது தான் செய்ததெல்லாம் சிவசேவை, அதனைச் செய்யவே மனிதப் பிறவி வாய்த்தது. தமக்கு நேர்ந்ததெல்லாம் சிவன் செயல். அனைத்தும் தேவதேவன் திருவிளையாடலே. அவனது பக்தி என்னில் பெருக வேண்டும். அந்தப் பக்தியை அவனே தரவேண்டும். எனவே, குருநாதரே! உன்மீது மாறாத பக்தியைத் தந்தருள்க என்று பிரார்த்தித்தார்.

இந்நிலையில் எம்பெருமானுடைய திருவருளால் இன்னொரு நிகழ்ச்சியும் நிகழ்வதாயிற்று. வையை ஆற்றில் நீர் பெருக்கெடுத்துக் கரையோரமிருக்கும் வீடுகளையெல்லாம் அடித்துக் கொண்டு போகும் அறிகுறிகள் தென்பட்டன. பாண்டியமன்னன் இதனை நேரில் பார்வையிட்டு அவசர உத்தரவொன்றைப் பிறப்பித்தான். அதன்படி வீட்டிற்கு ஒருவர் கூடையுடனும் மண்வெட்டியுடனும் வைகைக் கரையை உயர்த்தும் வேலைக்கு வந்து அணைகட்ட வேண்டியதாயிற்று. சிவபக்திமிக்க "வந்தி" என்னும் பிட்டு வாணிச்சி வயதானவள். அவள் பங்கை அடைக்க கூலியாளில்லாததால் இறைவனை வேண்டினாள். பரம்பொருளே கூலியாளாக, பிட்டைச் சாப்பிட்டுச் சாப்பிட்டு வேலை செய்ய வந்தான். சிறிது நேரம் மண்ணை வெட்டிப் போடுவதும் பின்பாடுவதும் ஆடுவதும் உறங்குவதுமாயிருந்தான். வந்தியின் பங்குதான் அடைபடவில்லை. இதனைப் பாண்டியனுடைய வேலைக் கண்காணிப்பாளர் அரசனிடம் முறையிட்டனர். அரசன் கோபத்துடன் தனது கையிலிருந்த பிரம்பால் வந்தியின் கூலியாளின் முதுகில் அடித்தான். கூலியாள் மறைந்து விட்டார். ஆனால் அந்த அடியோ சகல சீவராசிகளின் முதுகிலும் ஏன்? பாண்டியனுடைய முதுகிலும்பட்டது. அடிபட்டதும் அரசனுக்குத் திடீரென்று நல்லறிவு பிறந்தது. தான் தெளிவடைந்தது பற்றி வாதவூரரிடம் ஓடோடிச் சென்று சொல்லி அவரைச் சிறையிலிருந்து மீட்டுப் பின்வருமாறு கூறினான். "ஐய! என் சொத்து சிவன் சொத்து. அது சிவ சேவையில் செலவானது சிறப்பானதும் முறையானதும் ஆகும். ஈசன் எல்லாம் வல்லவன். அடியவர்க்காக அவன் திருவிளையாடல்கள் பல செய்வான். அடியார்க்கெளியோன், உமது நல்லிணக்கத்தால் நானும் சிவபக்தனாயினேன். தங்களுக்கு யான் செய்யக்

கடவது யாதோ" என்று கேட்டு வணங்கினான். அதற்கு தாம் அமைச்சர் பதவியை விட்டுத் துறவு பூண்டு வெளியேற விருப்பந் தெரிவித்தார். அரசனும் அன்போடு அவருக்கு ஆதரவு கொடுத்து வழிபட்டு வழியனுப்பி வைத்தான்.

துறவுபூண்டு சிவநெறியிலே தீவிரமாகச் செல்லுவதற்கான வாய்ப்பைத் தந்த திருவருளைப் பெரிதும் வியந்த திருவாதவூரர் இனம் பிரிந்த மான், தன் இனத்தை நாடி ஓடுவதுபோலத் திரும்பித் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கு குருந்த மரத்தடியில் குருநாதனும் சிவனடியார் திருக்கூட்டமும் பழையபடி வீற்றிருந்தது அடிகளுக்கு அளவில்லாத ஆனந்தத்தைக் கொடுத்தது.

ஆத்மசாதகன் ஒருவனுக்குக் கிடைக்கிற வாய்ப்புக் களுள் தலை சிறந்தவை இரண்டு. முதலாவது தனது குருநாதனின் சந்நிதி சார்ந்து அவரோடு சிறிது காலம் இணங்கி வாழ்ந்திருப்பது. அடுத்தது, நல்லார் இணக்கம்(ஸத்ஸங்கம்) ஆகும். இவையிரண்டும் திருவாதவூரருக்கு வேண்டியவாறு அமைந்துவிட்டன. சீடன் முற்றிலும் பரிபக்குவம் அடைந்த பிறகு குரு அவனைவிட்டுப் பிரிவதுமுறை. அக்கோட்பாட்டிற்கு அமைய அந்தணனாய் வந்து அடிகளை ஆட்கொண்ட பெம்மான் மறைந்தருளினார். சில காலத்திற்குப் பின் சிவனடியார்களும் தங்களது யாதாஸ்தானமாகிய திருக்கயிலைக்குத் திரும்பி விட்டனர். குருநாதர் ஆணைப்படி திருவாதவூரராம் மணிவாசகர் உலகத்தாருக்குப் பக்திஞான கைங்கரியங்களைச் செய்யக் கடமைப் பட்டிருந்தார். அதன் பொருட்டு சிவஸ்தலங்கள் பலவற்றிற்குச் சென்று திருவாசகம் என்னும் பக்திப் பாடல்களை மனமுருகிப் பாடி இறைவன் புகழ்பாடும் மணிவாசகரானார். சிவபெருமானே இவரைத் திருவாசகம் — திருக் கோவையார் இரண்டையும் பாடவைத்து "மாணிக்க வாசகன்" பாட "அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுதியது" எனக் கையொப்பமிட்ட வரலாறு அதிஅற்புதமானது. மணிவாசகர் தனது இறுதிக் காலத்தைப் பூலோக கயிலாயமெனப்படும் சிதம்பரத்திலே கழித்துச் சிவசொரூபத்துடன் இரண்டறக் கலந்தார்.

மெய்ந்நெறி இலக்கியங்களில் உலகியல் நோக்கங் காண்டல் அரிது. மாணிக்கவாசகரோ மெய்ந்நெறியுடன் உலகியலையுஞ் சேர்த்து, மெய்ந்நெறிப் புதுமை இலக்கியம் படைத்துப் பெருமை சேர்த்துக் கொண்டார். திருமுறைகள் பன்னிரண்டில் மாணிக்க வாசகரின் திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந்திரு முறையாக இடம் பெற்றிருக்கின்றன.

"திரு" என்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம், பிறிதொன்றிற்கு இல்லாத மகத்துவம் என்னும் பொருள்களைக் கொண்டதாகும். இறைவனாலேயே பெயர் சூட்டப் பெற்ற இவ்விரு மெய்ந்நெறி இலக்கியங்களில் திருக்கோவையார் தமிழில் முதற் கோவை இலக்கியமாகும். மெய்ந் நெறியுடன் உலகியலையும் சேர்த்து விளக்கும் இத்திருக்கோவையார் அகத்திணை வழிசார்ந்த மெய்ந்நெறிக் கோவை இலக்கியமாகும். இதனை அருளிய மணிவாசகர் திருவாசகம் என்னும் மெய்ந்நெறி இலக்கியத்திலும் "திருவெம்பாவை" எனும் பெண்கள் மார்கழி நீராடல் பகுதியையும் அகத்துறை தழுவியதாகவே அருளியிருக்கிறார். இவரின் இந்த வழிகாட்டல் பின்னர் மரபு வழி இலக்கியந் தோன்றுவதற்கு வழிசமைத்தது ஆகிவிட்டது.

"பேசும் பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த
மாசில்மணியின் மணிவார்த்தை — பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து —(பண்டாய நான்மறை)" எனவரும் பகுதியைக் கொண்டு வாதவூரர் அருளிய நூல் மணிவார்த்தை நிறைந்த மணிவாசகம் எனத்திகழ்கின்றது. மணிவாசகர் அருளிய இந்த மணிவாசகம் என்னுந் திருவாசகம் 51 திருப்பதிகங்களையும் 656 திருப்பாடல் களையுங் கொண்டதாக அமைந்து விளங்குகின்றது.

திருவாசகத்தில் முதலில் சிவபுராணம், கீர்த்தித்திருவ கவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் என்னும் நான்கு பெரும் பாட்டுக்கள் உள்ளன. சிவபுராணம் சிவபெருமானின் பழமையையும், கீர்த்தித் திருவகவல் உரைமனங்கடந்த உத்தமர் சிவபிரான் அடியவர் தரிசிப்பதற்காகத் தலங்கள் தோறும் கோயில் கொண்ட சிறப்பையும் திருவண்டப்பகுதி அண்டங்கள் யாவும் சிவத்தின் முன்னே சிறிய அணுக்கள் ஆகும் எனக்கூறிச் சிவத்தின் பெருமையை உணர்த்துவதும் போற்றித்திருவகவல் உயிர்கள் பல் வேறு பிறவி எடுத்து வருந்தி இறுதியில் திருப்பாதப்பற்றுமிக்கு இறைவனைப் போற்றிப் புகழ்வதைக் கூறுவதும் ஆகும்.

மிகுதியாகவுள்ள பதிகங்களில் திருப்பெருந்துறையில் அருளப் பெற்ற அச்சோப்பத்து, சென்னிப்பத்து, அற்புதப் பத்து, அதிசயப்பத்து ஆகியன சிவபிரான் மணிவாசகருக்கு எளிவந்து அருள் செய்தமை பற்றிக் கூறுவன.

நீத்தல் விண்ணப்பம், ஆசைப்பத்து, அடைக்கலப்

பத்து, பிரார்த்தனைப்பத்து, புணர்ச்சிப் பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, திருச்சதகம், செத்திலாப்பத்து என்பன இறைவன் தன்னை உடனடியாக வீடுசேர்க்க வேண்டுமென்று விரும்பிப் பாடியன. பண்டாயநான்மறை, திருவார்த்தை, திருவெண்பா, குழைத்தபத்து ஆகியன சிவானுபோக முதிர்ச்சியுற்றுப் பாடியவை.

திருப்பள்ளியெழுச்சி, திருப்பாண்டிப்பதிகம், திருத்தசாங்கம் வீட்டுநெறியை உலகினருக்கு எடுத்து விளக்கப் பாடியவை.

குயில்பத்து, கோத்தும்பி, திருப்பூவல்லி, திருத் தோணோக்கம், திருத்தெள்ளேணம், திருப்பொற் சுண்ணம், திருப்பொன்னூசல், திருவுந்தியார், அன்னைப்பத்து ஆகியன உண்மையறிவைப் பிறருக்கு அறிவுறுத்தற் பொருட்டுப் பாடப் பெற்றவை.

வீடுபேற்றின் விருப்பால் கோயில் மூத்த திருப்பதிகம், எண்ணப்பதிகம், ஆனந்த மாலை என்பன பாடப்பெற்றன. திருப்புலம்பல் பதிகம் திருவாரூரிலும் திருவேசறவு திருவிடைமருதூரிலும் திருவெம்பாவை திருவண்ணாமலையிலும் பிடித்தபத்து திருக்கழுமலத் திலும் பாடப் பெற்றவையாகும்.

திருப்படையெழுச்சி, யாத்திரைப்பத்து ஆகிய பதிகங்கள் அடியவர்களோடு வீட்டிற்குப் புறப்படுவதைக் கூறுவன.

இறுதியாகச் சீவோபாதியை ஒழித்தலைத் திருப்படை ஆட்சிப்பதிகம் கூறுகின்றது. இங்ஙனமாக ஐம்பத்தொரு பதிகங்களும் பக்தியைப் பெருக்குவதற்காகப் பாடப் பெற்ற திருவாசகப் பாடல்களாகும். இவ்வண்ணம் ஐம்பத்தொரு பதிகங்களும் ஆன்மாக்கள் உய்திபெற, தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற எண்ணத்தினால் பாடப் பெற்றவையாகும்.

மணிவாசகர் தமிழையும் பாண்டிநாட்டையும் பலவிடங் களில் வியந்து பாராட்டியுள்ளார். திருவம்மானைப் பதிகம் 10ல்.

"விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானை" எனப் பாடிய இப்பாடலில் தமிழைத் தண்ணார் தமிழ் என்றும் பாண்டி நாட்டைத் தண்பாண்டி நாடென்றும் இறைவனைத் தண்பாண்டி நாட்டானென்றும் போற்றிக் கூறுவதிலிருந்து மணிவாசகரின் மேலான தமிழ்ப் பற்றினை அறியக் கூடியதாக இருக்கின்றது. முன்னை நல்வினைப் பயனாலும் பாண்டியனுடைய செயல்களினாலும் இறைவனிடம் மூலப் பொருளின் அறிவைப் பெற்ற இடம் என்பதனாலும் பாண்டி நாட்டையுந் தமிழையும் மறக்கமுடியாமல் இறைவனைப் பாண்டியனாகவே கூறித்தெய்வத்தின் பெருங் கருணையைப் பல்வேறிடங்களிலும் நினைந்து நினைந்து உருகுகின்றார். எல்லாம் வல்ல ஈசனாகிய சிவபெருமான் கூலியாளாகி வந்து மண்சுமந்து அடிபட்ட அற்புத நிகழ்ச்சியை;

**"பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத் துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"**
என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்துகிறார். அனைத்தும் சிவசக்தி சொரூபம் என்பதும் அகில உலகிற்கும் அவனே ஈசன் என்பதும் அண்டங்களுக்குமப்பால் உள்ள சித் ஆகாசமே அவன் என்பதை அவனது நெற்றிக் கண் நிரூபிக்கும் பெருமை படைத்த அதீதப் பொருள். தன்பக்தன் பொருட்டு பிரசித்தி பெற்ற மதுரையிலே — தன் வீடிருக்கும் ஊரிலே பிரம்பினால் அடிபட்டு முதுகில் புண்பட்டான், அவனது மகிமையைப் பாடுவோம் என்பது பொருள்.

இன்னும், நினைக்குந் தோறும், பார்க்குந்தோறும், பேசுந்தோறும் ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அனைத்து எலும்புகளும் உள்ளே இளகும்படி பேரின்பத்தைச் சொரியும் திருநடப்பேரியல்பு கொண்டவர் என்பதனை;

**"தினைத்தனை உள்ளது ஓர்பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந் தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தம்தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ"**
என்ற பாடல் மூலம் தந்து ஆனந்தப் பேரியல்பினை நமக்கு உணர்த்திக் காண்பிக்கிறார்.

இறைவனுடைய பேரியல்பைக் கூறுமிடத்து இறை வன் எல்லாப் பொருளிலும் தோன்றும் பொருளாகவும் தோன்றாப் பொருளாகவும் மெய்யடியார்களுக்கு மெய்ப் பொருளாகவும் பொய்யர்களுக்குப் பொய்ப் பொருளாக வும் இன்பதுன்பம் உள்ளவராகவும் இன்பதுனபம் இல்லாதவராகவும் இருக்கின்றார் என்பதனை;

**"வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுஆய் இன்மையும் ஆய்க்
கோன்ஆகி யான் எனதுஎன்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே."**

"இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே" சிவபுராணம் இப்பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.

இறைவன் தன்னைக்காணவிரும்பும் உளம் உடையவர்களுக்கும் மறைந்திருக்கும் மாண்பினை யுடையவர். ஆயினும் அவ்வடியார்களுக்குப் பக்குவ நிலையறிந்து அவர்களுக்குத் திருவருள்புரியும் பேரியல்புங் கொண்டவர் என்பதனை மணிவாசகர்

"தேவதேவன் மெய்ச்சேவகன் தென்பெருந் துறை நாயகன்
மூவராலும் அறிய ஒணா முதல் ஆய ஆனந்த மூர்த்தியான்
யாவர் ஆயினும் அன்பர் அன்றி அறிஒணா மலர்ச் சோதியான்
தூய மாமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னிச் சுடருமே"

என விளக்குகிறார். மும்மூர்த்திக்கும் அறியமுடியாத இறைவனைப் பக்தி பண்ணுபவர்களே அறிய முடியும் என்பதாம்.

மணிவாசகர், பக்திநெறி, அன்புநெறிவழி நின்ற ஞானியராவர். இறைவனை எப்பொழுதும் அகத்திலே நினைந்து அவரின் தொடர்பு நீங்காது ஒழுகி வருப வர்களே சான்றோர்கள் எனப்படுவர். இத்தகைய சான் றோர்கள் இறைவனைப் புறத்தே தேடிவருவது போல தம் அகத்தேயுந் தேடிக்காண்பர். பக்தி நெறியாவது இறைவனிடம் அன்பு பூண்டு ஒழுகுதலாகும்.

"பக்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்" எனவும் "பாருருவாய பிறப்பறவேண்டும் பத்திமையும் பெற வேண்டும்" எனவும் கூறியதனை இங்கு நோக்குவோம். இறைவன் மீதுள்ள அன்பினைக் குறிப்பதே பக்தியென்று கூறினோம். இவ்வன்பினை உடையோர் தான் பக்தராவர். இங்ஙனம் பக்தி நெறி நின்று ஒழுகும் பக்தர்கள் முத்தி நெறிக்கு முன்னோடிகளாவர்.

மணிவாசகர் அருளிய திருவாசகம் கருங்கல் மனதையும் கசிந்துருகச் செய்யுந் தன்மை வாய்ந்தது. பக்தியோடு ஓதுவாருடைய அல்லலை அகற்றி ஆனந்தமூட்டவல்லது. இதனைத் "தேன்" என்று அறிவாளர் சொல்லுவர். தித்திப்பைத் தருகின்ற உண வுப் பொருள்களில் தேன் மிக மிக உயர்வானது.

தித்திப்பால் மட்டுமல்ல; நோய் போக்கி வலிமையையும் சேர்க்கவல்லது. ஏனைய தித்திப்புப் பொருள்களெல்லாம் உண்டபின் நோயைத் தரவல்லன. ஆகவே, தித்திக்குந் தன்மையாலும் பிறவிப்பிணியை அகற்றுந் தன்மையாலும் திருவாசகத்தைத் தேன் என்று உருவகப்படுத்துவது சாலச் சிறப்புடையதாகும்.

நாமம் என்பது, குறித்து உணர வைக்கும் பெயராகும். உருவம் என்பது வடிவழகைக் குறிப்பதாகும். இறைவன் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்திருப்பவராதலால் அவர் குறித்து(சுட்டி) அறியப்படாதவராவர். எனவே, அவருக்கு நாமம், உருவம் என்பன இல்லை. பெயர், ஊர், குணம், குலம், உருவம் எதுவுமே இறைவனுக்கில்லை என்பதனை மணிவாசகர்:

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ"

என்ற பாடலின் மூலம் உணரவைக்கின்றார். தெள்ளேணம் என்பது மகளிரின் ஒருவகை விளையாட்டு. ஒவ்வொரு நாமத்தினதும் பொருளுணர்ந்து ஆயிரம் திருநாமங்களை நிதானமாக ஓதுவது நல்ல அர்ச்சனையும், ஆராதனையும், உபாசனையும் ஆகும். இறைவனுக்கு வழங்கப்படும் திருநாமங்கள் எல்லாம் ஆன்மாக்களின் பொருட்டே வழங்கப்படுவதாகும். அதனாலேதான் போலும் ஆயிரந்திருநாமம் நாம் பாடுவோம் என்று கூறுகிறார். மேலும், எங்குமாய், இன்பமயமாய், என இறைவனுடைய பேரியல்புகளை மணிவாசகர் திருவாசகத்தில் மிகவும் விரிவாக விளக்குகின்றார். இறைவன், வானமாகவும், பூமியாகவும், காற்றாகவும், ஒளியாகவும், உடலாகவும், உயிராகவும், உண்மையாகவும், இன்மையாகவும், தலைவனாகவும், கூத்தாட்டுபவனாகவும் இருக்கின்றார் என்பதனை விபரித்துக் கூறுகையில்;

*"வான் ஆகி மண் ஆகி வளிஆகி ஒளிஆகி
ஊன் ஆகி உயிர் ஆகி உண்மையும் ஆய் இன்மையும் — ஆய்க்
கோன் ஆகி யான் எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வான் ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"*

எனக் கூறுகின்றார். யாவும் நீயே, ஈசனும் நீயே, யாவும் உன் செயல்களே. எனவே அளவு கடந்த நின் செயல்களை, மகிமைகளை என்னால் எப்படி விளக்க முடியும் என்ற தாற்பரியம் இதனால் பெறப்படுகின்றது.

புதுமலர் கொண்டு இறைவனை அருச்சித்துத் தொழுதல், ஆனந்தக் கண்ணீர் சொரிதல், கைகூப்பி வணங்குதல், மனங்கசிந்துருகுதல், மெய்யுருகுதல், மெய் மயிர்சிலிர்த்தல், சிவனடியாரோடு இணங்குதல் இவையெல்லாம் பக்தர்களுடைய இயல்பான நிலைகளாகும். இந்நிலைகளில் மணிவாசகர், இறைவனை நினைந்து, என்னை அடிமையாகவுடையவரே! உங்களையே முற்று முழுதாக நம்பினேன், உன் திருவடிகளில் நான் அன்பு செலுத்துவதற்கு நிலையான அன்பினை அடியேனுக்கு எப்பொழுதும் கொடுத் தருள்க! என்று கேட்கிறார்.

"மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்! என்னைக் கண்டு கொள்ளே"

ஈசன் சர்வக்ஞனாயிருப்பதால் ஜீவர்களின் பக்குவம் அவனுக்கு விளங்கும். "கண்டு கொள்ளே" என்பதில் இக்கோட்பாடு அடங்கியுள்ளது. மேற்கூறிய தன்மைகள் பக்தர்களிடம் இருந்தது மாத்திரமா? வாழ்த்தி வணங்குந்தன்மையும் அவர்களிடம் இருந்து வருவதை அறியலாம். இது ஒருமரபாக இன்றும் நிலை பெற்று வருகிறது. உ+ம்: "வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே"

இறைவனே! வானவர்கள் உன்னை வாழ்த்துதல் தாங்கள் எதுவித குறைகளுமின்றி நீடுவாழ்தற் பொருட்டு, தங்கள் மனதை உன்னிடத்தே தொழச் செய்வது தாங்கள் மேநிலையடைந்து தங்களை ஏனையோர் வழிபடச் செய்வதற்கே. ஆனால், நாய் போலும் அடியேன் பயனில்லாத இந்தப் பிறவியை விட்டு விடுவதற்காகவே உன்னை வாழ்த்தி வணங்குகின்றேன். இதனை, "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனம் நின்பால் தாழ்த்து வதும்....." பாடலால் அறியலாம். சுயநலத்தை நாடி, தேவர்களும் நரகர்களும் வருகிறார்கள். இது காமியப் பிரார்த்தனையாகும்.

ஆத்மசாதகன் பிறப்பினின்று முத்தியடைதற் பொருட்டுப் பரமனை வேண்டுகிறான். அது நிஷ்காமியப் பிரார்த்தனையாகும்.

இங்ஙனம், பக்தர்கள் பலவேறு வழிகளில் இறைவனை வழிபட்டு வருவர். ஆயினும் ஆனந்தப் பெருக்கோடு ஆடிப்பாடுதல் மூலமும் இறைவனை மெய்யன்போடு வழிபடுவர். இந்நிலை அன்பின் முதிர்ச்சியால் உண்டாவதாகும்.

"ஆடுகின்றிலை கூத்து உடையான்கழற்கு அன்பு இலை
— என்பு உருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை பணிகிலை பாத
— மலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை துணை இலி பிண
— நெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோறு அலறிலை செய்வது ஒன்று
— அறியேனே"

எனத் தன்மனதை நோக்கி, தனது பக்தியினால் ஆடிப் பாடாமையை ஒரு பெருங்குறையாகத் தெரிவிக்கின்றார். செயலற்றுப் பிணம் போலக் கிடக்கின்ற நெஞ்சமே! உன்னை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய என்றும் அதனால் உண்டாகக் கூடிய தீங்கையும் எடுத்துக் கூறுகின்றார் மணிவாசகர்.

தொடர்ச்சி அடுத்த இதழ்..........

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

நாம் அக்கறை கொள்ள வேண்டியது புத்தகத்தின் எடை அல்ல; அதில் விளக்கியிருக்கும் அறிவுரைதான். புத்தகத்திற்கு மதிப்புக் கொடுக்காதீர்கள்; அதன் கருத்துக்குக் கொடுங்கள். அதன் எடைக்குப் பணியாதீர்கள்; அதனுள் கூறப்பட்டிருக்கும் செய்திகளுக்குப் பணிசெய்யுங்கள். பூஜை அறையில் வைக்காதீர்கள்; உங்கள் இதயத்தில் வையுங்கள். அப்பொழுதுதான் எக்காலத்தும் கீதையின் ஆட்சியானது சீராக மதிக்கப்படும். வெறும் வெளிப்பூசனையால் ஆணவம் போன்ற தீமைகளினின்றும் மனம் தூய்மைப்படாது. மனப் பாடஞ் செய்வது, பூஜையில் வைத்து வணங்குவது, தலை மேற்கொள்வது, கண்களில் ஒற்றிக் கொள்வது போன்ற செய்கைகளால் பயனொன்றுமில்லை. அதன் அருள்வாக்கு இதயத்தில் இடம் பெறவேண்டும். அதை ஏற்று நடத்திக் காண்பியுங்கள். அதனால் வரும் இன்பத்தைச் சுவையுங்கள். அதுதான் கீதையைப் போற்றும் வழி.

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா.

வானோ புனல்பார் கனன்மா ருதமோ
ஞானோ தயமோ நவினான் மறையோ
யானோ மனமோ வெனையாண்ட விடந்
தானோ பொருளா வதுசண் முகனே — கந்தர் அநுபூதி.

# எந்த நிலை வந்தாலும் சொந்த நிலை மாறாதீர்!

திருமதி. இராஜேஸ்வரி கந்தையா

"அன்பே சிவம்," அவன் உணர்த்திய நெறி சைவம். எங்கள் சமயம் சைவசமயம். உலகம் தோன்றிய போதே தோன்றிய உலகின் மூத்தசமயம். ஆதியும் அந்தமுமற்ற சோதிவடிவான இறைவனை அன்பு வடிவாகக் கண்டு "அவனருளாலே அவன் தாழ் வணங்கி" மனிதப் பிறவியின் மாண்பினைப் போற்றி முத்திக்கு வித்தாகும் முதற்சமயம். "அயனொடு அரிமால் அறிய ஒண்ணா" இறைவனைத் தூய நன் மனதால் துதித்து விழிகளாற் கண்டு நற்றமிழ் மொழியால் நாவார வாழ்த்தியும் வைதும் உரிமை பெற்ற அருள்மிகு நாயன்மார்களை, சிவஞானச் செல்வர்களைக் குரவர்களாகக் கொண்டு ஒளிர்கின்ற உயர்ந்த சமயம்.

சக்தியும் சிவமும் தத்துவமாக உலகின் ஒழுக்கம் நிறைந்த உன்னத வாழ்க்கை நெறியை உணர்த்திக் காட்டும் உண்மைச் சமயம்.

சைவம் தழைக்கத் தாரகமாய் நிற்பது தமிழ்மொழி. எங்கள் தாய்மொழி தமிழ். அது இறைவன் அருளிய மொழி. உலகின் மிகத் தொன்மையான, மொழி இலக்கண இலக்கிய வளம் செறிந்தது. இயல், இசை, நாடக, நயம் நிறைந்தது. இளமை அழகும் இனிமைச் சுவையும்மிக்கது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கை முறையின் வளம் கூறும் நேர் மொழி. மன்னர்களாலும் புலவர்களாலும் சங்கம் அமைத்துப் போற்றி வளர்த்த செம்மொழி. "நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே" என்று இறைவனுடன் அஞ்சா நெஞ்சுடன் வாதிட்ட நக்கீரர் சொன்ன நீதிமொழி. "உயிரினும் பெரிது மானம்" என்ற உணர்வு காக்கும் மொழி. பழமையும் பெருமையும் தூய்மையும் கொண்ட எம்மொழி காலத்தால் அழியாத பல காவியங்களைத் தன் அணிகலங்களாகக் கொண்டு சுதந்திரமான நிரந்தரமான சிறப்புக்களுடன் உலகுள்ளவரை துலங்கி நிற்கும் முதல் மொழி.

தமிழ் இறைவன் அருளிய மொழி. "'அம்மா' என்பது தமிழ் வார்த்தை." அதுவே குழந்தையின் முதல் மொழி; உயிர் ஒலி; அது தமிழ் மொழி.

தமிழால் இறைவனின் மகிமையும் இறைவனால் தமிழின் பெருமையும் சக்தியும் சிவனும் போல இணைந்தே வளம் பெறும் என்றால் மிகையாகாது. இதனாலன்றோ தமிழ் மொழி தெய்வீக மொழி என்று போற்றப்படுகின்றது. நாயன்மார்களின் வரலாறுகள் நல்லுதாரணங்களாகத் திகழ்கின்றன.

மூன்றே வயதுப் பாலகன் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் அம்மையப்பர், தன்னை ஆட்கொண்ட அழகைத் "தோடுடைய செவியன்" என்ற திருப்பாடலின் முதன் மலராகத் தொடுத்து அழகிய தமிழ் ஞானப் பாமாலைகளை இறைவனுக்குச் சூட்டியிருக்கிறார்.

திருவதிகை வீரட்டானத்திலே, சைவ சமயத்தைத் துறந்து சமணர்களுடன் சேர்ந்த அப்பர் சுவாமிகளை ஆட்கொள்ளக் கொடிய சூலைநோயைக் கொடுத்துத் தமக்கையார் திலகவதியார் மூலம் மீண்டும் சிவ நாமத்தின் மகிமையை உணரச் செய்தபோது "கூற்றாயின வாறு விலக்க கலீர் கொடுமை பல செய்தன நானறியேன்" என்று அப்பர் பாட, அருள் செய்த இறைவனுக்கு இனிய தமிழ் இனித்தது.

திருமணப் பந்தலில் மணமகன் தனது அடிமை என வாதிட்ட அந்தணக் கிழவர் அதை ஆதாரத்துடன் நிரூபித்துத் திருவெண்ணெய் நல்லூர்க் கோவிலுக்குக் கூட்டிச் சென்று தன் சுயரூபத்தைக் காட்ட, பிறை சூடிய பெருமானைப் "பித்தா" என்று ஏசிய சுந்தரர் செய்வதறியாது திகைத்து நிற்க "அன்பா! என்னைப் பித்தா என்றே பாடு" என இறைவன் கொடுத்த அடியில் தொடுத்த இனிய இசைப் பாமாலை எல்லோர் சிந்தையையும் ஈர்க்கும் தமிழ்ப் பாமாலையல்லவா?

அரிமர்த்தன பாண்டியனின் மதிமந்திரி மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்ற போது நரியைக் குதிரைப் பரியாக்கி இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். திருவாசகம் என்னும் பெருவாசகம் தந்த பெருவள்ளல். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற சிறப்புமிக்க திருவாசகம் தெள்ளு தமிழ்த் தேனமுதமன்றோ?

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெ ருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

குழந்தைக்குப் பாலூட்டும் வேளை வந்து விட்டதே என்று உணர்வோடு குழந்தையை அணைக்கும் பாச மிக்க அன்னையிலும் மேலான பரிவுடன் தன்னை ஆட்கொண்ட இறைவனைத் தனது பக்திவலையிற் சிக்க வைத்து "இனி நீ என்னை விட்டு எங்கே செல்ல முடியும்?" என்று உரிமையோடு இறைவனுடன் சவால் விடும் வாதவூரார் விரித்தவலை தமிழ்ப் "பாவலை" யன்றோ? தொடுத்த தமிழ்ப் பாமாலை உள்ளத்தை உருக்கி உலகெலாம் ஒலித்து நிற்கின்றது.

தாய் மீது அளவற்ற பாசம் கொண்ட இராவணன் சிறந்த சிவபக்தன். அசுரர் குலத்தவன், இலங்கை வேந்தன்(வீரத் திராவிடன்) பத்துத் தலைகளை உடையவன், பராக்கிரமசாலி, தனக்குக் குறுக்கே வந்த கைலையங்கிரியைப் பெயர்க்க ஆசை கொண்டான். பலங்கொண்ட மட்டும் முயன்று பார்த்தான் முடிய வில்லை. இறைவன் இசைப்பிரியன் என்ற உண்மையை உணர்ந்தான். தன் ஒரு தலையைப் பிடுங்கி வீணையாக்கிச் சாமகானம் பாடினான். அசையாத வெண்பனி மலையில் அமர்ந்த தலைவர் அந்த இசை கேட்டு அவனுக்கு இசைந்தருளினாரே, சிரவீணையில் ஒலித்த தெய்வீகக் கானம் தமிழ் வேத ஒலியல்லவா?.

சைவமும் தமிழும் உடலும் உயிரும் போன்றவை. இதில் ஒன்று இல்லையேல் ஒன்றும் இல்லை. சைவமும் தமிழும் இறைவனால் அருளப்பட்டவை. அவனருளாலே அவதரித்த நாயன்மார்களால் வளர்ச்சியடைந்தவை. வேதங்களையும் திருமுறைகளையும் சிரமேற் கொண்டொழுகி அறவாழ்க்கை வாழ்ந்தவர் எம் சைவத் தமிழர். அவர்கள் எந்த நிலை ஏற்பட்டு எங்கு சென்று வாழ்ந்தாலும் சொந்த நிலை மறவாத, மாறாத செந்தண்மையாளர்கள். சொந்த இடம் விட்டு வந்த இடத்திலும் தங்கள் மதம் மொழி கலாச்சாரங்களில் மாசற்றவர்களாக வாழ்கின்ற வாழவேண்டுமென்ற மனம் படைத்தவர்கள். தங்கள் எதிர்காலச் செல்வங்களின் வாழ்க்கையில் ஏதும் தாக்கங்கள் மாற்றங்கள் ஏற்பட்டுவிடுமோ என்ற ஏக்கத்தில் தங்களால் இயன்றளவு நல்லவற்றை அவர்களின் வளர்ச்சிப் பாதையில் முன்எடுத்துச் செல்ல முனைவு கொண்டுள்ளனர்.

கனடாவில் உறையும் பனிக்குளிரில் உறைந்து விடாமல் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உயிர் காக்கும் விழிகளின் வழிவந்த சைவத் தமிழர்களைச் சார்ந்தவர்கள் நாம் என்பது எமக்குப் பெருமை. "தம்மிற் தம்மக்கள் அறிவுடையராதல், ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" பெற்றோரின் பேராவல் "பொன்னைப் போல தன்னைப் பேணு" என்ற முதுமொழிப்படி வாழும் தமிழராகிய நாங்கள் எமது கண்களாகிய சைவத்தையும் தமிழையும் பேணிக் காக்க வேண்டியது கடமை. இவற்றுக்கெல்லாம் ஒளிவிளக்காகச் "சைவநீதி" சுடர்விடுவது காலத்திற்கும் இடத்திற்கும் சாலச் சிறந்தது. இதற்கு எண்ணெயிட்டு ஒளிரச் செய்வது "கனடா இந்து மாமன்றத்திற்கு" மாத்திரமல்ல அனைத்துச் சைவத் தமிழ் மக்களின் தனியுரிமை.

"சைவமும் தமிழும் எங்கும் தழைத்திட ஆவல் கொண்டு
உய்வன செய்ய வந்த உயர்வுடை அறிஞர் கண்ட
இந்து மாமன்றம் என்றும் இறையருள் ஆசிபெற்றுக்
கண்களாய்க் கனடாநாட்டின் கலங்கரை விளக்கமாய் வாழ்க!"

"செந்தழல் இறை உவந்து செந்தமிழ் இனிமை கேட்டான்".

சிவமும் தமிழும்
சைவமும் தமிழும் வாழ்க! வாழ்க!!

சான்றோர் சொல்லமுதம்.

நிழலை உணர வெயில் தேவை, மழையை உணர வரட்சி தேவை, மனிதாபிமானத்தை உணர மிருகத்தனம் தேவை, தெய்வீகத்தை உணர மனிதர்கள் தேவை. — கவிஞர்

# சைவமும் நாமும்

நயினையம்பதி ப.க.கனகசபாபதி

உலகிலே சமயங்கள் பலவுள. அவற்றுள் சைவசமயம், கிறிஸ்துசமயம், புத்தசமயம், இஸ்லாமிய சமயம், சமண சமயம் முதல் இன்னும் அநேகம். சைவசமயம் முதலும் முடிவும் இல்லாதது. ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ்சோதி என்கின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். சைவசமயத்தையும், சிவபெருமானையும் முழுமையாகக் கைக்கொண்டு உலகில் கோடிக்கணக்கான மக்கள் வழிபட்டு வருகிறார்கள்.

சைவசமயம் வேறு எச்சமயத்தையும் இகழ்ந்து செயற் பட்டது கிடையாது. வேறு சமயத்தவர்களான போர்த்துக் கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் நாடு பிடிப்பதோடு நில் லாது, பல சைவ ஆலயங்களை இடித்தும், அழித்தும், ஒழித்தும் உள்ளதாக வரலாறுகள் உண்டு. அவற்றின் பெறுபேறாகவோ என்னவோ பல வெள்ளை இனத்தவர் கள் சைவ சமய நெறிகளைப் பின்பற்றி அமைதியும் நிம்மதியும் அடைந்து வருகிறார்கள். அது மட்டுமல்ல அவர்களது நாடுகளிற் கூட பல சைவ ஆலயங்கள் தோன்றியுமுள்ளன. இறைவனை ஆராய்ச்சியால், விஞ்ஞா னத்தால் காண முடியாது. அனுபவத்தால் தான் காண முடியுமென்பது ஞானிகள் கூற்று.

மேலெழுந்தவாரியாக கடவுளுடன் தொடர்பு கொள்வது சுலபமன்று. இறைவன் ஆன்மாக்களின் பக்குவ நிலைக் கேற்பப் படிப்படியாகவே அவர்களை ஆட்கொள்ளுவான். முன்னைத் தவமுடையோரைத் தானே தடுத்தாட் கொள் வான். சிவபெருமான் ஒரு பெரிய கள்வன். அப்பெருமான் ஒளிமயமானவன். ஆனால் மறைந்திருக்கிறான். மறைய நின்றுளான் மாமணிச் சோதியான் என்கிறார் அப்பரடிகள். இவன் திருடுவது காசு பணமல்ல, உள்ளங்கவர் கள்வன் என்கிறார் திருஞானசம்பந்தர். இத்திருடன் எங்கும் நிறைந்துள்ளான். ஆனால் காணமுடியாது. ஒவ்வோர் உயிரிலும் ஒளித்திருக்கிறான்.

நமக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று ஆகும்வழி. மற்றையது சாகும்வழி. வடக்கே சென்றால் ஆகும்வழி. தெற்கே சென்றால் சாகும்வழி. வடக்கில் இருப்பவன் சிவபெருமான். தெற்கில் இருப்பவன் இயமன். சிவனை அடைந்தால் அவன் சரணம். இயமனை அடைந்தால் கிடைப்பது மரணம். எனவே அவச்சொற்களும் அவச்சிந்தனைகளும் உடையவர்களாக இருந்தால் நமது பயணம் தெற்கே தான் செல்லும்.

*அவமாயை கொண்டுலகில் விடுதா அலைந்துழலும்*
*அடியேனை அஞ்சலென*

— வரவேணும் என்கிறார் அருணகிரிநாதர்.

இன்னார்க்கு இன்னது இன்ன காலத்தில் அமைய வேண்டும் என்று அவர்கள் செய்த தீவினை நல்வினைக்கேற்ப நியாயத் தீர்ப்புக் கூறி வகுத்து அனுப்புகிறான் இறைவன். இதனையே

வகுத்தான் வகுத்தவகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்கிறார் திருவள்ளுவதேவர்.

பிறவிகள் எல்லவற்றினும் மானிடப்பிறவி அரிதானது. "அரிது அரிது மானிடராதலரிது" என்று ஔவை யாரும், "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவி தான்யாதினும் அரிதரிது காண்" என்று தாயுமானா ரும் கூறியுள்ளார்கள்.

கருப்பையிலிருந்து தேவர்களும், மனிதர்களும், நாற்கால் விலங்குகளும், முட்டையிலிருந்து பறவை களும், ஊர்வனவும் நீர்வாழ்வனவும் வியர்வையி லிருந்து கிருமி, கீடம்(புழு), பேன் முதலிய ஊர்வன வும், விட்டில் முதலிய சிலவும், வித்தினும், வேர், கொம்பு, கொடி, கிழங்குகளிலிருந்து தாவரங்களும் பிறக்கின்றன. எனவே இம்மனிதப் பிறப்பில் நாம் செய்ய வேண்டிய நல்லனவற்றையெல்லாம் செய்ய முயல வேண்டும். முயற்சி திருவினையாக்கும்.

வேதங்கள் நான்கு அவையாவன இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பனவாம். நான்கு வேதங் களும் எல்லாத் தருமங்களுக்கும் மூலாதாரமானது.

மனுநீதி கண்ட சோழன், பசுக்கன்றைத் தேர்ச்சில்லால் நெரித்துக் கொன்ற தன் மகனைத் தான் தனது தேர்ச்சில்லினால் நெரித்துக் கொன்றானென்றும் முல் லைச் செடிக்குத் தன் தேரைக் கொடுத்தான் பாரி மன்னன் என்றும் கதைகளுண்டு. ஆகவே, சைவ நீதி சமயத்தோடு தொடர்புபட்டே வந்திருக்கின்றது. "நீதியே செல்வத்திருப் பெருந்துறையில் நிறைமலர்க் குருந்தமேவிய சீர் ஆதியேயென்று" மாணிக்கவாச கரும் கூறியுள்ளார்கள்.

இன்று நம் சொந்த நாட்டில் வாழமுடியாது அல்ல லும் அவதியுமுற்று இடம் பெயர்ந்து மேலை நாடு களில் வாழும் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் பலவித கஷ்ட நஷ்டங்களுக்கு மத்தியில் ஒரு வகையில் [illegible]யாக வாழ்ந்தாலும் பல தாக்கங்கள் அவர்களை அறியாமலே ஆட்கொள்ளத்

தான் செய்கின்றன. சொந்த நாடு, வீடு வாசல், காணிபூமி, பெற்றோர், பிள்ளைகள், உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், என்ற இன்னோரன்ன பல.

குறிப்பாகக் கனடா நாட்டிலே ஒரு இலட்சம் இலங்கைத் தமிழ் மக்கள் வாழுகின்றார்கள். அவர்களுக்குத் தமது பிள்ளைகளை வளர்த்தெடுப்பதும், அவர்களைத் தமது கலை கலாச்சாரங்களுக்கு அமைவாக வளர்ப்பதும் தமது மொழியைக் கற்பிக்கும் பெரும் பொறுப்பும் அவர்களையே சார்ந்துள்ளன. ஆனால் பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே என்பது போல நமது பண்பாட்டையும், தமிழையும், தத்தம் சமயங்களையும் பேணிப் பாதுகாக்க முயலவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற முதுமொழிக்கேற்ப வாழ்ந்தால் முடியாதது ஒன்றில்லை. எத்தனையோ பெருமக்கள் 10 தொடக்கம் 15 மொழிகளில் வல்லவர்களாய் உள்ளனர். இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அவர்களுக்கு 16 மொழிகள் தெரியும். அப்படியானால் நாம் குறைந்தது இரண்டு மொழிகளில் ஏன் வல்லவர்களாக முடியாது? முடியும் என்கின்ற திடசித்தத்துடன் செயற்பட்டால் முடியும். இன்று பல பெரியோர்கள், மன்றங்கள் அமைத்துத் தமிழையும், சைவத்தையும் வளர்க்க முயன்று வருவது வரவேற்கத் தக்கதே.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்.

**<u>சான்றோர் சொல்லமுதம்</u>**

யாத்திரீகன் தன்னிடமிருக்கும் செல்வத்தை மறைத்து வைத்துக் கொள்ளுகிறான். நல்ல பெண் ஆடையால் தன் உடல் அங்கங்களை மறைத்து வைத்துக் கொள்ளுகிறாள். அதே போன்று பெரிய மனிதர்கள் தாங்கள் செய்த நல்ல காரியங்கள், தர்மங்கள் போன்றவைகளைத் தங்களுடைய உள்ளங்களில் மறைத்து வைத்துக் கொள்கிறார்கள்.

— பகவத் கீதை.

படித்தவன் மூடனுக்கும் கால் உள்ளவன் முடவனுக்கும் கண் தெரிந்தவன் குருடனுக்கும் ஆரோக்கியமானவன் நோயாளிக்கும் பணக்காரன் ஏழைக்கும் உபகாரம் செய்ய வேண்டும். இதுவே, எங்கும் நிறைந்த பகவானுக்குச் செய்யும் பூசை.

— கிருஷ்ணர் ரேமி.

<u>தியானம்:-</u> தியானத்தின் ஆற்றலினால் நாம் விரும்புவது கிடைக்கும். இயற்கையை ஆளும் சக்தி வேண்டுமானால் தியானத்தால் அதைப்பெற இயலும். தியானத்தின் உதவியினால் தான் விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் ஏற்படுகின்றன.

— சுவாமி விவேகானந்தர்.

முதலில் நீ திருந்து, உன் குடும்பத்தைத் திருத்து, அதன் மேற்றான் அயலவனையோ, ஊரவரையோ திருத்தமுற்படு. இதைவிடுத்து, உனக்கல்லடி கண்ணே, ஊருக்காகச் சொன்னேன் என்று மற்றோரை ஏமாற்றின், நீயே ஏமாருவாய்.

— வளவன்.

<u>பெற்றோரை வணங்கு:-</u> வைத்து வளர்த்தவருக்கு, நிழல், பூ, பழம் நல்காத மரத்தை வெட்டி எரிப்பது போன்று தாய், தந்தையரை வணங்காத அறிவிலிகளை ஆண்டவன் இருள் உலகில் தள்ளி வருத்துவான்.

— நீதிநூல்.



கனடா இந்து மாமன்றம் நடாத்தும் வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும். தமிழ்-சைவசமயம் பிரிவு-2
ஆசிரியர்கள் : திருமதி. ராஜேஸ்வரி கந்தையா, திருமதி. ராஜேஸ்வரி சிவலோகநாதன்



கனடா இந்து மாமன்ற தமிழ், சமய வகுப்புகள்
பிரிவு - 3

நீதியை நிலைநாட்டும் சைவ நீதி வாழ்க

ஸ்காபுரோ நகரில் அனைத்துலகக் களஞ்சியம்

# மஞ்சுளா பாஷன்

**5818 SHEPPARD AVE. E. #203** (முதலாவது மாடி)
**(Sheppard & Gateforth Dr. (Markham Road)** சந்திககு அருகாமையில்

- இங்கிலாந்து, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பலவித நிறங்களில் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியருக்கான உடுப்பு வகைகள்.
- இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பனாறிஸ், காஞ்சிபுரம், நைலெக்ஸ், மைசூர் சில்க், சுரிதார், வொயில்றிகள் இவற்றுடன் ஒறியினல் எவர் சில்வர் பாத்திரங்கள்.
- கலைப் பொருட்கள், சோடனைப் பொருள்கள், ஆடம்பரப் பொருள்கள்,சுவாமிப் படங்கள், விளையாட்டுப் பொருள்கள் மற்றும் பலவிதமான பாவனைப் பொருள்கள்.
- சர்வாணி, தலைப்பாகை, தலைநகையாவும் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.

உங்கள் திருப்தியே எங்கள் உயர்வு. எனவே உங்களுக்குத் தேவையான தரமான துணிவகைகளை மலிவு விலையில் பெற எங்களை நாடுங்கள்.

## Manchula Fasion

Tel: (416) 297-9875; Fax: (416) 297-7595

திங்கள் முதல் வெள்ளிவரை காலை 11.00 மணி மாலை 9.00 மணி வரை
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் காலை 10.00 மணி மாலை 10.00மணி

விற்பனை அதிகமாயின் நற்பயன் நமக்கும் உண்டு. அதனால் நாம் மலிவு விலையிலேயே தரமான பொருள் விற்பனை செய்கிறோம். தரமான பொருள்களை வாங்கத் தவறாதீர்கள். இந்த வாரத்திலும் லண்டன் மாநகரிலிருந்து துணிகள் வந்திருக்கின்றன.

# திருவிளக்கு ஏற்றுவோம் வாருங்கள்

சாவயம்பதி. இ. சுப்பிரமணியம்

சிவ சம்பந்தமுடையது சைவம். ஆற்றங்கரை நாகரிகங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது சைவம். அறிவு, வரலாறு, அற்புத நிகழ்வுகள் பல கொண்டது நமது சமயம். இன்று புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் எல்லாம் ஆலயங்களை எழுப்பி, அதிஅற்புத சிலைகளை வடித்துக் கோபுரங்களையமைத்து, சைவ சமயத்தை நாடறியச் செய்கின்றனர். சிறந்த சிற்பங்கள், கலைநுட்ப ஓவியங்கள், தெய்வத்தை, திருவருளின் சிறப்பை ஆண்டாண்டு காலமாகப் பறைசாற்றுகின்றன. மனிதன் தெய்வமாகலாம் என்பதனைச் செயலுருவில் செய்து காட்டிய ஞானவான்கள் ஏராளம். இறைவனின் அற்புத வடிவங்கள் ஆரம்ப காலத்திற்கு உருவவழிபாடு, சிறிது தேர்ச்சியனுபவங்கூட அருவுருவ வழிபாடு, அதன் முதிர்ந்த ஞானத்தால் அருவ வழிபாடு என மூன்று திறத்தில், அருவுருவத்திலே தீபவழிபாடு அடங்கும்.

“ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதி,” “சோதியே, சுடரே போற்றி, சுடரொளி விளக்கே போற்றி,” “ஒளிவளர் விளக்கே உலப்பிலாவொன்றே,” “பாசம் பரஞ் சோதி” இவையெல்லாம் இறையருளில் திளைத்தவர்கள் கூற்று. செருக்குற்ற திருமால் பிரமனுக்குணர்த்தி அடிமுடி தேடியது. அருட் பெருஞ்சோதியான நீண்ட ஒரு வடிவம், இறைவன் ஒளி வடிவானவர் என்பதற்காகவே கார்த்திகைத் தீபம், இறைவனே சொக்கர்பாவனையாக ஆலயங்களிலே திருக்கார்த்திகைத் தீபம். வீட்டிலும் புறத்திலுமாகச் சோதி வடிவ பந்தங்கள், இதுவே “தையலர் கொண்டாடும் தொல் கார்த்திகைத் திருநாள்” ஆகும். இவ்விழா பெண்களுக்குரியது எனத் திருஞானசம்பந்தர் தேவாரம் அறிவுறுத்துகின்றது. இதன் முடிவு, பிரம்மா, விஷ்ணுவின் அகந்தை நீங்கச் சிவராத்திரியன்று அருட்பெருஞ் சோதியுள்ளே இலிங்கோற்பவராகக் காட்சியளிக்கிறார் சிவன்.

### திருவிளக்கிடுதலின் பலன்

சாதாரண புலனறிவுக்குப் புலப்படாமல் அண்டங்களுக்கப்பால் அருட்பெருஞ் சுடராய் நின்று, எங்கும் நிறை நாதப் பிரம்மமாய் அருள் பாலிக்கின்றார். தெய்வத்தின் திருவுருவ மானச வழிபாடே திருவிளக்குப் பூசையாகும். இருள் துன்பந்தரும், ஒளி இன்பந்தரும், புறவிருளை நீக்கி உள்ளத்தில் ஒளியேற்றத் தீப பூசை செய்வோம். வாழ்வில் வளமும், தெய்வத் திருவருட் தன்மையும், செல்வச் சிறப்பும் ஓங்கும். இளையவளான இலட்சுமியின் வருகை இன்பத்தையும், மூத்தவளான மூதேவி புறப்பட்டதும் அழகுமுண்டாகும். கன்னியர் தமக்கும் பெற்றோருக்கும் செல்வச் சிறப்பும் உத்தியோகப் பதவி, உயர்வு, கண்ணிறைந்த கணவன் கிடைக்கவும், சுமங்கலிகளான இல்லத்தரசிகள் குடும்ப கௌரவம், மேன்மை, செல்வச் சிறப்பு, அதிகாரம், நீண்ட சுமங்கல்ய வாழ்வு, தன தானியச் சிறப்பு, வீரம் வேண்டி விளக்கேற்றலாம்.

### திருவிளக்கின் தத்துவம்

குத்து விளக்கு பித்தளையினாலான மஞ்சள் நிறம் மங்களகரமானது. அதன் அடிப்பாகம் பூமிபோல அகன்று தாமரை மலர் வட்ட வடிவமாயிருப்பது பிரம்மபாகம் ஆகும். தூண் போன்ற நடுத்தண்டு ஓங்கி உயர்ந்திருப்பது, விசுவரூபமெடுத்து உலகளந்த திருமாலையும், தண்டுமேலே அகல்போல் நெய்விடும் பகுதி, கங்கையைச் சூடிய சிவபெருமானையும், முடிபோலவுள்ளது ஸ்ரீ உருத்திரனையும், எண்ணெய் நாத தத்துவத்தையும், வெள்ளைத்திரிவிந்து தத்துவத்தையும், சுடர் இலட்சுமியையும், வெப்பம் உருத்திராணியையும் குறிப்பதாகும்.

### திருவிளக்குப் பூசை

“விளக்கு வைப்போம், விளக்கு வைப்போம், குலம் விளங்க விளக்கு வைப்போம், வாருங்கள், வனிதையரே! வரிசையாக விளக்கேற்றி மகிழ்ந்திடுவோம்.” என்ற இசைத்தட்டின் பாடல் கேட்கின்றது. நீராடி நீறணிந்து தியானம் முடித்து சோதி வடிவமான சூரியனை மலரிட்டு வணங்குவோம். மாலையிலே வீட்டிலே விளக்கேற்றிக் குடும்பமாக வழிபடுவோம்.

திருவிளக்குப் பூசை முதன்முதல் தீபாவளியன்று அதிகாலை செய்வதே சிறந்தது. பின்னர் மாதாந்த பூரணைகளில் ஆலயங்களிலே சென்று திருவிளக்குப் பூசை செய்யலாம்

### ஆலயத்தில் திருவிளக்குப் பூசை

ஆலயப் பூசை முடிந்ததும், திருவிளக்கை ஒரு தட்டத்தில் அல்லது வாழையிலையில் வைத்து நெய்விட்டுத் திரியிட்டு நீறு சந்தனம், குங்குமம், பூ, பூச்சரம், பட்டுச் சாத்தி பூசைக்கான பொருட்களை ஆயத்தம் செய்யவும், நீருள்ள சிறிய பாத்திரம், பூ,

குங்குமம் எல்லாம் அருகே வைத்திருக்கவும். விளக்கேற்றவும்.

விநாயகர் பூசை: ஆரம்பத்திலே இந்தத் திருவிளக்குப் பூசை இடையூறின்றி இனிது நிறைவேறச் சங்கற்பம் செய்து தூப தீபம் நிவேதனம் வைத்து வணங்கிக் கொள்ளவும். பின் நவக்கிரகங்களை உதவுமாறு வணங்கவும்.

ஆலய சிவாச்சாரியாரின் வழி நடத்தலின்படி விளக்கிலே மகாலட்சுமியை எழுந்தருளச் செய்து ஆசனமளித்து, ஆசமனம் முதலியவற்றைச் செய்து தியானிக்கவும்.

1. "வேத வடிவானவளுக்கு வணக்கம். நல்வினைப் பயனை நல்குபவளுக்கு வணக்கம். அழகிய குணங்களுக்கு இருப்பிடமான இரதிதேவியான உமக்கு வணக்கம். தாமரையை இருப்பிடமாகக் கொண்ட உமக்கு வணக்கம். உலகைக் காப்பவளும், திருமாலின் பத்தினியுமான உமக்கு வணக்கம்."
2. "தாமரையையொத்த முகமுள்ள தேவிக்கு வணக்கம். திருப்பாற்கடலில் தோன்றிய தேவிக்கு வணக்கம். சந்திரன் அமிர்தம் இவற்றுடன் உதித்த தேவிக்கு வணக்கம். சிறீமத் நாராயணனின் துணைவிக்கு வணக்கம்."
3. "தாமரை மலர் போன்ற கண்களையுடைய அன்னையே வணக்கம். எல்லோராலும் வணங்கப்படுபவளே, உன்னை மீண்டும், மீண்டும் வணங்கினால் எல்லாச் செல்வங்களும் வந்து சேரும். புலன்களுக்கு ஆனந்தத்தைத் தரும். அரச பதவி கிட்டும். எல்லாப் பாவங்களும் மறையும். அந்த வணக்கங்கள் அடியேனை எப்போதும் காக்கட்டும்." என்று ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிச் செய்த "ஸ்ரீ கனகதாரா ஸ்தோத்திரமும்" கூறலாம்.

"சர்வ மங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதிநே
சரண்யே த்ரயம்பகே லஷ்மி
நாராயணி நமஸ்துதே"

என்று மனமாரத் தியானித்துப் பூவிட்டு வணங்கவும்.

நிவேதிக்கும் போது அங்குச, முத்திரையால் பாவனை பண்ணித் (வலது கைப் பெருவிரலுடன் மோதிர விரலும் சேர்த்து) தீர்த்தத்தை ஹரி ஓம் தத் ஸத் என்று நைவேத்தியத்தைச் சுற்றிக் கீழே விட்டுச் சுத்தஞ் செய்யவும். ஓம் பிரம்மனே சுவாகா என்று பாவனையாக ஊட்டி, பானீயம், கதலிபலம், தாம்பூலம் வழங்கியதும் 108 மந்திரத்தால் குங்குமம் அல்லது பூக்களினால் அர்ச்சித்து வணங்கிக் கொள்ளவும்.

"தாமரை மலரில் வாழ்பவளே, தாமரை போன்ற கண்களையுடைய திருமாலின் தேவியே, கருணை அலை மோதும் உன் கடைக் கண் பார்வையால், ஏழ்மையில் முதலிடம் பெற்றவனும், உனது அருள் வேண்டுபவனுமான எளியேனைப் பார்த்தருள்வாய்," (கனகதாரா ஸ்தோத்திரம்) பூவை விளக்கின் பாதங்களிலிட்டு வணங்கவும்.

குபேர பூசை

அட்டதிக்குப் பாலகர்களில் குபேரன் வடக்குத் திசையிலுள்ள அழகாபுரிக்குத் தலைவன். சிவபக்தனான இராவணனின் தம்பி. சிவபிரான் தோழர். குபேரசம்பத்துக்கு அதிபதி. மகாலட்சுமியுடன் குபேரனும் தனதேவதையாவர். ஸ்ரீ மகாலட்சுமி அட்டமா சக்திகளில் இரண்டு சங்கநிதி, பதுமநிதியாகும். அளவற்ற செல்வங்களுக்கு உரிமையாகையால் குபேரனின் இருமருங்கிலும் உள்ளனர்.

சிற்ப நூலின்படி அழகாபுரியின் குபேர பட்டணத்திலுள்ள அத்தாணி மண்டபத்திலே, குபேரன் தாமரை மலரின் மேலே மீனாசனத்திலே மெத்தை மீதமர்ந்து, பொற்கிரீடம் முதலிய சொர்ணாபரணங்களுடன் முத்துக் குடையின் கீழ், சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றார். இடது புறத்தில் குபேரனது தர்மபத்தினியின் இடது கையில் கருநெய்தல் மலர் ஏந்திய நிலையில் வலது கையால் கணவனை அணைத்தபடி வீற்றிருக்கிறார். குபேரனது வலப்புறத்தில் சங்கநிதி தேவதை(ஆண்) தன் இடது கையில் வலம்புரிச் சங்கும் வலது கை வரந்தருவ தாகவுமுள்ளது. குபேரனது இடப் புறத்தில் பதுமநிதி தேவதை(ஆண்) தனது வலது கையில் தாமரைப் பூவும் இடது கை வரந்தருவதாகவும் இருக்கிறார். சிவ பூசையில் லயிக்கும் குபேரன் இராசயோகத்தையளிக்க வல்லவன். தனலஷ்மியும், தைரிய இலஷ்மியும் சர்வ சக்திகளாக இருப்பதால் செல்வத்துக்கும் வீரத்துக்கும் இராசனாகின்றான். குபேரன் சாந்த குணமுள்ளவன். யட்சர்களுக்குத் தலைவனான குபேரன் ஸ்ரீ இராச ராசேஸ்வரியின் (காமாட்சி) பஞ்ச சதீ மந்திரத்தை சதா ஜெபித்த வண்ணமிருப்பவன். இதனால் சகல சக்திகளையும், தன்வயங் கொண்டு பக்தர்களுக்கு இல்லையென்று கூறாமல் வாரி வழங்குபவன்.

எந்தப் பூசை செய்தாலும் இறுதியில் குபேர பூசை செய்தால் தான், பூசையின் பலனும் செல்வம் தனதான்யாதி சிறப்புக்களும் கிடைக்கும்.

குபேரயந்திரம்

ஒரு கில்லோ பச்சையரிசியை ஒரு தலை வாழை

யிலையில் அல்லது தட்டத்தில் பரவிப் படத்தில் காட்டியபடி மும்மூன்று சதுரங்களில் 20 — 28 வரையுள்ள எண்களை 72 வரத்தக்கதாக நிரப்பி முடிச்சுள்ள தருப்பைக் கட்டை (கூர்ச்சரம்) நிறுத்தி வைத்துப் பூ வைத்து குபேர தியான மந்திரத்தை மனத்தில் தியானிக்கவும்.

| | | |
|---|---|---|
| 27 | 20 | 25 |
| 22 | 24 | 26 |
| 23 | 28 | 21 |

தியான சுலோகம்

"மனுஷ வாகய விமான வாஸ்திகம்
கருடாந்த நிபம் நிதி தாயகம்
ஸிவ ஸகம் முகுடாதி விபூதிஷிதம்
வரகதம் தநதம் பஜே துந்திலம்"

(மனிதர்களால் தாங்கப்படும் சிறந்த விமானத்தில் அமர்ந்திருப்பவரும், மரகதம் போன்று ஒளி வீசுபவரும், நவநிதிகளின் தலைவரும், சிவபிரான் தோழரும், சிறந்த கதாயுதத்தைக் கையிலேந்தியவரும், பொன்முடி முதலிய ஆபரணங்களையணிந்தவரும், தொந்தியுடையவரும் செல்வந்தருபவருமான குபேரப் பெருமானைப் போற்றுவோமாக.)

குபேர மந்திரம்

"ஓம் யஷாய குபேராய வைஸ்ரவணாய!
தனதாந்யாதி பதயே, தனதாந்ய ஸம்ருத்திம்மே
தேஹி தாபய ஸ்வாக"

முடியுமானால் குபேரமந்திர நாமாவலிகள் 108 ஐயும் கூறி மலர்களால் அர்ச்சிக்கலாம்.

பால், இனிப்புப் பண்டங்களை அன்புடன் நிவேதிக்கலாம். இறுதியாக

"ராஜாதி ராஜாய பரஸக்ய ஸாஹிநே
நமோ வயம் வைஸ்ரவணாய குர்மஹே
ஸமே காமாந் காம காமாய மஹ்யம்
காமேஸ்வரோ வைஸ்ரவனோ ததாது"

கற்பூர மங்களாராத்தி காட்டி இரு கைகளிலும் பூவுந் தண்ணீரும் ஏந்தி வணங்கி இரு கைகளின் விரல்களினூடே பொதுவில் நீரைச் சிந்தி(நிலத்தில் விட்டு)ப் பூக்களைப் பாதத்திலிட்டுப் பூசையின் பலனை வேண்டிச் சமர்ப்பிக்கவும்.

பூசையை நிறைவேற்றுக.

<u>சான்றோர் சொல்லமுதம்</u>

இறைவன் விதியை ஒரு வேடிக்கைக் கருவியாக வைத்திருக்கிறான். சிவனும் சக்தியும் பூமியில் பல் வேடங்களில் பிறந்ததாக இந்துக்கதைகள் கூறுவது இறைவன் தானும் விதிக்கு ஆட்பட்டு அதன் சுவையை அனுபவிக்கிறான் என்பதைக் காட்டுவதற்காகத் தான்.

<u>மதி! விதி!:</u> விதியை மதியால் வெல்லலாம்! மதியை விதி வென்றுவிடும். மதியை மூடிய மேகம் அறியாமை, அறியாமையே விதியின் கைப்பாவை. அறிவு எல்லோருக்குமே தெளிவாக இருந்து விட்டால் விதியும் இல்லை விதித்தவனும் இல்லை. உங்களைப் பிறக்க வைத்தது விதியின் பிரவாகம்.

கண்களையும் கவர்ச்சியையும் நம்பி, கட்டுப்பாடற்ற பெண்ணின் வலையில் விழுவோர் ஒன்று பைத்தியமாவார்கள். அல்லது தற்கொலை செய்து கொள்ளுவார்கள். சட்டம் மட்டுமல்லாது சம்பிரதாயங்களும் கூட சகல வழிகளிலும் செம்மையான வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கின்றன. வாழ்க்கை என்பது உடல் இச்சை மட்டுமன்று அதனையும் மீறிச் சில சுகங்களும் பெருமைகளும் தருவது.

கைக்குக் கிடைத்துவிட்ட மலரில் வாசம் தெரிவதில்லை, கிடைக்காத மலர்கள் கற்பனையில் எழுந்து மனத்தை இழுக்கின்றன. நிறைவேறிவிட்ட ஆசைகளில் மனது பெருமிதப்படுவதில்லை, நிறைவேறாத ஆசைகளுக்காகவே இது மரண பரியந்தம் போராடுகிறது.

அந்தரங்க சுத்தி இல்லாத ஒரு சமயவாதியை விட நல்லொழுக்கம் உடைய ஒரு நாஸ்திகன் மிகச் சிறந்தவன்.

— சுவாமி கெங்காதரானந்தா.

# சமய உணர்வு

வசந்தா நடராஜன்

மனிதன் தோன்றிய காலந்தொட்டு இன்றுவரை, வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றான்; இன்னும் வளர்ந்து கொண்டே வருவான். வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மாற்றம். மாற்றமில்லையெனில் வளர்ச்சி இல்லை. மிகச் சிறியதாகப் பிறக்கின்ற சிசு தக்க வயதில் பூரண வளர்ச்சியை அடைகின்றது. அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்கு வளர்ந்துவிட்ட போதிலும், அடிப்படை அமைப்பில் மாற்றமில்லை. பிறக்கும்போது காணப்பட்ட அவயவங்களே, பூரண வளர்ச்சி வரை தொடர்ந்தும் வளர்கின்றது. இது மனிதன் தோன்றிய காலந்தொட்டு நிகழ்வது.

மனிதனுடைய தேவைகள் பெருகிக் கொண்டே போகின்றன. தேவைகளைப் பூர்த்தி செய்யும் சாதனங்களும் பெருகிக் கொண்டே போகின்றன. வாழ்க்கை வசதியிலும், விஞ்ஞானத் துறையிலும் ஆராய்ச்சி அரங்கிலும் மனிதன் எவ்வளவுக்கு முன்னேறினாலும், மனிதனுடைய சமய உணர்வு மட்டும் மனஅடித்தளத்தில் நிறைந்திருக்கின்றது. சமய உணர்வை, அணுகும் விதம் பற்பல மக்களிடையே, பல்வேறு காலங்களில் மாறுபட்டதாகக் காணப்பட்டுள்ளது. ஆறறிவு படைத்த மனிதன் ஆண்டவனைத் தேடி நாடுவதே சமயம் என்பது. சமய உணர்வும், சமயக் கொள்கைகளும் சமயச் செயல்களும் ஒரு நாட்டு மக்களிடையே காணப்பட்டால், சமய உணர்வுள்ள நாடு என்று அந்நாட்டைக் கூறமுடியும்.

இவ்வாறான சமய உணர்வை மக்களிடம் ஏற்படுத்த நாயன்மார்களும், ஆழ்வார்களும் அரும்பாடுபட்டனர். ஆலயங்களும், ஆதீனங்களும் அரும்பாடுபட்டு உழைத்தன. சமய உணர்வை ஏற்படுத்தும் பணியில் வெற்றி கண்டால், அதன் நிலையான தளத்தில், கலாச்சாரம், பண்பாடு என்பன தழைத்து நிலைக்கும். இன்று நமக்கு வேண்டியதெல்லாம் நடைமுறைக்கு ஏற்ற சமயமும், அதன்வழி நடக்கும் சமுதாயமுமே ஆகும். வழிபாடுகள், சடங்குகள் போன்றவற்றைப் பாவனைகள் மூலம் இளைய சந்ததியினர் உள்ளங்களைத் தொடும்படி நடைமுறைப் படுத்த வேண்டும். "பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், உற்பத்திச் சாலைகளிலும், நான் கோவில்களையே காணுகின்றேன்." என்று ஜவகர்லால்நேரு கூறினார். ஆன்மீக அறிவுடையவர்கள் சிறுவர்களை அழைத்து ஆன்மீக வகுப்புக்களை நடத்தி அவர்களின் சமய உணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும். சமய உணர்வு நிலைத்தால், மொழியும், கலாச்சாரமும், பண்பாடும் அதன் அடிப்படையில் வளரும் வாய்ப்புண்டு. நாடு, மொழி, பாரம்பரியம் என்பவற்றை இழந்த சில இனங்கள் சமய உணர்வை இழக்கவில்லை. சமய உணர்வின் அடிப்படையில் தாம் யார்? தமது மூதாதையர் யார் என்பதை அறியும் வாய்ப்பு அவர்களிடையே காணப்படுகின்றது. கனடா போன்ற புலம் பெயர்ந்த நாடுகளில் மக்களிடையே சமய உணர்வைப் பரப்புவதும், அந்த உணர்வு அழியாமல் பாதுகாப்பதும் பொறுப்புள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்

நாம், நம் தமிழ் மொழியை எங்ஙனம் விரும்பிப் போற்றி, வளர்க்கக் கடமைப் பட்டிருக்கிறோமோ, அங்ஙனமே நம் பழந்தமிழ்ச் சான்றோர்களும், மூதாதையர்களும் கடைப்பிடித்துப் போற்றிய சைவ சமயத்தினை இகழ்ந்து ஒதுக்காமல், மதமாற்றம் அடையாமல் நாம் நாம்தான் என்ற உணர்வுடன் வாழப்பழக வேண்டும். "தமிழர்கள் தங்களுடைய மொழியையும், இலக்கியங்களையும் குறித்து நாணம் அடையத் தேவையில்லை." "TAMILIANS NEED NOT BE ASHAMED OF THEIR LANGUAGE AND LITERATURE" என்று ஜீயூ. போப்பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். அம்முறையில் சைவர்களாகிய நாம், நம்முடைய சமயம் குறித்து, எமது மொழி குறித்து, எமது இனம் குறித்து வெட்கப்படத் தேவையில்லை. நாம் தமிழர். நமது இனம் தமிழினம் என்ற உணர்வை அடிப்படையில் ஏற்படுத்த வல்லது சமய உணர்வு மட்டுமே. புலம் பெயர்ந்து வாழும் எமது சந்ததியினர் மனதில் சமய உணர்வை ஏற்படுத்தும் பணியில் ஸ்தாபனங்கள், அறிஞர்கள், கல்விக் கூடங்கள், ஆலயங்கள் அனைத்தும் பெரும்பணி புரிய வேண்டும்.

| | |
|---|---|
| பணியுமாம் என்றும் பெருமை சிறுமை<br>அணியுமாம் தன்னை வியந்து.<br>— திருக்குறள். | சுக்குக்கு மிஞ்சின மருந்தில்லை<br>சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய தெய்வமில்லை.<br>— பழமொழி |

# GEMINI VIDEO

## GMART

*Smoke & Gift / Lotto*

அன்பளிப்புப் பொருட்கள், நங்கையர் மனங்கவரும் நவநாகரிக ஆடைகள், நகைகள், ஆகியவற்றுக்கும் தமிழ் ஓடியோ, வீடியோ கசற்றுகள் விற்பனைக்கும், தரமான வீடியோப் படங்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம்..........

**Gemini Video**
3240 Eglinton Ave. E.
Scarborough, Ont.
M1J 2H6
Tel: (416) 266 6384
(416) 261 3215

- Video Rental &
- Video Cassette, Audeo Cassette, CD Sale
- Gift Items
- Textiles
- Jewelleries
- Video Transfer (Any system to any system)

ஜெமினி வீடியோ

40 பாடல்கள் அடங்கிய பிரதிகள் $ 4.99



அனைத்து வீடியோ பிரதி மாற்றம் $ 9.99

# ஸ்காபுரோ பல் வைத்திய நிலையம்

## Dr. Athi K. Somasundram

## டாக்டர். ஆதி கணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி, கனடா தேசிய பல் வைத்திய சபை

**24 hours emergency service - wheel chair access**

**Monday - Saturday**
**9a.m. - 9p.m.**

**Sunday**
**By Appointment**

- Cosmetic Dentisty
- Crown & Bridges
- Gum Treatment
- Root Canal
- Bleaching
- Dentures
- Surgery




Free Parking, Emergency Service, Wheel Chair Access

காப்புறுதித் திட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

## SCARBOROUGH DENTAL OFFICE

2155 Lawrence Ave. East, Suite 10
Scarborough
**Tel: (416) 750 9969**

# இறைவனுடன் இணைக்கும் இசை

நவராஜகுலம் முத்துக்குமாரசாமி

கடவுள் மனிதனுக்கு அளித்த சன்மானங்களுள் கானமே தலையாயது. இதுவே, விண்ணுலகினின்றும் மண்ணுலகிற்கு வந்தடைந்த கலை. இதனையே மீண்டும் மண்ணுலகினின்றும் விண்ணுலகிற்கு எடுத்துச் செல்கின்றோம் என்று அமெரிக்க கவிஞர் லோங்பெலோ(LONGFELLOW) கூறியுள்ளார்.

உள்ளத்தினைத் தூய்மைப்படுத்தி, ஆன்மாவிற்கு ஆனந்தத்தை அளிக்கவல்ல இனிய ஓசையே இசையாகும். "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" என்று பாடினார் மணிவாசகப் பெருமான்.

ஏழிசையாய், இசைப்பயனாய் உள்ள இறைவன் சாமகானப்பிரியன். "நமக்கு விரும்பிய அர்ச்சனை பாட்டேயாதலால் மண்மேல் சொற்றமிழ் பாடு" என்று சுந்தரரைப் பணித்ததுடன், திருஞானசம்பந்தரின் பாடல்களுக்குத் தாளமும், திருநாவுக்கரசரின் பாடல்களுக்குப் பொற் காசும் ஈந்த இசைப்பிரியன் ஆவான்.

"சங்கீத ரத்னாகரம்" இசை நூலாசிரியரான சாரங்கதேவர், இசைவாணன் என்பான் பஜனை செய்வதில் வல்லவனாக இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இங்கு, பஜனை என அவர் குறிப்பிடுவது, இன்பந்தரும் இசைத் தொடர்களைப் பல்வேறு வகையிற் பாடுவதேயாகும். ஒருமை மனதோடு நாத உலகில் ஒன்றியவர் இறைவனை அணுகுகின்றனர். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜ சுவாமிகள், நாதப்ரம்மத்தில் லயித்த தியாகப்ரம்மம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மொழியுடன் சேர்ந்த இசையே பேரானந்தத்தை அளித்து ஆன்மாவை ஈடேற்றவல்லது. இசையில் மொழிதான் ஜீவன் என்பதை விளக்கும் வகையில்:

"பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்
பழத்தினிற் சுவை ஒப்பாய்"

என்று சுந்தரர் பாடியுள்ளார்.

ஒரு பாடகன் தனது இசைஞானத்தில் எத்தகைய இன்பம் அடையலாமாயினும், அவ்வின்பம் என்றும் நிலையான பரம் பொருளை உணரும் இன்பத்திற்கு ஈடாகாது. இசை என்பது ஒரு தெய்வீகக் கலை மட்டுமன்றி, ஆத்மீக விருத்திக்கும் நிலைக்களனான கலையுமாகும். எனவே இசையானது அறிவுக்கு மட்டும் விருந்தாக அமையாது, ஆத்ம திருப்தியையும் அளிப்பதாக அமையவேண்டும்.

இத்தகைய மேன்மை வாய்ந்த இசை, மனிதனின் துர்க்குணங்களைப் போக்கி, சற்குணங்களைப் பெருக்குவதுடன், கடவுளிடம் பக்தி செலுத்தி, இம்மையில் இன்பமும், மறுமையில் மோட்சமும் அடைய உதவுகிறது. இம்மைச் செல்வங்களினால் கிடைக்காத மனநிறைவை, இசையினால் மட்டுமே நாம் பெறமுடியும். இசை என்பது ஒரு யோக மார்க்கம் ஆகும். மதமும், பக்தியும், இசையும் என்றும் இணைபிரியாதவைகளாகவே இருந்து வருகின்றன. இது உயிரையும், ஊனையும், உள்ளத்தையும், உணர்வையும் ஒருங்கே உருக்கும் சக்தி வாய்ந்தது. ஐம்புலன்களையும் அகத்தடக்கி, மனதினை ஒருநிலைப்படுத்தி இறைவனைச் சிக்கெனப் பிடிக்க வைப்பதுடன், எமது அல்லல்களை மறக்க வைத்து, ஆன்மீக வளர்ச்சிக்கு உடந்தையாக நின்று, ஆன்மாவோடு நேரிடையாகப் பேச வைப்பது என அறிஞர்கள், ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

எனவே, நெஞ்சக் கனகல்லை நெகிழச் செய்து, நிலையான இன்பத்திற்கு வழிநடத்தும் தெய்வீக இசையே எம்மை இறைவனுடன் இணைக்கின்றது. இறைவனையும், அடியாரையும் இணைக்கும் பாலம் இசையினும் வேறில்லை.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"
— அப்பர்

| | |
|---|---|
| கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை<br>சொல்லா நலத்தது சால்பு. | அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்<br>மக்கட் பண்பு இல்லா தவர்.<br>— திருக்குறள். |

# சைவ மதம்

சட்டம்பியார்

சைவ மதம் வேதாகமங்களை முதனூலாகக் கொண்டது. வேதாகமங்களைச் சுருக்கி 'பிரம்ம சூத்திரம்' என்ற நூல் எழுந்தது. இவை எல்லாம் வடமொழியில் உள்ளவை. தமிழிலே பதினான்கு சாஸ்திரங்கள் முதனூலாக இருக்கின்றன. இந்நூல்கள் கடவுள், ஆன்மா, உலகம் என்பவற்றைப் பற்றித் தர்க்க ரீதியாக விளக்கங் கொடுக்கின்றன.

ஒரு பூரணமான சைவ சமயி எப்படி இருப்பான்? அவனுடைய பழக்க வழக்கங்கள் எப்படி இருக்கும்? இது போன்ற கேள்விகளுக்கு நாங்கள் தக்க மறுமொழி தேட வேண்டும்.

சர்வபள்ளி ராதா கிருஷ்ணன், அவர் காலத்தில் வாழ்ந்த ரஷ்ய ஜனாதிபதி குருசேவ் கூட ஒரு இந்துவாக இருக்கலாம் என்று எழுதியிருக்கிறார். குருசேவ் 'கடவுள் என்று ஒருவர் இல்லை' என்ற மதத்தைச் சேர்ந்தவர்.

கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, "அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன், ஒரு சைவ சமயியாக இருக்கலாம்", என்று கூறினார். ஆபிரகாம் லிங்கன், தனது கடையில் சீனி வாங்கிய ஒரு சிறுமிக்கு மிகுதிப் பணம் கொடுக்க மறந்து இரவிரவாக ஒழுங்கையால் சூள் கொண்டு அச்சிறுமியின் வீட்டைத் தேடித்திரிந்தார். இப்பெரியோர்களின் முடிவு திடுக்கிடத்தக்க ஒரு முடிவாகும். நாங்கள் இவர்களின் முடிவு சரியானதா என்பதை ஆராய வேண்டும்.

சைவ சமயிகளிலே சிலர் தாவர உணவு உண்பவர்களாக இருக்கிறார்கள். சிலர் வெள்ளிக் கிழமைகளில் தாவர உணவு உண்கிறார்கள். சிலர் நாள்தோறும் ஆலயம் சென்று வணங்குகிறார்கள். சிலர் வெள்ளிக் கிழமைகளில் ஆலயம் செல்கிறார்கள். சிலர் விசேட தினங்களில் ஆலயம் செல்கிறார்கள். வருடத்தில் ஒரு முறை கூட ஆலயம் செல்லாதவர்களும் இருக்கிறார்கள்.

சிலர் தங்கள் கோவில்களில் ஆடு, கோழி பலியிடுகிறார்கள். சிலர் ஆகம விதியின்றி வாய்கட்டிப் பூசை செய்கிறார்கள். சிலர் வருடத்தில் ஒரு நாளைக்குப் பொங்கல் செய்து வழிபடுகிறார்கள். இவர்கள் எல்லாம் சைவ சமயிகளா? சைவ சமயத்தை விளக்கும் தத்துவ சாஸ்திரங்களை வாழ்க்கையில் பிரயோகித்து, நடைமுறைச் சைவனை இனங்காட்டுவது பெரியபுராணம் என்ற நூலாகும். மொழி பெயர்ப்பன்று.

பெரியபுராணம் உலகில் முதன்முதலாகக் கண் மாற்றுச் சிகிச்சை செய்த ஒருவரைக் குறிப்பிடு கின்றது. கண்ணப்ப நாயனார் கல்வி அறிவு சிறிதும் இல்லாதவர். ஆனால் கடவுள் மேல் அளவிறந்த பக்தி பூண்டவர். இறைவனுக்குத்தான் அவர் கண் மாற்றுச் சத்திர சிகிச்சை செய்தார். மூலிகைகளினால் பலன் ஏற்படாமல் போகவே சத்திர சிகிச்சையில் இறங்கினார். கண்ணப்பர் இறைவனுக்கு மாமிசத்தை உணவாகப் பரிமாறினார். அதுவும் தான் உருசி பார்த்து அதன்பின்பே பரிமாறினார். கண்ணப்ப நாயனாரை இன்று நாம் வணங்குகின்றோம். கண்ணப்பநாயனார் இறைவன் மீது அப்பழுக்கில்லாத பக்தி பூண்டவர். அவருடைய பக்தியைக் கண்டுதான், நாங்கள் அவரை வணங்குகின்றோம்.

தந்தையின் காலைக் கோடரியால் துண்டித்த சண்டேசுவர நாயனாரை நாங்கள் எல்லாக் கோவில் களிலும், பூசை முடிந்த பின் வழிபடுகின்றோம். அவருக்குச் 'சண்டியன்' என்ற கருத்திற் பெயரிட்டு வணங்குகின்றோம்.

இறைபக்தி முன் தந்தை, தாய் முதலிய உறவுகள் ஒன்றும் தெரியாதென்பதே உண்மை. பௌத்த துறவியான சாக்கிய நாயனாரையும் வணங்கு கின்றோம்.

பெரிய புராணத்தின் சுருக்கத்தை, வள்ளுவர் பெருமான் ஒருவரியில் கூறுகின்றார். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்' என்பது அவர் கூற்று. மனச் சாட்சியின் படி நடப்பவன் எவனோ, அவன் சைவ சமயி. ஒருவன் 'கடவுள் இல்லை' என்று கூறினால், அவன் தனது மனச் சாட்சியின்படி, அப்பழுக்கில்லாமல் கூறினால், அவனைச் 'சைவ சமயி' என்று கூறலாம். மற்றவர்கள் எல்லாம் வெறும் ஆரவாரக்காரர் என்பது வள்ளுவர் கூற்று. சைவ சமயி யார்? என்பதை ஆராய்ந்து பார்ப்பீர்களாக.

*ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப*
*கோடியும் அல்ல பல* —*திருவள்ளுவர்*

# எங்கள் அனுதாபம்

## அறுசீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

1. ஆடுந் தேவ! அம்பலவ! ஆளுஞ் சைவ நீதிதனை
வாடுந் தமிழர் வகையுணர்ந்து வழங்க வாராய் உன்னருளை
தேடுந் திருமால் பிரமனுக்குந் தேடற் கரிய பரம்பொருளே!
பாடற் கிரங்கி அருள்புரியும் பகவ! தமிழர் துயர்தீர்ப்பாய்.

2. பண்டு தமிழர் பரம்பரையாய் பண்பு போற்றி வாழ்ந்தனரே
கண்டுங் கேட்டு முண்டுயிர்த்தும் பலகா வியங்கள் படைத்தனரே
கொண்டுங் கொடுத்து முயிர்வாழ்ந்த குரவர் நிறைந்த தமிழ்மண்ணில்
குண்டுங் குழறல் அலறல்களும் கூடிச் சாதல் கொடிதம்மா!

3. காலங் கால மாய்வாழ்ந்தோர் கலங்கி நாட்டை விட்டோட
ஞாலம் போற்ற வாழ்ந்துவந்த நமது மக்கள் குறையாது?
சீலம் பெருக்கிச் சிவம்பொருக்கி சிந்தை குளிர வாழ்ந்தவெங்கள்
கோலம் பார்த்த குலதெய்வம் குனிந்து கொண்ட தேனோதான்

4. தெய்வம் போற்றி வாழ்ந்தவர்நாம் திசைகள் போற்ற வாழ்ந்தவர்நாம்
மெய்ம்மை நெறிகள் நிலைபெறவே யிருந்தும் நின்றும் பணிசெய்தோம்
உய்யும் வழிகள் தெரியாது உணவே யின்றிப் பசிப்பிணியில்
ஐயோ! அநாதை ஆகிவிட்டோம் அவலந் தீரும் நாளெப்போ?

5. அம்மா! பசியென் றழுங்குழந்தை அந்தோ குசேலர் நினைவூட்டும்
சும்மா கிடந்தே வருத்தத்தால் சுழருங் குழந்தை மருந்தில்லை
இம்மா நிலத்தில் இருந்தென்ன இறைவா! என்னும் பெற்றோர்கள்
எம்மால் பொறுக்க முடியாது இனிமேல் தெய்வந் துணையென்பர்

6. ஓடி வந்தோம் உண்மைதான் உங்கள் துயரை நினைக்கின்றோம்
வாடி நினைந்து வருந்துகிறோம் வல்லோன் அருளை வேண்டுகிறோம்
கூடித் தொழுகை செய்கின்றோம் குறைகள் தீரத் துதிக்கின்றோம்
நாடி நினைவில் நல்லைநகர் நாதன் நாமம் நவில்கின்றோம்

7. பஞ்சம் பசியால் பட்டினியால் பதைக்கும் எங்கள் சோதரங்காள்!
தஞ்சம் நமக்குக் கடவுள்துணை தானே யன்றி வேறில்லை
அஞ்சி யஞ்சி நிதம்சாகும் அவலம் நெடிதே நிற்காது
துஞ்சி உயிரை நீத்திட்ட தூயோர் தம்மை நினைப்போமே

8. சாகும் வயதே இல்லாது செத்த சின்னஞ் சிறுசுகளை
சோகங் கொள்ள உயிர்நீத்த சொந்தம் கணவன் மனைவியரை
ஏக மநேக சகோதரங்கள் இனமாம் சனமா மெல்லோரும்
போகத் துன்பம் புடைசூழ்ந்த புனித மக்கட் கனுதாபம்

9. எல்லை யில்லாத் துன்பங்கள் எய்தி வருந்தும் எம்மக்காள்!
நல்ல தெய்வம் குருநாதன் நமது துயரம் நீக்கிடுவான்
கல்லுங் கரையுந் துன்பந்தான் கவலை யடையா திருந்திடுவீர்!
அல்லும் பகலும் அவனருளால் ஆறி யிருப்போம் இருப்போமே

10. நாவலர் யோகர் விபுலானந் தராய தூயோர் நயந்தளித்த
காவல் தன்னால் ஓங்கிவளர் கலைகள் மறைகள் கலங்காது
ஏவல் செய்ய இயன்றபணி இனிதே யாற்றி வாழ்வாங்கு
ஆவல் கொண்டு அனைத்தறமும் அன்பும் போற்றி அமைவோமே

11. நாட்டிற் காக நற்பணிகள் நாடி யுழைத்த நன்மக்காள்!
பாட்டிற் துதித்துப் பரவுகின்றோம் பண்பை அன்பைப் பெருக்கிடுவோம்
வீட்டை நாட்டை விட்டுவந்தும் விழைவு தாயின் நாட்டிற்றான்
கூட்டுந் தெய்வம் சமாதானம் குலவி வாழத் துதிசெய்வோம்

12. உறவை நீத்து உயிர்நீத்த உறவினர் எங்கள் சகோதரங்கள்
மறைவை யெண்ணி மனந்துடிக்கும் மற்று முற்றார் உறவினர்க்கும்
குறைவு பெற்றே யங்கங்கள் கொண்டு வருந்துந் துயரினர்க்கும்
உறையுள் உணவு உடையற்ற எவர்க்கு மெங்கள் அனுதாபம்.

வணக்கம்.

கனடா இந்து மாமன்றம்
கனடா.





# உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருகுமே!

சைவநீதி மலரின் ஆரம்பமே குன்றக்குடி ஆதீன முதல்வர் திருப்பெருந்திரு. குன்றக்குடி அடிகளார் ஆவர். சைவநீதி சஞ்சிகை பற்றி முதன் முதலில் அவருக்கே அறிமுகம் செய்தோம். மனப்பொலிவோடு சிறந்ததோர் ஆசியுரை தந்து முதன்மலரையும் எதிர்பார்த்திருக்கும் வேளையில் இறைவன் தன்னுடன் அழைத்துக் கொண்டார். அவரால் ஆரம்பிக்கப் பெற்ற "சைவநீதி" என்றும் நின்று அருள் பூப்பதாகுக. அடிகளார் திருநாமம் வாழ்க! சைவநீதியின் வளர்ச்சி அடிகளாரின் உள்ளம் போல் உறுபயன் அளிப்பதாகுக.

யாழ்ப்பாணம் தந்த தவப்புதல்வர் ஆத்மஜோதி நா.முத்தையா சுவாமிகள் இலங்கையின் பலபாகங்களிலும் தமிழையும் சைவத்தையும் வளர்த்த சிந்தனைத் திறம்படைத்த துறவியாவர். அநாதை இல்லம் அமைத்து நற்பணியாற்றிய சுவாமிகள் சைவநீதிக்கு அரிய கட்டுரை அளித்தார். மலர் பூப்பதன்முன் மனமுவந்து இறைவன் பாதமலர் நண்ணிக் கொண்டார். நமது உள்ளத்தில் நிறைந்து விளங்கும் அவர் சேவை என்றும் மலர்க.

நந்தாய் நாட்டின் கல்விப் பணிப்பாளராகப் பல ஆண்டுகள் கடமையாற்றிக் கல்வித்துறையில் மறுமலர்ச்சி உண்டாக்கிய சைவப் பெரியார் திரு.தி.மாணிக்கவாசகரை மறந்து விட முடியாது. கனடா நாட்டிலும் சமயம்–தமிழ் வளரப் பொதுப் பணியாற்றிய தூய சிந்தனையாளரவர். சைவநீதி சஞ்சிகையை வாழ்த்தி நல்லதோர் வாழ்த்துரை தந்து விட்டு அமரத்துவம் எய்திவிட்டார். இப்பெரியார்களின் சிந்தனையைப் போற்றிச் செயற்படுத்துவதன் மூலம் என்றும் நினைவு கூருவோமாக.

நீடுயர் அமர்ந்த நெறியினர் வாழ்க!

கனடா இந்து மாமன்றம்.

# நன்றிக் கலசம்

*காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது — திருக்குறள் 102*

**"சைவநீதி"** சஞ்சிகை சிறந்த ஆக்கங்களுடன் உருவாகக் காரண கர்த்தாக்களாக இருக்கின்ற உத்தமர்களே! மலர்க் குழுவினரின் நன்றி உங்களுக்கு உரித்தாகுக. எதிர்பார்த்த இலக்குக்கு மேலாகப் பலதரப்பட்ட விடயங்கள் மலரில் அடக்குவதானால் பக்கங்கள் அதிகமாகின்றன. இதனால் நீதிக்கு நிதிநெருக்கடி ஏற்படப் பார்க்கிறது. மன்றத்தினால் ஏற்கனவே நடாத்தப் பெற்று வருகின்ற தமிழ் மொழி, சைவ சமயம், கவின்கலை வகுப்புக்களை, சமய விழாக்களைத் தொடர்ந்தும் நல்ல முறையில் நடாத்தவும் மேலும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் மாணவர்கள் — முதியோர்களுக்கான ஆங்கில மொழி வகுப்புக்களும் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமும் உள்ளன. எனவே, நிதி நெருக்கடிக்கு அஞ்சி, சில எழுத்தாளர்களின் படைப்புக்களை அடுத்து வரவிருக்கும் மலரை அலங்கரிக்கத் தெரிந்து வைத்துள்ளோம். முதன்மலரில் இடம் பெறாத கட்டுரையாளர்கள் கவலை அடையாதீர்கள். அடுத்த இதழுக்கும் உங்கள் சேவை தேவைதானே? எதிர் பார்த்து இருங்கள். மேலும் தொடர்ந்து வெளிவர இருக்கும் "சைவநீதி" சஞ்சிகைகளில் இடம்பெற சைவசமயம் சம்பந்தமான நல்ல படைப்புக்கள் வரவேற்கப்படும். சைவ மக்களுக்கும் சைவச் சிறுவர் சிறுமியருக்கும் ஞானந்தரக் கூடிய கட்டுரைகள், வரலாறுகள், உண்மை விளக்கங்கள், கவிதைகளை வடித்து அனுப்புங்கள். அவை தரமறிந்து பிரசுரிக்கப் பெறும்.

<u>வாசகர்களே!</u> சைவ அபிமானிகளே!! "சைவநீதி" முதன்மலர் இன்று உங்கள் கரங்களுக்கு வந்து விட்டது. அதனை நீங்கள் நன்கு படித்து மதிப்பீடு செய்யுங்கள். உங்கள் மதிப்பீட்டை எங்களுக்குந் தெரிவியுங்கள். இதனால் மலர் மேலும் மேலும் சிறப்படைய — பயன்தர உதவி செய்பவர்கள் மட்டுமல்ல சைவ உலகிற்குப் பயன்பட்டவர்கள் ஆவீர்கள். சைவந் தழைப்பதற்கு உங்கள் ஆதரவே பெரிதுந் தேவை. சுருங்கக் கூறின்; முதன் மலரின் தரவுகளில் இடையிடையே புளிச்சாதமும் இருக்கலாம். அப்படியிருந்தால் தானே நெய்ச்சாதத்தின் — சருக்கரைச்சாதத்தின் அருமை நன்கு தெரியும். எனினும் புளிச்சாதத்தினைக் குறைத்து மதிப்பிடவும் முடியாது. புளிப்பும் ஒரு சுவைதானே!

சைவநீதி மலரினை உருவாக்கிய அத்தனை அன்பு நெஞ்சங்களுக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதற்காக நன்றி பல சுமந்து கொண்டு "**நன்றிக் கலசம்**" இதோ! காத்து நிற்கின்றது. படிப்படியாக அவை வந்து கொண்டேயிருக்கும். எனவே, உரித்தானவர்களை இங்கு வாழ்த்தி வரவேற்கின்றோம். தயவு கூர்ந்து ஏற்று மகிழ்வீர்களாக.

* சமயப்பணி ஆற்றுவதற்கு அடித்தளமாக ஒரு சஞ்சிகையை உருவாக்குங்கள் என்று வேண்டுகோள் விடுத்த அன்புப் பெரியோர்களே!
* பொருள் பொதிந்த — அருள் நிறைந்த ஆசியுரைகளையும் வாழ்த்துப் பாக்களையும் தந்து ஆசீர்வதித்த தெய்வச் சான்றோர்களே!
* சிந்தனை — சிறப்பு — ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்த பல்கலை வல்லுனர்களே! சைவமத காவலர்களே!
* குறுங்கதை — கட்டுரைகள் எழுதித்தந்த மாமன்ற வகுப்புக்களின் மாணவ மணிகளே! அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் ஆசிரியர்களே!! பெற்றோர்களே!!!
* மலர் மணம் வீச வழிசமைத்து உதவிய சைவமத காவலர்களாம் சிவஸ்ரீ.ப.கிருஷ்ணராசக் குருக்கள், சிவஸ்ரீ.ஸ்ரீநிவாச சர்வானந்தக் குருக்கள், சிவஸ்ரீ.பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் ஆகிய மதிப்பிற்குரிய குருமணிகளே!
* "மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற பெருநோக்கங் காரணமாகச் சஞ்சிகை உருவாக விளம்பரங்களை மனமுவந்தளித்த வர்த்தக ஸ்தாபனத்தினர்களே! — பதவி வழி உத்தியோகத்தர்களே!
* பற்றாக்குறை நிரப்பி — நிரப்பவிருக்கும் நிருவாக உறுப்பினர்களே!

* வேண்டிய, வேண்டியாங்கு உதவி புரியக் காத்திருக்கும் சிவப்பேரன்பர்களே!
* வரம்பு கட்டி- வடிவமைத்துத்(TYPE SETTING) தந்த திரு.சிவ.கேதீஸ்வரநாத! மற்றும் நூலுருவாக்கிய— — அச்சகத்தினரே!
* மலர் வெளியீட்டின் போது தரமான கலைவிழா நிகழ்ச்சிகளை அமைத்துப் பெருவிழாக் காண இருக்கும் கலைவிழா அமைப்புக் குழுவினர்களே!

யாவரும் இறைவன் இன்னருள் பெற்றுப் பலவாண்டுகளாகப் பாங்குடன் வாழ வேண்டுமென மன — மொழி — மெய்களால் துதிக்கின்றோம்

வாழிய சைவம்! வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய எங்கள் மணித்திருநாடு!

தைத்திங்கள் 1996

மலர்க் குழுவினர்.
கனடா இந்து மாமன்றம்



## விசேட அறிவித்தல்கள்:

சைவநீதி சந்தா விபரம்:- சைவநீதி சஞ்சிகை காலாண்டிதழ் எனக் கூறினோம். எனவே ஆண்டிற்கு நான்கு மலர்கள் வெளிவரும். இவற்றைச் சந்தா மூலம் பெற விரும்பும் வாசக நேயர்கள் ஆண்டுக்கட்டணமாக கனடிய டொலர்கள் பத்து($10) செயலாளருக்கு அனுப்பி வைத்து மலர்களை உங்களின் விலாசத்திற்குத் தபால் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

வித்தியாரம்பம்:- ஏடு தொடக்குதல்: ஆரம்பக் கல்வி கற்கும் வயது வந்த சிறு பிள்ளைகளுக்கு வித்தியாரம்ப (ஏடு தொடக்குதல்) வைபவம் 04 — 02 — 1996 ஞாயிறு காலை 9மணிக்கு சிறந்த ஆசானால் நடாத்தப்படும்.

சமய தீட்சை பெறுதல்:- சிவதீட்சை பெற விரும்பும் மக்களுக்கான சிவதீட்சை வைக்கும் வைபவம் 04 — 02 — 1996 ஞாயிறு காலை 10மணிக்கு சிறந்த குருதேவரினால் நடாத்தப்படும். இவற்றில் கலந்து கொண்டு பயன்பெற விரும்புபவர்கள் கனடா இந்து மாமன்றச் செயலாளருடன் 20 — 01 — 1996ற்கு முன் தொடர்பு கொள்ளவும்.



# இறை வணக்கம்

ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
என்றுவந் தாயென்னும் எம்பெரு மான்றன் திருக்குறிப்பே.

— அப்பர்.

திரு எம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள் தடம் கண்
மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவி. தான்?
மா தேவன் வார் கழல்கள் வாழ்த்திய வாழ்த்து ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மி விம்மி, மெய்ம்மறந்து,
போது ஆர் அமளியின்மேல் நின்றும் புரண்டு, இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள், என்னே! என்னே!
ஈதே எம் தோழி பரிசு? — ஏல் ஓர் எம்பாவாய்!

— மாணிக்கவாசகர்.

திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்,
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

— ஆண்டாள்.

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

— சேக்கிழார்.

குன்றி டாத கொழுஞ்சுட ரே,மணி
மன்றுள் ஆடிய மாணிக்க மே உனை
அன்றி ஆர்துணை ஆர்உறவு ஆர்கதி
என்று நீஎனக்கு இன்அருள் செய்வதே?

— தாயுமானவர்

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை யறங்க ளோங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*



கனடா இந்து மாமன்றம் நடாத்தும் கவின்கலை (சங்கீதம், நடனம், வயலின்) வகுப்பு மாணவர்கள்
ஆசிரியர்கள் : செல்வி . யசோதினி துரைராஜலிங்கம், செல்வி . எட்வின் ஜோசப் ரஜனி




கனடா இந்து மாமன்றம் நடாத்தும் வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும். தமிழ்-சைவசமயம் பிரிவு-1
ஆசிரியர்கள் : திருமதி. ராஜேஸ்வரி கந்தையா, திருமதி. ராஜேஸ்வரி சிவலோகநாதன்

6 குமார் 6 Kumar

றொரன்ரோ மாநகரில் தமிழர் மத்தியில் புடவை வியாபாரத்தை முதன் முதலாக ஆரம்பித்து வைத்த முன்னோடிகளும் பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்ற ஒரே ஸ்தாபனம்

6 Kumars SILK HOUSE

**1394 Gerrard St. E., Toronto; (416) 465-7131**

1996ம் ஆண்டிற்கு அறிமுகப்படுத்தப்பெற்ற கூறைச் சாறிகளின் வகைகள்

* பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Rupa Gold Work)
* பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Sorupa Silver Work)
* பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Half & Half New Design)
* பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Rupa Gold & Sorupa Silver Work)
* பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Gold Silver Patli New Design)
*பனாரஸ் கூறை (உயர்ந்த ரகம் Gold, Silver Work with Sequene & Pearls)
தூய பனாரஸ் சற்றின் சாறிகள் (Very light-weight work)
1000க்கும் மேற்பட்ட 1996ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட Handloom சாறிகளின் உயர்ரகங்களான Rangoli Silk Sarees; Apoorva Silk Sarees

இவற்றுடன் காஞ்சிபுரம் தூய பட்டுச் சாறிகள் (Original Kanchipuram) மற்றும் கௌரி, காயத்திரி, ஒறிஜினல் மைசூர் சில்க், காஷ்மீர் சில்க் சாறிகள் (Satin Guard, Misty Silk) 100க்கும் மேற்பட்ட புதிய டிசைன்களில் 1000க்கும் மேற்பட்ட தெரிவுகளில் உங்கள் எண்ணம் போல் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் Readymade சாறி Blouse, (கொட்டன் & சில்க்) 1000க்கும் மேற்பட்ட தெரிவுகள்.
சாறி Blouse க்கள் உடனுக்குடன் தைத்துக் கொடுக்கப்படும்.
மாப்பிளைக்குத் தேவையான புத்தம் புதிய சர்வாணி, தலைப்பாகை, உத்தரியம் எல்லா அளவுகளிலும் (5 வயதிலிருந்து X, XL) எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் தூய காஞ்சிபுர வெண்பட்டு (சேலம் பட்டு) என்று அழைக்கப்படும் பட்டு வேட்டி சால்வை, மாறுகரை வேட்டி சால்வை என்பனவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**எமது விற்பனை நிலையம் புது மெருகூட்டப்பட்டு 3000 சதுர அடி விஸ்தீரணம் கொண்டதாக வாடிக்கையாளர் வசதிக்காக அமைக்கப்பட்டுள்ளது**

# ராஜாராம் உணவுச் சேவை

இந்திய, இலங்கை உணவு வகைகள்.
உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

*சாதமா நெய்ச் சாதமா, Pillau சாதமா, புரியாணியா, புளிச்சாதமா, தயிர்ச்சாதமா, இடியப்பமா, இடியப்பப்பிரட்டலா எதுவானாலும் வகை செய்வோம்.*

**SPECIALLIZED SRI LANKAN & INDIAN CUISINE & TAKE AWAY**

கனடா இந்து மாமன்றம் தமிழ்ச் சைவசமய கலாச்சாரப் பண்பாட்டினை வளர்க்கும் நோக்கமாக வெளியிட இருக்கும் — சைவநீதி — சஞ்சிகை புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தட்டும் சமயத்திற்கும் நாட்டிற்கும் நற்றமிழ்க்கும் நற்பணி புரியட்டும் எனக் கூறி உளங்கனிந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்க தமிழ்! வளர்க சைவ நீதி!

**Rajah Ram Caterers** - Tel (416) 299 5200, 439 4256
589 Middlefield Road, #20 Scarborough, Ontario, M1V 4Y6

# *Maple Variety*

**4565 Shappard Ave., East; (416) 298-7255**

- Basmati Rice
- Vegetables
- passion Fruit, Mango, Lime, Cordials
- English, Tamil News papers & Magazines
- Audio and Video Tapes

**For all your quality Srilankan, Canadian, East and West Indian Products, Food and Spice needs**

- பல சரக்கு வகைகள்
- உணவு வகைகள்
- மரக்கறி வகைகள்
- இலங்கை இந்திய பத்திரிகைகள் சஞ்சிகைகள்
- ஒடியோ நாடாக்கள்
- வீடியோ நாடாக்கள்
- எவர்சில்வர் பாத்திரங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்

உங்களுக்குத் தேவையான தரமான இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் யாவற்றுக்கும் இங்கே இன்றே நாடுங்கள்

## ஈழம் ஸ்ரோர்ஸ்